A DESCRIPTIVE CATALOGUE

OF THE

TAMIL MANUSCRIPTS

IN THE

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS

BY

S. KUPPUSWAMI SASTRI, M.A.

CURATOR, GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, AND PROFESSOR OF SANSKRIT AND COMPARATIVE PHILOLOGY, PRESIDENCY COLLEGE, MADRAS

Prepared under the orders of the Government of Madras

Volume 3—Religion and Philosophy (Saivism)

MADRAS

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS

1927

CONTENTS.

CLASS V—RELIGION AND PHILOSOPHY.

(2) *Śaivism—A. Tirumuṟaigal.*

A DESCRIPTIVE CATALOGUE
OF THE
TAMIL MANUSCRIPTS
VOLUME III

CLASS V—RELIGION AND PHILOSOPHY
2. ŚAIVISM—A. TIRUMUṞAIGAḶ.

No. 1123. அகத்தியர் தேவாரத்திரட்டு.
AHATTIYAR TĒVĀRATTIRAṬṬU.

Substance, palm-leaf. Size, $6\frac{7}{8} \times 1\frac{3}{8}$ inches. Pages, 84. Lines, 10 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 145*a*. The other work herein is Tiruvācakam 1*c*. Complete.

A collection of 25 Padikams (a group of nearly 10 stanzas) said to have been selected and compiled by Ahattiyar from the Tēvāram for the sage Śivālayar's daily repetition. The compilation is made up of 8 Padikams of Appar, 7 Padikams of Sundarar and 10 of Sambandar. The subject-matter of each of the Padikams and the religious efficacy caused by their repetition are described in the introductory stanzas.

Beginning:

குருவுருவம் வெண்ணீ றெழுத்தஞ்சு கோவி
லரனுருவ மென்றலையே லாக்குந் —திருவடியுஞ்
சிட்டான வ[ற்](ர்ச்)சனையுந் தொண்டுஞ் சிவாலயர்கள
திட்டா ரகத்தியனா ரெட்டு.

தோடு கூற்றூ பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பேரரு ளாகு[ம்]
நீற்றுப் பதிக[ம்] நிக[ழ](ழ்)த்துங் காலை
மாற்றுப் பலையின் வரலா றுகுந்
5 துஞ்சல் காதல் சொற்றுணை 'மற்று
மஞ்செழுத் துண்மை யருளிய தாகு
மாரூர் தில்லை காட்டூர் மூன்றுஞ்
சீரார் கோவிற் றிறமே யாகு
மோருரு வரிய பாளை வடிவே[ம்](று)
10 மருவா ரைந்து மரனுரு வாகும்
பொடியுடை யரவணை யந்த ணாள
னடியிணை தந்த வருளே யாகும்
பந்து வேற்றூ கொன்றிலை மூன்று
நன்றரு ள[ற்](ர்ச்)சனை நாட்டிய தாகும்

15 வேய்குலந் தில்லே யெனுமிவை மூன்று[ம்]
நாயனு மடிமையு நாட்டிய தாகு
மிப்பரி சகத்திய முனிவ னிருநிலத்
தொப்பரு மூவரு மோதுதே வார
முழுதையுஞ் சிவாலய முனிக்கறி வித்துப்
20 பழுதிலா வவையுட் பரிந்தெடுத் திருபா
னைந்துயர் பதிகமு மறிவுறத் திரட்டி
யெண்ணரு மடங்கல் யாவையு முணரும்
புண்ணிய மிவைகொடு பொருந்துமென ளாததன
னன்பன் றனக்கன் றக[வு](மு)ற வதனாற்
25 றீதிலா வகத்தியத் திரட்டினை யுலகி
லோதின ரட்ங்கலு மோதின (ர)ாவரே.
தோடுடைய செவியன் (. . . . .) னன்றே.

End:

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்(ப்) பூசல்
வரிவளையார் மானிக்கு நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட சேவகனார்க் கடியேன்
றிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியே
னென்னவனா மரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் றிருநாவ லூர்க்கோ
னன்னவனா மடித்தொண்ட னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் [காளே](கன்பரா) வாரே (கக)
திருச்சிற்றம்பலம்.

Colophon:

விளம்பிஞு மார்கழிமீ 11வ மணலூரிலிருக்கும் கயிலாய முதலியார் குமாரன் உத்தண்டியப்பன் எழுதி நிறைந்த திருவாசகமும் அகத்தியத்திரட்டும் முற்றும் . . . . . . நன்றாக.

(கு-பு.)—

இது சிவாலயரென்னுமுனிவர் நாடோறும் சுலபமாகப் பாராயணஞ் செய்வதன் பொருட்டு அகத்தியமுனிவரால் மூவர்தேவாரங்களினின்றும் திரட்டப்பெற்ற இருபத்தைந்து பதிகங்களையுடைமையின் 'அகத்தியர்திரட்' டென்று பெயர் பெற்றது அந்தப்பதிகங்கள் இன்னவையென்றும் அவை இன்ன சிறப்புடையனவென்றும் அவற்றைப்பாராயணஞ் செயவதால் தேவாரமுழுதும் பாராயணஞ்செய்த பலனுண்டென்றும் பதிகத்தின் முன்னுள்ள அகவல் கூறும்.

No. 1124. அகத்தியர்தேவாரத்திரட்டு.
AHATTIYAR TĒVĀRATTIRAṬṬU.

Pages, 162. Lines, 6 on a page.

Begins on fol 89*a* of the MS. described under No. 304.

Contains all the 25 sections or Padikams.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இதில் இருபத்தைந்து பதிகங்களும் பூர்த்தியாக உள்ளன.

No. 1125. அகத்தியர் தேவாரத்திரட்டு.
AHATTIYAR TĒVĀRATTIRAṬṬU.

Substance, palm-leaf. Size, 7 × 1⅛ inches. Pages, 137. Lines, 7–8 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 1*a*. The other works herein are Tiruppallāṇḍu (Śaiva) 69*b*, Tēvāram 73*a*, Tiyāgēśartiruviḻaiyāṭṭakaval. 78*i*, Mūvarammāṉai 80*a*, Vaḍivuḍaiyammainavarattinam 106*a*.

Complete.

Same work as the above.

Colophon:

1. சம்பந்தர். திருப்பிரமபுரம். பண் - நட்டபாஷை[ஷ](ட).
   "தோடுடைய செவியன்"
2. அப்பர் திருவதிகை வீரட்டானம். பண் - கொல்லி.
   "கூற்றாயினவாறு"
3. சுந்தரர். திருவெண்ணெய் நல்லூர். பண் - இந்தளம்.
   "பித்தாபிறைசூடி"
4. சம்பந்தர். திருவாலவாய். பண் - காந்தாரம்.

"துஞ்சலும்" பண் காந்தாரபஞ்சமம்.
"காதலாகி" பண் - கவுசிகம்.
"சொற்றுணை வேதியன்". பண் - காந்தாரபஞ்சமம்.

* * * *

திருத்தொண்டத்தொகை. பண் - கொல்லி(க்கௌவாணம்)

ஆகப்பதிகம், ௨௫.

(த-பு.)—

இது முன்பிரதி போன்றது. இந்தப்பிரதியில் இது மூற்றும் உள்ளது.

No. 1126. அகத்தியர் தேவாரத்திரட்டு.
AHATTIYAR TĒVĀRATTIRAṬṬU.

Substance, palm-leaf. Size, 13¾ × 1⅛ inches. Pages, 79. Lines, 8 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Complete.

Same work as the above, but the introductory stanzas in the beginning are wanting.

(த-பு.)—

இது முன்பிரதிபோன்றது. பூர்த்தியாயும் சிதைவின்றியும் இருக்கிறது. இதில் 1123-ஆம் நம்பர் பிரதியின் முதலிலுள்ள வெண்பாவும் அகவலும் இல்லை.

இந்நூல் முடிந்தபின்னர், திருவொற்றியூர் விஷயமாகத் திருநாவுக்கரசு நாயனாரியற்றிய "வெள்ளத்தைச்சடையில் வைத்த" என்னும் பதிகமும் "ஓம்பினேன்", "மனமெனுந்தோணி" என்னுமிரண்டு பாடல்களும், காரைக்காலம்மையாரியற்றிய "எட்டியிலவ"மென்னும் மூத்த திருப்பதிகமும், சம்பந்தமூர்த்திநாயனார் திருமயிலாப்பூர் கபாலீசுவரர் விஷயமாக இயற்றிய "மட்டிட்ட புன்னையங்கானல்" என்ற பூம்பாவைப் பதிகமும் உள்ளன.

No. 1127. அகத்தியர் தேவாரத்திரட்டு.
AHATTIYAR TĒVĀRATTIRAṬṬU.

Substance, palm-leaf. Size, 13¾ × 1 inches. Pages, 81. Lines, 6-7 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, new.

Complete.

Begins on fol. 135*a*. The other works herein are Tēvāram 1*a*, Tiruvācaka tiruvuḻḻakkaḍai 179*a* and 181*a*.

Complete, but without the introductory stanzas.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இதில் இருபத்தைந்து பதிகங்களும் இருக்கின்றன; முதலில் உள்ள வெண்பாவும் அகவலும் இல்லை. இதன் தலைப்பில் "சிவாலய மகரிஷிக்கு அருளிச்செய்த அகஸ்தியத்திரட்டு" என்னுந் தொடர்மொழி காணப்படுகிறது. சில ஏடுகள் சிதிலமாயும் 16-ஆம் ஏடு ஒடிந்தும் இருக்கின்றன.

No. 1128 அகத்தியர் தேவாரத்திரட்டு.
AHATTIYAR TĒVĀRATTIRAṬṬU.

Pages, 2. Lines, 9 on a page.

Begins on fol. 6*b* of the MS. described under No. 374.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இந்தப் பிரதியில் "குருவுருவம்" என்னும் வெண்பாவும், "தோடுகூற்று" என்னும் அகவலும் மட்டுமே உள்ளன.

No. 1129. அகத்தியர் தேவாரத்திரட்டு.
AHATTIYAR TĒVĀRATTIRAṬṬU.

Pages, 103. Lines, 8 on a page.

Begins on fol. 121*a* of the MS. described under No. 333.

Complete.

Same work as the above.

Colophon:

. கூவமான் கொண்டமாகன்சேரி கு-முடி? அரசராணையார் சரபமு[ற்](ர்)த்தி எழுத்து. அகத்தியத்திரட்டு எழுதிமுடிந்தது. அபியாவரத்தயர் பாதமே துணை.

(ரு-பு.)—

இது 1127-ஆம் நம்பர் பிரதிபோன்றது. இதில் இருபத்தைந்து பதிகங்களும் பூர்த்தியாயிருக்கின்றன.

No. 1130. தேவாரம்.

TEVĀRAM

Substance, palm-leaf. Size, 11½ × 1½ inches. Pages, 974. Lines, 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 3*a* The other works herein are Mūttatiruppadikam 1*a*, Tēvāram (with commentary) 490*a*.

Contains the first three Tirumuṟais.

Tēvāram is the name given to a collection of stanzas mostly in praise of God Śiva and comprising the first seven of what is known as the 12 Tirumuṟais. Of these seven Tirumuṟais, the first three were composed by Tiruñānasambandar, 4 to 6 by Tirunāvukkaraśar, and the 7th by Sundaramūrtināyanār. The Tēvāram is considered by the Śaivas to have the same authority as the Vēdas. An account of these Tamil saints is given in the Tamil Periyapurāṇam.

Beginning:

திருஞானசம்பந்தரருளிச்செய்த திருமுறை

திருப்பிரமபுரம், பண்-நட்டபா[ஷை](டை).

தோடுடைய செவியன்விடை யேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி[ப்] பூசியென் னுள்ளங்கவர் கள்வ
னேடுடைய மலரான்முனை நாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே. (க)

* * * *

நீதியறியாதாரமண்கையரொடுமண்டைப்
போதியவரோதும்முரைகொள்ளார்புளமங்கை
யாதியவர்கோயில்திருவாலந்துறைதொழுமின
சாதிம்மிகுவானோர்தொழுதன்மைபெறலாமே. (கo)

பொந்தின்னிடைத்தேனூறியபொழில்சூழ்புளமங்கை
யந்தண்புனல்வருகாவிரியாலந்துறையானைக்
கந்தம்மலிகமழ்காழியுட் கலைஞானசம்பந்தன்
சந்தம்மலிபாடல்சொலியாடத்தவமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிடும்பாவனம். பண்-நட்டபாடை.

மனமார்தருமடவாரொடு மகிழ்மைந்தர்கண்மலர்தூய்த்
தனமார்தருசங்கக்கடல்வங்கத்திரளுந்திச்
சினமார்தருதிறல்வாளெயிற்றரக்கன்மிகு குன்றி
லினமாதவரிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே. (க)

End:

நறும்பொழிற் காழியுண் ஞானசம்பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை
யுறும்பொரு ளாற்சொன்ன வொண்டமிழ் வல்லார்க்
கறும்பழி பாவ மவல மிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

Colophon:

திருஞான சம்பந்தமூ[ற்](ர்)த்தியார் திருமுறை எ[ழ்](மு)தி முற்றியது.
ஆகத் திருக்கடைக் காப்பு 4173.
ஆக முதல் திருமுறை பதிகம் 141-க்கு, திருவிருத்தம் 1471.
2-வது திருமுறை பதிகம் 121-க்கு „ 1323.
3-வது திருமுறை பதிகம் 125-க்கு „ 1347.
ஆக மூன்றுக்கு(ம்) பதிகம் 387-க்கு „ 4141.

(கு-பு.)—

சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் முதலேழும் தேவாரமென்னப்படும். இவற்றுள், 1, 2, 3, திருஞானசம்பந்தமூர்த்திநாயனாராலும், 4, 5, 6 திருநாவுக்கரசுநாயனாராலும், 7 சுந்தரமூர்த்தி நாயனாராலும் அருளப்பட்டவை. இவைகள் சைவசமயிகளால் வேதமென்று கொண்டாடப்படுகின்றன. இவற்றுக்கு 'அடங்கன்முறை' என்றும் ஒரு பெயருண்டு. இவற்றுள் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரருளிச்செய்த திருமுறை மூன்றும் இந்தப் பிரதியில் பூர்த்தியாயுள்ளன. இவர் ஞானசம்பந்தஸ்வாமிகள், ஞானசம்பந்தர், சம்பந்தமூர்த்திகள், சம்பந்தரெனவும் வழங்கப்பெறுவர்; சீகாழியிலிருந்த சிவபாதஹ்ருதையரென்னும் அந்தணர் குமாரர்; சைவசமயாசாரியர் நால்வருள் ஒருவர்; பல அற்புதங்களை இயற்றியவரென்றும் அவதார புருஷரென்றும் இவருக்குப் பிரசித்தி மிகவுண்டு. இவர் சரித்திரம் பெரிய புராணத்திலும் திருவிளையாடல் முதலிய தலபுராணத்திலும் புலவர்புரா

ணத்தும் கூறப்பெற்றிருக்கிறது. இந்தப் பிரதியில் இவையின்றிப் முதலிலு ள்ள பதினோரேட்டுள் எட்டு ஏட்டில் 'திருஞானசம்பந்தசுவாமிகளருளிசெய்த தேவாரத்துக்கு ஏட்டுச்செய்யுள்' என்ற தலைப்பின்கீழ்த் தலப்பெயர்களும் அவற்றிற்கு நேரே 1 முதல் 486 வரையுள்ள எண்களும் குறிக்கப்பெற்றும், அதன்பின் 3 ஏட்டில் காரைக்காலம்மை யருளிச்செய்த திருவாலங்காட்டுப் பதிகமும், மூத்த திருப்பதிகமும் எழுதப்பெற்றுமிருக்கின்றன.

இந்தப்பிரதி சிறிதும் சிதைவின்றியிருக்கிறது. இதில் 352-க்கும் 353-க்கும் நடுவில் ஓரேடும், 467-க்கும் 468-க்கும் நடுவில் ஓரேடும் தொடர்ச்சியின்றிக் கோக்கப்பட்டிருக்கின்றன; அவைகளும் தேவாரமெழுதப்பெற்றவையே.

No. 1131. தேவாரம்.

TEVĀRAM.

Substance, palm-leaf. Size, $11\frac{3}{8} \times 1\frac{1}{8}$ inches. Pages, 1048. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Contains 4 to 6 Tirumuṟais of the Tēvāram.

The author of this portion is Tirunāvukkaraśar, also called Appar Tāṇḍakavēndu and Vāgīśar. He first embraced Jainism and was known then as Darumēśar and later on became a devout adherent to Śaivism. He was born in Tiruvāmūr in the Vēḷāḷar caste and bore the name of Maruṇīkkiyār in his early age. He is considered to have been a contemporary of Sambandar, and an account of his life may be found in the Periyapurāṇam and other works.

Beginning:

அப்பர்சுவாமிகளருளிச்செய்த தேவாரம்.

திருவீரட்டானம். பண்-கொல்லி.

கூற்றாயினவாறுவிலக்ககிலீர் கொடுமைபலசெய்தன நானறியே
னேற்றாயடிக்கேயிரவும்பகலும் பிரியாது வணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென்வயிற்றினகம்படியே குடரோடுதுடக்கிமுடக்கியிட
வாற்றேனடியேனதிகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே. (க)

End:

ஒருவ[ரை](னை)யு மல்லா துணரா துள்ள
முணர்ச்சி[ற்ற](த் த)மொற்றத் துள்ளே நின்ற
விருவரையு மூவரையு மென்மே லேவி
யில்லாயத் தரவறுத்தாய்க் கில்லே னேலக்

கருவரைசூழ் கான விலங்கை வேந்தன்
கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பெருவரையா யுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி ய[ன்]னே. (கo)

Colophon:

திருச்சிற்றம்பலம்.

அப்பர் தம்பிரானார்செய்த முன்முறைத் திருக்கடைக் காப்பு 114. [மூன்று] (இரண்டா) முறைத் திருக்கடைக்காப்பு 100. மூன்றாமுறைத் திருக்கடைக்காப்பு, 100. ஆக முறை 3-க்கு, திருக்கடைக்காப்பு 314. திருஞானசம்பந்தப்பிள்ளையார் செய்த திருமுறை 3-க்குத் திருக்கடைக்காப்பு 384. ஆக(த்) திருமுறை 6-க்கு, திருக்கடைக்காப்பு 698.

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

— இதில் திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் பூர்த்தியாகவுள்ளது; இவர் சைவசமயாசாரியர் நால்வருள்ளும், மூவர்முதலிகளுள்ளும், அறுபத்து மூன்று நாயன்மார்களுள்ளும், ஒருவர்; அப்பரென்றும் வாகீசரென்றும் நாவுக்கரசென்றும் தாண்டகவேந்தென்றும் கூறப்பெறுவர். திருவாமூரில் வேளாளர் குலத்தில் உதித்தவர்; ஜைனமதத்தில் உழன்று பின்பு சைவமதத்தைக் கடைப்பிடித்தவர். இவருக்கு இளமைப்பருவத்தில் மருணீக்கியாரென்ற பெயரும், சைனசமயத்தில தருமசேனரென்ற பெயரும் வழங்கிவந்தன. அவதாரபுருஷரென்றும் அற்புதசக்தியுடையவரென்றும் பிரசித்தியுண்டு. ஞானசம்பந்தருமிவரும் ஒருகாலத்தவர். இவர் சரித்திரம் பெரியபுராண முதலியவற்றாலறியலாகும். இவர் வாக்கு 4, 5, 6-ஆம் திருமுறையாக வகுக்கப்பெற்றுள்ளது.

இந்தப் பிரதியில் தொடர்ச்சியின்றித் தேவாரமெழுதப்பெற்ற ஏடுகள் 116 - க்குப்பின் ஒன்றும், 140-க்குப்பின் ஒன்றும் உள்ளன.

No. 1132. தேவாரம்.

TĒVĀRAM.

Substance, palm-leaf. Size, $11\frac{1}{2} \times 1\frac{3}{8}$ inches. Pages, 504. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Contains the 7th Tirumuṟai which is the work of Sundaramūrti-nāyanār who is considered to be an incarnation of Ālālasundarar, an attendant of Śiva in Kailāsa. He was the son of a Śaivaite named Śaḍaiyanār of Tirunāvūr, a place in the country then known as Tirumunaippāḍi. The author was also called Sundaramūrti, Nāvalūrar, Ārūrar, Tambirāntōḻar, Vaṉṟoṇḍar and was a friend of Cēramānperumāḷnāyanār.

Beginning:

ஏழாமுறை சுந்தரமூர்த்தி பாடல்.

திருவெண்[ணெ](ணெய்)நல்லூர். பண் - [னி](இ)ந்தளம்.

* பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
வெத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெ நல்லூரருட் டுறையுள்
ளத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே. (க

End:

ஊழிதொ றூழிமுற் று(ம்)முயர் பொன்னொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும் பின்சுவை நாவல வூரன்சொன்ன
வேழிசை யின்றமி ழாலிசைந் தேத்திய பத்தினையு
மாழி கடலரை யாவஞ்சை யப்பர்க் கறிவிப்பதே.

திருச்சிற்றம்பலம்.

Colophon:

திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருமுறை 3-க்கும் திருக்கடைக்காப்பு 381. அப்பர் தம்பிரானார் திருமுறை 3-க்கும் திருக்கடைக்காப்பு 343. சுந்தரப்பெருமாள் நாயனார் திருமுறை 1-க்கு, திருக்கடைக்காப்பு 101 ஆகத் தேவார முறை ஏழுக்கு வகை மூன்றிற்கு திருக்கடைக்காப்பு 82[8](5).

இ[ஃ]து கீலகஞூ மாசிமீ உடுவ தேவாரத்திருமுறை எழுதிமுடிந்தது; முற்றும்.

(கு-பு.)—

இது சைவத்திருமுறைகள் 12-ல் ஏழாவது திருமுறை. அறுபத்துமூன்று நாயன்மார்களுள்ளும், சைவசமயாசாரியர் நால்வருள்ளும், மூவர்முதலிகளுள்ளும், ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனாரால் திருவாய்மலர்ந்தருளப் பெற்ற நூற்றொரு பதிகங்களையுடையது; இவர் திருமுனைப்பாடிநாட்டிலுள்ள திருநாவலூரிலிருந்த ஆதிசைவராகிய சடையனார் குமாரர்; ஆலால சுந்தரரின் அவதாரமென்று புகழப்பட்டவர்; சேரமான்பெருமாணாயனாரது தோழர்; பல அற்புதங்களை இயற்றியவர் இவர் சரித்திரம் பெரியபுராண முதலியவற்றில் விரித்துக் கூறப்பெற்றிருக்கிறது. இவர் சுந்தரமூர்த்திகளென்றும் சுந்தரரென்றும் நாவலூரரென்றும் வனப்பகைச்சிங்கடியப்பனென்றும் ஆரூரரென்றும் தம்பிரான்றோழரென்றும் வன்றொண்டரென்றும் கூறப்பெறுவர். இந்தப் பிரதியில் 101 பதிகங்களும் பூர்த்தியாயிருக்கின்றன.

---

* "பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
வெத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத்தென்பால் வெண்ணெநல்லூ ரருட்டுறையுள்
ளத்தா வுனக்காளா யினியல்லே னெனலாமே."

என்று சொல் முறியாது பிரித்தல் நயமாகத்தோற்றுமாறாலும் இசைவல்லார் பாடும் முறைப்படியே பிரிக்கப்பட்டிருக்கிறது.

No. 1133. தேவாரம்.
TĒVĀRAM.

Substance, palm-leaf. Size, $9\frac{1}{8} \times 1\frac{3}{8}$ inches. Pages, 165. Lines, 8—10 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Begins on fol. 29*a*. The other works herein are Tiruvāsakam 1*a*, Tiruviḍaimarudūr Mummaṇikkōvai 7*a*, Mūtta Tiruppadikam 111*a*.

Contains 35 to 40 Padikams of the Tēvāram.

A collection of the different Padikams of the Tēvārams of Appar, Sundarar and Sambandar

Beginning:

தோடுடைய செவியன் (. . . .) னன்றே. (க)

End:

இலங்கை வேந்தனிராவணன் சென றுதன்
விலங்க லெடுக்க வ்விர லூனறலுங
கலங்கிக் கச்சியே கம்பமோ வென்றலுந்
தலங்கொள் செல்வளித் தானெங்க ளுதனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

மூவர் தேவாரப் பதிகங்களும் இதில் கலந்து எழுதப்பெற்றிருக்கின்றன. இந்தப் பிரதியில் உள்ள பதிகங்கள் 35-க்குக்குறையாமல் 40-க்கு மேற்படாமல் இருக்கும். இதில் 66, 67, 68 இந்த மூன்று ஏடுகளும் இல்லை.

No. 1134. தேவாரம் (திருவெழுகூற்றிருக்கை).
TĒVĀRAM (TIRUVEḺUKŪṞṞIRUKKAI).

Pages, 3. Lines, 9 on a page.

Begins on fol. 5*a* of the MS. described under No. 374.

Contains the Tiruveḻukūṟṟirukkai-padikam of the Tēvāram which is by Sambandamūrtināyanar. See R. No. 50(*c*) of the Triennial Catalogue of MSS., Vol. I, Part 2.

Beginning:

ஓருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூத(ல)
மொன்றிய விருசுட ரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
யிருவரோ டொருவ னாகி நின்றனை
(. . . . .
. . . .)

End:

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
45 கழுமல முதுபதிக் கவுணிய னறியு
மனைய தன்மையை யாதலி னின்னை
நினைய வல்லவ ரில்லை நீணிலத்தே.

(கு-பு.)—

இது சம்பந்தமூர்த்தி நாயனார் இயற்றியது. "எழுகூற்றிருக்கை" யென்னும் பிரபந்தவிலக்கண மூவருடத்திய காட்லாக்கின் 50 (c) நம்பரில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

No. 1135. தேவாரம் (திருவெழுகூற்றிருக்கை). TĒVĀRAM (TIRUVELUKŪṞṞIRUKKAI).

Substance, palm-leaf. Size, $7\frac{5}{8} \times 1\frac{1}{4}$ inches. Pages, 4. Lines, 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 46*a*. The other works herein are Ciṟṟambalanāḍiyārkalitturai 1*a*, Ciṟṟambalanāḍiyārvenbā 13*a*, Ciṟṟambalanāḍiyār Tirikālattirangal 24*a*, Ciṟṟambalanāḍiyār Tālāṭṭu 39*a*, Tirukkōvaiyār 48*a*.

Contains the Padikam entitled Tiruvelukūṟṟirukkai and one stanza which is given below.

(கு-பு.)—

இது மூன் பிரதி போன்றது. திருவெழுக்கூற்றிருக்கை பூர்த்தியானதன் பின்,

"நீணிலத்தே நின்றேனு நீணிலத்துக் கீன்றேனுங்
காணவொப் பொன்றில்லாக் கழலிணைகள் — வேணுபுற
ஞானசம் [ம](ப)ந்த னுரை நாடோறு மே[ற](த்து)வார்
ஞானசம் பந்த முறுர்"

என்னும் வெண்பா ஒன்று உள்ளது.

No. 1136. தேவாரம் (திருவெழுகூற்றிருக்கை). TĒVĀRAM (TIRVELUKŪṞṞIRUKKAI).

Pages, 2. Lines, 8 on a page.

Begins on fol. 29*a* of the MS. described under No 355.

Contains the Tiruvēlukūṟṟirukkai complete.

Same work as the above.

(கு-பு.)—

இதில், திருவெழுகூற்றிருக்கைமட்டும் பூர்த்தியாக இருக்கிறது. இதன் பின்னர் ஓரேட்டில் சிலையெழுபதிலுள்ள சில பாடல்கள் உள்ளன.

No. 1137. தேவாரம், உரையுடன்.
TĒVĀRAM WITH COMMENTARY.

Pages, 31. Lines, 9—11 on a page.

Begins on fol. 499a of the MS. described under No. 1130.

Contains the Padikams, Mālaimāṟṟu, Aḍimaḍakkuyamakam and Ēkapādam of Tiruñānasambandamūrti which form part of the Tēvāram. The commentary is by Sībāḻi Vaḷḷal Svāmigaḷ, also known as Kaṇṇuḍaiya Vaḷḷal or Vaḷḷalār.

தேவாரம் (உரையுடன்).
சிவமயம்.

Beginning:

ஸ்ரீமத் சம்பந்தமூர்த்தி சுவாமிகள் ஐந்தாம்பதத்தையடைவதற்காக ஆண்டவனை மாலைமாற்றுத் தேவார தோத்திரங்கள் செய்த[தற்கு](த்) சீகாழிவள்ளல் சுவாமிகளசெய்த அருத்தத்துடன் இதில் கண்டெழுதப்பட்டது.

மாலைமாற்றுத்தேவாரம்.
யாமா மா[மா]நீ(யாமா)மா
யாழீ (கா)மா காணுகா
காணு காமா காழீயா
மாமா யாநீ மாமா[கா]யா.

இதன்பதப்பொருள்: யாமாமா என்பது, எனது ஆத்மபோத சே[ஷ்] (ஷ்)டையும் கருவிகளாற் சே(ஷ்)டையும் இவையிற்றால் அவையவை (நீ)யாமா[மா] என்பது எவ்வாறென்னில், நீ யாமா எ-து, அறிவுக்க[ரி](றி) வாய்நிற்கின்ற எனது சேட்டையொழித்து வேறொன்றொத்த சத்காரியமாயுள்ளவனே !(?) மாயாழீகா எ-து, மிருதிப்பட்டுமேலாயிருந்துள்ள பாதசொருபமாயிராநின்ற யாழையுடை யானே ! அத்தன்மை மிகுதிப்பட்டு மலஞ்சிறந்துள்ளயாழை இடைவிடாமல் தடவிவாசித்தலால் "மி[க்]கநல்லவீணைதடவி" எனறுபொருள். கா எ-து, இடைநிலை மாகாணுகா எ-து, பரமாகாசத்தைக்கீழ்ப்படுத்தப்பட்டு மலைகளுக்கெல்லாம் குணமலையாகிய ஸ்ரீகயிலாயத்தின்கண்ணே யெழுந்தருளியிருக்கப்பட்டவனே ! காணுகா எ-து, எனதுள்ளக்கண்ணுக்குத் தோன்றப்பட்டுள்ள திருமேனியுடையானே ! மாகாழீயா எ-து ஊழிககாலத்தின் கண்ணும் அழிவின்மையாகிய மேன்மையைப் பொருந்தியுள்ள காழியுடையவனே ! மாம் எ-து, ஈங்குனதருட்பெறாத சிவவிழப்பையுடையவனாகிய வெம்மை. ஆ யாநீ எ-து, இடபவாகனத்தின்கண்ணே யேறி வந்து எனக்குப் பொய்கைக் கரையின்கண்ணே வெளிப்பட்டவனே ! மாமாயா எ-து, மாமாயையாகிய குடிலையைகொண்ட அசுத்தமாயையினுள்ள தத்துவங்களையுண்டாக்கி(க்) காமம் பொசித்தற்குக் காரணமா . . . . . . திரோதாயச்சத்தியாலே மறைத்துள்ள மயக்கமேயறிவாகப் பேதத்தைச் செலுத்தப்பட்டவனே ! (இடையே நிறுத்தின) கா எ-து, அந்த மாயாமயக்கம் எனதறிவிற் சேியாமலொழித்து உன்னை எனக்கு உள்ளபடி தந்து என்னை நீநிகழாமற்கொண்டு இவ்வாறு நீ இரண்டறவாழ இரட்சிப்பாயாகஎன்றவாறு. (க)

End:

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை எ-து இழ்ச்சொன்னபதியின்கட் கவுணிய கோத்திரத்தவரந்த மறையோனுகியயான், கட்டு காட்டென நீண்டது. உரை எ-து, உரைப்பீராக.

திருக்கழுமல மென்னும் மூவாப்பழங்கிழமைப் பன்னிரு பெயர்பெற்று அறுதி மூலமாகியபதியிடத்துக் கவுணிய கோத்திரத்திலே தோனறப்பட்டயான் நிவேதிக்கப்படுங்காட்டாகிய இப்பாடலைக் கீழ்ச்சொன்னவற்றிலுமழுந் தாநின்ற ஒருத்தராகிலும் பல[ர்களா](ர)ாகிலும் உரைசெய்வார் உயர்ந்தார் களேயாதலால் இப்பாடலை இடைவிடாமலுரை செய்வீராக. எ-று. (கஉ)

ஆக, பதிகம் 3-க்குப் பாடல் 35.

Colophon :

மாலைமாற்றுத்தேவாரம் அருத்தத்துடன் அடிமடக்குத் திருவியமகம்அருத் தத்துடன் திருமே[ய](வ)கபாதம் அருத்தத்துடன் எழுதிநி(றை)றவே[ர்](றி) னது. திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இதில் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிச்செய்த மாலைமாற்று, அடிமடக்கியமகம், ஏகபாதம் இவைகள் உரையுடன் இருக்கின்றன. மிக்க கடினமானபாடல்களின பொருளையறிவதற்கு இவ்வுரை பெரிதும் உதவியாக இருக்கும்; இந்தப்பிரதியின முதலிலுள்ள வாக்கியத்தால் இவ்வுரை * சீகாழி வள்ளல் சுவாமிகள் செய்ததென்று தெரிகிறது; ஆயினும் சிற்சில இடத்து வழுக்கள் காணப்படுதலால் சீகாழிவள்ளல்சுவாமிகள உரையென்றுதுணிந்து சொல்லக்கூடவில்லை.

No. 1138. தேவாரம்.

TĒVĀRAM.

Pages, 19. Lines, 10 on a page.

Begins on fol. 8*b* of the MS. described under No. 374.

Contains a portion of the Tēvāram of Tirunāvukkaraśunāyanār and one Padikam of Sundaramūrti and one Padikam of Sambandar.

(கு-பு.)—

இந்தப்பிரதியில், திருநாவுக்கரசுநாயனாரியற்றிய "வேற்றாகி விண்ணாகி" என்னும் போற்றித் திருத்தாண்டகமும், சுந்தரமூர்த்தி நாயனார் இயற்றிய "பித்தாபிறைசூடி" என்னும்பதிகமும், சம்பந்தமூர்த்தி நாயனாரியற்றிய "மருந்தவைமந்திரம்", "தோடுடையசெவி" என்னும்பதிகங்களும் உள்ளன.

No. 1139. தேவாரம் (திருவங்கமாலை).

TĒVĀRAM (TIRUVAṄGAMĀLAI).

Pages, 2. Lines, 9 on a page.

Begins on fol. 4*a* of the MS. described under No. 374.

Contains one Padikam entitled Tiruvaṅgamālai of the Tēvāram. The author is Tirunāvukkaraśu Nāyanār.

* சீகாழியில் கண்ணுடைய வள்ளலெனறும் வள்ளலாரென்றும் ஒருவரிருந்தார்; இவர் பெரியவர்; சிறந்தபுலமையுடையவர். இவர் செய்த நூல்கள் வள்ளலார் சாத்திரமென வழங்குகின்றன.

Beginning:

தலையே நீவணங்காய்—தலை

தலையாலே பலிதேருந் (தலைவனைத்);
தலையே நீவணங்காய். (க)

End:

தேடிக் கண்டு கொண்டேன்-திரு
மாலொடு நான்முகனும்
தேடியுந்தே[டு](டொணு)த்தேவனையென்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன். (கo)

(கு-பு.)—

இது திருநாவுக்கரசுநாயனாரியற்றியது. தேவாரத்தைச் சேர்ந்தது.

No. 1140. தேவாரம்.
TĒVĀRAM.

Pages, 22. Lines, 6-8 on a page.

Begins on fol. 171*a* of the MS. described under No. 333.

Contains a few Padikams of the Tēvāram.

Beginning:

விடையும் விடைப்பெரும் பாகா[ய](வ)ன் விண்ணப்பம் வெண்மழுவாட்
படையும் படையா னிரைத்தபல் பூகமும் பாய்புலித்தோ
லுடையு முடை-தலை மாலையு[ம்] மாலைப் பிறைஉ(டா)துங்குஞ்
சடையு மிருக்குஞ் சரக்கறை யோ[ய](வ)ன் றனிநெஞ்சமே. (க)

End:

கானமர் சோலைக் கவாலீச் சரமமர்ந்தான்
தேனமர் பூம்பாவை ப்) பாட்டாகச் செந்தமிழால்
ஞானசம் பந்த னலம்புகழ்ந்த பத்தும்வல்லார்
வானசம் பந்த(த் தவ)ரோடு வாழ்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இதில் சரக்கறைத்திருவிருத்தமும் 'முத்தாமுத்தி' என்னும் திருவாலங்காட்டுப்பதிகமும் 'மலையினார்' என்னும் இலம்பையங்கோட்டூர்ப்பதிகமும் 'மட்டிட்ட' என்னும் மயிலாப்பூர்ப்பதிகமுமாகிய தேவாரங்கள் இருக்கின்றன, இவற்றுள் திருவாலங்காட்டுப்பதிகத்தில் எட்டாவது தேவார முதலியன இல்லை.

No. 1141. தேவாரம்.
TĒVĀRAM.

Pages, 2. Lines, 11 on a page.

Begins on fol. 30*a* of the MS. described under No. 355.

Contains 2 Padikams of the Tēvāram. The author is Tirunāvukkarasu Nāyanār.

Beginning :

திருவாமாத்தூர்த் தேவாரம்.
திருக்குறுந்தொகை.

மாமாத்தாகியமாலயன்மால்கொடு
தாமாத்தேடியுங்காண்கிலர்தாண்முடி
யாமாத்தூரரனேயருளாயென்றே
யேமாப்பெய்திக்கண்டாரிறையானையே (க)

* * *

விடலையாய்விலங்கல் லெடுத்தான்முடி
யடரவோர்விரலூன்றியவாமாத்தூர்
இடமதாக்கொண்டவீசனுக்கென்னுளம்
இடமதாகக்கொண்டின்புற்றிருப்பனே (கக)

ஆதிபுராணத்திருக்குறுந்தொகை.

வேதநாயகன் வேதியர்நாயகன்
மாதினாயகன் மாதவர்நாயகன்
ஆதிநாயகனாதிரைநாயகன்
பூதநாயகன் புண்ணியமூர்த்தியே. (க)

* * * *

End :

அரக்கன்வல்லரட்டாங்கொழித்தாரருள்
பெருக்கச்செய்தபிரான்பெருந்தன்மையை
அருத்திசெய்தறியப்பெறுகின்றிலர்
கருத்திலாக்கயவக்கணத்தோர்களே (க0)

(கு-பு.) —

இந்தப் பிரதியிலுள்ள பதிகங்களிரண்டும், சைவசமயகுரவருளொருவராகிய திருநாவுக்கரசுநாயனாரியற்றியவை. முதற்பதிகம் திருவாமாத்தூரென்னும் சிவஸ்தலத்தைப் பற்றியது. இரண்டாவது பதிகம் ஆதிபுராணக் குறுந்தொகைக்கணடங்கியது.

No. 1142. தேவாரம்.
TĒVĀRAM

Pages, 8. Lines, 7 on a page.

Begins on fol. 36*a* of the MS described under No. 374.

Contains from the seventh to the tenth stanza of a Padikam by Sundarar and a few stanzas of Appar and Sambandar.

(கு-பு.) —

இந்தப் பிரதியில், சுந்தரமூர்த்திநாயனாரியற்றிய "கங்கைவார்சடையா" வென்னும் பதிகத்தின் ஏழாவது பாடல்தொடங்கிப் பத்தாவது பாடல்வரை நான்குபாடல்களும், திருநாவுக்கரசுநாயனாரியற்றிய "சொற்றுணைவேதியன்" என்னும் பதிகத்தின் முதலெட்டுப் பாடல்களும் இடையே திருப்புகழ்ப் பாடலொன்றும், பின்னர், சம்பந்தமூர்த்திநாயனாரியற்றிய "மருந்தவை மந்திரம்" என்னும் பதிகத்தின் முதலிரண்டு பாடல்களும் உள்ளன.

No. 1143. தேவாரம்.
TĒVĀRAM.

Substance, palm-leaf. Size, $3\frac{1}{4} \times 1\frac{3}{8}$ inches. Pages, 4. Lines, 13 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 50*a*. The other works herein are (Cidambaram) Kōyil Nānmaṇimālai 1*a*, Aṇḍavagai 39*a*, Piḷḷaiyāragaval 52, Tirumurugāṟṟuppaḍai 53, Vināveṇbā 57*a*.

Contains two stray stanzas and five stanzas of Tirupparaṅkuṉṟappadikam of the Tēvāram.

(கு-பு.)—

இதில "பிடியதன்" என்னும் வலிவலத் தேவாரப்பாட்டு ஒன்றும், "நீடலர் சோதி" என்னும் திருப்பரங்குன்றத் தேவாரப் பதிகத்தின் பாட்டுக்கள் ஐந்தும் உள்ளன. இவை ஞானசம்பந்தநாயனார் அருளியவை.

No. 1144. தேவாரம்.
TĒVĀRAM.

Substance, palm-leaf. Size, $11\frac{1}{4} \times 1\frac{7}{8}$ inches. Pages, 352. Lines, 13 14 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

The arrangement of this collection of the Padikams of the Tēvāram seems to be different from that found in the printed editions.

Beginning :

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கை(ம்)மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூத[ன](நா)யகனால் வேதமும் பொருள்க(ளுமருளி)
யங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த வாலவா யாவது மிதுவே (க)

End :

பழகவொ ளூர்தி யரன்பைங்கட் பாரிடம் பாணிசெய்யக்
குழலு முழவொடு மாநட மாடி யுயரிலங்கைக்
கிழவ னிருபது தோளு மொருவிர லாலிறுத்த
மழக னடிநிழற் கீழதன் றோவென்ற னாருயிரே (கக)

திருச்சிற்றம்பலம்.

காமாட்சியம்[மன்](பிகை) கி[று](ரு)பை மாசிலாமணி ஓதுவானுக்குண்டு.

(கு-பு.)—

இந்தப் பிரதியிலுள்ள பதிகமுறை பதிப்பிக்கப்பெற்றுள்ள பண்முறைத் தேவாரத்துக்கும் தலமுறைத் தேவாரத்துக்கும் வேறுபட்டிருக்கிறது. இது பண்முறையென்று தோற்றுகிறது; மூவர் பதிகங்களும் கலந்தெழுதப்பெற்றிருக்கின்றன. சிலபகுதிகளே யுள்ளன. மிகப் பழையபிரதி. கவனிக்கத்தக்கது. சிதிலம். இதில் 56—64 ஆம் பக்க எண்களமைந்த ஏடுகளும், 162 ஆம் பக்க எண் அமைந்த ஏடும் ஆகப் பத்து ஏடுகள் இல்லை.

No. 1145. தேவாரம் (கோளறுபதிகம்).
TĒVĀRAM (KŌḶAṞUPADIKAM).

Pages, 7. Lines, 5 on a page.

Begins on fol. 158*a* of the MS. described under No. 802.

Contains the Kōḷaṟupadikam of Tiruñānasambandamūrti Nāyanār. It is in praise of Śiva and expresses the view that no evils can proceed from the planets to a servant of God It came to be composed when Appar attempted to prevail upon Sambandar not to start during inauspicious days on his mission to overcome the Jainas of the Pāṇḍiya Kingdom.

Beginning:

கோ[ளூற](ளறு)பதி[ய](க)ம்.

வே[யிரு](யுறு)தோளிபங்கன்விடமுண்டகண்டன்மிகநல்லவீ[ணை](ணை)தட

மாசறு திங்கள்கங்கை முடிமேலணிந்தெனுளமே புகுந்தவதனால் [வி

ஞா[ய](யி)றுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம்வெள்ளிசனிபாம்பி[ற](ர)ண்டு [னுடனே

யாசறுநல்லநல்ல[ந] (வை)வநல்லநல்ல[ஞ]வடியா[ெ]ரவ[ற்](ர்க்)குமிகவே.

End:

தே[ந](ன)வ[ற்பு](ர்பொ)ழி(ல்) கொளாலைவள[ற்](ர்)
 செ[ன்ன](நெந)றுன்னி வள[ற்]ர் செம்பொனெங்குமகிழ[ா]
[ஞ](நா)ன்[மறை](முகனு தி)யாய[ஆ] பி[ரு](ர)மாபுரத்து
 ம[ர](றை)ஞானஞ(ா)ன முனிவன்
[ஞ](ரு)னு[றா](று)கோளு [ஞ](நா)ளு[ந](ம)டியாரை
 வந்துநலிய(ா)தவண்ண முறைசெய்[யி]
[ஞ](யா)னசொன்[ன]மாலையோது மடியார்கள்
 வானிலரசாளுமாணை நமதே. (கக)

திருச்சி[த்த](ற்ற)ம்பலம்.
கோ[ளூற](று)பதி[ய](க)ம் மு[த்து](ற்று)ம்.

(கு-பு.)—

இது சைவசமயகுரவர் நால்வருள் ஒருவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்பாடியது. பாண்டிநாட்டிலுள்ள சமணர்களை வெல்லக் கருதிச் செல்லத்துணிந்த சம்பந்தமூர்த்திகளை, கிரகங்கள்வலியிலவாதலின் இப்போது செல்லல்தகாதென்று அப்பர்கூற, சிந்தையில் சிவபிரான்புகுந்திருக்கையில் கிரகங்களும் நாட்கள் முதலியவைகளும் அடியார்க்குத் தீங்கிழைக்கா, நன்மையையே பயப்பிக்கும் என்று கூறிச் சிவபிரானைத் துதித்துப்பாடிய பதினொருபாடல்களையுடையது; ஆதலின் கோளறுபதிகமென்னும் காரணப்பெயரமைந்தது.

802-வது நம்பரிற் கூளூர்ப்பதிகமென்பதைக் கோளறுபதிகமெனப்படித்தல்வேண்டும்.

No. 1146. தேவாரம் (பூம்பாவைத் திருப்பதிகம்).
TĒVĀRAM (PŪMPĀVAIT TIRUPPADIKAM).

Pages, 2. Lines, 12 on a page.

Begins on fol. 12*b* of the MS. described under No. 623.

Contains a Padikam of the Tēvāram in praise of God Śiva worshipped under the name Kapālīśvarar in Mylapore.

A Śaiva devotee named Śivanēśar of Mylapore wished to give his daughter in marriage to Sambandamūrti but she died of snake-bite The father, however, preserved the bones of the dead daughter in a pot and presented them to Sambandar. This is the occasion for the outpouring of this Padikam when, according to tradition, at the close of the repetition of the 11th stanza thereof, the pot containing the bones burst out, and forthwith came out the girl in blooming beauty.

Beginning:

திருமயிலாப்பூர் பூம்பாவை. பண் - பஞ்சமம்.

மட்டிட்டபுன்னையங்கானன்மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டான்கபாலீச்சரமமர்ந்தானை
ஒட்டிட்டபண்பினுருத்திரபல்கணத்தார்க்
கட்டிட்டல்காணுதேபோதியோபூம்பாவாய். (க)

End:

கானமர்சோலைக்கபாலீச்சரமமர்ந்தான்
தேனமர்பூம்பாவைப்பாட்டாகச்செந்தமிழான
ஞானசம்பந்தனலம்புகழ்ந்தபத்தும்வல்லார்
வானசம்பந்தத்தவரோடும்வாழ்வாரே. (மக)

(கு-பு.)—

இப்பதிகம் தேவாரத்தைச் சேர்ந்தது. மயிலாப்பூரில் சிவநேசரென்பவரது புதல்வியாகிய பூம்பாவையினது எலும்பைக் கபாலீச்சரத்திலமர்ந்த சிவபிரானருளால் பெண்ணுருவாகுமாறு சம்பந்தமூர்த்தி நாயனார் பாடியது இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

623-வது ‘நம்பரில் திருமயிலாப்பூர் பூம்பாவை’ என இதற்குப் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

No. 1147. தேவாரம் (பூம்பாவைத் திருப்பதிகம்).
TĒVĀRAM (PŪMPĀVAIT TIRUPPADIKAM).

Pages, 5. Lines, 7 on a page.

Begins on fol. 73*a* of the MS. described under No. 1125.

Contains the Padikam complete.

Same work as the above.

(கு-பு.)—

இதில் பூம்பாவைத்திருப்பதிகம் முற்றும் உள்ளது; இந்நூலின் பின்னர் முருகக்கடவுள் நாமாவலியும் சக்கரமும் இரண்டேடுகளில் எழுதப்பட்டுள்ளன.

No. 1148. தேவாரம் (பூம்பாவைத் திருப்பதிகம்).
TĒVĀRAM (PŪMPĀVAIT TIRUPPADIKAM).

Pages, 2. Lines, 8 on a page.

Begins on fol. 21*a* of the MS. described under No. 299.

Contains the Padikam complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இப்பதிகம் ஏழு செய்யுட்களே உள்ளன.

No. 1149. தேவாரம்.
TĒVĀRAM.

Pages, 132. Lines, 7 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1127.

Contains one Padikam relating to the sacred shrine of Tiruppuḷḷamangai and the portion from the 10th stanza of the Padikam relating to Tiruvālanturai shrine to the Padikam entitled Tiruviyamakam relating to Tirukkaḻumalam (Shiyali).

Same work as that described under No. 1130.

(கு-பு.)—

இது 1130 ஆம் நம்பர் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் திருப்புள்ளமங்கைப் பதிகமும் திருவாலந்துறைப் பதிகத்தில் 10-வது பாட்டு முதலாகத் திருக்கழுமலம் திருவியமகம் இறுதியாகவுள்ளனவும் பூர்த்தியாக இருக்கின்றன. முன்னும் பின்னும் எஞ்சியபகுதிகள் இல்லை 40, 137 இவ்விரண்டு ஏடுகள் முறிந்துள்ளன.

இதனபின் வெற்றேடொன்றும், "முதுவாயோரி" என்னும் திருக்கச்சூர்த் தேவாரம் எழுதிய ஏடுகள் இரண்டும் உள்ளன.

No. 1150. தேவாரம் (திருத்தொண்டத்தொகை).
TĒVĀRAM (TIRUTTOṆḌATTOKAI).

Pages, 3. Lines, 12 on a page.

Begins on fol. 11*a* of the MS. described under No. 623.

Complete.

This Padikam of the Tēvāram was composed by Sundaramūrti. It is in praise of the devotees of Śiva and is said to have been written at the inspiration of Śiva when Sundaramūrti happened to meet some of the devotees while he had gone to worship God Śiva in Tiruvālūr.

Beginning:

திருத்தொண்டத்தொகை வ[ற](ர)லாறு.

தில்லைவா ழந்தணர் தமடியார்க்கு (ம)டியேன்
திருநீல கண்டத்துக் குயவனுர்க் கடியே
னில்லையே யென்னுத [யி](வி)யற்பகைக்கு மடியே
னிளையான்றன் குடிமாற னடியார்க் குமடியேன்

வெல்லுமாமிக வல்லமெய்ப் பொருளுக்கடியேன்
விரிபொழில் சூழ்குன்றையார் விறன்மிண்டர்க் கடியே
னல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (க)

End:

மன்னியசீர் மறைநாவ னின்ற வூர்ப்பூசல்
வரிவளையாள் மானிக்கு நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
றிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
[ம](எ)ன்னவனா மரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பா
ராரூரிலம்மானுக் கன்பரா வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இப்பதிகம் சுந்தரமூர்த்திகளியற்றிய தேவாரத்தைச் சார்ந்தது. இவர் திருவாரூரில் சுவாமிதரிசனம் செய்ய, கோவிலுட்புகுந்தபோது அங்குக் கூடியிருந்த சிவனடியார்களைக் கண்டு பத்திமேலீட்டால் "இவர்கட்கு எப்பொழுது யான் அடியனாவேன்" என்று நினைக்கச் சிவபிரான் அவர்கள் வரலாறுகளை இவர்க்கு உணர்த்த இப்பதிகத்தைப் பாடுவித்ததாகக் கூறுவர் சைவர். இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

No. 1151. தேவாரம் (திருத்தொண்டத்தொகை).
TĒVĀRAM (TIRUTTOṆḌATTOKAI).

Pages, 4. Lines, 10 on a page.

Begins on fol. 32*a* of the MS. described under No. 374.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இப்பதிகம் பூர்ணமாக உள்ளது.

No. 1152. திருவாசகம்.
TIRUVĀŚAKAM.

Pages, 242. Lines, 8 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 383.

Complete in 51 Prabandams.

Same work as that described under No. 30 on pages, 57 and 256 to 258 of M. Seshagiri Sastri's report No. 1. By Māṇikkavāśakar.

In the covering leaf at the beginning, a stanza is written in praise of Tiruvāśakam, and at the end of the work are found three stanzas giving the names of the various Prabandams of this work together with the number of stanzas contained in each of them. The work has been printed with an English translation by the late Rev. G. U. Pope.

(கு-பு.)—

இது, சேஷகிரி சாஸ்திரியார் ரிபோர்ட் முதல் வால்யம் 256-8 ஆம் பக்கங் களில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் இந்நூல் பூர்த்தியாய் இருக்கிறது.

இதன் முதல் ஏட்டில்: —

" திருவா சகமென்னுந் தேன்பருகித் தேசமெல்லாங்
கருவே றறுத்தருளிக் கருங்கடலை வேர்துளைத்த
தொருவா சகமென்னு முண்மை புணர்த் துத்தமனூர்
திருவா சகமென்னுந் தேனினருட் காரணமே"

என்னும் பாடலும், அச்சோப்பதிகத்தின் பின், ' அழியாவரத்தய்யர் பாத மே துணை. திருவாசகமுடிந்[து](த)து முற்றும் கூவந் தியாக சமுத்திர மான கொண்டமாசன்சேரி குறுமுடி அரசராணையார் சரபபூ[ற்](ர்த்)தி எழுத்து.' என்பனவும்,

" சிவபுரா ணங்கீ(ர்த்)தி திருவண்டம் போற்றித்
திருவகவன் முதனான்காஞ் சதக (நூ)று
மிவர்நீ[ற்ற](த்த)ல் விண்ணப்ப மைம்ப தாகு
மெம்பாவை யம்மானை சுண்ணங்கோத் தும்பி
புவனமகிழ் தெள்ளேணஞ் சாழலிரு பதுதாம்
பூவல்லி திருவுந்தி பத்தொன்ப தாகும்
உவமையிலாத் தோணோக்கம் பதி(னூன) காகு
மூசலொன்ப தாகுமென வுரைத்த வாறே." (க)

" திருவன்னை குயிற்பத்துத் திருத்[ ]தசாங்கந
(தி)ருப்பள்ளி யொடுகோயின் மூத்ததிருப் பதிக
மருள்கோயிற் றிருப்பதிகஞ் செத்திலடைக் கலமே
யாசையதி சயம்புணர்ச்சி வாழாப்பத் தருட்பத்
தொருபதென வுரைசெய்வர் கழுக்குன்ற மேழா
மொருபதாங் கண்டபத்துப் பிராத்தனைபன் னொன்றே
தி(ரும)ருவுங் குழைத்தபத்தோ டெயிருண்ணி யச்சந்
திருப்பாண்டி பிடித்தபத்தோ டேசறவும் பத்தே." (உ)

" திருப்புலம்பன் மூன்(ரு)ங் குலாப்பத்தற் புதமே
சென்னிதிரு வார்த்தைபத்தா மெண்ணப்பத் தாறும்
பிறக்குரிய யாத்திரைப்பத் தொ(ருப) தாகும்
படையெழுச்சி யிரண்டாகும் பதினொன்று வெண்பா
(வி)ருட்டவிரும் பண்டாய நான்மறையே ழாகு
மெட்டாகும் படையாட்சி யின்னேரே ழாகு
மருட்பெறுமச் சோவொன்பா னாற்பத்தேழ் [ரம்]பதிக
மகவனுடன் பாட்டறுநூற் [றன்](றைம்)பத் தாறே" (ங)

என்ற பாடல்களும்,

"திருச்சிற்றம்பலம். பதிகத்திலே திருப்பூவல்லி இருபது பாட்டு. அட்டவணை(ப்)பாட்டிலே பத்தொன்பது எ[ண்ணு](ன்று)சொல்லி யிருக்[கு](கிற)து; அட்டவணைப்பாட்டு மூனறும் வேறே ஒருடண்டாரம் பா மா[ய](கச்)சொன்னது; கூட எழுதினேன்" என்னும் வசனமும் எழுதப்பெற்றிருக்கின்றன.

No. 1153. திருவாசகம்.

TIRUVĀŚAKAM.

Pages, 288. Lines, 9 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1123.

Complete.

Same work as that described above.

Date of transcription—

விளம்பி௵ [ஆற்](ஐப்)பசி௴ உ௦௳ மணலூரிலிருக்கும் கயிலாய முதலியார் குமாரன் உத்தண்டியப்பன எழுதிநிறை[ஞ்சு](ந்த)து. முற்றும்.

(த-பு.)—

இது முன்பிரதிபோன்றது. அதில் முன்னும் பின்னும் உள்ளனவாகக் குறித்த பாடல்கள் நான்கும் இதிலும் உள்ளன. இந்தப் பிரதியும் பூர்த்தியுடையதே; மிகப் பழையது சிறிது சிதைந்திருக்கிறது.

No. 1154. திருவாசகம்.

TIRUVĀŚAKAM.

Substance, palm-leaf. Size, $10\frac{1}{8} \times 1\frac{1}{8}$ inches. Pages, 338. Lines, 6 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, somewhat old.

Complete.

Same work as that described above.

Date of transcription—

திருச்சிற்றம்பலம்.

திருவாசகமெழுதி நிறைவேறினது. அட்சய௵ [அற்](ஐப்)பசி௴ கசுஉ குருவாரம் ரோகிணி நட்சத்திரம் கூடிய சுபதினத்தில், விருத்தாசலத்தில் வேளா அருணகிரியா பிள்ளை குமாரன் தில்லை [ஞ](நா)யகன் எழுதின. நன்

மைக்[கி](கு) ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி மூங்கில்போற் சுற்றமுறியாமல் வாழ்ந்திருக்கவே[ணு](ண்டு)ம்

மாணிக்கவாசகர் திருவருபுண்டாகவேணும்.

குரு[ரு](நா)தன திருவடிகளே சரணம். ஆக, சாறுச

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இதில் 51 பிரபந்தங்களும் உள்ளன. திருப்பாண்டிப் பதிகமென்பது திருப்பாண்டி விருத்தமெனவும், திருவேசறவென்பது திருவேச ஜங்கமெனவும் சிறிது பேதப்பட்டிருக்கின்றன.

No. 1155. திருவாசகம்.

TIRUVĀŚAKAM.

Substance, palm-leaf. Size, 13 × 1⅛ inches. Pages, 152. Lines, 7-10 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1*a*. The other work herein is Tiruccirrambalakkōvaiyār 77*a*.

Contains 1 to 41 Prabandams, but a small portion is wanting in the middle, as foll. 34 to 37 are lost.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. இதில் திருவாசகப் பகுதிகள் 51—ல் முதலிலிருந்து 41 பகுதிகள் உள்ளன. இடையே 4 ஏடுகள் (34—37) இல்லாமையால் 7-வது பிரபந்தமாகிய 'திருவெம்பாவை' என்னும் பகுதியும் அதற்கு முன்பின் உள்ள சில பாடல்களும் இல்லை.

No. 1156. திருவாசகம்.

TIRUVĀŚAKAM.

Pages, 284. Lines, 7 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 600.

Contains 1 to 37 Prabandams complete; but fol. 120 is wanting in the middle.

Same work as the above.

(கு-பு.)—

இந்தப் பிரதியில் 'திருவண்டப்பகுதி' முதலாகத் 'திருப்புலம்பல்' இறுதியாக முப்பத்தேழு பகுதிகள் உள்ளன. இடையே 120-ஆம் ஏடு ஒன்றுமட்டும் இல்லை.

No. 1157. திருவாசகம்.
TIRUVĀŚAKAM.

Substance, palm-leaf. Size, 8¾ × 1⅛ inches. Pages, 209. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, very old.

Begins on fol. 7*a*. The other works herein are Māṇikkavāśakar-Tirumaṇiyakaval 1*a*, Palapāḍal 112*a*, Muruhar Tariśippu 115*a*, Tiruviḷaiyāḍaṟkaliveṇbā 118*a*, Avināśippattu 12?*a*.

Contains 1 to 24 Prabandams complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. முதலிலிருந்து 24 பிரபந்தங்கள் இதில் பூர்த்தியாகவுள்ளன.

No. 1158. திருவாசகம்.
TIRUVĀŚAKAM.

Substance, palm-leaf. Size, 11¼ × 1¼ and 17¾ × 1¼ inches. Pages, 57. Lines, 5-7 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 43*a*. The other works herein are Tattuvakkaṭṭaḷai 1*a*, Nādāntaśāram 19*a*, Śivatattuvakkaṭṭaḷai 30*a*.

Breaks off with the 44th stanza of the Tiruccatakam but as fol. 11 and 18 are lost, some stanzas in the middle are wanting.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது; இதில், 'சிவபுராணம்' முதல் 'திருசசதகம்' 44-வது செய்யுள் வரையில் உள்ள பகுதிகள் இருக்கின்றன. 11, 18 என்னும் எண்ணிட்ட இரண்டு ஏடுகளும் இல்லாமையால், அவற்றுள்ளும் சில பகுதிகள் இல்லை.

No. 1159. திருவாசகம்.
TIRUVĀŚAKAM.

Pages, 7. Lines, 4 on a page.

Begins on fol. 65*a* of the MS. described under **No. 165.**

Contains only 13 stanzas.

Same work as the above.

(கு-பு.)—

இதில் 48-வது பிரபந்தமாகிய "பண்டாய நான்மறை' என்பதை முதலாகக்கொண்ட ஏழுவெண்பாக்களும், 19-வது பிரபந்தமாகிய 'திருத்தசாங்கத் 'தின் முதல் ஆறு வெண்பாக்களுமே உளளன.

No 1160. திருவாசகம்.
TIRUVÂŚAKAM.

Pages, 6. Lines, 8–9 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 374.

Contains the first Prabandam entitled Śivapurāṇam.

Same work as the above.

(கு-பு.)—

இந்தப்பிரதியில் திருவாசகத்தின் முதற்பிரபந்தமாகிய 'சிவபுராணம்' மட்டுமே உள்ளது.

No. 1161. திருவாசகம்.
TIRUVÂŚAKAM.

Pages, 3. Lines, 8 on a page.

Begins on fol. 34*a* of the MS. described under No. 374.

Contains the 7th Prabandam entitled Tiruvembâvai.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. ஏழாவதாகிய திருவெம்பாவை மட்டும் முற்றும் உள்ளது.

No. 1162. திருவாசகம்.
TIRUVÂŚAKAM.

Pages, 2. Lines, 6 on a page.

Begins on fol. 77*a* of the MS. described under No. 633.

Contains four stanzas and a portion of a stanza.

Same work as the above.

(கு-பு.)—

இத்தப்பிரதியில் திருவாசகம் திருச்சதகத்தின் 99-வது பாடலின் ஈற்றடியும் 100-வது பாடலும், நீத்தல் விண்ணப்பத்தின் முதல் மூன்று பாடல்களுமே உள்ளன.

No. 1163. திருவாசகத்திருவுளக்கிடைபொழிப்புரை.
TIRUVÂŚAKATTIRUVUḶAKKIḌAIPOḺIPPURAI.

Pages, 4. Lines, 8 on a page.

Begins on fol. 181*a* of the MS. described under No 1127.

Complete.

This work briefly indicates what each of the 51 Prabandams of the Tiruvâśakam purports to deal with. It is diffeient from the Tiruvâśakattiruviḷakkiḍai which has been printed.

Beginning :

சிவபுராணமுங் கீ[ற்](ர்த்)தித் திருவகவலும், சிவனுடையவுயிரருள் தி[ல](லே)மை ; எ(ன்ப)து, அருவநிலே.

திருவண்டப்பகுதி-திருவுள்ளக்கிடை ; எ - து, சிவனுடைய தூலசூக்குமத்தை விகற்பித்தது.

போற்றித்திருவகவல்-செகத்தி[லு](னு)ற்பத்தி ; எ - து, பி[ற](ர)பஞ்சத்தைத் தோற்[றி](று)வித்தல்.

திருசசதகம்-பத்துவகையாக ர[ஷ்](ட்)சிக்குமு(ை)றமை.

End :

திருப்படையா[ஷ்](ட்)சி - பி[ந](ர)பஞ்சத்திலெ சீவ உபாதியொழித்தல் ; எ - து, கி[றி](ரி)யாசூனியம்.

மின்னேரனேயார்-வழக்கழித்தல் ; எ-து, சிவானந்தமேலீட்டி[லக்](ற்)கி[றி](ரி)யாசத்தியழி(வு)ரைத்தல்.

அச்சோப்பத்து-அனுபவ அதி[சி](ச)யம ; எ - து, அனுபவம் (வந்த)வழிய[ரி](றி)யாமை.

Colophon :

(இ)ந்த(த்) திருவுளக்கிடையின் வழித்தானவுண்மையை(ச்) சற்குருகடா[ஷ](ட்)சத்தாலே [ெ]தரிசித்து வழிபடுவதான திருவுளக்கிடை புடிந்தது முற்றும். திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இது, திருவாசகத்திலுள்ள 51 பிரபந்தங்களுள் இன்னது இன்னது இன்ன இன்ன விஷயத்தைக் குறிப்பிக்குமென்று கூறுவது ; இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது ; இதற்கும் திருவாசகத்தோடு சேர்த்துப் பதிப்பித்திருக்கும் திருவாசகத்தின் திருவுளக்கிடைக்கும் மிக்க வேறுபாடுண்டு ; திருவெம்பாவையைப்பற்றிக் கூறுமிடத்துத் தசசத்திகளே விகற்பித்ததென்று சொல்லி, பதின்மர் பெயரும் இதிற் கூறப்பட்டிருக்கின்றன. ஐம்பதாவது பிரபந்தப் பெயர் அட்டவணைப்பாட்டிற் குறித்தபடி "மின்னேரனேயார்" என்றே இதிற் காணப்படுகிறது. அச்சுப்பதிப்பில் இவைகட்கு மாறுயிருக்கின்றமை காண்க.

No. 1164. திருவாசகத்திருவுளக்கிடைபொழிப்புரை.

TIRUVĀŚAKATTIRUVUḶAKKIḌAIPOḺIPPURAI.

Substance, palm-leaf. Size, 6¼ × 1 inches. Pages, 8. Lines, 7–8 on a page. Condition, slightly injured. Appearance, old.

Begins on fol. 32*a*. The other works herein are Tāyumānavar Anubhōgasāra Ānandakkaḷippu 1*a*, Uḍalaṟiviḷakkam 8*a*. Piḷḷaikkuttaṇṇīrōdumandiram 15*a*, Pagavaṟkītaittālāṭṭu 16*a*, Ṣaṣṭikavacam 36*a*.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது; பூர்த்தியுடையது.

No. 1165. திருவாசகத்திருவுளக்கிடைபொழிப்புரை.

TIRUVĀŚAKATTIRUVUḶAKKIḌAIPOḺIPPURAI.

Pages, 3. Lines, 7 on a page.

Begins on fol. 179*a* of the MS. described under No. 1127.

Similar to the above. The names of the 51 Prabandams of the Tiruvāśakam are given here and they are explained very briefly from the point of view of the Śaiva Siddhānta.

Beginning:

சிவபுராணம் :—சிவனுடைய அநாதிமு(றை)றமையான பழமை.
கீர்த்தித்திருவகவல் :—சிவனுடைய அருளின் மு(றை)றமை.
திருவண்டப்பகுதி :—சிவனுடைய தூலசூக்குமத்தை வியந்தது.
போற்றித்திருவகவல் :—செகத்துற்பத்தி.
திருச்சதகம் :—பத்துவகையாக ரட்சித்தமு(றை)றமை.
நீத்தல்விண்ணப்பம் :—பிரபஞ்சவயிராக்கியம்.
திரு(வெ)வம்பாவை :—[வெ]தசசத்திகளையும் வியந்தது.

End:

திருவார்த்தை :—அறிவிக்க அறிதல்.
எண்ணப்பத்து :—ஒழியாவின்பத்துவகை.
யாத்திரைப்பத்து :—அநுபவாதீதமுரைத்தல்.
திருப்படை எழுச்சி :—பிரபஞ்சப்போர்.
திருவெண்பா :—அணைந்தோர்தன்மை.
பண்டாயநான்மறை :—அநுபவத்துருகைமாறலடிமை (?)
திருப்படையாட்சி :—சிவவுபாதியொழித்தல்.

பின்னோரணையபூங்கழல் :—வழக்கறிவுறுத்தல்.

அச்சோப்பத்து :—அனுபவம் வந்தவழியறியாமை.

ஆகவகை ௫௧-க்குச் செய்யுள். . . . .

(கு-பு.) –

இது முன்பிரதிபோன்றது ; அதனினும் இது சுருக்கமானது. இந்தப் பிரதியில் முற்றும் உள்ளது. இதன் தலைப்பில், "திருவாசகம் பொழிப்புரை" என்று எழுதப்பட்டிருக்கிறது.

No. 1166. திருவாசகம், அதிகாரவடைவு.

TIRUVĀŚAKAM, ADIKĀRAVAḌAIVU.

Pages, 11. Lines, 6 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1133.

The first four pages contain the same three stanzas found at the end of the work described under No. 1152 and extracted therein. The last seven pages give the initial words of the stanzas contained in some of the Prabandams beginning with Tiruvembāvai Prabandam.

End :

ஆதியுமந்தமுமில்லாபாசமுத்தன வெண்ணகையை யொண்ணிமாலறியாமானேபர சோதியன்னே கோழிமுன்னே பாதானமொய்யார் தடம் பொய்கையார்த்த கூத்தன் பைங்குவளை காதாரவோரொரு காலமுன்னிச் செங்கணனுமலையுங்கைபோற்றி (. . . . .)
உச்சிமுக மீசானிய மொளிதெளிய பளிங்கதிறம் திச்சயித்த முகத்துக் கீழ் புறந் தென்றிசைநோக்கி யொருமுகத்தே . . . .

(கு-பு.)—

இது, திருவாசகத்தைச்சார்ந்தது. இதன் முதல் 4 பக்கங்களில் எழுதியுள்ள அட்டவணைப் பாட்டுக்கள் மூன்றும் 1152 நம்பரின் இறுதிக்குறிப்பில் எழுதியுள்ளனவே. அடுத்த எழுபக்கங்களில் 'திருவெம்பாவை' முதலாகவுள்ள சில பிரபந்தங்களின் செய்யுள் முதனினைப்பு எழுதப்பட்டிருக்கின்றன.

No. 1167. திருச்சிற்றம்பலக்கோவையார்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR.

Pages, 130. Lines, 8–9 on a page.

Begins on fol. 77*a* of the MS. described under No. 1155.

Complete.

A poem in 400 quatrains by Māṇikkavāśakar seemingly on love-topics but really in praise of God Naṭarāja, a form of Śiva worshipped in Chidambaram. It forms the latter half of the 8th. Tirumuṟai, the first half being Tiruvāśakam. The subject-matter of each stanza is given immediately after it in a couplet. The work is also known as Tirucciṟṟambalakkōvai, Ciṟṟambalakkōvai, Tirukkōvaiyār, Kōvaiyār and Kōvai; and its greatness and all-comprehensiveness are brought out in a stanza in the beginning as well as in a Sūtra of the Ilakkaṇakkottu and its commentary. The MS. contains many good readings not found in the printed editions.

Beginning:

எண்ணிறைந்த தில்லை யெழிற்கோ புரந்திகழக்
கண்ணிறைந்து நின்றருளுங் கற்பகமே—நண்ணியசீர்த்
தேனூறுஞ் செஞ்சொற் றிருக்கோவை யென்சிந்தை
நானூறு[ம்] நிற்கவே நல்கு.

ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிக ளாகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்ப
ரேரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரி[ம்](ன்)புலவோர்
சீரணங் காய்நின்ற சிற்றம் பலக்கோவை செப்பிடிலே.

திருச்சிற்றம்பலம்.

திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி னொல்கி ய[ன்]ன நடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக் கொடி[ப்]போன் றொளிர்கின்றதே.

மதிவாணுதல் வளர்வஞ்சியைக்
கதிர்வேலவன் கண்ணுற்றது. (க)

End:

காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் றக்கோர்தஞ் சங்க நிதிவிதிசே
ரூரணி யுற்றவர்க் கூரன்ம[ா]ற் றியாவர்க்கு மூதியமே.

இரும்பரிசி லேற்றவர்க்கருளி
விரும்பினர்மகிழ மேவுதலுரைத்தது. (௪00)

திருச்சிற்றம்பலம்.

Colophon:

சித்திரபானுஸு ஆவ[னி](ணி)மீ ௨௰௨ சிற்றம்பலக்கோவை எழுதி நிறைந்தது ; முற்றும்.

(௫-பு.)—

இது, திருவாசகம்பாடியருளிய மாணிக்கவாசக ஸ்வாமிகள் வாக்கு ; சைவத்திருமுறை 12-ல் எட்டாவது திருமுறையின் பிற்பகுதி ; அகப்பொருட்

முறைக்கு இலக்கியமாக அமைந்துள்ள 400 கட்டளைக்கலித்துறைகளையுடையது; ஒவ்வொரு கலித்துறையின் பின்னும் விஷயத்தைச் சுருக்கிக்கூறும் கொளு அமைக்கப்பெற்றிருக்கிறது. இந்நூல், திருச்சிற்றம்பலக்கோவையார், திருச்சிற்றம்பலக்கோவை, சிற்றம்பலக்கோவை, திருக்கோவையார், கோவையார், கோவை என வழங்கும். இதன் சிறப்பை முதலிலுள்ள "ஆரணங் காணென்ப ரந்தணர்" என்னுஞ் செய்யுளாலும், "பல்காற் பழகினுந் தெரியா வுளவேற், றொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார், மூன்றினு முழங்கும்" என்னும் இலக்கணக்கொத்துச் சூத்திரத்தாலும், "திருவைக் கோவைக்குங் கூட்டுக. மாணிக்கவாசகர் அறிவாற் சிவனேயென்பது திண்ணம். அன்றியும் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் அவர் வாக்கிற்கு அலந்து இரந்து அருமைத் திருக்கையாலெழுதினார்; அப்பெருமையை நோக்காது சிந்தாமணி (. . . . . .) முதலியவற்றோடு சேர்த்துச் செய்யுட்களோடொன்றாக்குவர்." என்னும் அதன் உரைப்பகுதியாலும் உணர்க. இந்தப் பிரதியில் மூலம் பூர்த்தியாயிருக்கிறது; இதில் அச்சுப் பிரதியிலில்லாத பாடபேதங்கள் சில காணப்படுகின்றன.

No. 1168. திருச்சிற்றம்பலக்கோவையார்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR.

Pages, 5. Lines, 9 on a page.

Begins on fol. 48a of the MS. described under No. 1135.

Contains only nine stanzas which are not consecutive in number.

Same work as the above.

(த-பு.)—

இந்தப் பிரதியில் ஒன்றோடொன்று தொடர்ச்சியில்லாத திருச்சிற்றம்பலக்கோவையார்ப்பாடல்கள் ஒன்பதே உள்ளன.

No. 1169. திருச்சிற்றம்பலக்கோவையார், பேராசிரியருரையுடன்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR WITH THE COMMENTARY OF PĒRĀŚIRIYAR.

Substance, palm-leaf. Size, $11\frac{1}{2} \times 1\frac{5}{8}$ inches. Pages, 571. Lines, 9 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old. Complete.

Same poem as the above and with a commentary by Pērāśiriyar also called Tolpērāśān, who is said to have lived prior to Naccinārkkiniyar. In the printed editions, this commentary is attributed to Naccinārkkiniyar but the better opinion seems to be that it is by Pērāśiriyar who

has also written a commentary on 1 to 380 stanzas of the Kuṟuntohai, one of the class of works known as Padinenkīḻkaṇakku.

Beginning :

எண்ணிறைந்த தில்லை (. . . . . . .) நல்கு.
ஆரணங் காணென்ப ரந்தணர் (. . . .) செப்பிடினே.
* * * * .

திருவளர் தாமரை (. . . . . . .) ஒளிர்கின்றதே.
மதிவாணுதல் (. . . . .) கண்ணுற்றது.

என்பது :—திருவளருந் தாமரைப் பூவினையும் அழகுவளரும் நீலப்பூக்களையும் ஈசர் தில்லைவரைப்பின்கணுண்டாகிய பூங்குமிழினது நிறம்வளரும் பூவினையும் கோங்கரும்புகளையும் செவ்விக்காந்தட்பூக்களையுமுறுப்பாகக்கொண்டு மேம்பட்ட தெய்வமணம்வளரும் மாலை ஓர் வல்லிபோ[லு](ல)நுடங்கி அன்னத்தினடைபோலு நடைவாய்த்து வடிவுவளருங் காமனது வெற்றிக்கொடிபோன்று விளங்காநின்றதென்னவியப்போ! என்றவாறு.

திருவென்பது கண்டாரால் விரும்பப்படுந்தன்மை நோக்கென்றவாறு;

திருமகடங்குந்தாமரை யெனினுமமையும்.

பூங்குமிழென்பது முதலாகிய தன்பொருட்கேற்ற அடையடுத்துவந்ததோராகுபெயர்.

* "தளிபெறு தண்புலத்துத் தலைப்பெயற் கரும்பீன்று, முளிமுதற் பொதுளிய முட்புற[வ]ப் பிடவம்" என்பதுபோல, 'ஈசர் தில்லை' என்பதனை எல்லாவற்றோடுங்கூட்டுக.

பல நிலங்கட்குமுரிய பூக்களைக் கூறியவதனால், நிலமயக்கங்கூறியவாறாயிற்று. அது கூறவே பல நிலங்களினுஞ் சென்று துய்க்குமின்பமெல்லாம் தில்லைவாழ்வார் ஆண்டிருந்தே துய்ப்பரென்பது போதரும்; போதர, இம்மையின்பத்திற்கும் தில்லையே காரணமென்பது கூறியவாறாயிற்று.

'ஈசர் தில்லை' எனபதனால், மறுமையின்பத்திற்குங் காரணமாதல் சொல்லாமையே விளங்கும்.

[மெய்ப்பாடென்பது புறத்துக்கண்டதோர் பொருள் காரணமாகச் சொல்லாமையே விளங்கும்].

செய்யுளாதலாற் செவ்வெண்ணின்றொகை கொக்குநின்றது.

ஓங்குமாலையென இயையும்.

'தெய்வமருவளர்மாலை' என்றதனால், தாமரை முதலாயினவற்றானியன்ற பிறமாலையோடு இதற்கு வேற்றுமைகூறியவாறாம்.

'வாய்ந்' என்பது நடையின் வினையாதலிற் சினைவினைப்பாற்பட்டு முதல்வினையோடு முடிந்தது.

'உருவளர் காமன் வென்றிக்கொடி' என்பது, நுதல்விழிக்குத் தோற்று உருவிழப்பதன்முன் மடியா ஆணையனாய் நின்று உயர்த்தகொடியை.

அன்னநடைவாய்ந்தென்பதற்கு அவ்வவ்வியல்பு வாய்ப்புப்பெற்(ற)றெனவும் அமையும்.

---

* கலித்தொகை, ௧௦௧.

உவகை மிகுதியாற் சொன்னுகைவின் இப்பாட்டிற்கு மெய்ப்பாடு உவகை; உவகையாவ்து, சிருங்காரம்.

பயன், மகிழ்தல். பயனென்பது நெஞ்சினடுத்ததோர் மெய்ப்பாடு காரணமாகத் தன்வயினிகழ்ந்த சொல்லானெய்துவது.

விசேடம், மூரண்.

End:

காரணி கற்பகம் (. . . . . . .) ஊதியமே.
இரும்பரிசில் (. . . . . . .) உரைத்தது.

(எ-து) ஊரன் வேண்டாமை(க்) கொடுத்தலிற் காரோடொக்கும்; வேண்டக்கொடுத்தலின் அழகிய கறபகத்தோடொக்கும்; நுண்ணிய கல்வியனுக விற் கற்றவர்க்கு நல்ல உசாத்துணை; இசையுணர்வானும் கெழுதகைமை யானும் பாணர்க்கு அவர் சுற்றத்தோடொக்கும்; நினைத்தது கொடுத்தலிற் சீரையுடைய நல்ல சிந்தாமணியோடொக்கும்; அழகிய தில்லைக்கட் சிவனது திருவடிக்குத் தாராகியவ(னு)ன[ணி](ணி)யப்படு[வ](ங்) கொன்றைப்பூவின் றன்மைஊயயுடையன்; சான்றோர்தமக்குத் தொலையாத நிதியாயிருத்தலிற் சங்கநிதியோடொக்கும்; நட்டார்க்கும் பகைவர்க்கு[த்](ந்) தப்பாது பயன் கொடுத்தலின் விதியோடொக்கும்; சுற்றத்தார்க்கு அவர் வேண்டிய செய்ய இருத்தலின் அணித்தாகிய ஊருணியோடொக்கும்; அதனுல், வரைவின்றி எல்லார்கரும் இவன் பெரும் பயன் எ-று.

'தாரணிகொன்றையன்' என்பது 'குரங்கன்' என்பதுபோல உவமைப் பொருட்பட நின்றதெனினும் அமையும்

'விதி[ரெ](சேருரணி)' என்பதற்கு முறைமையாற் சேரப்படும் ஊருணி யெனினும் அமையும்.

தக்கார்க்குஞ் சுற்றத்தார்க்குங்கொடுத்தல் வண்மையன்மையின் அவரை வேறுபிரித்துக் கூறினர்.

ஊடல்தீர்ந்து கூடியவழித் தலைமகட்கு உண்ணின்ற சிவப்பு ஒரு காரணத்தா(ற்) சிறிது புலப்பட, ஊரன் யாவர்க்கும் ஊதியமாகலின் அன்பாலன்றி அருளாற் பரத்தையர்க்குத் தலையளி செய்யுமன்றே; அதனுல் நீ புலக்கற்பாலையல்லையென்று குறிப்பினுற் றோழி சிவப்பாற்றுவித்தது.

மெய்ப்பாடு, உவகை. பயன், மெய்ம்மகிழ்தல். (௪00)

The scribe adds—

திருச்சிற்றம்பலக்கோவையார் எழுதிநிறைந்தது.

(கு-பு.)—

இந்நூலைப்பற்றிய குறிப்பு 1167-ஆம் நம்பரில் எழுதப்பட்டிருக்கிறது; இவ்வுரை நச்சினர்க்கினியரியற்றியதாக அச்சிடப்பட்டிருக்கின்றதாயினும் பின்பு அறிஞர்களாற் பேராசிரியருரையென்றே நிச்சயிக்கப்பெற்றிருக்கிறது. இவர் நச்சினர்க்கினியருக்கு முற்காலத்தவர். சிறந்த உரையாசிரியர்களுள் ஒருவர்; எட்டுத்தொகையுள் இரண்டாவதாகிய குறுந்தொகையில் 380 பாடல்களுக்கும் தொல்காப்பியத்திற்கும் உரை இயற்றியவர்; தொல்பேராசானென்றும் கூறப்பெறுவர். இக்கோவையாருக்கு இவரெழுதியிருக்கும் உரை மூலத்திலுள்ள விஷயத்தைத் தெளிவாக முதலிற் சுருக்கிக் காட்டிப் பின்பு அடைமொழி முதலியவற்றிற்குப் பொருள்கூறுவது; அன்றியும் பதசாரமும்

சைவசாத்திரக் கருத்துக்களும் சொல்லிலக்கண முடிபுகளும், துறை மெய்ப்பாடு பயன் முதலிய அகப்பொருளிலக்கணக் குறிப்புக்களும் எழுதப்பெற்றிருத்தலால் மிகச்சிறந்தது. இந்தப் பிரதியில் சில இடத்துத் துறையும் அவதாரிகையும் இல்லை; மூலமும் உரையும் முற்றுமுள்ளன; அச்சிடப்பட்டது)

No. 1170. திருச்சிற்றம்பலக்கோவையார், பேராசிரியருரையுடன்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR WITH THE COMMENTARY OF PĒRĀŚIRIYAR.

Substance, palm-leaf Size, 15¾ × 1⅜ inches. Pages, 394. Lines, 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Contains 1 to 399 stanzas with commentary and the 400th stanza without the commentary.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதி போன்றது. இதில் முதல் 399 பாட்டுக்கள் உரையுடனும் 400 வது பாட்டு உரையின்றியும் இருக்கின்றன. இறுதியில் ஐந்தேடுகளின் நுனி ஒடிந்துள்ளன.

No. 1171. திருச்சிற்றம்பலக்கோவையார், பேராசிரியருரையுடன்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR WITH THE COMMENTARY OF PĒRĀŚIRIYAR.

Substance, palm-leaf. Size, 14¾ × 1¼ inches. Pages, 539. Lines, 5 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, not old.

Contains 1 to 358 stanzas with their commentary.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதி போன்றது. இந்நூற் செய்யுள் 400 ல் இதில் 358 செய்யுட்கள் உரையுடன் இருக்கின்றன.

No. 1172. திருச்சிற்றம்பலக்கோவையார், பேராசிரியருரையுடன்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR WITH THE COMMENTARY OF PĒRĀŚIRIYAR.

Substance, palm-leaf. Size, 15 × 1⅛ inches. Pages, 440. Lines, 5-8 on a page. Character, Tamil. Condition, not injured. Appearance, old.

Contains 1 to 360 stanzas with the commentary discontinuously as foll. 1 to 5, 25, 26, 46, 47 and 72 are wanting in the middle.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதி போன்றது. இந்நூற் செய்யுள் 400 ல் இந்தப் பிரதியில் 360 செய்யுள் வரையுள்ள பகுதிகள் இருக்கின்றன. இந்தப் பிரதியின் ஏட்டிலக்கம் 230 ல் (1-5, 25-6, 46-7, 72 என்னும் இலக்கமிட்ட) 10 ஏடுகள் இல்லாமையால் இடையிடையே சில பகுதிகளில்லை. இதிலுள்ள சில ஏடுகள் முறிந்திருக்கின்றன.

No. 1173. திருச்சிற்றம்பலக்கோவையார், பேராசிரியருரையுடன்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR WITH THE COMMENTARY OF PĒRĀŚIRIYAR.

Substance, palm-leaf. Size, 15⅝ × 1⅝ inches Pages, 195. Lines, 11 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Incomplete as foll. 110 to 121 are wanting in this MS.

Same work as the above.

The scribe adds—

சாலி(வாகன) சகாப்தம் 1676-க்கு (மேற்)சொல்லாநின்ற ஸ்ரீமுக௵ சைத்திரமாஸம் ௨௪௨ கிர்ஷ்ண பக்ஷம் வெள்ளிக்கி(ழமை) . . . . சோபனம் ௬௩௯ பவகரணம் ௧௩ தியாஜ்யம் ௪ மேல் இந்தச் சுபதினத்தில் நவாசிப்பேட்டை வேலாயுத பண்டாரங் . . . . திருச்சிற்றம்பலக்கோவையார் எழுதி முடித்தான்

மாணிக்கவாசகர் சொற்படிக்கு அழகிய திருச் . . . . மறையாகமலக்ஷணம் காமப் பொருளதிகாரம் இந்த நாலும் இதில் அறியலாம்.

ஸ்ரீதிருவாவடுதுறை அம்பலதே . . . . . கனகசபாபதி பாதார விந்தத்தில் சுப்பிரமணியன் சதா சேவை. ஏகாம்பரத் தொருவனே தெய்வம்.

(கு-பு.)—

இது முன் பிரதி போன்றது. இதில் (110-121 எண்ணமைந்த) 12 ஏடு இல்லை. இது மிகப் பழைய பிரதி. சிதிலமாயிருக்கிறது.

"அகத்திய மதனி லரும்பொருள் விளக்கு
மகத்தமிட் செய்யுட் கதிகார மாகத்
துறையுடன் கிளவி தொழிற்படத் தில்லை
யிறையவன் மேல்வைத் தியம்பிய கோவைப்
படியசீ ரறிந்து பண்புடை யாளர்க்
கடிவர வாகு மதன்றிறங் கூறல்

என்னெனின், திருக்கோவை நானூற்றுக்கும் அதிகாரமுங் கிளவியு முணர்த் துதல் நுதலிற்று" என்னும் பகுதி இதன் முதலில் எழுதப் பெற்றுள்ளது.

No. 1174. திருச்சிற்றம்பலக்கோவையார், பேராசிரியருரையுடன்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR WITH THE COMMENTARY OF PĒRĀŚIRIYAR.

Substance, palm-leaf. Size, 18¼ × 1¼ inches. Pages, 441. Lines, 7–8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, not old.

Leaves 29 (fol. 186 to 214) in the middle and consequently 50 stanzas (300–350) and their commentary are wanting. There are two leaves numbered 126. The last two leaves contain again stanzas 167–169 with their commentary.

Same poem and commentary as the above.

The scribe adds—

தில்லைவனப் பெரும்பற்றப் புலியூர்த் திருச்சிற்றம்பலவாணராகிய அழகிய திருச்சிற்றம்பலமுடையார் மாணிக்கவாசகர் சொற்படிக்(கு)த் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதியருளிய திருச்சிற்றம்பலக்கோவை முற்றும்.

பி[ற](ர)சோற்ப(த்)தி ௵ தைமீ உசஉ நவமியும் அனுஷமுங் கூடின சுபதினத்தில் எழுதி நிறைந்தது.

(கு-பு.)—

இது முன் பிரதி போன்றது. இதன் இடையே (186-214 எண்ணுள்ள) 29 ஏடுகள் இல்லாமையால் 300 முதல் 350 வரையுள்ள செய்யுட்களும் அவற்றின் உரைப் பகுதிகளும் இல்லை. 32-ம் எண்ணுள்ள ஏடு முறிந்திருக்கிறது. 126-ம் எண்ணமைந்த ஏடு இரண்டு உள்ளன. இதன் பின்னுள்ள இரண்டேடுகளில் இந்நூலின் (167-169) இம்மூன்று செய்யுட்கள் உரையுடன இருக்கின்றன.

No. 1175. திருச்சிற்றம்பலக்கோவையார், பேராசிரியருரையுடன்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR WITH THE COMMENTARY OF PĒRĀŚIRIYAR.

Substance, palm-leaf. Size, 18¼ × 1⅛ inches. Pages 58. Lines, 6–8 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Contains stanzas 300 to 349 with their commentary.

Same work as the above.

(கு-பு)—

இது முன்பிரதி போன்றது. இதில் 300 முதல் 349 வரையுள்ள செய்யுட்களும் அவற்றின் உரைகளும் இருக்கின்றன.

No. 1176. திருச்சிற்றம்பலக்கோவையார்; பதவுரையுடன்.

TIRUCCIRRAMBALAKKOVAIYĀR WITH MEANING.

Substance, palm-leaf. Size, 11¼ × 1¼ inches. Pages, 627. Lines, 9–10 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old. Complete.

The text is herein accompanied with meaning word for word. The name of the author of this commentary is not known. It is based on Pērāsiriyar's commentary already noticed. In this MS., the couplets are written before the quatrains instead of after them as in the previously described MSS.

திருச்சிற்றம்பலக் கோவையார்,
(பதவுரையுடன்).

Beginning:

எண்ணிறைந்ததில்லை(. . . . .)மனத்தே நல்கு.

காட்சி.

மதிவாணுதல் வளர்வஞ்சியைக
கதிர்வேலவன் கண்ணுற்றது.

(எ-து) பிறைமையயொத்[து](த) ஒளிசிறந்[து](த) நன்னெற்றியினையுடைய,

வளர்வஞ்சியை-வளர்கின்ற வஞ்சிக்கொம்பை யொப்பாளை,
கதிர்வேலவன்-ஒளிமிகுந்த வேலையுடையவன்,
கண்ணுற்றது-கண்டது.

"திருவளர் தாமரை (. . . . .) ஒளிர்கின்றதே."

(இதன் பொருள்) திருவளர்தாமரை - அழகியதாமரைப் பூவையு(ம்), சீர்வளர்காவிகள் - சிறப்புடைய நீலப்பூக்களையும், ஈசர்தில்லை - [யீ](ஈ) சருடைய பெரும்பற்றப்புலியூரில், குருவளர் பூங்குமிழ்-நிறமும் பொலிவுமுடைய குமி[ள](ழ)ம் பூவையும், கோங்கு - கோங்கரும்புகளையும், பைங்காந்தள் - பசியகாந்தட் பூககளையும், (கொண்டு—) நல்ல(வ)பவமாகக்கொண்டு;

அ[கு](ஃ)தெங்ஙனேயெனில்; :— முகம் தாமரையாகவும், நீலம் கண்களாகவும், குமி(ழ)ம்பூ மூக்காகவும், கோங்கு முலைகளாகவும், காந்தள் கைகளாகவும் படைத்துக்கொண்டு.

ஒங்கு மெய்வ் மருவ்ளர்மாலை - உயர்ந்த தெய்வமணங்கமழுமாலை; [யோ](ஓ)ர்வல்லியின்னுங்கி - ஒருவல்லிசாதக்கொடிபோனுடங்கி, [ய](அ)ன நடைவாய்ந்து—, உருவளர் காமன்றன் - வடிவின் மிக்க காம[து](னு)டைய, வெற்றிக்கொடிபோன்று—, [வொ](ஒ)ளிர்கின்றது - விளங்குவது என்னை வியப்போ!

(க)

End:

"காரணி (. . . . .) மைதியமே."

(இ-ள்) [illegible] - நாயகன், கார் [illegible] தை யொப்பான், அணிகற்பகம் - [illegible]

திருட்சத்தையொப்பான், கற்றவ[ா]ர் நற்றுணை - நூலறிவாற் கற்ற[ற்](வர்க்)கு நல்ல துணையாயிருப்பன், பரணரொக்கல்—, சிரீணி சிந்தாமணி - நினைத்தது கொடுத்தலால் சிறப்புமழகு முண்டத்தாகிய சிந்தாமணி யென்று ம் வள்ளலையொப்பான் (?), அணிதில்லைச் சிவனடிக்குத்தாரணி கொன்றை யன் - அழகிய பெரும்பற்றப் புலியூரிற் சிவனுடைய திருவடிகளுக்கு மாலை யாகிய கொன்றையை யொப்பான், ...

விதி - சுற்றத்தா[ற](ர்க்)கும் பகைவ[ற்](ர்க்)கு(ம் சுக)துக்கங்களைத் தப் புரமற் செய்கையால் விதியை யொப்பான்.

[நீர்திரை] சேருரணி யுற்றவர்க்கு - தன்னைவந்து சே[ராதார்யெ](ர்ந் தார்க்கெ)ல்லாம் ஊர்க்கண் அணிய வூரணியோடொப்பன்.

மற்றியாவ[ற்](ர்க)கு மூதியமே - ஆதலால் மற்றுமெல்லார்க்கும் ஊரன் பெ[று](ரு)ம்பயனுயிருப்பன்.

[யெ](எ)னவே, [யி](இ)வன் கண்மகிழவுருவினுனு (?) தலாலே இவனைக் கண்டு பரத்தையர் விரும்புதலால் அவர்கள் வேட்கைதணிக்கச்செல்லு மதல்லது அவர்மேலன்புடையனுயும் நின்மேலன்பில்லாமையாலும் பிரி கின்றானல்லன்; அருளாற் செய்யுமவற்கு வெறுத்தல் உனக்கும் பெண் மையல்ல வென்று உண்ணின்ற சிவப்பாற்[றி](று) வித்தாள். (௪00).

Colophon :

திருச்சிற்றம்பல (க்கோவையார்) முற்றிற்று.

(கு-பு.)—

இதில் திருச்சிற்றம்பலக்கோவையார் முற்றும் பதவுரையுடனிருக்கிறது; இவ்வுரை இன்னார் செய்ததென்று தெரியவில்லை; பேராசிரியருரையைத் தழுவியெழுதப்பட்டது; உரை நடை சிறந்ததன்று. புறப்பொருள் வெண்பா மாலையில் கொளுமுன்னும் செய்யுள் பின்னுமாயிருப்பதுபோலவே இந்தப் பிரதியில் கொளுமுன்னும் செய்யுள்பின்னுமெழுதப்பட்டிருக்கின்றன.

No. 1177. திருச்சிற்றம்பலக்கோவையார், பதவுரையுடன்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR WITH MEANING.

Pages, 14. Lines, 7 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 28.

Contains 1 to 10 stanzas with meaning word for word.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இதில் முதல் பத்துச் செய்யுட்கள் பதவுரை யோடிருக்கின்றன.

No. 1178. திருச்சிற்றம்பலக்கோவையாருண்மை.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀRUṆMAI.

Substance, palm-leaf. Size, 18⅜ × 1⅜ inches. Pages, 38. Lines, 7 on page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Begins on fol. 45*a*. The other works herein are Aharādinikaṇṭu 1*a*, Guruliṅgasaṅgaparamarahasyaśadattalam 80*a*, Vīraśaivāgamam 127*a*.

Contains 1 to 265 stanzas out of 400.

A work in the form of stanzas containing one line or a couplet expressing the spiritual and inner significance of the Tirucciṟṟambalakkōvai which apparently seems to deal with love topics Besides a short introduction in prose in the beginning there are connecting prose passages in some places in the middle.

Beginning :

பரமசிவன் கேவலாதீதமே உண்மையாகிய ஆத்மாக்களுக்கு அறிவுவிளங்கும்பொருட்டு, பெருங்கருணையினாலே பஞ்சசத்திகளைக்கொண்டு மூன்றுமாயைகளைப்பிரேரி(ப்பி)த்து அவைகளின்காரியமாய்த் திருவருட்சத்திகளுடைய அதிட்டிதமாய்த் தத்வ[த]ாத்துவிதமாகிய பூதபௌதிக பேதங்களாகிற கருவிகளைச் சு(த)ந்திரமாகிய தனுகரணாதிகளாகக்கொடுத்துக் கேவலசகலப்படுத்திப் பரிபாகப்படுகிறபோது பசுபுண்ணியமிகுதியாற் றன்னையறியாமல் ஒரு சிவபுண்ணியம்வந்து அதன் முதிர்ச்சியாகச் சரி[த](ய)ச கிரியை யோகங்களைச் செய்துவருகிறபோது குருபத்தியும் சிவபூசையும் அடியவர்கள் சற்சங்கதியும் பலிக்கும். . . . . திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசக சுவாமியார் திருவுளம்பற்றின திருச்சிற்றம்பலக்கோவையாரில் துறைகளுள்ளவெல்லாமடங்கும்.

* * * *

பேரின்பத்துறையாவன :— தத்துவாதீதத் தற்றெரிசனசுத்தசாக்கிரத்தானமே குறிஞ்சிநிலம் ; ஆத்மபோதாதீத(த்) திருவருட்டெரிசனச் சொற்பனத்தானமே முல்லைநிலம் ; அருளாதிக்கந்தாளே, சுத்தசுழுத்தித்தானமான மருதநிலம் ; அருளுருவ பெத்ததுரியத்தானமேபாலைநிலம் ; பரசிவ இன்பாதீதமே நெய்த[தி](ணி)லம்.

* * * *

இயற்கைப் புணர்ச்சித் துறை யீரொன்பதுஞ்
சத்திநி பாத மொத்திடுங் காலத்
துத்தம சற்குரு தரிசன மாகும். (க)

பாங்கற் கூட்டம் பதினெட் டின்பந்
தாங்குதற் போதந் தான்கண் டகறல் (உ)

End :

வினைவித்து ; தவங்கள்செய்தும் சலிப்பிலை யென்றருளுரைத்தல் (135)
களைசுடர் : பசுகரணங்களே பகையாமென்றல் (136)
வழுவா : அருளுயிர்க்கிரங்கியது :
பொருப்பு : சுத்தாவத்தை யிச்சியாதுமூன்றுநீங்கினதருளுரைத். (137)
பரிவு : வழக்கந் தவிர(ப்) பழகுதலரிதென் றருளுறைத்தல் (138)
கணியார் : சுத்தாவத்தை அருள்சிவகரண(ம்).

* * * *

கூறுவிக்குற்றல் :—“ சிவத்தி லுயிரின் பார்வ தன்றி, யாகா தென்றே றுளியம் பியது.” (263)

செலவு நினைந்துரைத்தல் :—" அருளாற் சிவமுயிர்க் கன்பறிவித்தல் " (264)

பொலிவழிவுரைத்தல் :—" இன்னுங் கருணைகண் டிலையோ வென்றது " (265)

ஆக[யே](ஏ)ழுங் குலைமுதல் வாரிக்களிவரை கஉ-ங்கண்டுகொள்க.

(கு-பு.)—

இது திருச்சிற்றம்பலக்கோவையாரில் சிற்றின் பப்பொருள்பயப்ப அகத்தமிழிலக்கணப்படி முறையேயமைந்துள்ள துறைகளைக்கூறி அவற்றின் உண்மை இவையெனப் பேரின்பப்பொருள்தோன்ற ஒருவகைச்செய்யுள் நடையாற் கூறுவது. இச்செய்யுள் கொளுவைப்போன்றது; சில இடத்து ஓரடியாலும் சில இடத்து ஈரடியாலும் ஆக்கப்பட்டிருக்கிறது. இந்நூலில் முதலிலும் இடையிற சில இடங்களிலும் வசனமுமுள்ளது. இந்தப்பிரதியில் இச்செய்யுட்கள் முதல் 265 திருக்கோவையார்ச் செய்யுட்களுக்குமட்டுமே இருக்கின்றன.

No. 1179. திருச்சிற்றம்பலக்கோவையாருண்மை.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀRUṆMAI.

Pages, 15. Lines, 10 on a page.

Begins on fol. 51*a* of the MS. described under No. 354.

Contains 1 to 138 stanzas.

Similar to the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. ஆயினும் சிற்சில இடங்களில் வாக்கியபேதங்கள் காணப்படுகின்றன. இதன் தலைப்பில் " திருச்சிற்றம்பலக்கோவையார் பேரின்பவனுபூதி பெற்ற சிற்றின்பம் பேரின்பமென்றது" என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதியில் கோவையாரின் 138 செய்யுட்களுக்கே பேரின்பவுரைக் குறிப்புக்கள் உள்ளன. இது மிகப்பழைய பிரதி. அதி சிதிலமாயிருக்கிறது.

No. 1180. திருச்சிற்றம்பலக்கோவையாருண்மை.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀRUṆMAI.

Substance, paper. Size 13⅜ × 8½ inches. Page, 21. Lines, 20 on a page. Character, Tamil. Condition good. Appearance, new.

Begins on fol. 22*a*. The other works herein are Śivasiddhāntappirakāśakkaṭṭaḷai 1*a* Aṣṭādaśapurāṇādivivaraṇatātparyam 65*a*, Oṭṭiyamunivākkiyam 112*a*

Incomplete.

Same work as the above. This has been restored from the previous manuscript.

(கு-பு.)—

(இது முன் பிரதியைப்பார்த்து எழுதியது. அதில் உள்ள அளவே நும் உள்ளது.

No. 1181. திருவிசைப்பா.

TIRUVIŚAIPPĀ.

Pages, 4. Lines, 7 on a page.

Begins on fol. 176*a* of the MS. described under No. 1127 and 1149.

Contains only 8 stanzas.

A collection of stanzas compiled from the Tiruviśaippā which is a collection of poems in praise of God Śiva composed by Tirumāḷihaittēvar and eight other Śaiva devotees, and which forms part of the 9th Tirumuṟai.

Beginning:

காண்பதுன் வடிவம் கேட்பதுன ருமங்
கருத்துற நினைப்பதுன் சரிதை
பூண்பதுன்ன[டு](டி)மை தொழுதலை யிசையென (?)
புனைவதுந் திருவடிக் கமலஞ்
சேண்படு புரிசை திருவிரிஞ் சியில்வாழ்
தேவனே வழித்துணை மருந்தே
பாண்படு கிளவி பச்சையின் பாகா
பற்றுவே றில்லைமற் றெமக்கே. (க)

End:

தனதனற் றோழா சங்கார சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கணுன் றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத் தமரசே கரனே
உனகழ லிணை[யில்]ெ(யன் னெ)ஞ்சி[டுனிதான்]
(னுனினிதாத்)தொண்டனே[று](னு)கருமாறுகரே. (அ)

(கு-பு.)—

இது, திருமாளிகைத்தேவர் முதலியவர்கள் செய்த திருவிசைப்புப்பாடல்களின் தொகுப்பாகும், இதைத்தொகுத்தவர் பெயர் தெரியவில்லை, திருவிரிஞ்சை விஷயமாக உள்ள பாடல்கள் அச்சுப்பிரதிகளில் இல்லை. இந்தப் பிரதியில் 8 பாடல்கள் உள்ளன.

No. 1182. திருப்பல்லாண்டு.

TIRUPPALLĀṆḌU.

Pages, 7. Lines, 8 on a page.

Begins on fol. 69*b* of the MS. described under No. 1125.

A poem pronouncing benedictions upon and thus eulogizing God Śiva. It forms part of the 9th Tirumuṟai. The author is Tirumāḷihaittēvar, a Śiva devotee who is considered to have lived in Tiruviḻimiḻalai about the 11th century A.D. The author is considered to be the same as Śēndan but the identity of these two persons is a matter of controversy among Tamil scholars.

Beginning:

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து புவனியெல்லாம் விளங்க
வன்ன நடைமட வாளுமை கோனடி யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே (௧)

மிண்டு மனத் தவர் போமின்கண் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட் செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ ரானந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்று மென்றுமுள்ள பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே (௨)

End:

ஆரார் வந்தா ரமரர் குழாத்தி லணியுடை யாதிரைநா
ளாரா யணனொடு நான்முக னங்கி யிரவியு மிந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர் குழாங்க டிசையனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் மாடியும் பல்லாண்டு கூறுதுமே (௧௨)

எந்தையெந்தாய் சுற்றமுற்று மெமக்கமுதா மெம்பிரானென் றென்றுமேற்
சிந்தைசெய்யுஞ் சிவன் சீரடி யாரடி நாயனசெ[ன்ற](ப்புரை)
யந்தமிலா வானந்தச் செந்தேனெனைப் புகுந் தாண்டுகொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவனே யென்று பல்லாண்டு கூறுதுமே (௪௩)

(கு-பு.)—

இது, ஒன்பதாந்திருமுறைப் பிரபந்த வகை இரண்டனுள் ஒன்று; சிவபெருமானது தோத்திர ரூபமாகவுள்ளது. இதை இயற்றியவர், திருவீழிமிழலையில் * கி-பி. 11-ஆம் நூற்றாண்டில் இருந்த எறன், ஐயந்தன், சேந்தன் என்னும் மறு பெயர் பூண்ட சிவஞானியாகிய திருமாளிகைத் தேவரென்பர்.

No. 1183. திருப்பல்லாண்டு.

TIRUPPALLĀṆDU.

Pages, 2. Lines, 7 on a page.

Begins on fol. 178*a* of the MS. described under No. 1127

Contains only 6 stanzas.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது; இதில் 6 செய்யுட்களே உள்ளன.

* செந்தமிழ், தொகுதி. III. பக்கம் 359—62.

No. 1184. திருமந்திரமாலை.
TIRUMANDIRAMĀLAI.

Pages, 40 Lines, 8 on a page.

Begins on fol. 69*a*. of the MS. described under No. 337.

Contains a small portion of the first Tandiram.

This work consisting of over 3,000 stanzas was composed by Tirumūlar, one of the 63 Tamil, Śaiva saints and forms the 10th of the 12 Tirumuṟais. It expounds the principles of the Śaiva religion as made out from the Śaiva Āgamas, and is divided into nine Tandirams which again are divided into Adhyāyams, each of which treats of a particular topic The author lived at Tiruvāvaḍuturai and an account of his life is given in the Periyapurāṇam and the Tuṟaiśaippurāṇam.

Beginning:

விண்ணணி னிழிந்து விளக்கிடாய் மெய்கொண்டு
த[ன்றி]ண்ணணி(ன்ற)[ுூ](தா)ளைத் தலைக்காவல் முன்வைத்து
[அன்றி](வுண்ணணி)ன் று(ரு)க்கியோ ரொப்பிலா வானந்தங்
க[ன்னென்](ண்ணின்)று காட்டிக் களிம்பறுத் தானே. (க)

End:

போதந் தருமெங்கள் பு[ன்றி](ண்ணி)ய மூர்த்தியைப்
போதந் தனில்வைத்துப் பு[ன்றி](ண்ணி)ய ரர்யுள்ளோர்
நாத னடிக்கீழ் நயனங்கள் கூறவே
வேதங் களித்திட வேறினர் [வெ](வி)ண்ணே. (௩௦)

* * * *

மனம் விரிந்து குவிந்தது மாதவம்
மனம் விரிந்து குவிந்தது வாயுவு
மனம் விரிந்து குவிந்தது மன்னுயிர்
மனம் விரிந்துரை மாண்டிட முத்தியே. (௪)

Colophon:

திருமந்திரமாலை முற்றும் ஓம் நம ஓம். சரவணபவனென்னைச்சார்ந்த துணையே. திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இது சைவத்திருமுறைகளுள் பத்தாவது; அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய திருமூலதேவரால் இயற்றப்பட்டது; இவர் கைலையில் நந்திதேவர் அருள்பெற்றவர். பொதிகைமலையிலுள்ள அகத்தியரைத் தரிசிப்பதற்காகப் புறப்பட்டு வழியில் உள்ள தலங்கள் பலவற்றையும் தரிசித்து நவகோடிசித்தபுரமாகிய திருவாவடுதுறையில் உள்ள போதிமரத்தடியிற் றங்கி மூவாயிரம் பாடல்களையுடைய 9-தந்திரங்களாலாகிய இத்திருமந்திரமாலையைச் சைவாகமசாரமாக இயற்றினரென்பர். அவற்றுள் இந்தப்பிரதியில் உள்ள செய்யுட்கள் முதற்றந்திரத்தைச் சேர்ந்தவை. இம்மூலருடைய சரித்திரவிரிவைப் பெரியபுராணம், துறைசைப்புராணம் முதலியவற்றிற் கண்டுகொள்ளலாம்.

No. 1185. திருமந்திரமாலை.
TIRUMANDIRAMÂLAI.

Substance, palm-leaf. Size, 10½ × 1½ inches. Pages, 54. Lines, 7–8 on a page. Character, Tamil Condition, much injured. Appearance, old.

Begins on fol. 83*a*. The other works herein are Kâraikkâlammaiyantâdi 1*a*, Kacciyappaśvâmitōttiram 10*a*, Ciṟṟambalanâḍiyâṟvenbâ 12*a*, Kuyiṟpattu 22*a*, Pōri Âṟumugarpadikam 25*a*, Śivakavacavattiyâyam 29*a*, Kâyârōhaṇēśuvarartōttiram 33*a*, Uṇmaineṟiviḷakkam 36*a*, Mâyâvâdimatam 44*a*, Avirōdaundiyâr 49*a*, Pañcâdikâraviḷakkam 57*a*, Taṟceyalaḻindatahaimai 73*a*, Śivañânaśittiyârsupakkam 76*a*, Śivânandamâlai 100*a*, Śivayōgasâram 107*a*, Vairâkkiyadīpam 127*a*.

Contains about 100 stanzas.

Same work as the above.

Beginning:

சாத்திக ணுய்ப்பல தத்துவந் தானுன்னி
யாத்திக (பேத) நெறி(த்)தே(தா)ற்ற மாகியே
யார்த்த பிறவியிற் கஞ்சி யறநெறி
சாற்றவல் லான(வன்) ச(ற்)[ச்](சி)ட னுமே. (க)

சத்து மசத்துமெவ் வாறெ[ன்]னத் தானுன்னிச்
சித்தை யுருக்கிச (சிவனரு)ள் கைகாட்டப்
பத்தியில் ஞானம் பெறப்பணிந் தான(ந்)த(ச்)
சத்தியி லிசைை தருவோன்சற் சிடனே. (உ)

End:

பரந்துல கேழும் படைத்த பிரானை
யிரந்துண்ணி யென்பதெ னிகத்துக் கிரங்கி
நிரந்தர மாக நினையு மடிய[வ]ார்
இரந்துண்டு தன்னடி யெட்டவைத் தானே. (கசு)

சிவயோகி யிருப்பிட மப்புவி காசி(?)
சிவயோகி வாக்கு நான்மறை வேதஞ்
சிவயோகியன் னம்[பொ](பு)சிக்கில தனுலே
. . . . வை சிவன் சே[ர்]வையாமே. (கஎ)

ஆக. 17. ஆ 178.

கச்சியப்ப தேவன் திருவடி வாழ்க.

(கு-பு.)—

இதில் திருமந்திரப்பாடல்கள் ஏறக்குறைய நூறுக்குமேல் உள்ளன. ஏடு கள் சிதைந்துள்ளன.

No. 1186. திருமந்திரமாலை.
TIRUMANDIRAMÂLAI.

Pages, 24. Lines, 5 on a page.

Begins on fol. 69*a* of the MS. described under No. 1036.

Contains 70 stanzas only.

Same work as the above.

(கு-பு.)—
இது முன்பிரதிபோன்றதே. இதில் எழுபது பாடல்கள் உள்ளன. 76 78, 79, 80 இவ்வேடுகள் பாதி முறிந்துள்ளன.

No. 1187. திருமந்திரமாலை.
TIRUMANDIRAMĀLAI.

Substance, palm-leaf. Size, 8⅝ × 1 inches. Pages 18. Lines, 6 on a page. Character, Tamil Condition, injured. Appearance, old.

Begins on fol. 16*a*. The other works herein are Jōtiḍasaṅgraham 1*a*, Śivañānamahimai 25*a*, Cidambarakarmam 26*a*, Amirtapañcākṣaratiruvai 30*a*, Uḍalariñānam 34*a*.

Contains 30 stanzas occurring in the third Tandiram.

Same work as the above.

Beginning:

நயன மிரண்டும் நாசிமேல் வைத்திடங்
கயவுளர் வாயு[வு]வை யுள்ளே(ய) டகித்
துயரற நாடியிற் [த்து](று)ங்க வல்லார்க்கு(ப்)
பயனிது காயம் பயனிலை [ஞ](நா)ட்டே. (க)

End:

ஆங்கார மாண்[டு](ட)து புத்திமன மொன்[டா](று)ய்(ச்)
சாங்காலம் [ஞ](நா)ய்வீட்டிற் சட்டையற்றெறும் போல்
ஓங்கார மூலவீட்டுச்சி யிடங்கொண்டு
நீங்காமலங் கொண்டு நிற்கும் நயனமே. (௩௦)

(கு-பு.)—
இது, திருமூலர் இயற்றியது. இதில் 30 பாடல்கள் உள்ளன. 'ஆங்கார மாண்டது' என்னும் செய்யுள் அச்சிட்டிருக்கும் திருமந்திரத்தில் இல்லை

No. 1188. திருமந்திரமாலை.
TIRUMANDIRAMĀLAI.

Pages, 14. Lines, 6 on a page.

Begins on fol. 130*a* of the MS. described under No. 250.

Contains the portion called the Diyānam in the 3rd Tandiram. The 28 stanzas contained herein are not found in the printed edition in the same order.

Same work as the above.

Beginning:

திருமூலர் தியானக்குறிப்பு, திருமந்திரம்.

நாட்ட மிரண்டும் நடுமூக்கில் வைத்திட
வாட்டமு மில்லை மனைக்கு மழிவில்லை
யோட்டமு மில்லை யுணர்வில்லைத் தா[தி](னி)ல்லை
தேட்டமு மில்லை சிவ[தி](னி)வ னைமே.

End :

ஆங்கார மாண்[டு](ட)து புத்திமன மொன்ருய்(ச்)
சாங்கால நாய் வீட்டிற் சடைக்குற் றெறும்புபோல்
ஓங்கார மூலம்விட் டெச்சியினுட் கொண்டு
நீங்காம[ல்க்](ம்) கொண்டு நிற்[க]கும் நயனமே. (உ௯)

திருமூலர் தியானக்குறிப்பு திருமந்திர மூற்றும்.

(கு-பு.)—

இதில் திருமந்திரத்தின் செய்யுட்கள் 28 உள்ளன.

No. 1189. திருமந்திரமாலை.
TIRUMANDIRAMĀLAI.

Pages, 8. Lines, 5 on a page.

Begins on fol. 37*a* of the MS. described under No. 1036.

Contains 19 stanzas. Only three of these stanzas are found in the printed edition of the Tirumandiram, wherein the rest are apparently not included.

Same work as the above.

Beginning :

திருமூலர் திருமந்திரம்.

[ஞ](நா)க்குமனமு நல்ருசி[ஞ](நா)டுத
நாக்குமனமு நல்ருசி[ஞ](நா)டினல்
[ஞ](நா)க்குமனமும் நரகத்துக்கேதுவாம்
நாக்கு மனமும் நமனது வாமே. (க)

மூக்கும்[ஞ](நா)க்கும் மூலத்தி[ல்ப்](ற்)பாயாது
மூக்கும்[ஞ](நா)க்கும் மூலத்தி[ல்ப்](ற்)பா(ய்)ச்சினல்
வாக்குமனமு மனோ[லை](ல)யமாயிடுந்
தாக்கியிருக்க(ச்) சதாசிவமாமே. (உ)

End :

ஒ[ண்ணே](ன்றே)கலப்பை[யொ](யு)ழவெருதுவஞ்சண்டு
ஒ[ண்ணே](ன்றே)வட்டொ[ண்ணு](ன்று)வுழுதண்ட வல்லற்கு
அ[ண்ணு](ன்று)நட்ட[ண்ணு] [ரு](ன்றறு)க்தண்ணனாமே.

*　　*　　*　　*　　*

பத்தியுடன் பணியாதார் பறைய[ற](ரா)வர்
பணியுங்கால் நாணுவரே குருடராவர்
சித்தமுடன் கேளாதார் செ[வு](வி)டராவர்
தேசிகனைக் கண்டொளித்[தல்](தார்) பே(ய்)நாயாவார்
பத்தியுடன் [பொ](பு)சி(க்)கிற[ணமே](வே) தாகிலுந்தான்

*　　*　　*　　*　　*

உயர்குருவுக்கெ[ண்ண](ன்ஞு)தார் தாழ்மைதானே.

*　　*　　*　　*　　*

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றதே. இதில் பத்தொன்பது பாடல்கள் உள்ளன. அச்சுப்பிரதியில் இல்லாத செய்யுட்கள் 16 இதில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இறுதிச் செய்யுளில் ஒரு அடி குறைந்தே யிருக்கிறது.

No. 1190. திருமந்திரமாலை.
TIRUMANDIRAMĀLAI.

Pages, 2. Lines, 7 on a page.

Begins on fol. 120*a* of the MS. described under No. 251.

Contains three stanzas forming the section called Varaiyuraimāṭchi in the 9th Tandiram.

Same work as the above.

(கு-பு.) —

இது முன்பிரதிபோன்றதே. இது மூன்று பாடல்களையுடையது. "வரையுரைமாட்சி" என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த ஏட்டின் பின்புறத்தில்

"மனம் [மிரு] விரிந்து குவிந்தது மாதவம்
மனம்வி ரிந்து குவிந்தது மன்னுயிர்
மனம்வி ரிந்து குவிந்தது மாயோகம்
மனம்வி ரிந்து குவிந்தது [மாண்டடம்] மு[ற்றி](த்தி)யே."

என்னும்பாடலொன்று எழுதப்பட்டிருக்கிறது.

No. 1191. மூத்ததிருப்பதிகம்.
MŪTTATIRUPPADIKAM.

Pages, 6. Lines, 12 on a page.

Begins on fol. 9*a* of the MS. described under No. 1130.

Complete.

This poem is one of the forty Prabandams included in the eleventh Tirumuṟai. A list of the names of these Prabandams together with the names of the authors is given in the Tamil remarks below. The poem now under notice consists of two Padikams in praise of Śiva of which the first is in praise of God Śiva worshipped at Tiruvālangāḍu. The author is Kāraikkālammaiyār, a female saint and one of the 63 Tamil saints.

Beginning:

கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண் வெற்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்க ணீண்டு பரடுயர் நீள்கணைக் காலொர்பெண்பேய்
தங்கி யலறி யுலறு காட்டிற் றாழ்சடை யெட்டுத் திசையும் வீசி
யங்கங் குளிர்ந்தன லாடுமெங்க ளப்ப னிடந்திரு வாலங்காடே (௧)

*   *   *   *

எட்டி யிலவ மீகை சூரை காரை படர்ந்தெங்குஞ்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கவ்வப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழி(க்)கட் பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழக னாடுமே (௧)
திணந்தா னுருகி திலந்தா னனைப்ப நெடும்பற் குழிகட்பேய்
சுணங்கை யெறிந்து சூழுமோடிச் சுடலை நடுத்தெங்குங்
கணங்கள் கூடிப் பிணங்கண் மாந்திக் களித்த மனத்தவா
யணங்கு காட்டி லனல்கை யேந்தி யழக னாடுமே (௨)

End:

சூடு மதியஞ் சடைமே லுடையார் சுழல்வர் திருநட்ட
மாடு மரவம் மரையி லார்த்த வடிக ளருளாலே
காடு மலிந்த கனல்வா யெயிற்றுக் காரைக் காற்பேய்தன்
பாடல் பத்தும் பாடியாடப் பாவ நாசமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இது, திருவாலவாயுடையார் முதலிய பன்னிருவரா லருளப்பட்ட 40 பிரபந்தங்களையுடைய பதினொராந்திருமுறையுள் ஒன்று; அவையாவன :—

1. திருமுகப்பாசுரம்.
2. திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம். II
3. திருவிரட்டைமணிமாலை.
4. அற்புதத் திருவந்தாதி.
5. க்ஷேத்திரத் திருவெண்பா.
6. பொன்வண்ணத்தந்தாதி.
7. திருவாரூர் மும்மணிக்கோவை.
8. திருக்கைலாய ஞானவுலா.
9. கைலைபாதி காளத்திபாதி யந்தாதி.
10. திருவீங்கோய்மலையெழுபது.
11. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை.
12. திருவெழுகூற்றிருக்கை.
13. பெருந்தேவபாணி.
14. கோபப்பிரசாதம்.
15. காரெட்டு.
16. போற்றித் திருக்கலிவெண்பா.
17. திருமுருகாற்றுப்படை.
18. திருக்கண்ணப்பதேவர் திருமறம் (நக்கீரதேவர்).
19. திருக்கண்ணப்பதேவர் திருமறம் (கல்லாடனர்).
20. மூத்தநாயனர் திருவிரட்டைமணிமாலை.
21. சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை.
22. சிவபெருமான்றிருவந்தாதி (கபிலதேவர்)
23. சிவபெருமான் திருவந்தாதி (பரணதேவர்).
24. சிவபெருமான் திருமும்மணிக்கோ[வை].
25. மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை.
26.
27. திருக்கழுமலமும்மணிக்கோவை.
28. திருவிடைமருதூர்மும்மணிக்கோவை.
29. திருவேகம்பமுடையார் திருவந்தாதி.
30. திருவொற்றியூரொருபாவொருபது.
31. விநாயகர்திருவிரட்டைமணிமாலை.
32. கோயிற்றிருப்பண்ணியர்விருத்தம்.
33. திருத்தொண்டர் திருவந்தாதி.
34. ஆளுடைய பிள்ளையார் (ஞானசம்பந்தர்) திருவந்தாதி.
35. ஆளுடைய பிள்ளையார் (ஞானசம்பந்தர்) திருச்சண்பை விருத்தம்.
36. ஆளுடைய பிள்ளையார் (ஞானசம்பந்தர்) திருமும்மணிக்கோவை.
37. ஆளுடைய பிள்ளையார் (ஞானசம்பந்தர்) திருவுலாமாலை.
38. ஆளுடைய பிள்ளையார் (ஞானசம்பந்தர்) திருக்கலம்பகம்.
39. ஆளுடைய பிள்ளையார் (ஞானசம்பந்தர்) திருத்தொகை.
40. திருநாவுக்கரசர் திருவேகாதசமாலை.

இவற்றுள் 1 திருவாலவாயுடையாரா (சிவபெருமானு)லும், 2-4 காரைக்காலம்மையாராலும், 5 ஐயடிகள் காடவர்கோனயனாராலும், 6-8 சேரமான் பெருமானயனாராலும், 9-18 நக்கீர(தேவ)ராலும், 19 கல்லாடனாராலும், 20-22 கபில(தேவ)ராலும், 23 பரண(தேவ)ராலும், 24 இளம்பெருமானடிகளாலும், 25 அதிராவடிகளாலும், 26-30 பட்டினத்துப்பிள்ளையாரா லும், 31-40 நம்பியாண்டார்நம்பியாராலும் திருவாய்மலர்ந்தருளப்பெற்றன. அவற்றுள் இந்தப் பிரதியில் காரைக்காலம்மையாரால் அருளிச் செய்யப்பட்டமூத்த திருப்பதிகமிருக்கிறது; இஃது ஒவ்வொன்றிலும் 11 பாட்டுக்களடங்கிய இரண்டு பதிகங்களையுடையது; இதில் அவ்விருபதிகங்களுமுள்ளன. இரண்டும் சிவஸ்துதியே; இவற்றுள் முதலாவது திருவாலங்காட்டுச் சிவபெருமான்விஷயமானது. இந்நூலை யருளியவர் காரைக்காற்பேயாரென்றும் வழங்கப்பெறுவர்; இவர் அறுபத்துமூன்று சிவனடியார்களுள் ஒருவராகிய பெண்பாலார்.

No. 1192. மூத்ததிருப்பதிகம்.

MŪTTATIRUPPADIKAM.

Pages, 4. Lines, 9, on a page.

Begins on fol. 111*a* of the MS. described under No. 1133.

Contains the second of the two Padikams included in this work.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றதே. ஆயினும், அதில் உள்ள "கொங்கைதிரங்கி" என்பதை முதலாகவுடைய பதிகம் இந்தப் பிரதியில் இல்லை.

No. 1193. காரைக்காலம்மையந்தாதி.

KĀRAIKKĀLAMMAIYANDĀDI.

Pages, 18. Lines, 8 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1185.

Incomplete as foll. 4, 5 and 8 are wanting.

This forms the 4th Prabandam of the 11th Tirumurai which contains 40 Prabandams on the whole. This Prabandam consists of 101 stanzas and is also known by the name of Arpudattiruvandādi. The author is a woman of the Vaiśya caste, called Punitavati when she was in her maiden and wedded state and Karaikkāl Ammai or Karaikkālpēyār after she had renounced the world and became a recluse and devotee of Śiva. An account of her life is given in the Periyapurāṇam.

Beginning:

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்தநின் [திரு](சே)வடியே சேர்ந்தே—னிறந்திகழு
மை(ஞ்)ஞானற கண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்ற தீர்ப்ப திடர். (க)
இடர்களையா ரேனு மெமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியா ரேனுஞ்—சுடருருவி
லென்பறாக் கோலத் தெரியாடு (எ)மம்மானுற்
கன்பறா தென்னெஞ் சவ[ற்](ர்க)கு. (உ)

End:

உரையினு விம்மாலை யந்தாதி வெண்பாக்
கரைவினுற் காரைக்காற் பேய்சொற்—பரவுவா
ராராத வன்பினே டண்ணலைச்சென் றேத்துவார்
பேராத காதல் பிறந்து. (௧0௧)

திருச்சிற்றம்பலம். அந்தாதிமுற்றும்.

(கு-பு.)—

இது பதினொராந்திருமுறைப்பிரபந்தம் 40 இல் 4-ஆவது; சிவஸ்துதி; 101 வெண்பாக்களையுடையது; காரைக்காலம்மையாரால் செய்யப்பெற்றது. இவருக்குக்காரைக்காற்பேயாரென்றும், இந்நூலுக்கு 'அற்புதத்திருவந்தாதி' என்றும் வேறுபெயருண்டு. இந்தப்பிரதியில் இந்நூலெழுதப்பட்டிருந்த ஏடு 12-ல் 4, 5, 8 இந்த எண்களுக்குரிய மூன்றேடுகளுமில்லை. இது மிகச் சிதைந்திருக்கிறது.

No. 1194 காரைக்காலம்மையந்தாதி.
KĀṞAIKKĀLAMMAIYANḌĀḌI.

Substance, paper. Size, 8½ × 6⅞ inches. Pages, 68. Lines, 12 on a page. Character, Tamil. Condition, good. Appearance, new.

Begins on fol. 1*a*. The other work herein is Pañcādhikāraviḻakkam 35*a*

Complete, but stanzas 17 and 18 are wanting.

Same work as the above.

(கு-பு.)

இது முன்பிரதியைப்பார்த்து எழுதப்பட்டது. இதில் 17, 18-வது பாடலிரண்டும் எழுதப்படவில்லை. மற்றப்பாடல் 99-ம் உள்ளன.

No 1195 திருமுருகாற்றுப்படை.
TIRUMURUHĀṞṞUPPAḌAI.

Pages, 31. Lines, 9 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 525.

Complete.

This work forms the 17th Prabandam of the 11th Tirumuṟai, and is in praise of God Subrahmaṇya. It is written in a kind of big stanza

called Âśiriyappâ and contains 317 lines. It is considerd to be the first work of the collection called Patturpâṭṭu, and the author is Nakkirar, one of the poets of the Kaḍaiccaṅgam.

Beginning:

வேண்டிய வடியவர்க குதவி வெவ்வினை
மாண்டறத் துடைத்தருள் வழங்கிக் காக்குமால்
காண்டகு மறுமுகக் கடவுள் செம்மணித்
தூண்டகு பன்னிரு தோளின் றிண்மையே,
ஒருமுரு காவென்றென் னுள்ளங் குளிர வுவந்துடனே
வருமுரு காவென்று வாய்வெரு வாநிற்பக் கையிங்ஙனே
தருமுரு காவென்று தான்புலம் பாநிற்பத் தையன் முன்னே
திருமுரு காற்றுப் படையுட னேவருஞ் சேவகனே.
உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
யுறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாட்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பில் வாணுதல் கணவன்

End:

குரூஉமயிர் யாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென விழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

(கு-பு.)—

இது பதினொராந்திருமுறைப்பிரபந்தம் 40 இல் 17 வது; சங்கப்புலவர்கள் தொகுத்த பத்துப்பாட்டுக்களுள் முதலாவது; நக்கீரரென்னும் மதுரைக்கடைச் சங்கப்புலவராலியற்றப்பெற்ற ஓர் ஆசிரியப்பா; 317 அடிகளையுடையது. முருகக்கடவுள் விஷயமானது. இந்தப்பிரதியில் இது பூர்த்தியாயிருக்கிறது.

No. 1196. திருமுருகாற்றுப்படை.

TIRUMURUHÂṞṞUPPAḌAI.

Substance, palm-leaf. Size, 9 × 1¼ inches. Pages, 16. Lines, 10 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 44*a*. The other work herein is Tiruvaguppu 1*a*.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப்பிரதியில் மூலம் முற்றும் இருக்கிறது. இதன் இறுதியிலுள்ள இரண்டு ஏடுகள் முறிந்துபோயிருக்கின்றன.

No. 1197. திருமுருகாற்றுப்படை.
TIRUMURUHĀṞṞUPPAḌAI.

Substance, palm-leaf. Size, 7⅛ × 1⅝ inches. Pages, 30. Lines, 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1*a*. The other work herein is Muruhanaḫaval 19*a*.

Complete.

Same work as the above. At the end of the work there are four leaves containing eulogistic stanzas on Muruhakkaḍavuḷ.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இதில் மூலம் முற்றும் உள்ளது. இந்நூல் பூர்த்தியானதன்பின் முருகக்கடவுள் சம்பந்தமான சில தனிப் பாடல்கள் நான்கு ஏடுகளில் எழுதப்பட்டுள்ளன.

No. 1198. திருமுருகாற்றுப்படை.
TIRUMURUHĀṞṞUPPAḌAI

Pages, 4. Lines, 12 on a page.

Begins on fol. 53*a* of the MS. described under No. 1143.

Incomplete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது; 36-வது வரி முதல் திருப்பரங்குன்றத்தைப் பற்றிச் சொல்லிய பகுதிமட்டுமேயுள்ளது.

No. 1199. திருமுருகாற்றுப்படை.
TIRUMURUHĀṞṞUPPAḌAI.

Pages, 6. Lines, 8 on a page.

Begins on fol. 88*a* of the MS. described under No. 127.

Contains the portion eulogizing the hill Tirupparaṅkuṟnam.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இதில் திருப்பரங்குன்றத்தைப்பற்றிச் சொல்லும் பகுதிமட்டுமே உள்ளது.

" உலக முவப்ப ம[ல](லை)கிழ வோனென் [ரு](று)ரைப்பவர்தங்
கலக வினைகள் களைபவ னேயென் கருத்தி னுள்ளே
இலகு மலர்க்கரம் பன்னி[ெ]ரண் டாறு திருமுகமுந்
திலக மயி[த்](ற)னி வேலுந் திருத்தணிச் சேவகனே "

என்ற கலித்துறையொன்று இதன் முதலில் எழுதப்பட்டுள்ளது.

No. 1200. திருமுருகாற்றுப்படை, நச்சினார்க்கினியாருரையுடன்.

TIRUMURUHĀṞṞUPPAḌAI WITH THE COMMENTARY OF NĀCCINĀRKKINIYĀR.

Pages, 13. Lines, 6 on a page.

Begins on fol. 14*a* of the MS. described under No. 261.

Incomplete. Contains the lines 3 ot 32 with commentary and 33 to 35 without commentary.

A commentary on the Tirumuruhāṟṟuppaḍai described under No. 1195 By Nāccinārkkiniyar of Bhāradvājagōtra and a native of Madura.

Beginning:

* * * *

சேண் விளங்கொளி — கடப்புலனுக நோக்குவார் கண்ணிடங்கவெல்லாவற்றினும் சென்று விளங்குகின்ற ஒளி

உவப்ப வெழுந்தகிரிய ஞாயிற்றைக் கடற்கண்டாங்கு அவிர்கின்ற வொளி யெனத் தொழிலுவமங்கொள்ளுங்கால் வினைமுடிக்க.

End:

வண்காது துணைத்தக நிறைந்த பிண்டி யொண்தளிர் நுண்பூணாகந்திளைப்ப—வளவிடகாதிலே (த)ம்மிலொத்தற்குப்பொருந்தவிட்ட நிறைந்த பிண்டியினது ஒள்ளியதளிர் நுண்ணிய பூணினையுடைய மார்பிடத்தே அசையாநிற்க

திண்காழ் நறுங்குறடுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகி ழிளமுலைக் கொட்டி. . . . .
. . . .

(கு-பு.)—

இந்நூலைப்பற்றிய குறிப்பு 1195 நம்பரில் எழுதப்பட்டிருக்கிறது; இவ்வுரை மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியரால் இயற்றப்பட்டது ; சிறந்தது. இந்நூல் அடி 317–இல், இந்தப்பிரதியில் 3 முதல் 32 வரையிலுள்ள அடிகள் உரையுடனும், 33 முதல் 35 வரையிலுள்ள அடிகள் உரையின்றியு

No. 1201. சிதம்பரநான்மணிமாலை.

CIDAMBARANĀNMAṆIMĀLAI.

Substance, palm-leaf. Size, $14\frac{7}{8} \times 1\frac{1}{4}$ inches. Pages, 17. Lines, 8–10 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

Begins on fol. 1*a*. The other work herein is Śivappirakāśam 12*a*

This work containing 40 stanzas forms the 26th Prabandam of the 11th Tirumuṟai and is in praise of God Śiva worshipped under the

name of Naṭarāja in Cidambaram.
Paṭṭinattuppiḷḷaiyār. The work is also called Kōyinānmaṇimālai.

Beginning:

(வெண்பா)

பூமே லயனறியா மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டு(டே)வாம் —பாமேவு
மேத்துகந்தான் றில்லை யிடத்துகந்தா னம்பலத்தே
கூத்துகந்தான் கொற்றக் குடை. (க)

(கட்டளைக்கலித்துறை)

குடைகொண்டிவ் வையமெல் லாங்குளிர வித்தெரி போற்றிசீரிப்
படைகொண் டிகன்றெறும் பார்த்திப ராவதிற் பையப்பொற் கொன்றைத்
தொடைகொண்ட வார்சடை யம்பலத் தான்றொண்ட ரேவல்செய்து
கடைகொண்ட பிச்சைகொண் டுண்டிங்கு வாழ்தல் களிப்புடைத்தே (உ)

End:

(ஆகவல்.)

சதுமுகன் றந்தைக்குக் கதிர்விடு கடவு
ளாழி கொடுத்த பேரருள் போற்றி ;
மூயமறியொடு பணிந்த வியக்காகோ னுககு
மாநிதி யிரண்டு மானுப் பொருவளத்
5 தளகை யொன்றுந் தளர்வின்றி நிறுவிய
செல்வங் கொடுத்த செல்வம் போற்றி ;
தாணிழ லடைந்த மாணிக் காக
நாண்முறை பிறழாது கோண்முறை வலித்துப்
பதைத்துவருங் கூற்றைப் படியிசைத் தெறிகக
10 வுதைத்துயி ரளித்த வுதவி போற்றி;

* * * *

தாதையை யெறிந்த வேதியச் சிறுவாகுப்
பரிகலங் கொடுத்த திருவுளம் போற்றி ;
தின்முதல் வழிபடத் தன்மகற் றடிந்த
30 தொண்டர் மனையி லுண்டல் போற்றி ;
வெண்ணெ யுண்ண வெண்ணுபு வந்து
நந்தா விளக்கை நந்துபு பெயாத்த
தாவுபல் லெலிக்கு மூவுல காள
நொய்தினி லளித்த கைவளம் போற்றி;

* * * *

தில்லை மாநகர் போற்றி தில்லையுட்
செம்பொ னம்பலம் போற்றி யம்பலத்
40 தாடு நாடகம் போற்றி யென்றுங்
கென்றும் போற்றினு மென்றனக் கிறைவ
வாற்ற லில்லை [போற்றி]யாயினும்
போற்றி போற்றிநின் பொலம்பூ வடியே. (சo)

Colophon:

நான்மணிமாலை முற்றும்.

ஸ்ரீமுகவருல ஆடி மீ துவாதசி குருவாரம் ரோகிணி நட்சத்திரம் பெற்ற சுபதினத்தில் திமிரமகலக் குமரன் வரைந்தனன்.

(கு-பு.)—

இது பதினொராந்திருமுறைப் பிரபந்தம் 40-ல் 26-வது; 40 செய்யுட்களை யுடையது. பட்டினத்துப் பிள்ளையார்வாக்கு; சிதம்பரம் நடராசமூர்த்தி விஷயமான துதி. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது. கோயினான் மணிமாலையென்றும் இதற்குப் பெயருண்டு.

No. 1202. சிதம்பர நான்மணிமாலை.
CIDAMBARA NĀNMAṆIMĀLAI.

Substance, palm-leaf. Size, 3¼ × 1⅜ inches. Pages, 72. Lines, 10 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1143.

Complete.

Same work as the above.

Colophon:

நான்மணிமாலை கனகாசலம் எழுதி முடித்தது. முற்றும்.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. இதில் இந்நூல் முற்றும் உளளது.

No. 1203. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.
TIRUVIḌAIMARUDŪR MUMMAṆIKKŌVAI.

Pages, 44. Lines, 6–8 on a page.

Begins on fol. 7*a* of the MS. described under No. 1133.

Complete.

This work forms the 28th Prabandam of the 11th Tirumuṟai, and is in praise of Śiva worshipped under the name of Mahāliṅgamūrti in Tiruviḍaimarudūr, a place in the Tanjore district. The author is Paṭṭinattuppiḻḻaiyār. He has been praised by Tāyumānavar and Kaṇṇuḍaiyavaḻḻalār, and in the 28th Agaval of this work he praises Appar, Sundarar, Sambandar, Maṇikkavāsakar and Varakuṇapāṇḍiyar, thus giving room for the inference that he lived after these last mentioned four persons and before the first mentioned two persons.

Beginning:

(ஆசிரியப்பா.)

தெய்வத் தாமரைச் செவ்வியின் மலர்ந்து
வாடாப் புதுமலர்த் தோடெனச் சிவந்து
சிலம்புங் கழலு மலம்பப் புனைந்து
கூற்றி னாற்றன் மாற்றிப் போற்று
5 *வலம்புரி நெடுமா லேனமாய் நிலம்புக்*
காற்றலி னகழத் தோற்றாது நிமிர்ந்து

பத்தி யடியவர் பச்சிலை யிடினு
முத்தி கொடுத்து முன்னின் றருளியுந்
திகழ்ந்துள தொருபாற்
(. . . . .)
உலக மேழும் பன்முறை யீன் று
மருதிடங் கொண்ட வொருதனிக் கடவுளின்
றிருவடி பரவுதும் யாமே நெடுநா
ளிறந்தும் பிறந்தும் மிளைத்தனம் மறந்துஞ்
சிறைக்கருப் பாசயஞ் சேரா
மறித்தும் புகாது வாழ்வுபெறற் பொருட்டே. (க)

(வெண்பா.)

பொருளுங் குலனும் புகழுந் திறனு
மருளு மறிவு மனைத்து—மொருவா
கருதாவென் பார்க்குங் கறைமிடற்றாய் தொல்லை
மருதாவென் பார்க்கு வரும். (உ)

End:

(அகவல்.)

கொண்டலி னிருண்ட கண்டத் [தி](தெ)ண்டோட்
செவ்வா னுருவிற் பையர வார்த்துச்
சிறுபிறை கிடந்த நெறிதரு புன்சடை
மூவா முதல்வ முக்கட் செல்வ !
5 தேவ தேவ திருவிடை மருத !
மாசறு சிறப்பின் வானவ ராடும்
பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னி
யயிரா வணத்துறை யாளு மப்ப !
கயிலாய வாண ! கவுரி நாயக !
10 நின்னை வணங்கிப் பொன்னடி புகழ்ந்து
பெரும்பதம் பிழையா வரம்பல பெற்றோ
ரிமையா நெடுங்க ணுமையா ணங்கையு
மழைக்கட் கடத்துப் புழைக்கைப் பிள்ளையு
மமரர்த் தாங்குங் குமர வேளுஞ்
15 அரிசங் கேந்திய திருநெடு மாலும்
வான்முறை படைத்த நான்முகத் தொருவனுந்
தாரகற் செற்ற வீரக் கன்னியும்
நாவின் கிழத்தியும் பூவின் மடந்தையும்
பீடுயர் தோற்றத்துக் கோடி யுருத்திரரு
20 மாணுப் பெருந்திறல் வானோர் தலைவனுஞ்
செயிர்தீர் நாற்கோட் டயிரா பதமும்
வாம்பரி யருக்கர் தாம்பன் னிருவருஞ்
சந்திர னொருவனுஞ் செந்தீக் கடவுளும்
(. . . . .)
25 வித்தகப் பாடான் முத்திறத் தடியரும்
பெருந்துறைத் தெய்வமுந் திருந்திய வன்பி
லத்தகு செல்வத்தை யவமதித் தருளிய

சித்த் மாருச் சிவ வாக்கிய தேவரும்
வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
30 கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்து
மோடும் பன்னரி பூளைகோட் டானைப்
பாடின வென்று படாம்பல கொடுத்துங்
குவளைப் புனலிற் றவளை யரற்ற
ஈசன் றன்னை யேத்தின வென்று
35 காசும் பொன்னுங் கலந்து தூவியும்
வழிபடு மொருவன மஞ்சனத் தாற்றிய
செழுவிரை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன
விடுத்துக கொண்டவ னெச்சிலை நுகர்ந்தும்
40 மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
யும்மைப் போல வெம்மித் தலையுங்
கிடக்க வேண்டுமென் [ெ]றடுத்தடுத் திரந்துங்
கோயின் முற்றத்து மீமிசை(க) கிடப்ப
45 வாய்த்துள தென்று நாய்கக[ா]ட[ெ]ட (மெ)டுத்துங்
காம்பூழ்த் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவொடு கொடுத்த
50 பெரிய வன்பின வரகுண தேவனும்
(. . . . .)
தின்னுல கனைத்தி னனமை தீமை
யானவை நின்செய லாத (வி)[லே]
(ஞனே) யமையு நலமில வழிக்கே. (28)
(. . . . .)
கரத்தினின் மாலவன் கண்கொண்டு நின்கழல் காட்டநல்ல
வரத்தினை யியு மருதவப்பா மதி யொன்றமில் லேன்
சிரத்தினு மாயென்றன சிந்தைய தாகிவெண் காடனென்னுந்
தரத்தினு மாயது நினனடி யார்தெய்வத் தாமரையே. (௩0)

(கு-பு.)—

இது பதினொராந் திருமுறைப் பிரபந்தங்களுள் ஒன்று. திருவிடைமருதூர் மஹாலிங்கமூர்த்தி விஷயமானது கி. இயற்றியவர், "பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போ, லாருந் துறக்கை யரிதரிது", "ஒட்டுடன் பற்றின்றி யுலகைத் துறந்த செல்வப் பட்டினத்தார்" என்று தாயுமானவராலும், "படடினத்துப் பிள்ளையினைப் பத்ரகிரி யையப்பரவி, விட்டுவிட மாட்டார் வெறுவீடர்" எனக் கண்ணுடைய வள்ளலாராலும் பாராட்டிக் கூறப் பெறும் பட்டினத்துப் பிள்ளையாகும் இந்நூலின் 28-ஆம் அகவலால் நாயன்மார் மூவரையும், மாணிக்கவாசகரையும், வரகுண பாண்டியரையும் பாராட்டிக் கூறியிருத்தலால் அந்நால்வருக்கும் இவர் காலத்தாற் பிந்தியவராவார். இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1204. திருவொற்றியூரொருபாவொருபது.
TIRUVORRIYŪRORUPĀVORUPADU.

Substance, palm-leaf. Size, 5 × 1⅝ inches. Pages, 22. Lines, 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, new.

Begins on fol. 1*a*. The other work herein is Irupāirupadu with commentary, 12*a*.

Almost Complete.

This work consisting of 10 stanzas forms the 30th Prabandam of the 11th Tirumurai. The author is the well-known Paṭṭinattup-piḷḷaiyār. The 1st stanza, the last line of the 9th stanza and the 10th stanza are not found in the printed editions.

Beginning:

கரு[வெ]வந்து வீழக் கடைகணித்தென் னுள்ளத்
திருவந்து ஞானத் தெளிவின்—சொரூபந்
தெரிந்தகவ லந்தாதி செய்தருளப் பட்ட
வருந்தகைமை யேதுமறி யேன்.

இருநில மடந்தை யியல்பினி லுடுத்த
பொருகடன் மேகலை முகமெனப் பொலிந்த
வொற்றியூர் மாநக ருடையோ யுருவின
பெற்றி யொன்றாய்ப் பெற்றோ ரியாரே.

(* * * *)

எவ்வகை யளவினிற் கூடிநின்
30 றவ்வகை பொருளுநீ யாகிய விடத்தே.

End:

உலகுமதி யுருவத் தொண்சுடர் மூன்றி
னிலகு நாட்டத் திறையே யபயஞ்
சிறுகதிர்த் திங்கள சென்னியான் முடித்த
கறைமிடற் றமிர்தக் கடலே யபயம்

(* * * *)

வூட்டுந் தன்மையு மொழியுந் தன்மையும்
பெண்டிரு மக்களும் பிறவு மாக
கொண்டறபவர் நாகு பூஉந் தன்மையுங் (?)
காலமு மூன்றுங் கயிற்றுக் கிளையெடு

* * * *

(கு-பு.)—

இது, பதினோராந் திருமுறைப் பிரபந்தங்கள் 40-ல் 30-வது ; பட்டினத்துப் பிள்ளையார் இயற்றியது. செய்யுள்நடையிற் சிறந்தது. 10 அகவல்களையு டையது. இதன் முதலிற் காணப்படும் வெண்பா அச்சுப்பிரதியில் இல்லை ; அன்றியும் இதன் 9-ஆம் பாட்டிறுதியும் 10-ஆம் பாட்டும் அச்சுப்பிரதியிற் காணப்படாதன. 10-ஆம் பாடலின் இறுதியிற் சில அடிகள் இந்தப் பிரதி யில் இல்லை.

No. 1205. நம்பியாண்டார்நம்பியந்தாதி.

NAMBIYĀṆḌĀRNAMBIYANTĀDI.

Pages, 34. Lines, 6 on a page.

Begins on fol. 104*a* of the MS. described under No. 83.

Complete.

This work consisting of 89 stanzas forms the 33rd Prabandam of the 11th Tirumuṟai and gives very briefly the biography of the 63 Tamil Śaiva devotees called Arupattimūvar. It is also called Tiruttoṇḍar Tiruvantādi and forms the basis of the later work Periyapurāṇam. The author is Nambiyāṇḍārnambi.

Beginning :

செப்பத் தகுபுகட் டில்லைப் பதியிற் செழுமறையோ
ரொப்பப் புவனங்கண் மூன்றினு மும்பரி [னா](னு)ரரித்த
வப்பற் கமுதத் திருநடற் கந்திப் பிறையணிந்த
தப்ப[ர்க்](ற்) குரிமைத் தொழில்புரிந் தார்த[ம்]மைச் சொல்லுதுமே. (௧)

End :

ஓடிடும் பஞ்சேந் திரிய மொடுக்கியென் னூழ்வினைகள்
வாடிடும் வண்ண நின் றெத்தவஞ் செய்த(னன்) வானிலுள்ளோர்
சூடிடுஞ் சீர்த்திருப் பாதத்தர் தொண்டத் தொகையி னுள்ள
சேடர்தஞ் செல்வப் பெரும்புக ழந்தாதி செப்பிடவே. (அக)

(கு-பு.)—

இது பதினொராந் திருமுறைப் பிரபந்தங்கள் 40-ல் 33-வது; பெரிய புராணத்திற்கு முந்தியது; நம்பியாண்டார்நம்பி என்பவரால் பாடப்பெற்றது; 89 கட்டளைக்கலித்துறைகளையுடையது; பெரும்பாலும் ஒவ்வொரு கலித்துறையிலும் ஒவ்வோரடியார் செய்திகள் கூறப்பட்டிருத்தலால் இதற்குத் திருத்தொண்டர் திருவந்தாதியென்றும் ஒரு பெயருண்டு; இந்தப் பிரதியில் இந்நூல் பூர்த்தியாயிருக்கிறது.

No. 1206. பெரியபுராணம்.

PERIYAPURĀṆAM.

Pages, 4. Lines, 12 on a page.

Begins on fol. 14*a* of the MS. described under 623.

It is written in the beginning of this MS. that the stanzas given therein form the remnants of the Apparpurāṇam which is that portion of the Periyapurāṇam dealing with the life of Appar or Tirunāvukkarasunāyanar. But the stanzas are not found in the printed editions of the Periyapurāṇam. For other MSS. of this work see Nos. 619 to 627 *ante*.

Beginning:

அப்பர் புராணத்தில் குறைச்சல் பாட்டு.

அங்ககன் று போகியரன் மகிழ்ந்ததான
மம்மருங்கும் பலவிறைஞ்சி யன்பர்சூழக்
கொங்கணே பூங் குடமூக்கிற் றிருக்கா ரோணங்
கொடிமதில்சூழ் கீழ்க்கோட்டங் கும்பிட டேத்தி
மங்கையுமை பாகர் வலஞ் சுழியில்வந்து
வலங் கொண்டு வந்து மகிழ்ந் தேத்திப் போந்து
தெங்க[ளை](ணை) பைம் பொழி(ல்) புடைசூழபழையா
றெய்தித் திருச்சத்தி முற்றத்துச் சேர்ந்தாரன்றே. (௱௧௩)

End:

தேனார்ந்த மலர்ச்சோலைக் கழுக்குன் றின் திருவடியா
ரானத விருப்பினொடு மெதிர்கொள்ள வணைந்தருளித்
தூனாள்வெண் மதியணிந்த சுடர்க்கொழுந்தைத் தொழுதிறைஞ்சிப் (?)
பாணொடு மிசைத்திருந்த திருநந்த வளம்பாடி. (௩௪௨)

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இப்பாடல்கள் அப்பர் புராணத்தைச்சேர்ந்தவை என று ஊகிக்கப்படுகின் றது. இதன் தலைப்பில் "அப்பர் புராணத்தில் குறைச்சல் டாட்டு" எனக் குறிக்கப்பட்டிருப்பதால் இவை பெரிய புராணத்தின் ஒரு பிரிவாகிய திருநா வுக்கரசு நாயனா புராணத்தைச சேர்ந்தனவோ எனும் ஐயமுண்டாகின் றது ; ஆயினும் இது ஆராயத்தக்கது.

B. ŚAIVASIDDHĀNTAŚĀSTIRAM.

No. 1207. அட்டபுட்பம்.

AṬṬAPUṬPAM.

Size, 6 × 1 inches. Pages, 4. Lines, 7 on a page.

Begins on fol. 47*a* of the MS. described under No 185.

On the eight flower-like qualities or virtues of a person which are required to be given as offerings when he mentally worships God. The eight qualities are mentioned in the Tamil remarks below.

Beginning:

அஷ்டபுஷபம.

சிவாயமநாயநமா (?)	ஈசானம்
சிவமூர்த்தியேநமா	தத்புருஷம்
சிவாயநம	அகோரம்
[கு று](கிரு)தையேநமா	வாமதேவம்
சிரசேநமா	சத்தியோசாதம்
	* * *
சிகாயநமா	திக்குப்பந்தனம்
கவசாயநமா	அவகுண்டனம்
அ[ஷ](ஸ்)திராயபடு	தேனுமுத்திரை

End:

வித்யாதேகம்
நேத்திரம்
ஆவாகனம்
தாபனம்
சன்னிதானம்
சன்னிரோதனம்
விண்ணப்பம்
திருவி[illegible] சுவாத அர்க்கியம்
காளகண்ணிமுத்திரை
லிங்கமுத்திரை
நமஸ்காரமுத்திரை
இருதையாதி அங்கத்துவம்.

(கு-பு.)—

இது சைவமதவிஷயமானது. கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் அட்டபுட்பங்களைக் கொண்டு ஈசுவரனை மனத்தாலருச்சிக்குமுறைமை முதலியவற்றை விளக்குவதென்று தோற்றுகிறது.

No. 1208. அதிகாரப்பிள்ளையட்டவணை.

ADIKĀRAPIḶḶAIYAṬṬAVAṆAI.

Pages, 10. Lines, 14 on a page.

Begins on fol. 115*a* of the MS. described under No. 344.

Complete.

A prose treatise explaining the nature and characteristics of God, Soul and Pāśam which is said to obstruct the view of the soul. It was taught by Kaṇṇuḍaiyavaḷḷalār to Adikārappiḷḷai who interrogates the former on these points The work is one of the twenty treatises, called Śāstirams, written by Kaṇṇuḍaiyavaḷḷalār

Beginning:

சிவஞான மோக்ஷதாக மீதூர்ந்த அதிகாரப்பிள்ளை ஈசனார்? யானார்? என்னை மறைத்திருக்கும் பாசம் யாது? என்னும் விசாரமீக்கொண்டு கேட்க, கா(ர)ண ஞானக்கண்ணுடையோன் சித்தாந்த மகா வாக்கியம் வியவகரிக்கும்படி :—

சிவம் நானானேனென்ன, நானாரென்ன, நீயும் சிவம், ஞான தீக்ஷையால், திருநோக்கால், திவ்வியபாவனையால், சிவயோகத்தால், திருவாக்கால், திருப்பரிசத்தால் சிவம் நீயானாயென்ன, எனக்குண்டான அனுபோக சிவம் எங்குமுண்டோவென்ன வினவும் விடைக்கு உத்தரம் :—

சிவனானவன் பூதபௌதிகங்கடொறுமுண்டு இந்த வாக்கியத்தால் உய்ந்துபோனேனென்று ஆனந்தமாக்கடலமுந்திய மாணாக்கனுக்கு மீட்டும் வற்புறுத்தி மேற்கூறுவான்:—முதல்வாக்கியம் சதது. இரண்டாம் வாக்கியம் சித்து. மூன்றாம் வாக்கியம் ஆனந்தம் :—

முதல் வாக்கியத்தால் மல நாசனம். இரண்டாம் வாக்கியத்தால் கன்ம நாசனம். மூன்றாம் வாக்கியத்தால் மாயைநாசனம்.

End:

இந்தப் பி[ற](ர)காரத்தைச் சிவஞானப் பிரகாசத்து உண்மையிற்கண்டு தெளியக்கடவை.

பதி பசு பாச விளக்கம், ஞானவிளக்கம், உபதேசமாலை, சிவஞானப்பிரகாசம், அத்துவிதக்கலி (வெண்பா), அதிரகசியம், (சிவாகமக) கச்சிமாலை இந்த ஏழுமொருகொத்தாயிருக்கும்

பதி பசு பாச விசாரணையும், உண்மை நிஷ்டையும், [ெ]தசகாரிய விசேடமும், குருசிரத்தை(யும்) மகாவாக்கியமும், தீட்சாக்கி[ற](ர)மமும், ஞானவுபதேசமும், ஆகமசித்தாந்தமும் காண்க்கடவை. சத்திய நிர்வாண தீக்கையில்லாதவர்க்கு இந்தமார்க்கம் போதிக்கில், நீரருந்துமாவை அதட்டினோன் சாருங் கதியடைவை.

புண்ணுடலை நீப்பேனோ பொன்றாத மெ(ய்)ஞ்ஞானக்
கண்ணுடைய வள்ளல்பதங் காண்பேனோ—வெண்ணுடைய
வஞ்செழுத்தி னுண்மை யறிவேனோ வாங்கதனுட்
பிஞ்செழுத்தைப் பின்னறிவே னோ.

Colophon:

அதிரகசியப்பிள்ளை படவணை முற்றும்.

இது க[ற்](ர்)ணப[ர]ம்பரை. திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இந்நூல் சைவசமயத்தைச் சார்ந்தது. வள்ளலார் சாஸ்திரம் இருபதனுள் ஒன்று. வசனநடையாலாயது. அதிகாரப்பிள்ளை யென்பவர் கண்ணுடைய வள்ளலாரை உண்மைப்பொருள் எது என வினவ, அதற்கு அவர் மறுமொழி கூறுவதாக அமைந்தது இது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உளது.

No. 1209. அதிரகசியம்.
ATIRAHASIYAM.

Pages, 22 Lines, 9-14 on a page.

Begins on fol. 20*a* of the MS described under No. 344.

Complete in 6 stanzas.

This work, like the preceding one, is one of the 20 Śāstirams of Kaṇṇuḍaiyavaḷḷalār It explains, how when one seeks after a spiritual teacher, God appears as a Guru, instructs him in the true faith, and leads him on to salvation.

Beginning:

மோகமெனுங் கடல்கடந்து முத்தியெனுங் கரைகாண்பான முதிர்ந்த நாவாம்
பாகமெனு மலாகொண்டு பத்தியெனும் புனலாட்டிப் புரிந்து சாத்திச்
சோகமெனப் பாவித்து துரியமெனும் விளக்கேற்றிச் சோக நீங்கி (க)
யாகமெனுங் கோயிலின்கண் ணறிவென்னுங் கணபதிக்கே யன்புசெய்வாம்.

* * * *

அவையடக்கம்.

அதிரகசியத்தை யானு மளவிடத் துணிதல் வாணின்
மதியினை மழ[ற](த)ன் கையால் வவ்வுத லொக்கு மேனு
மெதிகடம் மருளா லி[ன்னூ](ந்நூ) லிசைப்பணிங் கிழிந்த நாய்த்தோல்
வதியினும் மணியை யெள்ளார் மணிநலந் தெரிந்தோ ரெல்லாம். (எ)

நூற்கருத்து.

அரிதுயிற் கடலு மிந்த வாசையங் கடற்கொவ் வாமை
பருவமிக் குயர்ந்தோ னொக்கிப் பாசமா திகளை நீத்துக
குரவனைத் தேடிக் கண்டு கூடரும் வீடு கூடும்
ஒருமையை யி[ன்னூ](ந்நூ)லின்க ணுணர்த்துவ னுணர்வி னூலே. (அ)

பாயிரம் முற்றும்.

மா[ளி](றி)ல வரைப்பி னுள்ளோர மாணனுக் குலக மெல்லாங்
கான னீர்போலத் தோன்றிக் கரப்பது கருத்துட் டோன்றித்
தே[னி](னு)லா மொழியா [ற](ரா)சைச சீயென வெறுத் துமிழ்ந்தான்
பானல்வாய் மகவி னுசை பாசத்தா [ள](ரா)சை நீத்தான். (கூ)

சித்திர பானுவாலுஞ் சிதைவிலா விருளை வீட்டி
யுத்தம முத்திஞான முதவுவா னுளனோ வென்[று](றிங்)
[வ](க)த்திரூழ் ஞாலமெல்லா [ந்து](ம)ளிமதுக் கலையு மாபோற்
பொத்தகப் பொருளைக் காட்டும் போதகா சானைத் தேர்வான். (௰உ)

End:

அதிரக சியத்தான் மேலா மறிவினை விளக்[கி](கு) வித்தோய
கதிபிறி தில்லை யென்னக் காட்டிய கருணை மேருப்
பதிகுடி கொண்ட ஞான தேசிக பரமா வுன்னை
விதிமுறை பணிவ னொக்கி விம்முவ னென்செய் கேனே (கூரு)

பிண்டமா முடனு னல்லேன் பிராணவா யுவுநா னல்லேன்
(கு-பு.)--

இது மூவருடத்திய காட்லாக்கின் 7(b) நம்பர் பிரதியின் மூலப்பிரதி. இந்தப் பிரதியின் ஏடுகள் சிதைந்துள்ளன. முற்றும் உள்ளது.

No. 1248. சங்கற்பநிராகரணம்.
SAṄKAṞPANIRĀKARAṆAM.

Pages, 46. Lines, 8 on a page.

Begins on fol. 106*a* of the MS. described under No. 1223.

Complete in 20 stanzas.

This work is considered to be one of the 14 Śāstirams of the Śaiva Siddhāntam. The author Umāpatiśivācāriyar of Koṟṟavankuḍi explains and criticises 9 systems of thought and extolls the greatness and the excellence of the Śaiva Siddhānta. From the introductory (Pāyiram) stanza, it is made out that this work was written in 1235 Sālivāhana Śaka which corresponds to 1313 A.D.

Beginning:

திருந்திய வருந்தவம் பொருந்துபன் முனிவர்
கமையாக் காத லமையாது பழிச்சும்
நிகரில் செக்கர்ப் புகர்முகத் தெழுந்த
புணிற்று வெண்பிறைத் தனிப்பெருங் கோட்டுத்

* * * *

களிறு தன்னிரு கழல் கருதா
வெளிறுறு துயரம் வீட்டினம் பெரிதே.

பாயிரம்.

பெருங்கட லுதவுங் கருங்கடு வாங்கிக்
கந்தரத் தமைத்த வந்தமில் கடவுள்
பாலரை யுணர்த்து மேலவர் போலக்
கேட்போ ரளவைக் கோட்படு பொருளா
லருளிய கலைக ளலகில வாலவை
பலபல சமயப் பான்மைத் தன்றே

* * * *

பதிபசு பாச விதிமுறை கிளக்குந்
வாய்ந்த நூல்க ளாய்ந்தன ராகி
யாசா ளுகி வீசிய சமத்துட
னே[ை]ழுஞ் சிருநூ[ற்] றெடுத்த வாயிரம்
வாழுநற் சகன மருவா திற்பப்
பொற்பொது மலிந்த வற்புத ஞனி
யாரூம் விழாவிற் பொற்றே ராலயத்
தேரூ வற்வர் நிரையி லிருப்ப
மயங்கு வாத மாயா வாதி
முயங்கிட வொருதலை முதுவெதிர் மணிசேர்

* * * *

ஆங்கய விருந்த வருளின ரழுகிது
நீங்கள் சங்கற்ப நிராகரித் தமையென
மற்றவ ருரைத்த சொற்றரு பொருள்கொடு
வாத சொற்ப விதண்டையு மேதுவு
மோது நால்வகை யுவமைபுந் திகடர
வருள்சேர் மாந்தர் வெருள்சே ராமற்
றறகமும் விடையமும் கற்க
நற்கவி மாந்தர் நகநவிற் றுவனே.

நவிற்றிய நிரையி னவித்தையி னேனுரை
நித்த னறிவன் சுத்த னகண்டிதன்

* * * *

தன்னொழிந் துள்ள தாளு யழியு
மந்நிலை யன்றி யழிவறு முத்தி
யேயா தென் றுதன் னியல்பை
மாயா வாதி வகுத்துரைத்!தனனே.

End :

* * * *

வெண்ணெயம் பதிதிகழ் மெய்கண் டவனரு
ளுண்ணிலை யுடையோ னொருவ னுரைத்த
தவப்பிர காசத் தன்மையில் விரித்த
சிவப்பிர காசச செழுந்தமி ழுண்மையை
யருளுட னுய்ந்து கொள்ளத்
திருவருள் வினவ திருந்திடு மன்றே.

Colophon :

சங்கற்ப நிராகரணம் முற்றும்.

தராவலயத் துள்ளோர் கடந்தசங் கரப
நிராகரண மென்று னிகழ்த்தும் - பிராவையினி
வெம்பந்த நீங்கத் தொழுமின் வியன்மருதச்
சம்பந்தன் வந்தருளுந் தான்.

(கு-பு.)—

இது சைவசித்தாந்த சாஸ்திரம் பதினன்கனுள் ஒன்று. கொற்றவன் குடி உமாபதிசிவாசாரியரியற்றியது. பாயிரமுட்பட இருபது அகவற்பாக்களா லாகியது. மாயாவாதிமுதலாகச் சைவவாதியீருகவுள்ள ஒன்பது மதத்தவர் களின் கொள்கைகளை எடுத்துக்கூறி அவற்றைக் கண்டித்து, சித்தாந்தசைவ த்தின மேன்மையைத் தெளிவிப்பது. இந்தப் பிரதியில் இது முற்றும் இருக் கிறது. இந்நூல் இயற்றிய காலம் சாலிவாகன சகாப்தம் 1235 (கி. பி. 1313) என்று பாயிரத்தகவலால் தெரிகிறது.

No. 1249. சங்கற்பநிராகரணம்.

SAṄKAṞPANIRĀKARAṆAM.

Pages, 45. Lines, 25 on a page.

Begins on fol. 1a of the MS. described under No. 1222.

Complete.

Same work as the above, being a copy restored from it.

(கு-பு.)—

இது முன் நம்பர் பிரதியைப்பார்த்து எழுதப்பட்ட பிரதி. இதில் இந் நூல் முற்றுமிருக்கிறது.

No 1250. சங்கற்பநிராகரணப்பதவுரை.

SAṄKAṞPANIRĀKARAṆAPPADAVURAI.

Pages, 209. Lines, 8 on a page.

Begins on fol. 1a of the MS. described under No. 1223.

Complete.

A word for word commentary on the work described above. It has been printed. The commentator is Ñānappirakāśar.

Beginning:

திருந்திய வருந்தவம் பொருந்துபன்முனிவர் எ-து, சாத்திரங்களில் உத் தமப் பி[ற](ர)காரமாக விதிக்கப்பட்டுள்ள அரிய தவசுகளோடுங் கூடியிருந் துள்ள மகா[வி]ருஷிகள் பலருங்கூடி (. . . . . .) வெளிறுறுதுயரம் வீட்டினம் பெரிதே எ-து, குற்றத்தோடுங் கூடியிருக்கிற துக்கங்களை மிக வும் விடுவி.ா் தின்றேம் என்றவாறு. (க)

இது காப்பு.

பெருங்கடலுதவுங் கருங்கடுவாங்கிக் கந்தரத்தமைத்த வந்தமில் கடவுள் எ-து. பெரிதாயுள்ள திருப்பாற்கடலிலே நின்றுமுண்டாகப்பட்ட கறுத்த

நஞ்சினைத் தனது சேகத்தத்திலே வாங்கியமுதுசெய்து கண்டத்திலே தரித்துக்கொண்டிருக்கையிலேயும் தனக்கு முடிவில்லாத கடவுள் ;

என்னவே க(ர்)த்தாவை நீக்கி முற்காலத்திலே தேவர்கள் அமுதங்கடைய அதிலே நஞ்சு பிறந்து அதினாலே அவர்கள் பீடைப்படுகையினாலே துட்டநிக்கிரகமும், அவர்கள கர்த்தாவைநோக்கி ய[னை]பயமிட அஞ்சா[தே] (திரெ)ன்று அந்த நஞ்சை யமுதுசெய்து அவர்களையிரட்சிககையினாலே சிட்ட[ர்] பரிபர்லனமுமாய் நின்றதெனக்கொள்க.

End :

* * * *

வியன்மருதச் சம்பந்தன் வந்தருளுந்தான் எ-து. மிக்க சிறப்போடெங் கூடியிருக்கிற மருதத்தார்க்குக் கர்த்தாவாயிருந்துள்ள மறைஞான சம்பந்தனென்கிற திருநாமத்தினையுடையவன் எழுந்தருளியுங்களுக்கு அனுக்கிரகத்தைச் செய்யாநிற்குமென்றவாறு.

Colophon :

பொற்பமரப்பல சொற்றுறை யோரைப் பொதிந் தனசங்
கற்ப நிராகரணத் துரைகாட்டினன் காற்றியங்கி
லற்ப விராவிடை மங்கைபங் கின்றி யணைந்த வெங்கோன்
சிற்ப னிராமயன் ஞானப் பிற(ர)காசனந் தேசிகனே.

Colophon :

சங்கற்பநிராகரண விபா[கரண] (க்யான)ம் எழுதி நிறைந்தது.
"தராவலைய (. . . . .) சம்பந்தன் வந்தருளுந்தான்."

(கு-பு.)—

இவ்வுரைநூல் இந்தப்பிரதியில் முற்றும் இருக்கிறது உரையாசிரியர் ஞானப்பிரகாசனென்பவர என்று இறுதி வெண்பாவால் தெரிகின்றது. உரை நடை நன்றாக இருக்கிறது. அச்சிடப்பட்டுள்ளது

No. 1251. சங்கற்பநிராகரணப்பதவுரை.

SAṄKAṞPANIRĀKARAṆAPPADAVURAI.

Pages, 218. Lines, 25 on a page.

Begins on fol. 25*a* of the MS. described under No. 1222.

Complete.

This work was copied from the MS. described above and is the same as the above.

(கு-பு.)—

இத் முன் நம்பர் பிரதியைப் பார்த்து எழுதப்பட்ட பிரதி. இதில் இது முற்றும் ;

No. 1252. சடாதார சித்தர் குருபதேசம்.
ṢAḌĀDĀRASITTARGURŪPADĒSAM.

Page, 9. Lines, 7 on a page.

Begins on fol. 43*a* of the MS. described under No. 314 and 1071.

Complete.

Same work as the above.

This MS. is the original of that described under R. No. 302 (*k*) of the Triennial Catalogue of MSS., Vol. II, Part 2.

(த-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 302 (k) நம்பர் பிரதிக்கு மூலப்பிரதி. முற்றுப்பெற்றிருக்கிறது.

No. 1253. சதமணிக்கோவை.
ŚATAMAṆIKKŌVAI.

Size, 11⅜ × 1⅜ inches. Pages, 36. Lines, 7–8 on a page.

Begins on fol. 206*a* of the MS. described under No. 1219.

Complete.

This is the original of that described under R. No. 7 (*f*) of the Triennial Catalogue of MSS, Vol. I, Part 2, and contains the same work.

(த-பு.)—

இது மூவருடத்திய காட்லாக்கின் 7 (f) நம்பர் பிரதியின் மூலப்பிரதி. இதில் இந்நூல் குறிப்புரையுடன் முற்றுப்பெற்றிருக்கிறது. ஏடுகள் சிதைந்துள்ளன.

No. 1254. சருவஞானகாலோத்தரம்.
SARUVAÑĀNAKĀLŌTTARAM.

Substance, palm-leaf. Size, 7 × 1⅜ inches. Pages, 71. Lines 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Contains from the Kriyāpāda to the end.

This work is a Tamil rendering of the Sanskrit Śaivāgama work entitled Sarvañānakālōttara (No. 5790 of the D. C. S. MSS.)

It is considered to be one of the 28 Śaivāgama works. From the 9th stanza of this work, the author is inferred to be a disciple of Āḍiyapādadēśikar of Cidambaram.

Beginning :

சருவ[க்கிரியா](ஞா)னகாலோத்தரம்.

முத்திவிளையகன் மனத்தின் முரணறவன்
முடுகிநில முட்டில்விளக்கு
மத்திவிளையகனெவருந்தவித்தையெ(ன)
(வி)த்தையளித்தறத்தையாக்குஞ்

சத்திவிநாயக னுயர்ந்த தாணுவிநாயகன்
றேற்றந்தருமோரட்ட
சித்திவிநாயகன் மதுரைச் சித்திவிநாயக
னிருதாள் சிரமேற்கொள்வோம்.

வானமும் புவியும் வாழக மழைவள மிகுக வெங்குந்
தானமுந் தவமுஞ் சைவ சமயமுந் தழைக்கத் தெய்வ
ஞானமு நெறியு மோங்க நாடெலாம் விளக வந்தத்
தூனமில் வீடுகூடி யுயிர்த்தொகை பொலிக மிக்கார் (க)

* * * *

அருவாச ரகத்தியா கவுதமர்பிறகு பாரத்து வாசரொடு
தநீசர் நாரதர் சனகாதி கணற்
றிருஞான சம்பந்தர் திருநாவுக் கரசர்
திருநாவலூரர் திருவாதவூர்த் தலைவ
ரருண்மேவு சமயபரி பாலகரிச சமயா[ச](சா)ரியரையுங்
கண்ணப் பர்தலையாலே நடந்தா
ளுருவொடுங் கயிலை புக்க வுதிய னனபாய
னுயர்ந்தவர குணன் முதல வடியரையுந் துதிப்பாம் (எ)

* * * *

திருநாமங் கிரியை குணஞ் சாதியிலா தோங்குஞ்
சச்சிதா னந்த னொரு சகள மாகித்
திருநாம மொனறு தரித் தருட்புலியூர் தோன்றித்
திரிபதார்த்த மும்விளக்கிச் சரியை முதலாக
வொருநாலு விதமுணர்த்தி யதிமோன மாகி
யுயர்ஞான முத்திரையா லெனைத்தயை செய்த
குருநாதன் மெ(ய்)ஞ்ஞான மூர்த்தி திருக் கருணை
கூருமா டியபாத தேசிகனைப் பணிவோம் (கூ)

பத்தியினாற் பணிந்தேத்திக் குமரன்கேட்ப(ப்)
பதிபசுபா சத்தினுண்மைக் கயிலைமேவு
மத்தனருள் சருவ[க்ஞ](ஞா) னோத்திரத்தி
ண தத்துவித வடமொழியைத் தமிழாய்ச் செய்தே
உத்தியினாற் பொருளானு தியங்க ளன்றி
யுயர்மூலக் கிரந்தத்தி னுள்ள வாறே
சத்தியமாய்ப் பகர்ந்தேனிந் நூறகு நாமஞ்
சருவ[க்ஞ](ஞா) னோத்தரமாந் தாணிமீதே (க0)

பசுபாச சுரூப சுபாவமு முயிர்கட் கனாதிபாச சம்பந்தமுங் கேட்பாணிச் சித்தேன் முந்திப்

பசுவோதவேண்டியதோ பாசமது முந்திப் பகரவேண் டியதோ வப்பாசந் தான்யாது

பசு வெதுகா ரணத்தாற் பாச பந்தமானன் பகாதிகா ரத்தோடு கூடிய வப்ப தியார்

பசுபாச வதிகார ரகிதசிவ னெந்தப் படி யிருப்ப ரெனமுருகர்க் கரனரு ளிச்செய்வார். (கஉ)

பசுவாவ தான்மாவப் பசுவசு தந்தானப்
பகர் சின்மாத்திரன் மலதூஷதன் மலத்தான்கூட (?)
னசையாருங் கிரியையிலான் நித்திய சஞ் சாரி
யீசுர னல்லான் கிஞ்சிக் கினனு மாயிருப்ப
னசையாத சிவத்துவ சேதனமான்மா விடத்தி
வணுகியே மலத்தடையாஞ் சிருணகாவிதம்பெற் (?)
றிசைாருஞ் செம்பிரத குளிகையிற் பொன்னும் போற்
சீவனுமெ(ய)ஞ் ஞானத்தாற் சிவத்து வத்தைப் பெறுமே.(கஅ)

End:

ஒருவசன மாகவே முடிந்த பொருளுரைத்தோ
மொன்றாகக் காண்பதுவே காட்சியினானுந் திரும்பப்
பெருவசன மாகநீ பலபடக்கேட் டாலும்
பின்னுநா னிகழ்த் துவது மிந்தவுப தேசந்
தருவசன சமுதாய பலபொருளும் விளங்குந்
தமொரு தேகமாய(த் தா)னைதா னும்
திருவசன மாயஞான மோனமொன்று மின்றி
நில்லாத நிலையின்றி நின்றநிலை நிலையே. (எக)

சத்தியவா சக முரைத்தோ முன்னும்பின்னு முறைகளேநு
சாட்சாற்கார(த்)தை யாந்தா தா மிய சம்பந்த
சுத்த வத்துவித மிதுவே திரும்பாத
முத்தி துவிதாத்துவிதந் . . . .
. . . . தவசாதாரணகற்பிதங்க ளொன்றுமின்றி
யுணர்ந்து சுயம்பிரகாசமாயெங்கு நிறைவாய்ந
தத்துவா தீதமாய்த் தனையறிதன் முதந் சருவ[கங்கிய]
(ஞ)ானோத்தாஞ் சம்பூரணஞ் சமாப்தம். (எ0)

Colophon:

ச[று](ரு)ஞானகாவோத்தர முற்றும்.

(தி-பு.)—

இது ஸம்ஸ்கருத டிஸ்க்ரிப்டிவ காடலாக 5550-ஆம் நம்பரில் வந்துள்ள நூலின் மொழிபெயர்ப்பென்று தோற்றுகிறது; சிவாகமம் இருபத்தெட்டனுள் ஒன்று. கிரியாபாதமுதல் தொடர்ச்சியாக முற்றும் இருக்கிறது. பாயிரம் 9-ஆம் செய்யுளால் சிதம்பரத்தில் இருந்த ஆடியபாத தேசிகரின் சிஷ்யரொருவர் இதை இயற்றினாரென்று தெரிகிறது.

No. 1255. சித்தாந்ததரிசனம்.

SIDDĀNTADARIŚANAM.

Pages, 44. Lines, 13 on a page.

Begins on fol. 132*a* of the MS. described under No. 344.

Complete in 178 stanzas.

This work is considered to be one of the 20 Śāstirams of the author Vaḷḷalār and treats about the Śaiva-Siddhānta. It explains the 5 subjects into which the work is divided, viz., the nature of the Pati (Lord), Paśu (individual soul), Pāśa (the string which binds the soul to bondage), Pāśavimōcana (freedom of the soul from the bondage), Śivayōga (the realization of Śiva).

Beginning:

பிரான சித்தாந்த தரிசனத்தை யாமோதக
காரணனை மாமுகனே கா.

அம்மை யப்ப னுயிருக் காதர மாய் நிறைந்த
செம்மை சிவனா ரெனஞ் சிரம்.

அவாக்கடலுள் வீழ்ந்தழுந்து மாருயிரைத் தூக்குஞ்
சிவாகமசித் தாந்தக் குறள். (௰௨)

பாயிரமுற்றும்.

பதியியல்பு.

மதிநவமுஞ் செஞ்சடையோனை மாமலர்த்தா ளுன்னிப்
பதியியல்பைச் சொல்வாம் பணிந்து. (௧)

பதியாவ தொன்றாய்ப் பரிபூ ரணமாய்க்
இதமாகி நிற்குஞ் சிவம்.

அற்றார்கட் கண்ணிதா யல்லார்க்குச் சேயமையாய்ப்
பற்றற நிற்கும் பதி. (௨)

End:

அணுவுக் கணுவா யகண்டமாய் நின்ற
பணிசெய்ய நீயே பணி. (௪௪)

எங்குமாய் நின்றனை யெக்காலும் பூசித்தே
யெங்குமாய நிற்கவெனக் கீ. (௪௫)

சிவயோகவியல் முற்றும்.

ஆகவியலைஞ்சுக்குக் குறள் ௨௱௭௰௪.

சித்தாந்ததரிசனம் முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் வள்ளலார் சாஸ்திரம் இருபதனுள் ஒன்று; சைவசித்தாந்தத்தைச் சேர்ந்தது. பதியியல்பு, பசுவியல்பு, பாசவியல்பு, பாசவிமோசனவியல்பு, சிவயோகவியல்பு என்ற ஐந்து பிரிவினையுடையது; முந்நூற்றெழுபத்தெட்டுக் குறள்வெண்பாக்களாலாகியது. இதில் இந்நூல் முற்றுமுள்ளது.

No. 1256. சிவசமவாதவுரைமறுப்பு.
ŚIVASAMAVĀDAVURAIMAṞUPPU.

Pages, 4. Lines, 9 on a page.

Begins on fol. 12*a* of the MS. described under No. 354.

Complete.

Ñānappirakāśar of Tiruvaṇṇāmalai Mutt wrote a commentary on the Śivañānaśittiyār and in the commentary he expressed the view that the individual soul when freed from the bondage of Samsāra acquires all the powers of the Pati (God). This view was considered to be wrong by Śivañānamunivar of Tiruvāvaḍuturai Mutt who in the present treatise condemned the view of Ñānappirakāśar as being inconsistent with the true import and spirit of Śivañānaśittiyār.

Beginning :

ஆசிரியர் சகலாகம பண்டிதர் தம்மாற் செய்யப்படுநூற்கு வழிகூறுவான் எடுத்துக்கொண்ட, "வினையின் பவத்தில்" என்னுந் திருவிருத்தத்துள், 'எடுத்து' என்னுஞ் சொற்கு "சமயத்தார் பாசக்கூட்டங் கூடாதவகை சின்மாத்திர சுத்தகேவலமாய்ச் சேடிக்கப்பண்ணி" யென்றுரைப்பாருரை யொருவாற்றானும் பொருள்படுமாறில்லையென்பது கற்றுணர்வுடையோர்க் கெல்லாமினிது விளங்கும்; அஃதறியாது பதம் மானம் மாக்கம அறிவின்மை முதலியனபற்றிப் பிணங்கும் புல்லறிவாளர்க்கு ஒருவாற்றானும் உணர்த்தும் வாயிலில்லை; ஆதலால், அவ்விரு வேறு சிறத்தாரையும் ஒழித்து இடைநின்றாரை நோக்கி, ஈண்டு 'எடுத்து' என்னுஞ் சொற்கு, "சின்மாத்திர சுத்தகேவலமாகச் சேடிக்கப்பண்ணி" என்றது, செம்பொருள் இலக்கணைப் பொருள் குறிப்புப்பொருள் என்னும் மூன்றனுள், யாதெனக் கடாயினார்க் குச் செம்பொருளென்றல் பொருந்தாது. என்னை? வழக்கினுளுதல் செய்யுட்கணுதல் நிகண்டு நூல்களினுதல் அவ்வாறு பிரயோகம் இன்மையானும், எடுத்தலாவது கீழ்க்கண்ணதொரு கண்டிதப்பொருளை ஏகதேசங் கருவிகொண்டு மேற்கண்ணதாகச் செய்தலே. பிறிதன்றென்பது; 'குடத்தையெடுத்தான்', 'ஆடையையெடுத்தான்' என்றற்றொடக்கத்து வழக்கானும், 'காகமலங்கள்பற்றியே யெடுப்ப' என்றற்றொடக்கத்துச் செய்யுட்கண்ணும் அறியக் கிடத்தலின், அப்பொருள் ஈண்டைக்கு ஏலாமையானுமென்பது.

End :

* "கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்"

என்பதனால், இதனைப் பிறரறியிற் சோர்வுபடுமென்றஞ்சிப் பொதிந்து வைத்துக்கொண்டு, தாமே தம்முட்கொண்டாடுவாராய் மதமானங்களைத் மேலிட்டான், மூகரா நயஞ்சாதிப்பாருஞ் சாதிக்க; அதுகேட்ட பிறரும் கேதானுகேளிக நயம்பற்றி உடனிருந்து கொண்டாடுதல் வியக்கத்தக்கதே யாம்!

* திருக்குறள், 405.

* " தம்மை,
யுணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறம் "

† " நெய்யுண் பூங்குழன் மடவரா ளின்றொடு வாகு
செய்யும் பூசலுக் கெதிரலாற் றீயவாய் திறந்து
னவயும் பூசலுக் கெதிரலேனா மானம்விற றுன்போ
லுய்யும் பூவைய ரேயதற் கெதிரென வுரைததாள."

(கு-பு.)—

திருவண்ணாமலை ஆதீனம் ஞானப்பிரகாசர், " எனையிப்பவத்தில் " என்ற செய்யுட்கு அரூபசமவாதநெறிக்குப்பொருந்த உரை இயற்ற அவவுரை சுத்தாத்துவித சித்தாந்த சைவத்திற்கு விரோதமாயிருத்தலை, திருவாவடுதுறைச் சிவஞானமுனிவர் அறிந்து இம்மறுப்பை எழுதினரென்பர். சித்தாந்த சைவநூலான சிவஞானசித்தியாருக்கு ஞானப்பிரகாசருரை பொருந்தாதவாறும், பிறவும் இம்மறுப்பினுள் அவரால் நன்கு உணர்த்தப் பட்டுள்ளன.

No. 1257. சிவசமவாதவுரைமறுப்பு.
ŚIVASAMAVĀDAVURAIMARUPPU.

Pages, 6. Lines, 10 on a page

Begins on fol. 83*a* of the MS. described under No. 1239.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இதில் இந்நூல் முற்றும் இருக்கிறது.

No. 1258. சிவஞானசித்தியார்.
ŚIVAÑĀNAŚITTIYĀR.

Pages, 160. Lines, 12 on a page.

Begins on fol. 13*a* of the MS. described under No. 1226.

Contains completely both the Supakkam consisting of 321 stanzas and the Parapakkam consisting of 300 stanzas.

For a brief abstract of the work see the English portion of the work described under R. No. 307 of the Triennial Catalogue of the Tamil MSS., Vol. II, Part 2.

(கு-பு.)—

இந்தப்பிரதியில் இந்நூல் மூலம் முற்றும் இருக்கிறது. பரபக்கச் செய்யுட்களின் தொகை பாயிரமுட்பட 300. சுபக்கச்செய்யுட்களின் தொகை 321. இந்தப் பிரதியின் ஏடுகள் மிகவுஞ் சிதைந்தும் ஒடிந்துமுள்ளன. இது மிகப் பழைய பிரதி.

* சிவஞானபோதம், அவையடக்கம்.

† திருவிளையாடற்புராணம், சச : கூ.

No. 1259. சிவஞானசித்தியார் சுபக்கம்.

ŚIVAÑĀNAŚITTIYĀR SUPAKKAM.

Pages, 22. Lines, 7 on a page.

Begins on fol. 76*a* of the MS. described under No. 1185.

Contains 50 stanzas of the Supakkam from the beginning but in a somewhat discontinuous manner.

Same work as the above.

(கு-பு.)—

இந்தப் பிரதியில் இந்நூலின் பாடல்கள் ஐம்பது உள்ளன. இடையிடையே பல ஏடுகள் முறிந்துபோயினமையின் அப்பாடல்கள் தொடர்ச்சியாக இல்லை ; உள்ள ஏடுகளும் சிதைந்துள்ளன.

No. 1260. சிவஞானசித்தியார் சுபக்கம், உரையுடன்.

ŚIVAÑĀNAŚITTIYĀR SUPAKKAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $18\frac{3}{4} \times 1\frac{1}{2}$ inches. Pages, 240. Lines, 10 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 122*a*. The other works herein are Śivañanaśittiyār Parapakkam with commentary 1*a*, Śivānuṣṭānavidi 242*a*.

Complete.

The text is the same as that described under R. No. 307 of the Triennial Catalogue of MSS, Vol. II, Part 2. By Aruṇandi Śivācariyar. The commentary is by Maṟaiñānasambandar.

Beginning :

சிவஞானசித்தியார் சுபட்சம் உரை.

ஆனைமுகன் பதநினைவா மார்வங்கூர
வரனடியும் பிகைபத மும்பணிவா மம்பால்
வானவரை வருத்தியவல் லசுராதம்மை
வதைத்தகுகன் மலரடியெம் மனத்தின் வைப்பாங்
கானமதி னடமாடி(க) கோயில் வாய்தல்
காவலரு ணந்திபதங் கருத்தில் வைப்பாம்
ஞானமுனி சனற்குமர ஞதியர்தம் பதமு
நயந்தெணுவா மெணியவர நமக்கே யாமே.

" ஒரு கோட்ட (. . . .) தேவே "

என்றது, ஒருகொம்பினையும் இரண்டு செவியினையும் மூன்றுதானத்தினின்று பொழியா நின்ற மூன்றுமதத்தினையும் நான்றவாயினையும் துதிக்கை

யுடன ஐந்து கையினையுமுடைனுடைய (. . . . . . .) மேலாஞானத்தைக் கொடா நிற்கு மிச்சிறப்பினையுடை க[ற்](ர்)த்தா வென்றவாறு

ஓதவென்பது, எழுவாய். செய்யுமென்பது, பயனிலை. ஏகாரம், ஈற்றசை.
(. . . .)

இவ்வாசிரியர், சிவதுதி, சத்தி வணக்கம், கணபதி வணக்கம், கந்தன் வணக்கம், குருதுதி, அவையடக்கம், நூற்சிறப்பு, குருமரபு, நூற்பெயர், நூற்கருத்து இவைகளைப் பத்துச்செய்யுளாற் பாயிரமாகவுணர்த்தி, லோகா[யு](ய) தன்முதல் பாஞ்சராத்திரி ஈறுன பரச[ம](மயிகள் பதினால்வர் மதத்தையும் அவரவர் மதமறுப்பினையும் இருநூற்றுத்தொண்ணூறு விருத்தத்தா லுணர்த்தி, அதன்பின் தமது மதத்தையே தாபித்தற்பொருட்டுப் பரமதந் தன்மதமாகிய இரண்டினையும் விருவிடையாகச் சொம்மதத்தினை மு[ன].னூ](ந்நூ)ற்றிருபத்தொரு செயயுளாலுணர்த்தினமையால் இதற்குச் சுவடக்கமெனவும், அதற்குப்பரபக்கமெனவும் பெயராயிற்று.

இதனுடைய பரபக்கமானது, சங்காசாரியர் செய்த ச[று](ரு)வ [தெ]ரிசன சங்கிரகத்திலும் ச[று](ரு)வமதோபந்நியாசத்திலும், இராமநாதாசாரியர் பண்ணின பரமதநிராகரணத்திலும், ச[று](ரு)வான்மசம்புபண்ணின சித்தாந்த தீபிகையிலும், அகோரசிவாசாரியர் பண்ணின சித்தாந்தா[ற்](ர)த்த சமுச்சயத்திலும் பார்த்து அவைகளின கருத்தைப்பற்றிச் செய்ததெனவறிக.

சுபக்கமானது, முன்னூலாகிய சிவஞானபோதத்தின கருத்தினையும், வழிநூலாகிய சூத்திரம், சூ[றணை](ரணிகை) வெண்பா இவைகளையும் சிவாகமங்களையுமுற்றுநோக்கி அவ்வழியே பன்னிரண்டு சூத்திரமாகச் செய்ததெனவறிக.

End :

" சிவமேயாகும பரிசிதனுஞ் சிந்தித்துப் பார்த்துத்தானே " என்பது, ஞானாசாரியனு மாணாக்கருட சிறிது பேரை(ப) பரிசதீக்கையைச்செய்தும். சிறிதுபேரை வாசகதீக்கையைச்செய்தும் சிறிதுபேரைத் திருநோக்க கெ[ா]ன[று](னு)ம் தீக்கையைச்செய்தும, ச[று](ரு)வ[கஞ்](ஞ)னுக்குச் சமமான ரூபத்தையுண்டாக்குவன் என்றவாறு. (. . . . .)

அபரஞானத்துக்கு மேவுறுதலால் பரமஞானமென்றார்.

பரமாயகுண்டலிக்கு மேலாய நிற்றலால் பராபரமென்றார். (௰)

ஆகச்சூத்திரம் பன்னிரண்டுக்கும் விருத்தம் ௩௨௰.

விசுவசாரோத்தரம்.

பன்னிரு பருவவனு மன்னிப் பதப் பொருள்
உன்னித் திரிவற வுணாந்த பெருமையர்
* * * *
அன்ன நிலையா மமலனை யடைந்தார
அன்னிய மற்று மடைபவர் தாமே.
திருத்து[ர](ற)யூர்ச் சைவன திருத்துமறையும்
விரித்துரைக்கும் வேதியன்மெய் கண்டான்—கருத்தி
னருணந்தி தேவ னருண்மொழி யாய்ந்தே
யிருணந் தம்மாற் கண்டிலே[ே]ம்.

சிவஞான தேசிகன் சிறியேன் துணையே.

(கு-பு.)—

இது சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் நாலாவது. இவ்வரிய நூலுக்கு அறுவர் உரை இயற்றினதாகத் தெரிகிறது; அவற்றுள் இது மறைஞானசம்பந்தர் இயற்றிய விரிவுரையாகும். இவ்வுரை நூல் இந்தப்பிரதியில் முற்றும்.

No. 1261. சிவஞானசித்தியார் சுபக்கம், உரையுடன்.

ŚIVAÑĀNAŚITTIYAR SUPAKKAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $14\frac{7}{8} \times 1\frac{1}{2}$ inches. Pages, 410. Lines, 10 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1*a*. The other work herein is Śivañanaśittiyar Parapakkavurai 206*a*.

Complete

Same work as that described above.

The scribe adds:

பொன்னம்பலம் விருத்தி சொந்தம். [சௌநாத] (ஸ்வஹஸ்தம்) லிகிதம்.

(கு-பு)—

முன்பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இவ்வுரை முற்றும் இருக்கிறது; ஏடுகள் சிதைந்துள்ளன.

No. 1262. சிவஞானசித்தியார் சுபக்கம், உரையுடன்.

ŚIVAÑĀNAŚITTIYĀR SUPAKKAM WITH COMMENTARY.

Substance (Śrītāla) palm-leaf. Size, $15\frac{5}{8} \times 2\frac{3}{8}$ inches. Pages, 179. Lines, 19 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Begins on fol. 46*a*. The other works herein are Śivañanābōda-ccūrṇikaikkottu 1*b*. Śivappirakāśam with commentary 2*a*, Śivañāna-bōdam with commentary 21*a*.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. இவ்வுரை இதில் முற்றும் இருக்கிறது. சிதாள ஏடு. மிகப்பழைய பிரதி.

No. 1263. சிவஞானசித்தியார் சுபக்கம், உரையுடன்.

ŚIVAÑĀNAŚITTIYĀR SUPAKKAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $12\frac{3}{4} \times 1\frac{3}{8}$ inches. Pages, 544. Lines, 9 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Complete.

Same text as the above, but the commentary found herein is by Ñānappirakāśar of Śālivāṭipuram. It is shorter than the similar commentaries written by Maṟaiñānadēśikar, and Śivakoḻundācāriyar or Śivāgrayōgi.

Beginning:

திருமருவுஞ் சிவஞான சித்தியின கண்
ணுரையெவர்க்குந்தெரியா வேதான
கருமருவுஞ் சிவாகமத்தின் கணவிதிகள்
கண்டெடுத்துக் கழறு மேன்மை
மருமருவும் வயற்சாலி வாடிபுர
மீதுதவவடிவா யோங்கும்
பெருங்கருணை மொழிஞானப் பிரகாசன
றிருவடிகள் பேணல் செய்வாம்.

சிவமுற நமக்கு முந்தித் தந்திவத் திரளை சிந்தித்
துவமையில் சிவனைப் பில்லா வுமைகுரு குலங்கள் மற்றெண்
ணிவர்களை வணங்கி யின்பச் சிவஞான சித்திக கேற்ப
நவமுறு முரை யுரைப்பா முன்னுரை நலங்கொ ளாகவே.

திரு மறைஞானதேசிகா [சிரீ] (ஶ்ரீ) சிவக்கொழுந்தாசாரியா இவர்கள் சிவஞானசித்திக்குச செயத உரைகள் விரிந்தபடியினலே எழுவாய், பயனிலை, பொருட் புணர்ச்சி பொள்ளெனத் தோன்றுதாகிலும் தீவிர தீவிரதர புத்திமான்கள் (. . . . .) மந்தமதிகட்கு மயககம் போக்கும்பொருட்டுச் சுருக்கமாயோருரை சொல்லுவாம் என்பது இதனபொருள்.

இந்நூல் தடையின்றிப் பூரணமாகும்பொருட்டுக் கடவுள் வாழ்த்துச் சொல்லுகின்றாராய், முந்தி விநாயக வணககஞ் செய்கின்றார் :—

"ஒரு கோட்டன் (. . . . . . .) செய்யுந்தேவே."

ஒரு கோட்டன் - வாரணமென்று விசேடிக்கப் பட்டதாகையால் ஐங்கரத்தனாகியவாரணமென்று ரூபகம் பண்ணுக.

ஒரு கோட்டனென்பது - ஒற்றைக கொம்பையுடையனுகியும், இருசெவியன் எ-து, இரண்டு சன்னங்களையுடையானும், (. . . . .) செய்யுந்தேவே எ-து, தேவே செய்யுமெனமாறுக; தேவாந்தன்மையைச செய்யும். முன்னிருந்த சிவத்துவத்தைத தானே விளககி(த்) தனித்தனி அவர்களைச் சிவன்களாகத்தானேபண்ணும். முத்தியித்தியிரண்டு மோக்ஷ

என்றதனால் சிவத்வாபிவியத்தியும் சொல்லப்பட்டதறிக.

தாள்கள் எ-து, எழுவாய். ஓட்டுமெனபதும், செய்யுமெனபதும் பயனிலை.

End :

இம்முதற்சூ[று](ரு)ட்டாந்த காட்டாந்திகப் பொருளுணராது உரைக்கு மிடத்து உயிர்க்கு இயற்கையாய மலத்தின் மறைாத சிவத்துஞ் சிவமுறல் விளங்குமெனும் பொருள் விளங்கி[ச்சுத்](ற்று).

Colophon :

பன்னிரண்டாஞ் சூத்திரம் முற்றும். ஆக ௩௩௦ சுபக்ஷமுற்றும் சிவ[ஞ்]ஞான சித்தியார் சுபட்ச வியாக்கியானஞ் சம்பூ[ற்](ர)ணம்.

சாலிவாடிபுரம் ஞானப்பி[ர](ர)காச தேசிகர் சிவஞான சித்தியார்க்குச் செய்த உரைமுற்றும்.

து[று](ன்)முகி௵ வைகாசிமீ ௰ருவ. குருவார [ஞ](நா)ள் எழுதிமுடிந்தது முற்றும்.

(கு-பு.)—

இந்தப்பிரதியில் உள்ள உரை சாலிவாடிபுரம் ஞானப்பிரகாசர் இயற்றியது. இது, மறைஞான தேசிகர், சிவாக்கொழுந்தாசாரியார் (சிவாக்ரயோகியார்) உரைகளினும் சுருக்கமானது. இந்தப்பிரதியில் இச சுபக்கவுரை முற்று மிருக்கிறது.

No. 1264. சிவஞானசித்தியார் பரபக்கம், உரையுடன்.

ŚIVAÑĀNASITTIYĀR PARAPAKKAM WITH COMMENTARY.

Pages, 242. Lines, 10 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1260.

Complete.

This work condemns and criticizes fourteen philosophical systems of thought, such as Lōkāyata, Bauddha, Ārhata, Vaiśēṣika, Naiyāyika, Bhāṭāṭa, Prābhākara etc. By Aruṇandi Śivācāriyar. See also the

English portion under R. No. 307 of the Triennial Catalogue of MSS., Vol. II, Part 2. The author of the commentary is Ñānappirakāśar of Tiruvoṟṟiyūr whose disciple Tattuvappirakāśar has added a word for word meaning to this work.

Beginning :

சிவஞான சித்தியார் பரபக்கம் உரை.

"ஒரு கோட்டனிரு (. . . .) செய்யுந் தேவே."

எ-து. கங்கையாறுங் கோனுதலைத்தரும் அழகிய பிறையுட கொன்றை மாலையுமுடை த்தாய (. . . . .) வீட்டினபத்தையுமுண்டாக்கும் என்றவாறு.

கோடும் செவியும் மதமும் வாயும் கரமும் அஃறிணைப்பொருளாகிய யானையினது சினைப்பெயர்களாகிலும் (. . . . . .).

இறைவனையு மிறைவனுலியம்பு நூலும் என்பது, பரமேசரனையும் பரமேசரனுலருளிச செயயப்பட்ட வேதாகமும், ஈண்டளவும் எ-து, இவ்விடத் துண்டாகிய ஆளைவைப்பி[ற](ர)மாணமும், (. . . . . . .).

துகமேரவி[னனு](ந்நூ)விற் சொல்லுகிற்பாம் எ-து, குற்றந்தீர ஞான பாதத்தை உ;றிய இ[னனு](ந்நூ)விலே சொல்லக்கடவேமென்றவாறு.

End :

மைப்படி கண்டனண்டன் மலரடிவணங்கிடாயே எ-து, நீலகண்டனுகிய மேலானவனே க(ா)த்தா ; அவனது தாமரைமலர்போன்ற ஸ்ரீபாதத்தைச சரிை[த](ய) கிரியை யோக ஞானத்தாலே வணங்கி உன் பவத்தை நீக்கிக் கொள்வாயாக என்றவாறு.

Colophon :

ஆகச்செய்யுள் ௩௦௧.

தத்துவய வொற்றியூர ஞானப்பிரகாச னருட்
சித்திபட ருரையைச செப்பியபின்—வித்தகமாந்
தத்துவப்[பி]ரகாசன பதவிருத்தி தான் செய்தா
னுத்தமர் சித்தத் தொருமை யாய்.

சிவஞானசித்தியார் பரபக்கமுளை எழுதிமுடிந்தது.

(கு-பு.)—

இது, சிவஞானசித்தியாரின் பரபட்சமாகும்; இதில், உலகாயதன்முதல் பாஞ்சராத்திரி ஈறான பிறமதத்தார் பதினுல்வர் கொள்கைகளும், அக்கொள்கைகள் தவறென்பதும் விரிவாககூறப்பட்டுள்ளன. இந்தச் சாத்திரத்திற்குத் திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் பொழிப்புரையையும், அவர் சீடரான தத்துவப்பிரகாசர் பதவிருத்தியையும் இயற்றினுர்களென்று இறுதிச் செய்யுளால் தெரிகின்றது. இவ்வுரையும் நூலும் முற்றும் உள்ளன.

No. 1265. சிவஞானசித்தியார் பரபக்கம், உரையுடன்.

ŚIVAÑĀNAŚITTIYĀR PARAPAKKAM WITH COMMENTARY

Pages, 275. Lines, 9 on a page.

Begins on fol 206*a* of the MS. described under No. 1261.

Complete.

Same work as the above.

Colophon:

சிவஞானசித்தியார் பரபக்கவுரை யெழுதி முடிந்தது.

வடவாரணிய க்ஷேத்திரம் கா[ம்](ரக)கோட்கா மடாதிபதியாகிய சப்ப ராய தேசிகர் சிவஞ்ஞானசித்தியார.

(கு-பு.)—

இது முன் நம்பர் பிரதி போன்றது. இவ்வுரை இந்தப் பிரதியில் முற் றும் இருக்கிறது

No. 1266. சிவஞானசித்தியார் பரபக்கம், உரையுடன்.

ŚIVAÑĀNAŚITTIYĀR PARAPAKKAM WITH COMMENTARY.

Substance, palm leaf. Size, 16¾ × 1¼ inches. Pages, 268. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Almost complete.

Same text as the above but with a different commentary. From the stanzas in the beginning, the commentator's name is made out to be Ñānappirakāśar of Śanbai.

Beginning:

சிவஞானசித்தியார் பரபக்ஷம்.

பொன்னிரக் கடவுளும் புத்தேள் கோனும்
பன்னக முனியும் பரவிப போற்று
மொற்றி மாநகர் நற்றவர் தலைவனைப்
பாடி யாடும் படம்பகக நாயனைத்
தொழுது போற்றிப் பழுதக லும்படி
வல்விரு ணீக்கிய மாதவ னெ(ன)ன
நல்லருள் புரியு நந்தி கேசன்
ஓதிய போதத் துண்மை தன்னைச்
செந்தமிட் படுத்தித் திருநா மத்தாற்
(ற)ந்துரைத் தருளினன் றபோதனர் தமக்கு
வெண்[ணெ](ணெய்) மா[ன](ந)கர் மெய்கண்ட தேவ

னவனடி பரவித் தொழுதருள் பெற்றவன்
சிவஞான சித்தி யென்றுபெய ரிட்டுப்
பரமதந் தன்மத மென்றிரண் டாக்கித்
தாமுட னுரைத்தனன் சண்பையர் தலைவன்
கற்றவர் பரவுஞ் சேந்தையர் காவலன்
நற்றவ ரடிபணி ஞானப் பிரகாசன்
நன்னூ லுணர்ந்த ஞானிகண் முன்னே
யின்னூல் தன்னியல் பரமதந் தனக்கு
(உ)ரைதனை யெழுத வுன்னிய வதுதான்
குரைகட லேழு நீந்தி யேற
விரைபவ னொக்க விளங்குவ னின்றே.

* * * *

கெட்ட மதிகொண்டு கிளைக்கின்ற கௌசி தங்கள்
கிட்டவா வொட்டக் கொடுப்பனோ—முட்டவே
யீனச் சமைய விருளிரிய வோட்டுகின்ற
ஞானப் பிரகாசனல்லோ நான்.

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த னல்வா
 யைங் கரத்த னாறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
 தருமொருவா ரணத்தின் றாள்க
ளுருகோட்டன் பொடும் வணங்கி யோவாதே
 யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டு மயன்றிருமால் செல்வமுமொன்
 றோவென்னச் செய்யுந் தேவே.

என்பது. கங்கையாறும வளைவுபெற்ற பிறையுங் கொன்றையுமிருக்கப் படாநின்ற திருச்சடையை யுடைய பரமேசுவரன் (. . . . . . .) பிரம விஷ்ணுக்கள் பதங்களும் அற்பமென் றும்படி பதங்களைக் கொடுக்கும் விநாயகதேவனென்றவாறு.

கோட்டம் — வளைவு. தரு — பெற்ற. விநாயகன் — தனக்குநாயகனில் லாதவன்.

* * * *

இனிப் பரசமயிகளுடைய பிரமாணப் பிரமேயங்களும் அவர்களை நிரா கரிக்குமாறுஞ் சொல்லி அருளிச்செய்கிறார் :—

இந்திர புரோகித னியம்புமொரு நூலின்
றந்தர மெனுதறிவி னோடரு ளிலாமற்
சந்தனை புயத்துமணி மாலைக டயங்க
உந்தியுல கத்தளுல காயத னுரைப்பான்.

என்பது, இந்திர புரோகித னியம்புமொரு நூல் எ-து, இந்திரனுடைய புரோகிதனாகிய பிரகஸ்பதி பகவா[ன்](னாற்) சொல்லப்பட்ட ஒரு நூலாகிய சாருவாக சாத்திரமானது, இன்றந்தரமெனுதறிவினோடருளிலாமல் எ-து., இப்பொழுது பிழையின்பொருட்டென்னுது அறிவும் அருளுமில்லாமல்,

சந்தனை (. . . . . . .) உரைப்பான் எ-து, சந்தனம் பொருந்தப்பட்ட தோள்களின் கண்ணே மணமலியப்பட்ட மாலைகள் விளங்கக் கிளப்பப்பட்டு நின்ற உலகத்துள்ளே உலகாயதனுகிய சாருவாகனை சொல்லுவான் எ-று.

இதனுற் சொல்லியது பிரகஸ்பதி பகவான் இந்திரன் தபசிலே புரியத் தேட அவனை மயக்கி விஷயத்திலே விழுவித்த சாத்திரம் இது; மதனசாத்திரம்; என்போலவென்னில்: அருச்சுனனை தபசிலே புரியத்தேட வாசுதேவன் தேரிலிருந்து ஸ்ரீகிதை என்னும் சாத்திரத்தாலே மயக்கிக் கொல்லச் சொன்னதற்கு ஒக்குமெனக்கொள்க.

இதற்கு ஏதுவாமோவெனனில் புண்ணியபாவமும் பிரபஞ்சத்திற் செபத்தியான அனுட்டானம் பொயயென்று சதாசார விரோதஞ் சொல்லுதலாற் சாம[ந]னவேதுவாகக் கொள்க. (க)

End:

சூலிகா ணிறைமா வல்லன் சூலியைத் தொழுந் துருவாசன்
மாலினை மார்பி திப்பத் திருமறு மாபா னுகி
நூலினா மார்ப னேனருள் பட்[ட](டி)டஞ் சுத்த மென்று
பாலினுர் கடலா னங்கே பரிவொடு திருவை வைத்தான்.

எ-து. சூலத்தையுடையவனை காண க(ர்)த்தா; . . . சூலப்படையானை . . . . . துருவாச மகாமுனி புருஷோத்தமனை மார்பை மிதிப்ப திருமறுமாாபனுனன்; நூலா[ர்ப்](ற்)பட்ட மாாபையுடையவன் வலியுடைத்தாகிய ஸ்ரீபாதம் பட்ட இடம சுததமென்று பாற்கடலில் வழித்துறங்குமபரம புருடன் பரிவுடனே இலட்சுமியை வைத்தான் எ-று.

இதனுற் சிவபத்தாகள் ஸ்ரீபாதம் பட்ட இடம் சுத்தமென்று இலட்சுமி இரு(ந்தா)ளெனபது கருத்து. (உ௯)

தவகுண னுய் மால்சென்று தீவியைச் சக்கரத்தா
லவகுணஞ் செய்தன் றேடப் பிருகுவந் தவனைப் பார்த்துச
சிவனல தறியேனுகி விதிசெய்தோனை செறிக பத்துப்
பவமென மொழிய மாலும் பயபபட்டப பதறி வீழ்ந்தான்

* * * *

(கு-பு.)—

இந்தப் பிரதியில் உள்ள உரை 1264-நம்பர் பிரதியினும் வேறுனது; சண்பைநகரிலிருநத செந்தையர் காவலனுகிய ஞானப்பிரகாசனென்னும் பெரியார் இயற்றியதென்று முதலில் உள்ள செய்யுளால் தெரிகின்றது. இதன் இறுதியில் 2 பாடல்கள் மூலமுமுரையும் இல்லாமலும் ஒரு பாடல் உரை மட்டுமில்லாமலும் இருக்கிறது.

No. 1267. சிவஞானசித்தியாருரை.

ŚIVAÑĀNAŚITTIYĀRURAI.

Substance, paper. Size, 10¾ × 8½ inches. Pages, 102. Lines, 20 on a page. Character, Tamil. Condition, good. Appearance, new.

Incomplete.

Begins on fol. 1*a*. The other works herein are Gurunāthan-Vijñāpanam 105*a*. Sinnappa Nāyakkan Vamśāvali 113*a*.

Contains from the beginning up to the portion condemning the system of Kumārila Bhaṭṭa.

Almost the same as the above but with differences here and there.

Beginning:

சிவஞானசித்தியாருரை.

ஆதிகாலத்திலே பரமே[ஸ்ப](சுவ)ரன் நந்தி தேவர்கட்கு(க்) கிரந்தவாக்கியமாகச் சொன்ன[யி]'இ)ந்த(த்) தத்துவஞான சாஸ்திரத்தை(ப்) பின்பு வெண்[ணெ](ணெய)நல்லூர் மெய்[க]கண்டதேவன் தமிழிலே சொன்னவிந்த நூலை(ப்) பின்பு (. . . . .) சிவஞானசித்தி யென்கிற பெயரினாலே சொன்ன சண்பைநகரத்திலே யிருக்கப்பட்ட ஞானப்பிரகாசன் இந்த நூலுக்கு உரை யெழுதுகிறது எப்படியென்றால் . . . .) ஒளிபரந்த திருவம்பலத்திலே திருத்தம் பயிலாநிற்கிற பரமே[ஸ்ப](சுவ)ரனுடைய பாததாமரைகளை(ச)சிரசிலே வைத்து(த்)தளராத பெரிய வுறவினை மிகவுமுண்டாக்கா நிற்போம். (. . . . .) பூர்வத்திலே பரமே[ஸ்ப](சுவ)ரன் ஸ்ரீநந்திதேவர்க்கு(ச) சொன்னபொருள் சுருக்கி நந்திதேவர் சன[ாக்](த்)குமார பகவானுக்கு(ப்)பன்னிரண்டு சூத்திரத்தாலே சிவஞானபோதமென்று (அ)ருளிச்செய்தார்; அதனைக் கேள்விப்பட்ட திருவெண்[ணெ](ணெய்)நல்லூர மெய்கண்டதேவநாயனார் சத்தியஞான[ெ]தரிசினிகள், பரஞ்சோதிமாமுனிகள் சொல்லக்கேட்டு(ச்) சிவஞானபோதமென்கிற இத்தை(க) குற்றமில்லாத தமிழாகச்செய்து, சிவஞானசித்தியென்னும் பெயரினால் சொல்லாநின்றேனென்றார்; ஞானப்பிரகாசன (. . . . .) இனிப் பரச[ை]மயங்களினுடைய பிரமாணங்களை நிராகரிக்கிற விதம் சொல்லுகிறார் :—

முதல் சார்வாகன் மதம் இந்திரனுடைய (கு)ருவாகிய பி[ர](ரு)கஸ்பதிபகவா[ன்](னால்) சொல்லப்பட்ட நூலாகிய சார்வாகன் சாஸ்திரமானது பிழையென்று நினையாமல்,

End:

ப(ா)ட்டாசாரியன் மறுதலை.

வேதமானது சுயம்புவெனச் சொன்னவற்றால் வேறிடத்திலுங் காட்டப் பி[ற](ர)மாணமுண்டாகில் நீ சொல்லிககாண்; இங்கு மகாபாரதமானது போலக் காணப்படாநின்றது (. . . . .) விஞ்ஞாநேயெனுந்தாதுவால்வேதத்தையே குறித்து நிற்குமெனக்கொள்க.

(கு-பு.)—

இது முன்பிரதியில் உள்ள உரையைப் பெரும்பாலும் ஒத்துள்ளது; ஆயினும், உரைநடையிற் சிற்சில மாறுதல்கள் காணப்படுகின்றன. நூலின் முதலிலிருந்து பாட்டாசாரியன் மறுதலைவரையில் பொழிப்புரைமட்டுமே

No. 1268. சிவஞானசித்தியாருரை.

ŚIVANĀNAŚITTIYĀRURAI.

Substance, paper. Size, 13¼ × 8¼ inches. Pages, 96. Lines, 36 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, very old.

Incomplete.

This MS. seems to be the original of that described under the previous number.

(கு-பு.)—

இந்தப் பிரதி முன்நம்பர் பிரதிக்கு மூலப்பிரதி என்று தோன்றுகிறது. இது மிகவும் பழையதாய்ச் சிதைந்துமிருக்கிறது. பாட்டாசாரியன் மறுதலை வரையுமே

No. 1269. சிவஞானதீபம்.

ŚIVAÑĀNADĪPAM.

Pages, 77. Lines, 7 on a page

Begins on fol. 241*a* of the MS. described under No. 1060.

Complete.

A treatise on Śaiva religion describing the nature of the 96 Tattvas and the grace of Pati *i.e.* Lord.

Beginning:

விரைமருவுங் கமலமலர் விரிஞ்சன் வாழ்வும்
விண்ணவர்கோ னரும்பதமு மிக்கோர் வாழ்வுந்
திரைமருவு நதிபதியிற் றிருவின் கே[ழ்](ள்)வன்
செல்வமுமா ரூதபெருஞ் சி[ற்றி](த்தி)யாவும்

பரையுதவுங் கரிமுகவன் செம்பொற் பாதம்
பற்றாக நம்போதப் பற்று நீங்கி
வரைவறுமன் பினிற்றொழுமெய் யடியார் பாதம்
வணங்குமடி யாரடியார் மதித்தி டாரே.

சீராரக் காரமுதலாங் கலைக ளியாவுஞ்
சிவஞ் சத்தி நுதலியதத் துவமியாவு
மோராருஞ் சராசரமா முயிரி யாவு
மெண்ணரிய புவனமுமற் றியாவு மெல்லா

மாராத கருணையினு லாக்கி நோக்கி
யழித்திரவி விழிநறையு மலரும் போலப்
பேராம லுயிர்க் குயிராய் மன்று ளாடும்
பெருமானை யவனருளாற் பேணு வோமே. (க)

* * * *

பூவுலகின் முழுதுமொருங் குணர்ந்த [ன](ந)ல்லோர்
புகன்றருளு ஞான[னு](நூ)ற் றிறமு [ணே](நோ)க்கி
நாவலர்முன் னருந்தமிழின் செய்யு ணீதி
நலமுணரா வினையேனு நகைநா ணுமல்
மேவரிய சிவஞான [த்]தீப மென்றே
விளம்பியது வளர்ந்தருபால் வேலை தன்னைத்
தேவர்கடைந் திடவெழுந்த வமுதம் போலச்
சிறுபுனலைக் குடைந்த[னு](நு)ரை திரட்டு[ம்வா](மா)றே. (௪)

மதியிரவி பொருந்துநிலை யிருந்தக் கூறில்
மனமதியா மனந்தனல்வேர் கொண்டவாயு
முதிரினறு மிதுமகியின் காரங்க மாக
மொழிந்திடுவர் மூலவளி நிறனு மீதா
மதியிலகு கலைகளிரு பக்க மாக
மரித்தொங்கி யுதிப்பதமிவ வளியின பாலாங்
கதிநெறுவு குணமாதி கரண மெல்லாங்
கருதியகாற் றினிலடங்கி யுதிக்கு மாபோல். (௧௭)

End

அமலனருள் ஞான முயிர்க் குயிராய் நின்றே
யனைத்தினையு மியற்றிடுமற் புதமோ ராமற்
றமசரிவா லெங்கிறந்த சமய பேதத்
த[ற்](ர்க்)கபோ டுத்தரவாதஞ் சாதிப் போர்க்குஞ்
சிமயவரை தரையுயர விண்கெடுத்துத் தேருஞ்
சித[ை]டயர்க்குந் தினகரனைப் பகலிற் றேடுந்
திமிரமட வருக்குமுயி ரிலையென் றோதுந்
தீமையர்க்கு மொப்புலகிற் செப்பொ ணாதே. (௧௭௨)

கருமுகி னிகரன குழன்மட வரலியர்
களபமென் னகிலினை கலவாரே
மருமல ரயனுட னரிமக பதிமிக
மகிழ்பத மனமுற மதியாரே
ஒருவுத விருவினை விதிமதி விபரித
முறுபிற வியனெறி யுழலாரே
அறுமறை முடிவினி னடமுடை யவனிணை
யடிதொழு மடியவ ரடியாரே. (௧௭௩)

(கு-பு.)—

இது, சைவமதவிஷயமானதென்று தோற்றுகிறது. தத்துவங்கள் தொண்ணூற்றாறின விரிவையும் பதியின் கருணை முதலியவற்றையும் கூறுவது. நூலாசிரியர் பெயர் முதலியன தக்க ஆதாரத்துடன் கிடைக்காமையால் இங்குக் குறிக்கப்படவில்லை. இந்தப் பிரதியில் இந்நூல் பூர்த்தியாக இருக்கிறது.

No. 1270. சிவஞானதீபம்.
ŚIVAÑĀNADĪPAM.

Page, 585. Lines, 7 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 325.

Complete.

Same work as the above.

Colophon:

சிவஞான தீபம் எழுதி முடிந்தது. முற்றும்.

ஸ்ரீ குருபாத தேசிகர் திருவடி வாழ்க.

(க-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் பூர்ணமாக இருக்

No. 1271. சிவஞானபோதம்.
ŚIVAÑĀNABŌDAM.

Pages, 4. Lines, 11 on a page.

Begins on fol. 106*a* of the MS. described under No. 1224.

Complete.

Same text as that described under No. 1272 *sequent* with commentary.

Beginning:

கல்லா னிழலமலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே.

* * * *

பாயிர முற்றிறறு.
இனி, அவையடக்கம்.
வெண்பா.

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வா
ரெம்மை யுடைமை யெமையிகழார்—தம்மை
யுணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்

அவையடக்கம் முற்றிற்று.

அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதா
மந்தமாதி யென்மனார் புலவர். (க)

End:

செம்மலர்நோன்றாள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ

மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலையந் தானு மரயனனத் தொழுமே. (கஉ)

Colophon :

பாயிரமுதலாகச் சூத்திரம் பனிரண்டு முற்றிற்று.

(கு-பு.)—

இதில் மெய்கண்ட தேவர் செய்த சூத்திரம் பன்னிரண்டும், கடவுள் வண க்கமும் பாயிரமும் அவையடக்கமுமே உள்ளன.

No. 1272. சிவஞானபோதம், உரையுடன். ŚIVAÑĀNABŌDAM, WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 9 × 1⅜ inches. Pages, 94. Lines, 9 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Begins on fol. 247*a*. The other works herein are Daśakāriyak-karuttu 1*a*, Daśakāriyam of Ambalavāṇa 10*a*, Daśakāriyam of Dakṣiṇāmūrti dēśikar 18*a*, Daśakāriyam of Tiruvannāmalai Iyer 23*a*. Tattuvanijānubhōgasāram 28*a*, Śivañānabōdhaccūrnikaikōttu 294*a*, Śivañānābōdhakkaruttu 295*b*, Śivapprakāśavurai 296*a*. Tirumēṟṟaḷi-tōttiram 422*a*, Darumēśartōttiram 423*a*, Kāyārōhaṇēśvaratōttiram 425*a*, Dakṣiṇāmūrttitōttiram of Tāyumānavār 426*a*, Kacciyappasvāmi, tōttiram 431, Ānandarudrēśarkīrttanai 434*a*, Kacchapēśartōttiram 435*a*, Periyanāyakiyammaitudi 438*a*. Śivāñānamunivartudi 440*a*, Cidambarasvāmitudi 440*b*, Śiṟṟambalasvāmivākkiyam 442*a*.

Complete.

This work is considered to be the foremost in importance among the 14 works on the Śaiva Siddhānta. It is a Tamil rendering of the Śivañānabōdam which contains the essence of all Śaivāgamas and which consists of 12 stanzas known as Sūtrās in the Pāśavimōcanapaṭala of the sanskrit Rauravāgama. The Tamil rendering also contains 12 Sūtras and is said to have been made by Meykaṇḍadēvar who was named Śvētavanapperumāḷ in his early days and was considered to be Śiva himself born as the son of Accutapperumāḷ of Tiruppeṇṇākaṭam. The author was named Mēykaṇḍadēvar by his Guru Parañjōtimunivar after initiation into the principles of the Śaivasiddhānta. The author has also written a commentary named Vārttika on his Tamil rendering. The author of the commentary described herein is not known.

Beginning :

சிவஞானபோத முரை.

கல்லா னிழன்மலை
வில்லா ரருளிய

பொல்லா ரிணைமலர்

நல்லார் புனைவரே.

எ-து, கல்லால் நிழலின்கீழே எழுந்தருளியிருந்து அகத்தியர் புலத்தியர் சனகர் சனற்குமாரர் இவர்கள் நால்வருக்குந் தர்மார்த்த காமமோட்சங்களை யருளிச்செய்து மகாமேருபருவதத்தை வில்லாக வளைத்து, துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலனம் பண்ணுகின்ற மகாதேவர் கொடுக்கப்பட்ட பொல்லாத பிள்ளையாருடைய இரண்டு சிபாதங்களையும் மலந்தீர்ந்தறிவால் மிக்கசாதர் [க்]கள் சூடாநிற்பர்கள்; எனவே, யாமும் அது சூடுவோமென்பது கருத்து.

இது முகுர்த்த முணர்த்து மு(றை)றமை யென்றறிக.

*   *   *   *

அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்

றோற்றிய திதியே யொடுங்கி மலத் துளதா

மந்தமாதி யென்மனார் புலவர்.

எ - து, சூத்திரம் எனனுதலிற்றோவெனின், சங்கார காரணனாயுள்ள முதலே முதலாக உடைத்து இவ்வுலகவென்பதுணர்த்ததனுதலிற்று.

இதன் பொழிப்புரைத்துக்கொள்க.

ஈண்டுத் தோற்றமுமீறும் உள்ளதன்பாலே கிடத்தலின, உளதாய ஒருவன ஒருத்தி ஒன்றென்று சுட்டப்பட்ட பிரவஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத் தென்றது.

எ-து, ஒருவனென்றும் ஒருத்தியென்றும் ஒன்றென்றும் சுட்டப்பட்டவே யாகிய பிரவஞ்சத்துக்கு ஒரு கர்த்தா உண்டு; கர்த்தா உண்டென்று சொன்னது எந்த ஏதுவினாலே சிருட்டிக்கப்பட்டுந் திதிக்கப்பட்டுஞ் சங்காரப்பட்டும் வருகையினாலே. இந்த ஏதுவினாலே ஒரு கர்த்தா உண்டென்று சொன்னீர் கர்த்தா வேண்டுவதில்லை; நாலுபூதங்களிடமாகத் தோன்றி நின்றழியும்; நீ நித்தியமென்றபூதங்கள் தோனறித் திதிப்பட்டுநிற்கிற முறைமையினாலே சங்கார கர்த்தாவினாலே சங்காரப்பட்டு மீள உண்டாவானேன்; மலந்தீர்ந் தொடுங்காதாகையினாலே. மலந்தீர்ந் தொடுங்குவது காரணமாகச் சங்கார கர்த்தாவினாலே சங்காரப்பட்டு மீளவும் உண்டாம். சிருட்டி கர்த்தாவும் (. . . . .) இது வென்று சுட்டி யறியப்படாத சங்காரகர்த்தாவினாலே அந்தப்பிரபஞ்சம் சங்காரமாகையினாலே இதுவென்று சுட்டி யறியப் படாத சங்காரகர்த்தாவே அந்தப் பிரவஞசத்துக்கு முதனமை. அந்தப் பிர வஞ்சத்தொடுங்கூடிச் சங்காரப்படாத ஆன்மாவென்று பலபிரகாரத்திலும் அடிமையாகும்; அனுதியிலே அந்தச் சங்கார கர்த்தாவுக்கு. எ-று.

முதற்சூத்திர முற்றும்.

End:

செம்மலர் நோன்று[ள்ச்](ட்)சேர லொட்டா

வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ

மாலற நேய மலிந்தவர் வேடமு

மாலயந் தானு மரனெனத் தொழுமே.

எ-து, சிவந்த தாமரைமலர்போன்ற வலிய தாளிணையைப்போல் மேகத் திலே மறையப்பட்டு மேகமானது விட்டு நீங்கின இடத்து ஆதித்தப் பிரகாச

மானது (. . . . .) சிவனடியாரையும் சிவலிங்கப்பெருமான் நாயனாரையும் கர்த்தாவென்றே வழிபாடு செய்வாயாக. எ-று.

என்பது சூத்திரம் என்னுதலிற்றோவெனின், அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்திதனாய்க்கண்டு வழிபடுமாறுணர் (. . . .) ற்று.

ஈண்டு ஆணவம் மாயைக் காமியமென்னும் மலங்களை விடுக என்றது, அவைதாம் ஞானத்தையுணாத்தாது அஞ்ஞானத்தையுணர்த்தும் ஆதலான.

* * * *

ஆணவமாயை காமியமென னும் மூன்று மலங்களையும் நீக்கி இந்த நூலினாலே ஞானத்தை யனுக்கிரகம் பண்ணி மோட்சத்தை யடைவிப்பர். எ-று.

Colophon :

எந்தை சனற்குமர னே[ற்றி](த்தி)த் தொழவியல்பா
னந்தி யுரைத்தருளு ஞானநூல் - சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் றாரணியோர் தாமுணர
வேதுதிருட் டாந்தத்தா லின்று

எ-து, அடியேனுடைய சுவாமியாகிய சனற்குமார பகவான் தோத்திரம் பண்ணி வழிபாடு செய்ய நந்திகேசுவர நாயனா[ர்](ரா)ல் அனுக்கிரகம் பண்ணப்படாநின்ற சிவஞானபோதமென்னும வடமொழியை மெய்கண்ட சிவாசாரியார் தமது திரு[வி](வு)ளத்திலே யடைத்தருளித் தமிழாக அருளிச்செய்தனர்; பூமியிலே உண்டாகிய ஆத்மாக்கள் அறிந்து மோட்சத்தை யடையும்பொருட்டு மூன்று எதுககளினாலேயும் நான்கு உவமைகளினாலேயும் இப்போதென்றவாறு. (க)

Colophon :

பன்னிரண்டாஞ் சூத்திர முற்றும்.

சிவஞானபோதத்தைத் தெரிசித்தபேருக்கும் பரிசித்தபேருக்கும் படித்தபேருக்கும் கேட்டபேருக்கும் மோட்சஞ் சத்தியமாய் உண்டாமென்று நந்திகேசுரர் திருவுளம்பற்றினர். சிவஞானபோத முற்றும்.

சாதாரணவருஷம் [அற்](ஐப்)பசிமீ" உகஉ குருவாரம் சஷ்டி உத்தராடம் இந்த நாளிலே மத்தூர் முருகப்பமுதலியார் குமாரன் சரவண முதலி சிவஞானபோதம் உரை எழுதி நிறைந்தது.

அமராபதி கையெழுத்து.

(கு-பு.)—

இந்நூல் சைவசித்தாந்தசாத்திரம் பதினான்கனுள் முதன்மையானது; வடமொழி ரௌரவாகமத்தில் பாசவிமோசனப் படலத்தில் சகலாகமசாரமாய் விளங்குகின்ற பன்னிரண்டு சூத்திரங்களால் ஆகிய சிவஞானபோதம் என்பதன் மொழிபெயர்ப்பாக உள்ளது.

நூலாசிரியர், திருப்பெண்ணாகடத்தில் இருந்த அச்சுத களப்பாளரென்பவர் செய்த தவத்தின் பலனாகச் சிவபிரானருளால் அவருக்குப் புத்திரராக அவதரித்து, சுவேதவனப்பெருமாள் என்னும் பெயர்பெற்று இளமைப்பருவத்

தில் பரஞ்சோதி முனிவரது அனுக்கிரகத்தால் சிவஞானத்தையும், மெய் கண்ட தேவரென்ற தீக்ஷாநாமத்தையும் பெற்றுத் தமிழில் இந்நூலை மொழிபெயர்த்ததாகக் கூறுவர்.

இந்நூல் பன்னிரண்டு சூத்திரங்களாலாயது; இச்சூத்திரங்களுக்குப் பொழிப்புரையாகிய வார்த்திகமுதலியனவும் இவர் இயற்றியதென்பர்.

இவ்வரிய நூலுக்குப் பல பெரியோர் உரை இயற்றி இருக்கின்றனர் என்பர்; அவற்றுள் இவ்வுரையை இயற்றியவர் பெயர் காலமுதலியன ஒருவாற்றானும் விளங்கவில்லை. இவ்வுரையாளர் இயற்றிய விரிவான உரையுடன், கருத்துரையும், பொழிப்புரையும், உதாரணச் செய்யுட்களும் பூர்த்தியாக உள்ளன.

No. 1273. சிவஞானபோதம், உரையுடன்.

ŚIVAÑĀNABŌDAM WITH COMMENTARY.

Pages, 52. Lines, 13 on a page.

Begins on fol. 8*a* of the MS. described under No. 1232.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் நம்பர் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இவ்வுரைநூல் முற்றுமிருக்கிறது.

No. 1274. சிவஞானபோதம், உரையுடன்.

ŚIVAÑĀNABŌDAM WITH COMMENTARY.

Pages, 17. Lines, 11 on a page.

Begins on fol. 108*a* of the MS. described under No. 1224.

Complete.

Same text as that described above.

The commentary is different from and shorter than that described under the previous number. The name of the commentator is not given.

Beginning:

"அவனவளது (. . . . . . .) புலவர்."

எ-து, அவனவளதுவென்பது - ஒருவனென்றும் ஒருத்தியென்றும் அதுவென்றும் சுட்டியறியப்பட்ட பிரவஞ்சத்துக்கு ஒரு கர்த்தா உண்டென்றுசொன்னது எந்த ஏதுவினாலே, மூவினையிலென்பது - சிருஷ்டிப்பட்டுந் திதிப்பட்டுஞ் சங்காரப்பட்டும் வருகையினாலே, க(ர்)த்தா உண்டென்று சொன்னது; கர்த்தா வேண்டுவதில்லை நாலுபூதங்களிடமாகத்தானே தோன்றிநின்றழியு

மென்னில், தோற்றிய திதி எ - து, அனித்தியமென்ற பிரவஞ்சந்தோன்றித் திதிப்பட்டு திற்கிற முறைமையினுலே, ஒடுங்கியுளதாமென்பது, சங்கார கர்த் தாவினுலே சங்காரப்பட்டு மீளவுமுண்டாம் (. . . . . . .) அனித்தம் அந்தத் தொழிலே யாதொரு கடவுள் செய்யாநிற்கிருரோ அவரே சகத்துக்கு முதன்மையான கர்த்தா என்று அறிவான் மிக்க நாதர்கள் திருவுளம்பற்றி னுர்கள். (க)

End:

"செம்மலர்நோன்ருள் (. . . . . . .) தொழுமே."

இ-ள். செம்மலர்நோன்ருள் எ-து, [செ](சி)வந்த தாமரைமலர்போ[ந்த](ன்ற) வலியதாளிணை, சேரவொட்டாதென்பது, (. . . . . .) அரனெ னத்தொழுமே எ - து, கர்த்தாவெனறே வழிபாடுபெண்ணுவார் எ - து. (கஉ)

இந்தச்சூத்திரம் என்புகலிற்ருெவெ(னின்) மும்மலங்களேயுங்களேக ; சிவஞானிகளுடனேகூடுக , சிவஞானியையும் சிவலிங்கத்தையும் சிவனெ னவே தேறி வழிபடுக ; வழிபடாமையை ஒழிக.

(கு-பு.)—

இது முன் பிரதியில் உள்ள உரையினும் சுருக்கமானது ; இவ்வுரையை இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1275. சிவஞானபோதம், உரையுடன்.

ŚIVAÑĀNABŌDAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. 11 × $1\frac{3}{8}$ inches. Pages, 178. Lines, 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1*a*. The other works herein are Śivañānabōdam Cūrṇikaikkottu, 90*a*. Śivañānabōdam Śūttirakkaruttu 92*a*.

Complete.

The commentary found herein is different from the commentary described under the previous numbers. The name of the commentator is not given.

Beginning:

சிவஞானபோதவுரை.

"கல்லாணிழல்மலே . . . . புனேவரே."

எ - து, கயிலாயத்திற் கல்லால் நீழலின்கீழ்த் தெட்சிணுமூர்த்தமாய் எழு ந்தருளியிருந்து சனகாதி நால்வர்களுக்கும் த[ற்](ர்)மா[ற்](ர்த்)தகாமமோ க்ஷமும் (. . . .) சிரசின்மேலே சூடிக்கொள்வர்கள் என்றவாறு.

யாமும் அது செய்வோமென்பது கருத்து.

* * * *

இனி முதற்சூத்திரம் வருமாறு.

"அவனவ ளதுவெனு மவை (. . . .) புலவர்."

அவனவ (. . . .) மூவினைமையில் எ - து, அவனென்றும் அவளென்றும் அதுவென்றும் உயர்திணையஃறிணையாய்ப் பிரபஞ்சத்தில் தோற்றப்பட்டவையெல்லாம் முத்தொழிலாய்ச் சிருட்டிப்பட்டும் திதிப்பட்டும் சங்காரப்பட்டும் வருகிறவேதுவினாலே, (. . . . .) அந்தமாதி என்மனார் புலவர் எ - து, அந்தத்திலே சங்காரத்தொழிலைச் செய்கிற கர்த்தாவே முத்தொழிலையுமுடைய முதல்வனென்று கூறுவர்; அறிவான்மிக்க ஞாதாக்களென்றவாறு.

என்பதுசூத்திரம் என்னுதலிற்றோவெனின் சங்காரகாரணனாயுள்ள முதலே முதலாகவுடைத்து இவ்வுலகம் என்பதுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொழிப்புரைத்துக்கொள்க என்பது. (. . . .) இதற்குச் சூரணையும் ஏதுவும் உதாரணமும் வருமாறு:—

உலகா[யு](ய)தன் பிரத்தியக்ஷக்காட்சிமட்டும்கொண்டு உலகம் நித்தியமென்று சொல்ல, அவனை மறுத்துணர்த்துதற்கு முதற்சூரணை வருமாறு.

ஈண்டுத் தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலினுளதாயொருவனொருத்தியொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்தென்றது.

End:

இந்தச் சிவஞானபோதமென்னும் மேலான உண்மை[க்கிய](ஞ)ானசாத்திரம் பூமியிலுள்ளவா[ற்](ன்)மாக்களையிரக்ஷிக்கவந்த வழியுணர்த்துகிறார். உ · ம்.

எந்தை சனற்குமர னே[ற்றி](த்தி)த் தொழவியல்பா
னந்தி யுரைத்தருளு ஞானநூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான மெய்கண்டான் தாரணியோர் தாமுணர
வேதுதிருட் டாந்தத்தா லின்று.

எ - து, கயிலாயத்திலே எந்தையாகிய சனற்குமரபகவான் துதித்து வணங்கிக் கே[ழ்க்](ட்)க இயல்பாகிய கி[று](ரு)பையினாலே நந்திகேசுரசுவாமி அனுக்கிரகம்பண்ணின சிவஞானபோதம் என்னும் சாத்திரக்கிரந்தத்தை (. . . . . . .) மெய்கண்ட சுவாமிகள் கேட்டுணர்ந்து அந்த வடமொழியைத் தமிழ்நூலாகச்செய்து (. . .) ஏதுவினாலுந் திருட்டாந்தத்தினாலும் அ[ற்](ர்த்)தந்தெரியவிளக்கி அனுக்கிரகம்பண்ணினதென்றறிவாயாகவென்றவாறு. (௫)

Colophon:

இந்தச் சாம்பிரதாயவுரை திருவாவடுதுறை ஞானதேசிகரனுக்கிரகம் பெற்ற பேருக்கேயன்றி மற்றப்பேருக்கு மோட்சங்கொடாது.

* *

மோக்ஷார்த்திகளெல்லாம் திருவாவடுதுறை ஞானதேசிகர்க்கு அ[டு](டி)மைப்பட்டுக் கேட்டறிந்து சிந்திக்கவேண்டியது.

* * * *

சிவஞானபோதவுரை முற்றும்.

Colophon :

பி[ழமா](ரமோ)தூதஹூ புரட்டாசிமீ ௨௰௨ வெள்ளிக்கிழமை மூல நக்ஷத்திரம் (இ)ந்த(ச) சுபதினத்தில் சொ[ற](ர்க்)புரவாஸினத்துக் கந்தப்பதம்பிரான சிவஞானபோதம் எழுதிநிறைந்தது.

(கு-பு.)—

இவ்வுரை முன் நம்பர்களில் வந்துள்ள உரைகளினும் வேறானது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் முற்றும் இருக்

No. 1276. சிவஞானபோதம், உரையுடன்.

ŚIVAÑĀNABŌDAM WITH COMMENTARY.

Pages, 52. Lines, 18 on a page.

Begins on fol. 21*a* of the MS. described under No. 1262.

Complete.

Same work as the above.

(ரு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இவ்வுரை முற்றும் இருக்கிறது. மிகப்பழையது.

No. 1277. சிவஞானபோதம், கருத்துரை பொழிப்புரைகளுடன்.

ŚIVAÑĀNABŌDAM WITH COMMENTARY.

Pages, 23. Lines, 12 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1226.

Complete.

Same text as the above but each Sūtram is accompanied with its purport and with meaning containing also authoritative quotations.

Beginning:

மலர்தலை யுலகின் மாயிருடியப்
பலர்புகழ் ஞாயிறு படரி னல்ல[து](தைக்)
காண்டல் செல்லாக் கண்போ லீண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகெண் ணிருடீர்ந்

தருந்துயர்க் குரம்பையி னின்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
வுயர்சிவ ஞான போத முரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ வெண்ணைச் சுவேததவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே.
என்பதுபாயிரம்

அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனார் புலவர்

என்பதுசூத்திரம் என்னுதலிற்றோவெனின் சங்காரகாரணனையுள்ள முதலே முதலாகவுடைத்து இவ்வுலகமென்பதுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொழிப்புரைத்துக்கொள்க.

ஈண்டுத் தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின் உளதாயொருவ னொருத்தியொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தித் திதி நாசமு டைத்தென்றது. உதாரணம்:—

பூதாதி யீறு முதலுந் துணையாகப்
பேதாய்[த்] திதியாகும் பெற்றிமையின்—ஓதாரோ
ஒன்றொன் றிற் றோன்றி யுளதா யி[ரக்](றக்)கண்டு
மன்றென்று முண்டென்ன வாய்ந்து. (க)

End:

எந்தை சனற்குமர னேத்தித் தொழவியல்பால்
நந்தி யுரைத்தருளு ஞான நூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டன் றாரணியோர் தாமுணர
வே[ந்]துதிருட் டாந்தத்தா லின்று.

சிவஞானபோதம் முற்றும்.

Colophon:

மூன்றுமலங் கெடுத்து மூலமாம் பொருளைத்
தோன்ற வருளுந்தன் றொண்டர்க்கு—(கான்ற)மைந்தோர்
கைகண்ட தன்றே கடன்ஞாலத் தெப்பொருட்கும்
மெய்கண்டதேவ(ன்மலர்)த்தாள்.

அபிஷேக ஞானப்ரகாசன் திருவடித்தாமலரகளிலே சரணம்.

(கு-பு.)—

இது சைவசித்தாந்தசாஸ்திரம் பதினன்கனுள் ஒன்று. கருத்துரை, பொழிப்புரை, உதாரணச்செய்யுட்களுடன இருக்கிறது. ஏடுகள் மிகவும் சிதைந்துள்ளன; இவை மெய்கண்டதேவர் இயற்றியன.

No. 1278. சிவஞானபோதச் சூர்ணிகைக்கொத்து. ŚIVAÑĀNABŌDACCŪRṆIKAIKKOTTU.

Substance, palm-leaf. Size, $10\frac{3}{8} \times 1\frac{1}{8}$ inches. Pages, 5. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1*a*. The other works herein are Tiruvaruṭpayan with commentary 5*a*, Tiruavaruṭpayancintanai 56*a*.

Complete.

Gives concisely the purport of the teachings of the 12 Śūtrams of the Śivañānabōdam in 39 sentences called technically Uraiccoyyuḷ. The author is Pollāvināyakar of Tiruveṇṇainallūr.

Beginning:

[சுவற](சூர்)ணிகைக கொத்து.

முதற் சூத்திரத்தில்.

(க) சகம் பிறப்பிருப்பிறப்பாகிய முத்தொழிலையுடையது.

(உ) அது அரனாலே உடையது.

(ங) மற்றிருவரும் மு[ற்றெ](த்தொ)ழிற்படுவோர்கள்.

End:

கஉ-ல்.

(க) மும்மலங்களையுங்களைக.

(உ) சிவஞானிகளுடனே கூடுக.

(ங) சிவஞானிகளையுஞ் சிவலிங்கத்தையும் சிவனெனவேதேறிவழிபடுக.

(ச) வழிபடாமையை ஓழிக.

Colophon:

[சுவற](சூர்)ணிகைக கொத்து முற்றும்.

(கு-பு.)—

இது, மெய்கண்டதேவரியற்றிய சிவஞானபோதம் என்னும் நூலின் (12 சூத்திரங்களின்) கருத்துக்களை விளக்குவது. சூர்ணிகை யென்னும் வடமொழிப்பெயரமைந்தது. உரைச்செய்யுளாலாகியது. திருவெண்ணெய் நல்லூரிலுள்ள பொல்லா விநாயகர் மொழிந்தது. முப்பத்தொன்பது வாக்கியங்களாலாகியது. இந்தப் பிரதியில் முற்றும் இருக்கிறது.

No. 1279. சிவஞானபோதச் சூர்ணிகைக்கொத்து. ŚIVAÑĀNABŌDACCŪRṆIKAIKKOTTU.

Pages, 3. Lines, 8 on a page.

Begins on fol. 90*a* of the MS. described under No. 1275.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதியைப்போன்றது. இதில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1280. சிவஞானபோதச் சூர்ணிகைக்கொத்து.

ŚIVAÑĀNABŌDACCŪRṆIKAIKKOTTU.

Page, 1. Lines, 18 on a page.

Begins on fol. 1*b* of the MS. described under No. 1262.

Complete.

Same work as the above. At the end the contents of the Śivañāna-bōdam are given as well as some stanzas on Śaiva religion

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் சூர்ணிகை முடிந்த பின்னர், "சூத்திரம் பன்னிரண்டே சூரணை முப்பத்தொன்பா, னேத்திய வெண்பா வெண்பத்[தி](து)மூன்றென . . . வியம்புகின்றேம்." என்னும் பாடலும் "சிவமுதலேயன்றி முதலில்லையென்றும், சிவனுடைய தென்னறிவதென்றும்-சிவனவனை, தென் செயலதாகின்றதென்று மிவையிற்றைத், தன்செயலாயக் கொள்ளாமை நான்" என்பது முதலிய சைவமத சம்பந்தமான சிலபாடல்களும் உள்ளன.

No. 1281. சிவஞானபோதச் சூர்ணிகைக்கொத்து.

ŚIVAÑĀNABŌDACCŪRṆIKAIKKOTTU.

Pages, 3. Lines, 10 on a page.

Begins on fol. 294*a* of the MS. described under No. 1272.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

No. 1282. சிவஞானபோதச் சூத்திரக்கருத்து.

ŚIVAÑĀNABŌDACCŪTTIRAKKARUTTU.

Pages, 3. Lines, 8 on a page.

Begins on fol. 192*a* of the MS. described under No. 1275.

Complete in 2 stanzas in the Kaṭṭaḷaikalitturai metre.

Gives the purport of the teachings of Śivañānabōdam.

Beginning:

முதற்பதி யரனே யைந்து முன்னத்து விதமிரண்டே
பிதற்பினே யனுமானத்தா லெண்ணிலா வுயிர்கண் மூன்றே
யதற்பினே யவத்தை நான்கே யகமறுத் திடலே யைந்தே
செகற்பதி பிரித்த வாறே தெரிவித்த லுயிரை யேழே.

End:

சூத்திரமீ ராறினுக்குச் சூரணிமுப் பானொன்பா
னேத்தவெண்பா வெண்பா னிரண்டனைத்துஞ் —சேர்த்ததொகை
நூற்றுமுப்பான் மூன்றிவற்றை நுண்ணுணர்வி னாய்ந்துணர்ந்தோர்
வேற்றுருக்கொள் ளாருறுவர் வீடு.

(கு-பு.)—

இது சிவஞானபோதச்சூத்திரங்களின்கருத்து இன்னதெனக் காட்டுவது. இரண்டு செய்யுட்களாலாகியது.

No. 1283. சிவஞானபோதச்சூத்திரக்கருத்து.
ŚIVAÑĀNABŌDACOŪTTIRAKKARUTTU.

Page, 1. Lines, 10 on a page.

Begins on fol. 295*b* of the MS. described under No. 1272.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. இந்தப்பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1284. சிவஞானபோத உதாரண வெண்பா.
ŚIVAÑĀNABŌDA UDĀRAṆA VEṆBĀ.

Pages, 14. Lines, 13 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1232.

Wants five stanzas relating to the first Sūtra and two stanzas relating to the second Sūtra; otherwise complete.

Certain stanzas written by Meykaṇḍadēvar and illustrating and supporting his own Sūtras, known as Śivañānabōda and of its commentary known as Vārttika.

Beginning:

* * * *

பண்ணையு மோசையும் போலப் பழமதுவு
மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா - மண்ணரு
ளத்துவித மாத லருமறைக ளொன்றென்
றத்து(வி)த மென்றறையு மாங்கு.

End :

சிவமென்னு மந்ததர[ச்] சிந்தைகொடு நோக்கப்
பவமின்றாங் கண்வா சகத்திற் - சிவமுண்டா
மொன்று மிரண்டு (மலத்) தார்(க்கிங்) கெ(ா)ண்குரு வா
லின்றி[ன் னூ](ந்நூ)ன் முமமை மலர்க்கு. (அ)

"எந்லைத சனற்குமரன் (. . . . .) திருட் டாந்தத்தா லின்று"
முற்றும்.

(கு-பு.)—

இது சிவஞானபோதத்தின் சூத்திரப்பொருள்களுக்கு உதாரணமாக அமைந்த எண்பத்தொருவெண்பாக்களையுடையது. இந்தப் பிரதியில் முதற் சூத்திரத்தின் வெண்பாக்கள் ஐந்தும், இரண்டாம் சூத்திரத்தின் முத லிரண்டு வெண்பாக்களும் நீங்கலாக மற்றவை முற்று முள்ளன. இதன் முதலேடு முறிந்து விழுந்துபோயிற்று.

No. 1285. சிவஞானப்பிரகாசம்.
ŚIVAÑĀNAPPIRAKĀŚAM.

Pages, 28. Lines, 13 on a page.

Begins on fol. 4*a* of the MS. described under No. 344.

Complete in 100 stanzas including the Pāyiram stanza.

A treatise in Śaiva religion explaining the nature of Pati (God) Paśu (the individual soul) and Pāśa (the string which binds the soul into bondage. It is considered to be one of the 20 Śāstirams of Vaḷḷalār.

Beginning :

சிவஞானப்பிரகாச வெண்பா, திருவாரூர் செப்பேட்டுப்படி.

கடவுள் வணக்கம்.

உலகளந்த மா[லு](லவனு) மோதிரமமூா தேவுங்
குலமறையுங் காணாத கோமா - னிலகியுமி
மூள்ளக் கயிலாய வோங்கன்மிசை நின்றாடும்
வள்ள லுக்கு முண்டோகை(ம்) மாறு. (க)

* * * *

நூற்பெயர்.

தன்னை யறிவிக்குந் தந்தலைவ னைக்காட்டும்
முன்னை வினையின் முதல்களையுஞ் - சொன்ன
சிவஞா னம்பிறக்கச் செந்நூலே நூன்மற்
றவஞான மென்றே யமி. (கூ)

அவையடக்கம்.

நாய்த்தோலிற் கட்டிவைத்த நாகமணி யைப்பெரியோர்
தூத்தூ வெனவுமி(ழ்)ந்து தூடியார் - போற்றுவர்க
ளாங்கதுபோ லென் சொற்கு லையனரு ட(ங்)குதலாற்
பாங்காகக் கொள்வர் பரிந்து. (௰)

பாயிர முற்றும்.

ஈசனூர் யானூர்கொல் லென்னை [வ](ம)றைத்திருக்கும்
பாசமியா தென்றென்று பல்காலுங் - கோசரங்க
ளுண்டான காலமே யுன்னையறி யுங்காலம்
மண்டாசை யற்றமா ஞே. (௰க)

பக்குவமி லார்க் கருளல் பாவிக் கறமோதல்
மட்[க்]கலத்தைப் பொன்ஞுக்க வாஞ்சைகொளல் - சொர்க்கமிலாக்
க்ன்னிக்குக் காமநூல் கட்டுரைத்தல் கண்ணிலர்க்குப்
பொன்ஞரம் பூட்டுதல் போலும். (௰உ)

End:

சீரார் சிவோயமத்தி யென்னுந் திருவாக்காற்
பேராசை யெலலாம் பிரித்தோனே - யாராத
வன்பாலுன பாதத்துக் க[ற்](ர்ச்)சனையு மற்றிரண்டி
லென் புருகும் பத்தியுமெற் கீ. (கக)

சிவஞானப் பிரகாசச் செந்நூலே முன்செய்
தவமுடையார்க் கெஞ்ஞான்றுஞ் சாற்ற[ப்] - பவமுடைய
பாமரருக் கி[ன்னா](ந்நூ)லைப்.பன்னற்க[ப்] பன்னுகவெங்
காமாதி யெல்லாங் கழற்றி. (க00)

Colophon:

சிவஞானப்பிரகாச வெண்பா உண்மை முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் வள்ளலார் சாத்திரம் இருபதனுள் ஒன்று. சைவசமயத்தைச் சேர்ந்தது. பாயிரம் உட்பட நூறு வெண்பாக்களாலாகியது ; பதி பசு பாச ங்களின் இயல்புகளை நன்குவிளக்குவது. இதில் இது பூர்த்தியாக இருக்

No. 1286. சிவதத்துவக்கட்டளை.
ŚIVATATTUVAKKAṬṬAḶAI.

Pages, 26. Lines, 6 on a page.

Begins on fol. 30*a* of the MS. described under No. 1158.

Complete.

A work in prose, explaining the 96 Tattvas according to the doctrines of the Śaiva Siddhānta religion. The name of the author of the work is not known.

Beginning:

ஓங்காரமென்னும் பிரணவத்திலே அகார உகார மகாரமென்னும் இந்த மூ[னு](ன்று) பீசாக்கரம் அ . . . . மற்று மகா ரமே ருத்திரன் ; உகாரமே மயேசுவரன் ; மகாரமே சதாசிவன்.

இந்த அகார உகார . . . . . . அந்த நாதவிந்துக[ளை]ளுக்கு மூலப் பி[ரகுற](ரகிரு)தியே ஆதா[ற](ர)ம். அந்த மூலப்பிரகிருதிக்குப் பிராண னே ஆதாரம்.

End :

கீழே தள்ளுண்பது. இவைகள் சொ[ற்](ர்க்)கலோக தாபத்தி[ரி](ர)யங்கள்.

இனி தூலதனு, சூக்குமதனு, காரணதனு . . . .

(கு-பு.)—

இது சைவசமய விஷயமானது; தொண்ணூற்றாறுதத்துவங்கள் முதலியவற்றை அம்மதக்கொள்கையின்படி விளக்குவது. வசன நடையாலாயது. இயற்றியவர் பெயர் முதலியன தெரியவில்லை. முற்றும் உள்ளது.

No. 1287. சிவதருமோத்தரம், உரையுடன்.
ŚIVADARUMŌTTARAM WITH COMMENTARY.

Pages, 710. Lines, 8–9 on a page.

Begins on fol. 65*a* of the MS. described under No. 603.

Complete.

This treatise deals with certain important doctrines and principles of Śaivism and is considered to be one of the 16 subsidiary works, based upon the Santānasarvōttama which is one of the 28 Śaivāgama works. It is said to have been revealed by Muruhakkaḍavuḷ to Agastya at the request of the latter. The various kinds of sin, the nature of the Paśu, Pati and Pāśa, the means of obtaining salvation, etc., are all explained herein. It contains also descriptions of the Bharata Khaṇḍa and other places as also of the mountains Meru, the Himalayas and the Kailāsa. The work is divided into 12 chapters, the headings of which are given in the Tamil remarks below. The author is Maṟaiñānasambandar, also known as Kaṇkaṭṭi Maraiñānasambandar because he used to cover his eyes so that he may not be cognisant of worldly matters. He was the head of the Kuhai Mutt at Chidambaram and the disciple of Tirukkāḷatti Paṇḍāram. The author has been extolled by Vaḷḷiyambalavāṇattambirān, head of the Mutt at Dharmapuram in his commentary on the Śivañānaśittiyār known as Ñānābharaṇaviḷakkam and also in his commentary on the Muttimuḍiuvu. The names of the several works written by the author are also given in the Tamil remarks below. He is said to have lived about 1547 A.D. The name of the author of the commentary herein added is not known, although tradition attributes the authorship to one of his disciples.

Beginning :

மலைக்குமகள் பெற்றமக னைக்கயமு கத்தனைம னத்தெழுதியான்
அலற்பிணிபி றப்பறவ னுக்கிளைய கத்தியமு னிக்கருளினு

லுவப்பில்கரு ணைக்கடலு ருத்திர னு ருத்தனி லுதித்த குமர
னிலக்குமிய லேக்கவியி னேக்கவுமு ரைப்பனுல கிட்டமுறவே.

எ - து, யான் மலையரையன் மகள் பெற்ற மைந்தனுகிய யானைமுகத்தினை யுடைய விநாயகனை மனதிலே தியானித்து வற்ருதகி[ற](ரு)பாசமுத்திர மாகிய உருத்திரனது திருமேனியிற்றோன்றிய குமாரக்கடவுளானவன் தன தருளினல் ஆன்மாக்களுக்கு ஆணவாதியாலுண்டான பிறவிநோய் தீர்த்தற் பொருட்டு அகத்தியமாவிருடிக்கு உபதேசித்த சிவதருமோத்[தி](த)ரத் தைக் கலிவலிகெடவும் உலகம் கதிபெறவு முரையாநின்றேனென்றவாறு.

* * * *

ஆதிநடு வந்தமிலா னமலனுயிர்க்
கழுக்கறுக்க வறைந்த வாய்மை
வேதமுத லுணர்ந்தகுகன் விரைமலர்த்தா
ளகத்தியனான் வியந்து போற்றிப்
போதகனே யனைத்துயிர்க்கும் புலமாக்கும்
நெறிபுகலா யென்னக் கந்தன்
ஓதியருள சிவதருமோத் தரநூலைத்
தொகைசெய்து முரைப்பா மோர்ந்தே.

எ-து, யான் முதனடுவீறில்லா நின்மலனுகிய சிவன் உயிர்களுக்கு ஆணவமுதலிய பாசங்களையறுக்கும்பொருட்டு அருளிச்செய்த வேதாகமமுதலிய வுண்மைஞானத்தை (. . . . . .) பிள்ளையார் அருளிச்செய்த சிவதன்மோத்தரமென்னுஞ்சிவாகமத்தை யுற்றுநோக்கித் தொகுத்துத்தமிழாற் சொல்லாநின்றேனென்றவாறு.

ஆக்கியோன் பெயர், மறைஞானசம்பந்த நாயனுர். வழி, சிவாகமத்தின் வழி. எல்லை, தமிழ்வழங்கும் பூமி. நூற்பெயர், முதனூற்கருத்துனளவு மிகுதியென்னும் இலக்கணத்தாறு முதனூலாற்பெற்றபெயர். யாப்பு, தொகைவகை. முதலிய பொருள், சிவதன்மம் சிவஞானதான முதலாயின. கேட்போர், அவர் மாணுகர். பயன், வீடுபேறு என்பதனுலறிக. (எ)

* * * *

ஆதரவே பரமான வறமதாகு
மாதிநடு வந்தமிவற் றனைத்து மாகு
மாதரவற் றவரீகை யறமே யாகா
தாதலினு லாதரவே மூல மாகு
மாதரவே பிரகிருதி யான்மா வீச
னெனும்பொருளு மறிவிக்கு மமலன் றானு
மாதரவே யகடவிக்கு மாத வாலே
யனைத்தினுக்கு மாதரவே மூல மாமே.

எ - து, வெளிப்படை. சிரத்தைக்குப் பரியாயப்பெயர்:—பத்தியெனவும், பாவமெனவும், பரமப்பிரீதியெனவும், சிவதர்மத்திறைருப்பாடெனவும், பிரதிபத்தியெனவும் ஐந்துவிதப்படும்.

End:

விதிதிகழ் வேதா கமவுணர் வாயே வினைநீரக்
கதமுக மாமோ கமுமுக மாயா கருவேயோ
மதகரி பேழ்வாய் வலிமுக மாமா மறைவாழும்
பொதிமலை மீதே புரிமுனி தானே புகழ்வாமே. (கஉசு)

Colophon:

பன்னிரண்டாவது கோபுரவியல் முடிந்தது. முற்றும்.

முன்ன மாதி முருகன் முனிவர்க்கு
பன்னி ராயிர மாகப் பகர்ந்தன
வன்ன வுத்தர மாயிரத் தெட்டுறா
தென்ன மாமுனி வன்கொய் தியம்பினன்.

அந்த வாக்கினை நோக்கி யருகருஞ்
சிந்[து](த) வாதுசெய் தேசிக ஞானசம்
பந்த ஞமம் பரித்தொ ளிருசதஞ்
சந்த நான்குநா லைம்பதுஞ் சாற்றினன்

*　　*　　*　　*

தில்லை வளநக
ரெல்லை யெனவினை
யொல்லை யொழியுமு
னல்ல நலமுறும் (கா)

இது சிவக்கோத்திரத் துதி.

வடவரைக் கயிலையும் பொதியமா மலையுமோ
கடலிருட் கயிலையுங் கனைரைநக கயிலையும்
படியினுட் பரமாதென் கயிலையும் பணிகுவ
முடவினைக கடிவமே யொளிர்சிவத் தடைவமே (கஉ)

இது கயிலாயத்துதி.

ஆகப் பன்னிரண்டாவது கோபுரவியல் உஉசு. ஆகவியல் கஉ-க்குத் திரு விருத்தம் ௲உ௱௬௬. முடிந்தது முற்றும்.

காலயுத்தி வருஷம் சித்திரைமீ ௬௬உ வியாழக்கிழமை இரண்டு மணிக் [கி](குத்) தசமிதிதி மகந[ஷ](ட்)சத்திரம் (இ)ந்த(ச்)சுபதினத்தில் சிவதரு மோத்தரம் (எ)ழுதிந(நை)றவேறினது. முடிந்தது; முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், சைவாகமங்கள் இருபத்தெட்டனுள் மூன்றுன சந்தான சரு வோத்தமமென்னும் மூலாகமத்தின் உபபேதம் பதினுறனுள் மூன்று.

சிவதருமங்கள் எவை என்று முருகக்கடவுளை அகத்தியர் கேட்க, அவர் அகத்தியர்க்கு உத்தரமாகக் கூறியதாதலின இஃது இப்பெயர் பெற்றதென் பர்.

இது, (1) பரமதருமாதியியல், (2) சிவஞானதானவியல், (3) ஐவகையாக வியல், (4) பலவிசிட்டகாரணவியல், (5) சிவதருமவியல், (6) பாவவியல், (7) சுவர்க்கநரகவியல், (8) சனனமரணவியல், (9) சுவர்க்கநரகவிசேடவியல், (10) சிவஞானயோகவியல், (11) பரிடாகவியல், (12) கோபுரவியல் எனப் பன்னிரண்டு பிரிவாகப் பகுக்கப்பட்டுள்ளது.

லில், பாபத்தின் கூறுபாடுகளும், சுவர்க்கநரக சனனமரணங்க ளின் இயல்புகளும், அவற்றினின்று நீங்குதற்குரிய வழிகளும், பதி பசு பாச இலக்கணங்களும், சாலோக சாமீபாதி பதங்களதியல்பும், பசுக்களின்பிரிவு களும், அப்பசுக்களின் இருப்பிடம் முதலியவற்றின் இலக்கணமும், பரத கண்ட முதலிய இடங்களின் இலக்கணமும், கயிலாயம், மேரு, இமயமுத லிய மலைகளின் ஸ்வரூபங்களும் சிவதருமப்பெருமையும் பிறவும் விவரமா கக் கூறப்பட்டுள்ளன.

செய்யுள் விளக்கம், ஆதிகமலாலயமாஹாத்மியம், சிவமயம், பதிபசுபா சப்பனுவல், சைவசமயநெறி, பரமோபதேசம், பரமததிமிரபானு, சங்கற்ப நிராகரணஉரை, சகலாகமசாரமுதலியவற்றை இயற்றியவரும், திருக்காள த்தி பண்டாரத்தின் சிஷ்யரும், தருமபுர ஆதீன மடத்தைச்சேர்ந்த வெள்ளி யம்பலவாணத்தம்பிரானுற் செய்யப்பட்ட ஞானபரண விளக்கமெனனும் சித் தியார் விருத்தியுரை, முத்திமுடிவுஉரை முதலியவற்றிற் புகழ்ந்துபேசப் படுபவரும், இவ்வுலகவாழ்வில் வெறுப்புற்றுத் தமது கண்ணைத் துணியால் மறைத்துக்கொண்டிருந்த காரணத்தாற் கண்கட்டி மறைஞானசம்பந்தரெ னவழங்கப்பெறுபவரும், சிதம்பரம் குகைமடாலயத்தலைவருமாகிய மறை ஞானசம்பந்தரென்னும் பெரியார் இந்நூலை இயற்றினரென்பர்.

இவர் கலியப்தம் 4647 (சாலி 1469, கி.பி. 1547) ம் வருஷத்தில் ஆதிகமலால யமாஹாத்மியம் இயற்றினரென்பது முதலியவற்றைத் தக்க ஆதாரத்துடன் மஹாமஹோபாத்யாய ப்ரஹ்மஸ்ரீ. வே. சாமிநாதையரவர்கள் தாம் பதிப் பித்த தியாகராசலீலை முகவுரையில் விளக்கியிருக்கிறார்கள்.

இந்நூலாசிரியர் மாணுக்கரொருவரே இவர் செய்த பலநூல்களுக்கும் இந்நூலுக்கும் உரை செய்திருப்பதாக அறிஞர் பலரும் நினைக்கிறார்கள்.

No. 1288. சிவதருமோத்தரம்.
ŚIVADARUMŌTTARAM.

Pages, 10. Lines, 6-8 on a page.

Begins on fol 1*a* of the MS. described under No. 81.

Incomplete.

Same work as the above.

(கு-பு.)—

இந்தப் பிரதியில் இந்நூல் பாயிரமும், பரமதருமவியலில் முதற்பதி னொருபாடல்களும், பன்னிரண்டாவது பாடலின் முதற்பாதியுமே உள்ளன.

No. 1289. சிவநெறிப்பிரகாசம்.
ŚIVANEṚIPPIRAKĀŚAM.

Pages, 102. Lines, 6-8 on a page.

Begins on fol. 159*a* of the MS. described under No. 336.

Complete in 216 stanzas.

A treatise in Śaiva religion explaining the nature and characteristics of Pati, Paśu and Pāśa and setting forth that through the grace of the Guru a person becomes rich in the devotion towards Śiva, loses his worldly attachment and obtains bliss by realizing Śiva. The author is made out to be Śivakkoḻundudēśikar.

Beginning :

சீராருஞ் செம்மேனித் திகழ்வு மானைத்
திருமுகமுங் கண்மூன்றுஞ் செய்யதாளு
மேராரு மங்குசமு நீளபா சத்தோ
டிலட்டுகமு மெழுகமெழிற் கொம்பு மென்று
நேராக வைத்ததிருக் காங்க ணான்கு
நின்மலமா மும்மதமு முள்ள நித்தனை
காராருங் கண்டனுமை களிக்க வந்த
கணபதியி னிருபதங்கள் கருதல் செய்வாம். (க)

சத்தியனா னைந்த மயமாய நின்ற
தற்பரனே சத்தனென வருவனாகிப்
பத்தியினா னினைந்தேற்ற வுருவாருபப்
பான்மையதா யுத்தியுத்தப் பரிச தாகிப்
புத்தியா னருவுமுத்தி தானு நல்கப்
பொருந்துபிர வித்தகனா மியல்ப தாகி
நித்தியமாஞ் சத்தியுருத் தரித்து மன்று
ணின்றுநடஞ் செய்வோன்றா ளினைதல் செய்வாம் (உ)

* * * *

அருளதனா னாகினுள்ளோ ரனைத்து(?)முய்ய
வைஞ்செழுத்தை யறைந்தொருகா லவாக ளெல்லா
மிருணி[லை]யயந் தனினின்று மேறச் செய்தே
யெந்தைசிவன் றிருநாம வெழுத்தைந் தூக்குங்
குருவெனவே பிரமாதி யோதப் பெற்ற
கோமானென் சந்தானகுரவ னான
திருமருவு முனிவாம தேவன் பாதஞ்
சிந்தையினுஞ் சிரமீதுஞ் சேர்த்தல் செய்வாம். (௩)

* * * *

தந்தைதாய் தஞ்சிறுவர் மழலைச் சொல்லைத்
தாமுகந்து கேட்டதனைப் பிறர்க்கு நன்றாய்ச்
சிந்தையா றும்படியாய்த் தெளியக் கூறுஞ்
செய்கைபோற் சிதானந்த மேனி யான
வெந்தைதா ளிணைமறவா வியல்பி னோர்க
ளெம்முரையை யுகந்துபிறர்க் கிசைப்ப ரென்றே
பந்தமா திகளறியாச் சிறியே னாசைப்
பகுதியாற் சைவநெறி பகர லுற்றேனே. (௧௦)

முன்னையருந் தவத்தி னாலவ் வறிவு விடாதே
முளைத்ததோர் சாங்குசித்தா பிராகிருத ராகித்

தன்னைபுணா ரார்க்கன்றி முத்தி யெய்தச
சற்குருவை யடைந்தோதி யுணர்தல் செய்யு
மன்னநெறி வைணைகர்க் காக வுன்னி
யருட்குரவி னருளதனு லறிந்த வாறிங்
குன்னலுறுஞ் சிவநெறிப பிரகாச மென்றே
புரைத்திடுவா மாகமத்தி னுட்பொருளி னூடே. (கஉ)

பாயிர முற்றும்.

விடைய மிவர்க் காவது தான் பதிபசுபா சத்தின
விதியுரைத்த வாகியிடு மேற்பயன் றுன்முத்தி
யடைவதுவா மதிகாரியாரெனனின முன்னே
யறைந்தனம் வைணைகரென வவரே யாகுந்
தொடையுடைய சம்பந்த மேதிங் கெனனிற
சொலற்கரிய பொருளுமதன சொலவு மாகு
மடையுடைநீர் போற்சிவன்பா லன்பு வைத்த
மதியுடையோர்க கிவையுரைகளும் வாய்மை தானே. (கங)

மாயையுட னிருவினையு நீங்க ஞான
மறைப்பான வாணவமா மாசு தானுந்
தூயையாம் பராசத்தி தன்னு னீங்கச
சுத்தமாய் நித்தமாய்ச சுகமாய் ஞான
ஞேயமாயப பிரிவிலதா யேக மான
நிமலசிவத் துடனுதல் முத்தி முத்திக்
காயவேண் டிடும்பொருள்கள் மூனற தாகு
மவையுரைககிற் பதிபசுபா சங்க ளாமே. (கச)

End :

இருவகைத் தாம்பத்தி யந்தரங்க மென்று
மியற்றியிடும் புறம்பெனறு மிவற்றி லாந்தரங்கம்
வருமுறைதா னி[னை]தயகமலத் துறையுஞ் சிவத்தை
மாசில்பளிங் கொளியுருவா மிலிங்கமாய் மதித்தே
குருபதமா மலர்மதிமண் டலத்தி னூலே
குறைவிலபி டேகஞ்செய் துபசார மனைத்து
மொருமைதிகழ் மனத்துடனே புரிந்து சதிபதிபோ
லுடன்பிரியா திருக்கையென்றே யுரைத்திடுமா கமமே. (உகச)

ஈதுமாி தேற்சிவனை யிலிங்கத்தி னிடத்து
மெழிற் குரவர் தமதிடத்துஞ் சிவபத்த ரிடத்துங்
கோதறவே கண்டுபணிந் தேத்திப் பூசை
குறைவறவே செய்தெந்த நாளும்வழி படவே
தீதறவே சிவஞானம் விளங்கியிடு நன்றாய்ச்
சிற்றறி வெலா நீங்கிச் சிவானுபவ முளதென்
றோதியிடுஞ் சிவாகமங்க ளாதலினு லுயிர்கட்
குறுதிசிவ பத்தியென வோர்ந்து கொள்ளே. (உகரு)

Colophon:

தந்தை சிவகொழுந்தைத் தாள்பணிந்து[த்] தான்றனிசை
யெந்தை சிவநெறியிங் கேதென்ன—சிந்தையாற்
றோர்ந்து சிவாகமத்தைச் சேர்த்தா யிரமதனை
யோர்ந்திடச்சொன் னன்றமிழா லும்.

சிவாக்கிரகு[ரு](ர)வேநமஃ
சிவநெறிப்பிரகாசமு ற்றும்.

(கு-பு.)—

இது சைவசமய சா த்திரத்தைச் சேர்ந்தது; குருவின் அருளால் உபதேசம் பெற்றுச் சிவபத்தி முதிரும்; முதிர, சிவஞானம் பிறக்கும்; பிறக்கச் சிற்றறிவு நீங்கும்; நீங்கப் பசுவாகிய தான் சிவானுபவம் பெற்று இன்புறுவன் என்பதையும், பதிபசுபாச இயல்புகளையும் விளங்கக்கூறுவது இந்நூல். பாயிரம் உட்பட இருநூற்றுப்பதின்மூன்று செய்யுட்களாலாகியது. சிவக்கொழுந்துதேசிகர் இயற்றியதாகத்தெரிகிறது. இதில் இது முற்றும் உள்ளது. அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

No. 1290. சிவபூசையகவல்.
ŚIVAPŪJAIYAHAVAL.

Pages, 4. Lines, 7 on a page.

Begins on fol. 387*a* of the MS. described under No. 83

Complete.

This treatise deals with the mental as well as the ceremonial worship of Śiva. The author seems to be Ñānappirakāśar of Tiruvālūr.

Beginning:

இந்தத் தியான வெழிற்றிரு மேனியி
லைந்து சாதாக் கியமடை யும்படி
வாக்கமை கீழ்தென் வடமேற் றிசைமிசை
நோக்கிய முகங்க ளுவலருந் தொழில
5. சாதாக்கிய முத லைந்தென் றுரைதரு
மெய்ம்முக மைந்துஞ் சகளம தாம்பேரழ
தின்னண மீசா னாதி யெனப்படுந்
தொழிற்படு சாதாக் கியத்தினை சொல்லி
னிழற்பொலி சகள நிட்கள மாகையிற
10. றஞ்சமி லீசா னாதிக டாமே
பஞ்ச சாதாக் கியமெனப் படுமே
முதலீ சான முகமுத னன்கினு
மிதமுற வியாபித் திருக்கு மதுதான்
பூசா காலம் புருடம் பார்த்திருந்
15. தாசறு பூசாந் தத்தினில் முன்போல்
மோசமி லுலு முகத்தினு முறுமே.

End:

அசுத்தத்த் துவங்களை யன்னிய மாக்கி
யுறச்சிவன் பரிபூ ரணமுள் ளளவு
மிருத்துணர் ஞான விழியாற் பார்த்து
நிலைபெறு சுத்தமாய் நின்மல மாயநற்
சத்திய மாய ஞான மயமா
யாதி யந்த மோதுவ தன்று
யாதொன் றினும்பிரி வின்மை யுடைத்தாய்
மு[ன்னு](ந்நூ)ற் றறுபது மூன்று மெனச்சொலு
ம[ன்னு](ந்நூ)ற் ச[ை]மயிக ளாலறி வரிதாய்ச்
சாந்தமு மாயுரை தருநிட் களமா
யேய்ந்தா னந்தமு மாயனி யமமாய்
நியதி காலங் களைநீங் கிபதாய்த்
துயர்தீர் காரிய சூனிய மா கிக்
காரண சூனிய மாகித் தம்பமற்
றுரை யுணர் விறந்த தாகி யுயர்ந்த
பரம சிவனது பாங்கினி லாங்கே
திருமிகு ஞான நேத்திரஞ் சேர்த்திச்
சேருமின் னிலைமையைத் திவ்யஞா னத்தா
லார வறிதல் பராமுக வாக்கிய
மிந்த நிலையிற் றெரிசன மென்று
நந்தா திருப்பது ஞான பூசை
யந்தரி யாகமு மாபுற யாகமு
மிந்த நெறிபிறி வில்லா தாதலிற்
புந்தியில் ஞான பூசை யென்றது
வவ்விரு பூசையும் பிரித்தர்ச் சிப்பது
பொய்யில் கிரியா பூசையென் றதுவே
இப்படி யிடையற யிருதய கமலத்
தற்புத முதல்வனை யர்ச்சனை புரிபவர்
தப்பற வடைகுவர் சாயுச சியமே.

Colophon:

சிவபூசையகவல் முற்றும்.

(கு-பு.)—

இது சிவபெருமானைப் புறம்பும் உள்ளும் பூசிக்கும் விதி முதலியவற்றை நன்குவிளக்குவது ; திருவாரூர ஞானப்பிரகாசரியற்றியிருக்கலாமென்று தோற்றுகிறது. செய்யுள் நடை சிறந்தது. இதில் இது முற்றும் உள்ளது.

No. 1291. சிவபூசையகவல், மூலமும் உரையும். ŚIVAPŪJAIYAHAVAL WITH COMMENTARY.

Pages, 20. Lines, 7 on a page.

Begins on fol. 377*a* of the MS. described under No. 83.

Complete.

Same work as the above, and with an explanatory commentary which has not been printed. The name of the commentator is not given.

Beginning:

இந்தத்தியான வெழிற்றிருமேனியில் (. . . . . .) இன்னண மீசா ஞுதி யெனப்படும் எ-து, இப்படித் தியானத்தாலறியப்பட்ட அழகிய கன்ம சாதாக்கியா திருமேனியிலே பஞ்சசாதாக்கியமுமடைந்த முறைமையைச் சொல்லுமிடத்து, கிழக்கே பார்த்த பூ[று](ரு)வமுகம் சொல்லுதற்கரிய கன்ம சாதாக்கியமென்றும், தெறகே பார்த்த தட்சிண முகம் க(ர்)த்துரு சாதாக்கிய மென்றும், வடக்கே பார்த்த உத்தரமுகம் மூர்த்திசாதாக்கியமென்றும், மேற்கே பார்த்த பச்சிமமுகம் அமூர்த்தி சாதாக்கியமென்றும் நாலு திக்கிலும் வியாபித்த ஊர்த்தமுகம் சிவசாதாக்கியமென்றுஞ் சொல்லப்படும்.

தொழிற்படு சாதாகியத்தை (, ...) பஞ்ச சாதாகதிய மெனப்படும் எ-து, நாதவிந்து ரூபதானமாய்ச் சிவலிங்கமான கனமசாதாக்கியத்தைச் சொல்லுமிடத்துப் பரசிவனது அதிகாரத்தானமாகிய சதாசிவஞ் சகளநிட்களமாகையாற் பஞ்சகிருத்தியத்தைப் பண்ணுமீசாஞுதி சத்திகளோந்தையுமதிட்டித்து யாவைக்குந் தஞ்சமாய நிற்குமீசாஞுதி குணங்களதானே பஞ்சசாதாக்கியமாய நின்றது.

முதலீசான முகம் (. . . . .) நாலு முகத்தினு முறுமே எ-து, முந்தின ஈசானமுகஞ் சத்தியோசாதவாமம் அகோரந் தற்புருடம் என்னும் நாலுமுகத்திலுமிடைவிடாமல் வியாபித்திருந்தாலும் பூசா காலத்திலாவாகனம் பண்ணுகையால ஈசானஞ் சத்தியோசாதத்திலும், சத்தியோசாதம் வாமதேவத்திலும், வாமதேவம் அகோரத்திலும், அகோரம் தற்புருடத்திலும் வியாபித்தெழுந்தருளியிருந்து குறைவாப் பூசாந்தத்திலே பராமுகவர்க்கியங் கொடுக்கையிலே தற்புருடமகோரத்தையும், அகோரம் வாமதேவத்தையும், வாமதேவம் சத்தியோசாதத்தையுஞ், சத்தியோசாதமீசானத்தையுமாசரிதது நிற்கையால் ஈசானமுகங் குற்றமற்ற முன்புபோலே நாலு முகத்திலுமுற்று வியாபித்து நிற்கும்.

End:

இந்த நிலையிற்றெரிசனம் (. . . . . .) புந்தியில் ஞானபூசையென்றது எ-து, எவவிடத்திலுமிந்ததெரிசனமொழியாதாகையால் ஞானபூசை யென்றது கீழ்சசொன்ன தரிசனமந்தரியாக பூசையுயர்தலாய் ஞானக்கிரிலைக சேர்ந்து தொழிலுடனே கூடியுள்ளதுவே கிரிகையாமாகிற கிரியாபூசையினும் இந்தத் தரிசனமொழியாதிருத்தலால் இந்த இருவகைப்பட்ட பூசையுமொருதன்மையாய் அறிதல் ஞானபூசை யென்று இந்தத் தரிசனமென்றிதுவே கிரிகையாமாகில் கிரியாபூசையே பிரதானமாயந்தரியாகத்திற்சி[று](றி)து தரிசனமுங்கூடி யந்தரியாகமென்றும் அதுவே கிரியாகமென்றும் பேரானது.

அவ்விருபூசையும் (. . . . .) தப்பற வடைகுவர் சாயுச்சியமே எ-து, இப்படி(ச்)சொல்லப்பட்ட தரிசனமாகிய ஞானபூசையிலே

அற்புத முதல்வனுகிய அனுபோக சிவனைப் பூசைபண்ணுமதான சீவன்முத்தர் நிலைபெறுன் ; சாயுச்சியமே பெறுகை சந்தேகமில்லை எ-று.

சிவபூசையகவல் உரையுடன் முற்றும்.

(கு-பு.)—

இதிலுள்ள மூலம் முன் நம்பர் பிரதிபோன்றது. இதில் உரையுடன் இந்நூல் முற்றும் இருக்கிறது. இவ்வுரையாசிரியர் பெயர், காலமுதலியன விளங்கவில்லை ; உரை மிக அழகாக உள்ளது. அச்சிட்டிருப்பதாகத் தெரிய

No. 1292. சிவபோகசாரம்.

ŚIVABŌGASĀRAM.

Pages, 40. Lines, 7 on a page.

Begins on fol. 107*a* of the MS. described under No. 1185.

Complete in 136 stanzas.

A treatise of a philosophical and spiritual nature bearing on the Śaiva religion. The author is Tiruñānasambandadēśikar of Dharmapuram Mutt, disciple of Ñānappirakāśadēśikar of Tiruvālūr.

Beginning :

சிவபோகசாரம், அடிகள் வணக்கம்.

காப்பு.

ஞானனு பூதிவெண்பா நான்முற்றுங் கற்பதற்குத்
தானு தரவிளெடுந் தந்தருளு—நானு
(வி)த(வா) ரணமே வியந்துரைக்கு ஞான
மதவா ரணமே வரம்.

சித்திதரு நாதன் * றெனகமலை வாழ்நாதன்
பத்திதரு [ஞு](நா)தன் பரநாதன்—முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாச னுண்மை
தருநாத னங்குருநா தன். (க)

* * * *

பரம ரகசியத்தைப் பாழான வாயா
லிரவுபக லெந்நேர மின்றிக்—குரனெரியக
கூப்பிட்டுங் காணுமோ கோழைமட நெஞ்சேமால்
பூப்பிட்டுங் காணுப் பொருள்.

* * * *

பெறுதற்கரியபெருமை.

ஒருமையுட னீசனரு ளோங்கியென்றுந் தூங்க
வருமை யருமை யருமை—பெருமையிடும்

* தென்கயிலை என்பது பிரதிபேதம்.

பாங்காரங் கோப மபிமான மாலைசவினை
நீங்காத போதுதா னே. (கக)

End:

தில்லைவனங் காசி திருவாரூர் மாயூர
முல்லைவனங் கூடல் முதுகுன்றம்—நெல்லைகளர்
காஞ்சிகழுக குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்.

நன்கருத்தேன் கமலை ஞானப் பிரகாசனே
யென்கருத்தை யுன்கருத்தென் றெண்ணுமவென் கருத்தை
யென்கருத்தென் றெண்ணியே யான்பட்ட துன்பமெலா
முன்கருத்தே தீரவறி யும். (க0க)

எல்லா முனது செய லென்றறிந்து மௌனத்திற்
பொல்லாத சங்கற்ப மேன் வருமோபுர மூன்றெரிந்த
வில்லாய் கமலையின் ஞானப்ரகாச வரதவிது
சொல்லாய் கரணமயக்க மன்றோவென் றொழிலல்லவே. (கஙரு)

Colophon:

பொதுநிலைத்தொகுதி முற்றும்.

சிவபோகசாரம் அதிகாரத்துடன் எழுதிமுடிந்தது.

(1) அடிகள் வணக்கம், க0. (2) பெறுதற்கரியபெருமை, ரு. (3) அறியும் பகுதி, ரு. (4) உபதேச விளக்கம், உ0. (5) அனுபூதிநிலையம், 0. (6) உபாய நிலை, 0ரு. (7) பணியறுத்தல், ௩0௩. (8) துறவின்பகுதி, 0௫. (9) அறிவோர் புகழ்ச்சி, ௫. (10) மடவோர்பழிப்பு, ௫. (11) பொதுநிலைத்தொகுதி, க0. ஆக அதிகாரம் 0க-க்கு வெண்பா ௱௩0க-ம், கலித்துறை ௫-ம் ஆக ௱௩0ரு.

* * * *

ஏதேது செய்திடினு மேதேது பேசிடினு
மேதேது சிந்தித் திருந்திடினு - மாதேவர்
நின்செயலே நீயே நினதே யென்றறிந்து
முன்செயலே யல்லவோ தான்

ஆக. ஏ. . . . . .

சிவபோகசாரம். முருகன்றுணை.

(ரு-பு.)—

இந்நூல் சைவமதத்தைச்சார்ந்தது. திருவாரூர் ஞானப்பிரகாசதேசிகர் மாணுக்கரான தருமபுரவாதீனம் திருஞானசம்பந்தகதேசிகராலியற்றப்பெற்றது. அடிகள் வணக்கம் முதலாகப் பொதுநிலைத்தொகுதியீறுகட்பதினொரு பிரிவினையுடையது. நூற்றுமுப்பத்தொருவெண்பாவும், ஐந்து கலித்துறையுமாக நூற்றுமுப்பத்தாறுபாக்களாலாகியது. ஞானமார்க்கத்தை நன்கு விளக்கவல்லது. இந்தப்பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது. பொதுநிலைத்தொகுதி முற்றும் என்று முடித்தபின்னர் இந்நூலின் எழுபாடல்கள் அடுத்த ஏட்டில் எழுதப்பட்டுள்ளன.

No. 1293. சிவபோகசாரம்.

ŚIVABŌGASĀRAM.

Substance, palm-leaf. Size, 8 × 1 inches. Pages, 43. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete but imperfect.

Same work as the above.

Colophon:

சிவபோகசாரம் முற்றும்.

(கு-பு.)—

இது முன் நம்பர் பிரதிபோன்றது ; ஆயினும் இதில் நூறுபாடல்களோடு நூல் முடிந்ததாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. ஞானானுபூதி யென்னும் முதல் வெண்பாவும், இடையிடையே சில வெண்பாக்களும், 9, 12, 21, 22 இந்நான்கு ஏடுகளில்லையாதலின் அதிலடங்கிய பாக்கள பதினாறும் இல்லை.

No. 1294. சிவபோகசாரம்.

ŚIVABŌGASĀRAM.

Substance, palm-leaf. Size, 7 × 1¼ inches. Pages, 55. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 10*a*. The other works herein are Śiṣṭarandādi 1*a* Mārgasahāyartudi 1*a*, Avināśippattu 38*a*.

Complete but imperfect.

Same work as the above.

Colophon:

சாதாரண௵ வை(கா)சிமீ உ௦௨ எழுதி நிறைந்தது. முற்றும்.

(கு-பு.)—

இது முன் நம்பர் பிரதிபோன்றது. அந்தப்பிரதியில் உள்ள நூறு செய்யுட்கள் இதிலும் இருக்கின்றன.

No. 1295. சிவபோகசாரம்.

ŚIVABŌGASĀRAM.

Pages, 52. Lines, 4 on a page.

Begins on fol. 21*a* of the MS. described under No. 165.

Wants stanzas 15 to 29 for which blank leaves are attached.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் நம்பர் பிரதிபோன்றது. இதில் 15-29 வரை பதினைந்து பாடல்கள் எழுதப்படாமல் வெற்றேடுகள் விடப்பட்டுள்ளன. மற்றைப்பாடல்கள் அதிலுள்ளவை போன்றுள்ளன.

No. 1296. சிவப்பிரகாசக்கட்டளை.

ŚIVAPPIRAKĀŚAKKAṬṬALAI.

Substance, palm-leaf. Size, $8\frac{7}{8} \times 1\frac{1}{4}$ inches. Pages, 38 Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 25*a*. The other works herein are Tirumūlartattuvak-kaṭṭaḷai 1*a*, Kadirmalai Kumaravēlstōtram 41*a*, Bhadragiriyārpulambal 50*a*.

Apparently complete.

A work in prose explaining certain important principles of Śaivism.

Beginning :

பூதங்களாவன:—பிருதி[வு](வி), அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆக ரு.
ஞானேந்திரியங்களாவன :—[சொ](சுரோ)த்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம ஆக ரு.
கன்மேந்திரியங்களாவன :—வாககு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்

தன்மாத்திரைகளாவன :—சத்த, பரிச, ரூப, ரச, கந்தம் ஆக ரு.
அந்தக் கரணங்களாவன :—மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆக ச.
ஆக ஆன்மதத்துவம், உச.

End :

சிவபோகமாவது :—பராசத்தியினிடமாக நின்று அநு[ே]ப[ாக](வ)த்துடனே கலந்து பேரின்பமாகிய சிவனென்னத்தானென்னா இரண்ட[த்து](ற்று)ச சிவாநுபோகம் பிறகககச சிவத்துடனே அக்கினிக்கு வெம்மைபோலவும் நீருக்குள் தட்பம்போலவும் சிவததிலே யழுந்துமது சிவபோகம்.

Colophon :

சிவப்பி[ற](ர)காசக்கட்டளை முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் சைவசமயத்தைச்சார்ந்தது ; உள்நிலைக்கருவிகள், புறநிலைக்கருவிகள், தத்துவங்களின் தோறற ஒடுக்க வரலாறுகள், தத்துவகுணம் அவத்தாதரிசனம், தசகாரியம் முதலியவற்றின்தன்மை இன்னதென விளக்குவது; வசன நடையாலாயது. இபற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை.

No. 1297 சிவப்பிரகாசக்கட்டளை.

ŚIVAPPIRAKĀŚAKKAṬṬAḶAI

Pages, 18. Lines, 7 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1060.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் நம்பர் பிரதிபோன்றது. இந்நூல் இந்தப்பிரதியில் முற்றும்

No. 1298. சிவப்பிரகாசக்கட்டளை.

ŚIVAPPIRAKĀŚAKKAṬṬAḶAI.

Substance, palm-leaf. Size, $14\frac{1}{8} \times 1\frac{1}{8}$ inches. Pages, 19. Lines, 8 on a page. Character, Tamil. Condition, good. Appearance, new.

Begins on fol. 24*a*. The other work herein is Śivappirakaśam 1*a*.

Complete.

Same work as the above. There is a slightly different reading in one place which is indicated in the Tamil remarks given below.

Colophon:

துன்முகி௵ வைகாசிமீ௨௨ திருவல்லிக்கேணி வேங்[கி](க)ட[டி] முதலியார் சிவப்பிரகாசம், சிவப்பிரகாசக் கட்டளை எழுதி நிறைவேறிற்று.

தில்லையி னட்டஞ் செய்தருள் கடவுடன்
நல்லதா ளெஞ்சினி னூட்டிடு விரு
பொல்லா வினைகளைப் போக்க லாமே.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப் பிரதியின இறுதியில், "நீருக்குள் நட்டம்போல" என்ற வாக்கியம "நீருக்குள் உப்புப்போல்" என்று பேதத்துடன் காணப்படுகிறது. இதில் இந்நூல் முற்றும் இருக்கிறது.

No. 1299. சிவப்பிரகாசம்.

ŚIVAPPIRAKĀŚAM.

Pages, 16. Lines, 12 on a page.

Begins on fol. 98*a* of the MS. described under No. 1226.

Incomplete.

This is the text of the commentary described under R. No. 7 (*e*) of the Triennial Catalogue of MSS , Vol. I, Part 2.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாகதின 7 (*e*) நம்பர் பிரதியில் வந்துள்ள உரைக்கு மூலபாடமாகும். இந்தப் பிரதியில் இந்நூல் மூலம் முற்றும் இல்லை. ஏடுகள் மிகவுஞ் சிதைந்துள்ளன.

No. 1300. சிவப்பிரகாசம்.

ŚIVAPPIRAKĀŚAM.

Pages, 44. Lines, 6 on a page.

Begins on fol. 148*a* of the MS. described under No. 1060.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் நம்பர் பிரதிபோன்றது இந்தப்பிரதியில் இந்நூல் முற்று மிருக்கிறது.

No. 1301. சிவப்பிரகாசம்.
ŚIVAPPIRAKĀŚAM.

Pages, 22. Lines, 12 on a page.

Begins on fol. 34*a* of the MS. described under No. 1232.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் நம்பர் பிரதிபோன்றது. இதில் இந்நூல் மூலம் முற்றும் உள்ளது.

No. 1302. சிவப்பிரகாசம்
ŚIVAPPIRAKĀŚAM.

Pages, 2. Lines, 10 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1214.

The three stanzas contained herein are stated to form part of Ādipatinilai of the Śivappirakāśam. The stanzas are not, however, found in the printed editions.

Beginning :

திருவடிக்கு மேலுமொரு கும்பீ டுண்டோ
　　திருந்து குரு வருள்[ப்]பெறாச் சிதடனேரே
கருவடியை விட்டகலாக் கன்மி யார்க்கு(க்)
　　கற்றதனா லனுபூதி காணொ ணாதே
யொருவடிவா யீரே ழுலகந் தானா
　　யுட்பொருளாய் நின்றவருள் விளைந்தொன் றானாற்
பெருவடிவாய் நிறைபே ரொளிவந் துள்ளா
　　பேரின்ப வனுபூதி பேசலாமே.

End :

அல்[ல]லன்றிப் பகலன்றிக் களவு செயவோ
　　ரஞ்சினார் தமைக்கொணரோ ரறமழித்தோர்
வல்லபடி பிற(ர்)தாரம் வரம ழித்தோர்
　　மன்றுபறித் துண்டவர்கள்வ ழக்கழித்தோர்

சொல்லரிய . . . . யளதனைக்குலைத்தோர்
சொற்பெரிய குருமொ[ளி](ழி)யைத்தாளிக[ள்]ழ்ந்தோர்
(எ)ல்லையில்லா வெழு நரகம் புக்கு[ளை](ழை)ப்பா
ரெழுபிறப்பும் பறையனாய்ப் பிறப்பன ரனே. (௯)

சிவமயம்.

(கு-பு.)—

இதிலுள்ள மூன்று பாடல்களும் சிவப்பிரகாசத்தில் ஆதிபதி நிலையைச் சேர்ந்தனவென்று இந்நூலின் தலைப்பில் குறிக்கப்பட்டிருப்பினும் அச்சுப் பிரதியில் இவை காணப்படவில்லை.

No. 1303. சிவப்பிரகாசம், பதவுரை.

ŚIVAPPIRAKĀŚAM PADAVURAI.

Pages, 38 Lines, 18 to 20 on a page.

Begins on fol. 2*a* of the MS. described under No. 1262.

Breaks off in the commentary of the 95th stanza.

Contains the meaning word by word for the stanzas of the Śivappirakāśam described under the previous number. The commentary is slightly different from that described under R. No. 7(*e*) of the Triennial Catalogue of MSS., Vol. I . Part II.

Beginning :

ஒளியான திருமேனி - ஞானப்பிரகாசமான திருமேனியிலே நின்றும், உமிழ்தான மிக மேவு-பொழியாநின்ற மும்மதங்களும் பெருகப் பொருந்து கையினாலே, களியாரவருமானை-[டெ]க[று](ர்)வ மிகவும் பொருந்திவருகின்ற யானைமுகத்தினையுடைய மூத்தநாயனாரது, கழல் நாளுமறவாமல் - இரண்டு பாதாரவிந்தங்களையும் அநுதினமும் மறவாமல் நினைந்துகொண்டு (. . . . . .) வலிதாய வினைகூட நினையாவே - அவர்களை முன்புபோலத் தொன்[டு](று)தொட்டுவரும் பிறவிவினையானது பொருந்தாதென்றவாறு.

இது விநாயகத் துதி.

"ஒளியிது காப்பருள கணபதி கழலிணை
தெளிபவருளைவினை சேரா தெனறது."

End :

ஞானந்திகழ்ந்த - பிரபஞ்சஞ் சிறிதுந் தோன்றாமல் ஞானமே பிரகாசித்து, அகம்புறமெனுத செம்மையார் நன்மையாரே-உள்ளொன்றும் புற

. . . .

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக்கின் 7 (e) நம்பரில் வந்த நூலாயினும் அவ்வுரையினும் இது சொற்களிலும் பொருள்களிலும் சிறிது வேறுபடுகின்றது

இந்தப் பிரதியில் இவ்வுரை தொண்ணூற்றுநான்கு பாடல்வரையிலிருக்கிறது. தொண்ணூற்றைந்தாவது பாடலின் உரை முற்றுப்பெறவில்லை.

No. 1304. சிவப்பிரகாசம், மூலமும் உரையும்.

ŚIVAPPIRAKĀŚAM WITH COMMENTARY.

Substance, paper. Size, 9½ × 7¼ inches. Pages, 94. Lines, 26 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

Same text as that described under No. 1300 ante It is followed by a commentary which is different from the commentaries mentioned under the previous number.

Beginning:

"ஒளியான திருமேனி (. .) நினையாவே."

ஒளியான திருமேனி - ஞானப்பிரகாசமான திருமேனியிலேநின்றும், உமிழ்தான(ம்) சொரியாநின்ற இரசஞானக்கிரியைகளாகிய மும்மதத்தினையும.

End:

பெருகியவுவமைநான்கின்பொறியினிறுவி - அர்த்தத்தில் விரிவைத் தெளிய அறியிகருத்தக்க வழியினாலே மிகப்[ப்]பண்புவமை, வினையுவமை, உருவுவமை தொழிலுவமை எனகிற நாலு நிறுத்தி, பின்முன்றருமலை வொழியக்கொள்வோன் தன்மையிற் சாற்றலாமே - கொள்வோன் தன்மையின் பின்முன் தருமலைவறச சொல்லலாமே. (௯0)

Colophon:

சிவப்பிரகாசம் முற்றும்.

(கு-பு.)—

இவ்வுரை முன் நம்பாரில்வந்துள்ள உரைகளினும் வேறானது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது. எழுத்துப்பிழை மிகவதிகம். எழுத்து நன்றாக இருக்கிறது.

No. 1305. சிவப்பிரகாசம்—பதவுரை.

ŚIVAPPIRAKĀŚAM: PADAVURAI.

Pages, 114. Lines, 7—9 on a page.

Begins on fol 149*a* of the MS. described under No. 1219.

Complete.

This is the original MS. from which the work described under R. No. 7(*e*) of the Triennial Catalogue, Vol. I, Part 2, was restored for the Library.

(கு.பு.)—

இது மூவருடத்திய காட்லாக்கின் 7(அ) நம்பர் பிரதியின் மூலப்பிரதி. இதில் இது முற்றுமிருக்கிறது.

No. 1306. சிவப்பிரகாசம், உரையுடன்.

ŚIVAPPIRAKĀŚAM WITH COMMENTARY.

Pages, 252. Lines, 10 on a page.

Begins on fol. 296*a* of the MS. described under No. 1272.

Complete.

Same text as the above, but the commentary found here is different, and is by Sattiya Ñāñappirakāśar of Madura.

Beginning :

சிவப்பிரகாசவுரை பொது.

ஒளியான திருமேனி என்றது, ஞானப்பிரகாசமாயுள்ள திருமேனியிலே, (. . . . .) வலிதாயவினை என்றது, சரீரமுள்ளமட்டும் பொசித்துத் தொலைகிறவினையை.

இது காப்பு

ஓங்கொளியாய் எ-து, மிக்க பி[ற](ர)காசமாயச் சோமசூரியாக்கினி நட்சத்திரங்களைப்போலத் தோன்றி நின்று கெடுகிற ஒளியல்லவாய், அவையிற்றும் பிரகாசத்தைக் கொடுத்துத் தானொரு தன்மையாய் நிற்கிற அந்த நிட்களம், (. . . . .) புந்தியினுமுறவணங்கிப் போற்றல் செயவாமென்றது, பொலிவினையுடைய தாமரைமலர்போன்றிருக்கிற சீபாதங்களை என்னுடைய தலைமேலும் இ[று](ரு)தயத்திலும் அழுந்தவைத்துத் தோத்திரம் பண்ணுநின்றேமென்றவாறு.

ஓங்கொளியென்றதற்குப் பிரமாணம் :—சித்தியார்.

“ நாயகன் (. . . . .) தேசதென்றார் ”

End :

மேல் இ[ன்னா](ந்நா)ல் கொடுக்கும் முறைமை அருளிச்செய்கிறார் :—

திருவருள் கொடுத்து எ-து, பக்குவப்பட்டு வழிபாடு விஞ்சிவந்தானொருவனுக்குத் திருவடிவைத்து, (. . . . .) முன்னொடு பின் மலைவறக் கொள்ளவல்ல முறைமையினையுடையவனிடத்து [யின்னா](இந்நா)லினாத்தத்தைத் தெளியச்சொல்லவாமென்றவாறு (. .)

இதனை சொல்லியது ச[ஸ]மயாசாரமும் சந்தானபாரம்பரியமும் உள்ள பக்குவர்க்கு ஞானதீட்சையைச் செய்து மேல் இந்தச் சிவப்பிரகாசத்திலுண்டாகிய தி[றி](ரி)பதா[ற்](ர்)த்த[னிற்ணை](நிர்ண)யங்களை அவன் முன்னொடு பின் மலைவறக்கொள்ளத்தக்கதாக ஆசாரியன் கிரமத்திலே கொடுக்கக்கடவன் என்னும் முறைமை அறிவித்தது. (௧00)

Colophon :

தேனிலவுந் தெய்வச் சிவப்பிரகா சக்கடலின்
பானிலவும் பல்ச[ை]மயப் பன்மதமும்—கோனுயிர்மா
ணித்தியமுந் தோன்ற வுரைவிரித் தோன்மதுரைச்
சத்தியஞா னப்பிரகா சன.

* * * *.

நண்ணும் பொருண்மூன்று நானறிந்து நானறவென்
கண்ணுந் தனதாகக் காட்டினன்—வெண்[ணெ](ணை)யிலே
மெய்கண்ட தேவனொரு மெய்கொண்டு வந்திலனேற்
பொயகொண்டு போமே புவி.

சிவப்பிரகாசம் உரை முற்றும்.

பரிதாபிஹு ஆடிமீ கஉ சோமவாரம் (இ)ந்த(த்)தினத்திலே மத்தூர் முருகப்ப முதலியார் குமாரன் சரவண முதலி சிவப்பிரகாசம் எழுதி நிறைந்[து](த)து.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றதே; ஆயினும் இதிலுள்ளவுரை மதுரைச் சத்தியஞானப்பிரகாசர் இயற்றியதென்று தெரிகிறது; சிறந்தவுரை. இந்தப் பிரதியில இவ்வுரையுடன் நூல் முற்றும் இருக்கிறது.

No. 1307. சிவப்பிரகாசப்பதவுரை.

ŚIVAPPIRAKĀŚAPPADAVURAI.

Pages, 70. Lines, 13 on a page.

Begins on fol. 45*a* of the MS. described under No. 1232.

Complete.

Same commentary as that described under R. No. 7(*e*) of, the Triennial Catalogue of MSS., Vol. I, Part 2.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக்கின் 7 (e) நம்பா பிரதியில் உள்ள பதவுரை போன்றது. இந்தப் பிரதியில் இது முற்றும் இருக்கிறது. ஏடுகள் சிதைந்துள்ளன.

No. 1308. சிவப்பிரகாசம், உரையுடன்.

ŚIVAPPIRAKĀŚAM WITH COMMENTARY.

Pages, 382. Lines, 8 on a page.

Begins on fol. 12*a* of the MS. described under No. 1201.

Contains 1 to 19 stanzas with commentary.

Same text as the above, but the commentary which is different from the commentaries mentioned under the previous numbers is very exhaustive and lucid and is by Śivappirakāśar, disciple of Ñānappirakāśattambirāṉ of Madura. Each stanza is followed by the commentary referred to and thereafter the couplet called Kuṟaḷveṇbā composed by Kāvai Ambalavāṇattambirāṉ and indicating briefly the substance of each stanza is found added on.

Beginning:

திருமேவு முண்மைச் சிவப்பிர காசத்தின்
மருமேவு பேருரைக்கு மாரூர—செருமேற்
[று](றொ)டக்குஞ சம(ம)ர்ககண் சுரிகுழல்மான் றந்த
கடகருஞ் சாமகவரே காப்பு.

இந்தச் சிவப்பிரகாசமென்று சொல்லப்பட்ட [னூ](நூ)லுக்கு வரலாறு வது:—பூரணகாரந்தாவாயிருக்கப்பட்ட ஸ்ரீகண்ட பரமேசு[ப](வ)ரன் அருளிச் செய்த முன்னூலாகிய சிவாகமத்தில் ஞானகாண்டமாயிருக்கப்பட்ட பதிபசு பாசத்தினுண்மையை ஸ்ரீநந்திதேவ தம்பிரானார்க்குக் கடாட்சித்தருள, அந்த உபதேசத்தின் பயனாயிருக்கப்பட்ட சிவஞானபோதமாகிய மூலக்கிரந்தம் பன்னிரண்டையும் [சிறி](ஸ்ரீ)நந்திதேவ தம்பிரானார சன[க்](த்)குமாரபக வான் முதலாயுள்ள இருடிகளுக்குக் கடாட்சித்தருளச், சன[க்](த்)குமார பகவானிடத்திலே பரஞ்சோதிமாமுனிகள் பெற்றருளித், திருவெண்[ணை](ணெய)நல்லூரே திருப்பதிவீடாகவுடைய மெய்கண்டதேவதம்பிரானார்க் குக் கடாடசித்தருள, மெயகண்டதேவதம்பிரானார் அந்த மூலக்கிரந்தம் பன்னிரண்டின் வழியே பன்னிரண்டு சூத்திரமாக வகுத்து அந்நூற்பெய ராலே சிவஞானபோதமெனனும் திரு[ஞ](நா)மத்தினையும் சா[ற்றி](த்தி) வழி[னூ](நூ)லாகச் செயதருளித், தமது திருவடியைப்பெற்ற அருணந்தி தேவ தம்பிரானார்க்குக் கடாட்சித்தருள, (. . . . . .) உமாபதிதேவ தம்பிரானார் (. . . . .) திருவருள் ஞானமுங் கூட்டிப் பொது ஐம்பது செய்யுளாகவும், உண்மை ஐம்பது செய்யுளாகவும் ஆகத் திருவிருத்தம் நூறு கக்கொண்டு சிவப்பிரகாசமென்னும் திருநாமத்தினையுஞ் சா[ற்றி](த்தி)ச் சார்புநூலாகச் செயததெனவறிக.

* * * *

இங்ஙனம் இந்த நூல்களுக்கு முந்தபபாயிரங்கூறுகைக்கு விதி எதென் னில், "ஆயிரமுகத்தான் (. . .) பாயிரமில்லதுபனுவலன்றே" என் னும் விதியைப்பற்றி முந்தப்பாயிரமருளிச்செய்யவேண்டி இந்நூலுக்குக் காப்பு ஒரு செயயுளாகவும், பாயிரம் பன்னிரண்டு செய்யுளாகவும் அருளிச் செய்வாரெடுத்துக்கொண்டருளியது.

"ஒளியான திருமேனி (. . .) வினைகூட நினையாவே" மேல் இதற்கு வியா[ய்]க்கி:—ஒளியான திருமேனி எ-து, ஞானப்பிரகாசமான திருமேனி யிலே.

உமிழ்தானமிகமேவு களியாரவருமானை எ-து, பொழியாநின்றமதத்தினை மிகவும் பொருந்தப் ட்டுக் கெ[று](ர்)வமிகுதியாலே எழுந்தருளாநின்ற யானைமுகத்தினையுடைய மூத்தநாயனார் (. . . . .)

வலிதாய வினைகூட நினையாவே எ-து, அவர்களை மிக்க வினைகளானது பொருந்த விசாரியாது என்றவாறு.

என்னவே இந்நூல் காப்பது நிமித்தமாக வழிபடாநின்றேமென்பது கருத்து.

End :

" எண்ணரிதாய நித்தமா யிருண்மலத்தினழுந்தி யிருவினையினாறனமை களுக் கீடான யாக்கை, (. . . .) பசுவாகக மெனவுரைப்பருணர்ந்தே."

இதன் கருத்து.

" எண்ணிலா வுயிர்க ளிறந்து பிறந் தொருகா
னண்ணிடு மானடி யருளா லென்றது) "

* * *

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது; ஆயினும் இதிலுள்ள உரை மதுரை ஞானப பிரகாசத் தம்பிரானுர் சிஷ்யராகிய சிவப்பிரகாசர் இயற்றியது. மற்றை உரைகளினும் இது மிகவும் விரிவாக இருப்பதோடு கருத்து முதலியவற்றை யும் தெளிவாகக் காட்டுவது; காவை அம்பலவாணத்தம்பிரானுர் இந்நூலின் செய்யுட்கள் ஒவ்வொன்றன் கருத்துவிளங்க இயற்றிய நூறு குறள் வெண்பா க்களும் இந்நூற் பாட்டுக்களின் பின்னா முறையே எழுதப்பட்டுள்ளன. இந் தப் பிரதியில் இவ்விரிவுரை முதல் 19 பாடல்களுக்குமட்டுமே இருக்கிறது.

No. 1309. சிவப்பிரகாசம், உரையுடன்.

ŚIVAPPIRAKĀŚAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $13\frac{3}{4} \times 1\frac{3}{8}$ inches. Pages, 502. Lines, 8 on a page. Character, Tamil Condition, slightly injured. Appearance, old.

Wants 1 to 55 leaves in the beginning, and therefore contains the commentary from the 15th stanza to the end.

Same work as that described under No. 1308 ante. The stanza found at the end of the work is given in the Tamil remarks below :—

End:

இதனுற் சொல்லியது ச[ை]மயாசாரமும் சந்தான வாசாரமும் உண்டாய வந்தாலொருசீடனுக்கு ஆசாரியன் திருவடியைவைத்து இந்தச் சிவப்பிரகாச மென்னும் திருநாமத்தினையுடைய நல்லநூலிலே விரியப்பட்ட சைவசித் தாந்தத்தின் உண்மையான அர்த்தத்தை ஏதுக்களினாலும் உவமையினாலும் நிச்சயித்து அந்த அர்த்தத்தை முனமேறு பின் மலைவறக் கொள்ளத்தக்க பக்குவனுக்குக் கி[ற](ர)மத்திலே கொடுக்கலாமென்னு முறையை அறிவித் தது. (400)

Colophon :

தொந்தனையாம் சூத்திரத்தாற சொற்பொருளா யம்பலவன்
றந்தகுற ளாற்றெகையாற் றன்னருளாற்—சிந்தையின் மெய்
காணச் சிவப்பிரகா சங்கரைகண் டான்மதுரைத்
தானுச் சிவப்பிரகா சன்.

" ஓது புகழ் (. . . . .)
யுலகிற் சிறப்பித்தானே."

சிவப் பிரகாசத்துக்கு(க்)காவை யம்பலநாத தம்பிரானுர் அருளிச்செய்த குறட்பாவி[றுமை](ரு)தயப்படிக்கு அசசந்ததியிலுண்டாகிய மதுரைச் சிவப் பிரகாசசாமிகள் அருளிச்செய்த உரை எழுதி நிறைந்தது. முற்றும்.

பிரபவஸ்ரு தைமீ ௰௯ குருவாரம் நவமி திதி சோதிநாள் மகரலக்கி னத்தில் தேவகுரு சந்ததியில் தவப்பிரகாசசாமிகள் சரணு[லை](ல)யமே சிந்தித்திருக்காநின்ற கந்தப்ப தம்பிரான் சிவப்பிரகாசவுரை.

திருஞான சம்பந்தன சேவடிபெற்ற
பெருஞான மெல்லாம் பெரிதுண் டாமே.

*   *   *   *

சரவண தேவனை சற்குரு நாதனைச் சங்கையெனுங்
கரவனை யாவுளந் தோறுங் குடிகொண்ட காவலனை
யரவனை யானயன் காணுத ஞான மருள் பரனைச்
சிரவணஞ் செய்து கழியுமென் னுயித் தினந் தினமே

(கு-பு.)—

இது முன் நம்பர் பிரதிபோன்றது. இதில் இவ்வுரை, பதினைந்தாவதாகிய " நீடு பராசத்தி " என்னும் செய்யுள் தொடங்கி முழுவதற்குமிருக்கிறது. முதலில் 55 ஏடுகளும் அதிலடங்கிய பாகங்களும் இல்லை. இவ்வுரை முடிந்த பின்னர்,

" தேகந்தேகி யின்ன திதென்றே தெரிவரு காலங்கள்
சீவன்முத்தி பதம்பெறு காலஞ் சென்மமு மன்றொழியுந்
தேகந்தானே யான்மா வல்ல(ச்) செடமய மாகையினுல்
தேக மவத்தைகள் கண்டிங் குணர்பவன் தேகி யெனப் படுவான்.
" தேக மசித்துத் தேகிச் சித்துத் தேக மழிந்து விடுந்
தேகி யொருக்காற் பிறவா னிறவான் சினமய மாதலினு
லாகம மிவவண மோதியு முணரா தடியே னயர்கின்றே
னம்பிகை கச்சிக் காமக் கோட்டத் தபிரா மித்தாயே."

என்ற இரண்டு பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

No. 1310. சிவப்பிரகாச மூலக்கருத்து.

ŚIVAPPIRAKĀŚA MŪLAKKARUTTU.

Substance, palm-leaf. Size, 11 × 1¼ inches. Pages, 14. Lines, 10 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 189*a*. The other works herein are Tugaḷari-ōdakkaṭṭaḷai 1*a* Attuvitavēdāntakkaṭṭaḷai 20*a*, Vēdāntavuraippaḍi-

kaṭṭaḷai 38a, Śivānandamālai 55a, Dēvīkālōttaram with commentary 101a, Oliviloḍukkam 159a, Tarccoyalaḻindatahamai 197b, Dēvīkālōttara-mahattuvam 198b.

Complete.

A work containing the 100 Kuraḷveṇbā stanzas referred to under No. 1308 ante. The author is Kāvai Ambalavāṇattambirān.

Beginning:

சிவப்பிரகாச முகவுரை.

ஒளியான தொன்றும் விநாயகன்று . . . செ . .
. . . ரந்தாவள . . . லவீது . . . நான்கு . . .

* * * *

சுத்தமானயயினியல்பே யிருத்தி
மன்னியவி ரண்டினும் மாயையின் விரித்த

* * * *

நிலவுல கொன்றும் பரசமயக் கருத்
திருவரு ளொன்றும் ப(ரு)வங் கூறியது.

சிவப்பிரகாச மூலககருத்து.

“ஒளியான” விநாயகத்துதி.

“ஓங்கொளியாய்”
மன்னிய கடவுள் பொன்னடி வாழ்த்தி
முன்னவ னுண்மை முறைமை மொழிந்தது. (க)

“பரந்தபரா”
புத்தியு முத்தியும் பொருந்திநின் றளிகளுஞ்
சத்திதன் பேதத் தகைமைசாற் றியது. (உ)

End:

“தொண்டர்களிட”
சிவமாம் வேடஞ் சிவாலய மெனத்தொழுந்
தவமா ஞானச சரிதைசாற் றியது.
இங்கு குறிப்பக மண்டமண் டொண்ட
ராங்கவை யாறு மணைந்தோர் தன்மை. (கஅ)

“நிலவுலகாயு”
அந்தமில் சமையிக (ளியா)வரு மறைய
வந்த முறுபொரு ளறைந்த தென்றது
நிலவுல கொன்றும் பரசமையக கருத்து. (கக)

“திருவருள் கொடுத்து”
பெருநூற் பொருளைப் பின்முன மலைவற
வருளுடன் கொள்பவர்க் கமைந்தநூ லென்றது
திருவரு ளொன்றும் பருவங் கூறியது.

Colophon:

சிவப்பிரகாச மூலக்கருத்துரை முற்றும்.

(கு-பு.)—

இது, 1308-ஆம் நம்பரில் வந்துள்ளதே ; சாலை அம்பலவாணத்தம்பிரானால் இயற்றப்பட்டது. முற்றும் இருக்கிறது.

சிவப்பிரகாசச் செய்யுட்களின் அடிவரவும் கருத்தும் நூலின் முதலிலும், அகச்சமயம் புறச்சமயம் முதலியவற்றின் பிரிவுகள் நூலின் இறுதியிலும் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளன.

No. 1311. சிவப்பிரகாசம், மூலமும் கருத்தும்.
ŚIVAPPIRAKĀŚAM WITH PURPORT.

Pages, 44. Lines, 8 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1226.

Contains the 100 stanzas of Śivappirakāśam and 100 Kuṟaḷveṇbās of Ambalavāṇattambirān referred to under the previous number.

(கு-பு.)—

இது முன் நம்பர்களிற் குறிப்பிடப்பட்ட பிரதிபோன்றது ; ஆயினும் சிவப்பிரகாசமூலச்செய்யுட்கள் முழுவதும், சாலை அம்பலவாணத் தம்பிரானார் இயற்றிய நூறு குறள்வெண்பாக்களும் இருக்கின்றன.

No. 1312. சிவப்பிரகாசச் சிந்தனையுரை.
ŚIVAPPIRAKĀŚAC CINTANAIYURAI.

Pages, 306. Lines, 7 on a page

Begins on fol. 1*a* of the MS described under No. 136.

Complete.

Śivappirakāśam is one of the 14 works on the Śaivasiddhāntam The author is Koṟṟavangudi Umāpati Śivācāriyar. This work has been commented upon by Śivappirakāśar and others. The work under notice is the commentary on the Kuṟaḷveṇbā by Nalla Śivadēvar, a dispicle of Śaṅkaramūrtidēsikar of Tiruvāvaḍuturai. This commentary has not been printed.

Beginning:

சிவப்பிரகாச சிந்தனை.

பொன்னுடையா வடுதுறைவாழ் குருநமச்சிவாயபரி பூரணேசன்
றன்னடியாங் கதிர்பரப்பி யகவிருணீத் தறிவொளிபோற் றழுவலாலே
முன்னைமல மிரண்டுவினை மூன்றுமல மணுகாத முறைமை பெற்றே
யன்னையுத ரத்திலினி யவதரியா தானந்தத் தழுந்த லாமே.

*　*　*　*　*

சிவாகமங்களுள் ஞானபாதத்திற் கூறப்படும் பொருளை ஆராயும் ஆராய்ச்சி இந்நூற்றுணிவாம். சிவாகமங்கள், சிவபேதம் உருத்திரபேதமென்றிரு விதப்படும் ; அவையாவன:—விந்துவினின்று நாதந்தோன்றி விந்துவும் பிரணவமும் வன்னங்களுமாக முறையே பரிணமித்து, அவைகளின் முப்பத்திரண்டு மாத்திரை கொண்டதோரளவையாகச் செய்யப்பட்டனவாம. விஞ் ஞானகலரிற் பரமசிவன் (. . . . .) அவைகளின் உண்மைகளை யெல்லாம் மொழிபெயர்த்து மெய்கண்ட சிவாசாரியர் தமிழாக விரித்துந் தொகுத்தும்[து](தொ)கைவகை விரிவுமாகமுக்கூறாகவும் (. . . . .) பின்பு, உமாபதிசிவாசாரியர் அந்த நூற்கருத்தால் சிவஞானஞ்சித்தியானதின் பயனுகச் சிவம்பிரகாசிக்கும்படி அவ்விரு நூற் கருத்தும் விளங்கச் சிவப்பிரகாசமென்னுந் திருநாமகருறியுடைய நூலாகச் செய்தளித்தனர். இம்மூன்று நூற்கும் பயன அந்த நூலின் திருநாமமே விளக்குவதால், சிவஞானபோதம் முளைக்கவும், அர்த்த சிவஞானஞ்சித்திக்கவும், அதன் பின் சிவம்பிரகாசிக்கவும் என னுந்[து](தொ)டர்ச்சியால் (. . . . .) அவ்விரு நூற்கருத்துமுணார்ந்தோரே இந்நூல் கோடற்கு அதிகாரிகளாவரென்பது தாமே[ம](ன) போதரும்.

இந்நூற்கு வியாக்கி(யை)செய்தற்கு யான் உரியேனல்லனாயிருந்தும் ஈண்டுள்ள பெரியோர்கள் இந்நூற்கருத்தை ஒருவழியாகத் தோன்றப்பண்ண வேண்டுமென்றமையால் பணி தலைமேற்கொள்ளுமாசையென்வழித்தல்ல வாகலின், தெரிந்தவாறு ஒருபி[ற](ர)காரம் வியாக்கி(யை)செய்தற்கு ஒருப் பட்டவாறும். (. . . . .)

போதபூரணசொரூப புண்ணியமென் புண்ணியத்தின் பொருளா யிங்கே
நாதமுடி வானதொரு குறிசிறியேன் பொருட்டாக நயந்து கொண்டு
சூதகலப் பரஞான முதலியென தகவிருளைத் துரந்த ஞான
வாதவன்றென் றுறைசையிற்சங் கரமூ[ற்](ர்த்)தி மாதவன்ரு ளகத்துள்
வைப்பாம்.

"ஒளியான திருமேனி (. . . . . . .) நினையாவே."

ஒளியான திருமேனி எ-து ஞானப்பிரகாசமாய்ச் சிவனுக்குத் திருமேனி தானேயாய்த் தாதான்மியமாகிய பராசத்தியின்றும், உமிழ்தாளைமிகமேவும் எ-து, ஆன்மாக்களனைவரையும் மோக்ஷத்தள் அடைந்தருளவேண்டுங் காருண்ணியத்தாலுண்டாகிய இச்சை ஞானங் கிரியையென்னு மூன்று சத்தியும் மிகுதியும்பொருந்துகையினாலே, களியாரவருமானை எ-து இம்மூன்று சத்தியோடுங்கூடிய [கெற்](கர்ச்)சிதம் பொருந்திய ஆதிசத்தி யென்னும் யானையினது, கழல் எ-து யானைனதென்றற்ற[யி](வி)டமாய்ப் பத்தர்க்கெய்ப்பினில் வைப்பெனவுதவு முத்தித்தாளை, நாளுமறவாமல் (. . . . .
இருவினைகளும் முன்போலவந்து பொருந்தாது, அவர்களும் அவ்வாறு சதாகால பூசை செய்வதால் முதல்வனை மறந்து நினையார்கள் என்றவாறு.

End:

இனிக் கேவலமாவது ஈண்டுக் கூறிய ஐவகை உண்மைகட்கு இடமான கேவலங்களைந்தும், சகல சுத்தங்களிற்படும் கேவலங்களும்; அன்றியும், பிர[ளை](ள)ய கேவலம், விஞ்ஞான கேவலமென்றும் இவ்வாறு ஒன்பது பேதமாயவை விரிக்கில் வெகு பேதங்களுடைத்தாம்; அவை யெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகுமாகலின் சங்கிரகமாய்க் குருமுகமாய் அறிக.

ஏருறுகொற் றங்குடியு மாபதிசி வாசிரிய ரியம்பு மிந்தச்
சீருறுநற் சிவப்பிரகா சத்தினைமுற் றுணர்ந்தவர்தீ மலங்கண் மூன்றுங்
காருறுமா ணவக்கிழங்கு மிருவினையுங் கழன்றருளைக் கலந்தின் போங்கச்
சாருறுவ ரிப்புவியிற் றனையிழந்த சாக்கிரா தீத வாழ்வே

ஆவடுதண் டுறைசைவரு நல்லசிவ தேவனரு ளமைவின் றோங்க
மேவுசிவப் பிரகாச மெனும்பெயர்போல் விளங்கவுரை விளம்பி னானல்
பூவுலகி லிதைக்கேட்டுச சிந்தித்துத் தெளிந்தோர்பொய்ப் பிறவி நீங்கித்
தேவர்புகழ் பரமானந் தக்கடல்வாய்ப படிவரிது திண்ணந் தானே.

Colophon:

திருச்சிற்றம்பலகுருவி னருட்பதமுள்ளமைப்பாம்.
நல்லசிவதேவனடி யல்லலறத்தொழுவாம்.
சிவப்பிரகாசசிந்தனையுரை முற்றும்.

(கு-பு.)—

இது சிவப்பிரகாசத்தின உரைகளுள ஒன்று. திருவாவடுதுறைச் சங்கரமூர்த்தி தேசிகரின சிஷ்யராகிய நல்லசிவதேவனென்னும் பெரியார் இதை இயற்றினரென்று தெரிகிறது. இதில் இது முற்றும் உள்ளது. அச்சிடப் பெறவில்லை.

No. 1313. சிவயோகதீபிகை.

ŚIVAYŌGADĪPIKAI.

Substance, palm-leaf. Size, $3\frac{7}{8} \times 1\frac{3}{8}$ inches. Pages, 174. Lines, 10–11 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

This is the original of the work described under R. No. 304 of the Triennial Catalogue of MSS., Vol. II, Part II, Tamil.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக்கின் 304-ஆம் நம்பர் பிரதிக்கு மூலப்பிரதி. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது. ஏடுகள் மிகவுஞ் சிதைந்துள்ளன.

No. 1314.

மட

ŚIVĀNANDABŌDAM.

Pages, 4. Lines, 8 on a page.

Begins on fol. 361*a* of the MS. described under No. 83.

Complete.

A treatise on Śaiva religion dealing with the nature of the good conduct, etc., leading to salvation.

Beginning:

சிட்டர்கள் போற்றுஞ் சிவானந்த போதங்
கட்டுரைத் திடவருட் கணபதி காப்பு.

முப்பது வகைபடு முத்திநன் னெறியினைச்
செப்புவ னமைத்துத் தேசகா ரியத்தில்
பொறையிலம் பூதமும் பொயயென வருளானை
முறையுற நீங்கிடு முத்திச சகலமும்
பஞ்ச பூதப் பழிப்புறு முடலு
மஞ்சு புலன்றனி லறிந்திடு பொறிகளுஞ்
செறிந்திடு புலனைத் தெரிந்திடத் தனித்தனி
யறிந்திட வறியா வந்தக் கரணமும்

End:

மருளதி கார மலமகன் றிடவே
யருளது மேவிடு மவதர மிவனெண்
ணற்புத வருளா லத்து விதம்பெறச்
சிற்பரத் திசைவது சிவயோக மாகும்
(. . . . .)
நற்பர சிவத்துட னண்ணுமே ரின்பஞ்
சிற்பரா னந்தத் தரிசன மாகும்
பேறுபரா னந்தப் பெருக்கினிற கலந்தாங்
குறுவதா னந்த வவசமே வீடு
பொருந்திய நிலைசிவ போகம தாகும்
மெய்யுறு சமாதியை விடுத்துமவ் வருளி,
வையகங் காண்டது மறித்துக் காட்சியே.

(கு-பு.)—

இது சைவசமய விஷயமானது. கேவலநிலை, அருளவதாரம், கிரியாசத்தி முதல் சிவபோகம் ஈறாக உள்ள முத்திநன்னெறிகளின் தன்மைகள் முதலியன இன்னவென உணர்த்துவது; அகவற்பாவாலாகியது. இதை இயற்றியவர் பெயர் காலம் முதலியன விளங்கவில்லை. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

No. 1315. சிவானந்தமாலை.
ŚIVĀNANDAMĀLAI.

Substance, palm-leaf. Size, 9¼ × 1¼ inches. Pages, 130. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1*a*. The other work herein is Pañcaratnattiruppugaḻ 66*a*.

Complete.

An important work dealing with different topics connected with Śaivism. The portion covered by stanzas 389 to 410 is found to be the same as the 29th Prabandam of the work entitled the Pāḍutorai of Tattuvadēśikanāyanār and is called Neñjukkamaittal. However, in the commentaries on Kolaimaṟuttal and Vairāgyadīpam of Tiruppōrūr Cidambarasvāmigaḷ and in the commentary written by Turaiśai Cidambara Munivar on the Orupāvuṇmaiyupadēśam, these stanzas are referred to as belonging to Śivānandamālai.

Beginning :

கடவுள்வாழ்த்து.

பிடுதரும் காளத்திப் பேறுங் கடகளிறே
தேடுமிடம் வாடுமிடஞ் செல்லுமிட—நீடுபெகற்
றுஞ்சந்தி யானை துந் தோன்றாத முத்திவா
வஞ்சந்தி யானை யருள். (௧)

சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமெஞ் சுந்தரனுஞ்
சிற்சோல வாதவூர்த் தேசிகனும்—முடிகோலி
வந்திலரே னீறெங்கே மாமறைநூ றுனெங்கே
யெந்தைபிரா னைந்தெழுத்தெங் கே. (௫)

நூற்பெயர்.

பொய்ந்நூல் டைபிதர்றிப் பொத்ஙசப்பே யாகியருண்
மன்னூ லுணராத மாணுகே—ளி[ன்னூ](ந்நூ)லின்
பேர்சிவா னந்தப் பெருங்கடலுட் பேரமுத
மார்சிவா னந்தமாலை. (௬)

பாசஞ் சிவனை யனுபவிககப் டாவிக்கு
நேசந் தனக்கு நிகராகுங்—காசினிமே
னன்மா[ற்](ர்க)க மொன்றுமிலா நானும் பெரியோர்முன்
சன்மா[ற்](ர்க்)க நூலுரைத்த றுன்.

அவையடக்க முற்றும்.

நீயிருக்க வென்னறிவி ஞன்பட்ட நிட்டூரந்
தீயிருக்குங் கைபாயென் செப்புகேன்—போயகலப்
பாவனைசெய் வார்க்கரிய பாதா சிவாயசிவ
தீவினையி லேயறநொந் தேன். (௬)

வேறுபடாப் பேரின்ப வெள்ளத் தழுந்தியருட்
பேறுபெற யான்முயன்ற பித்தேதோ—மாறற்றோ
ரண்மைப் டயனுன வத்துவிதா னந்தாவெ
னுண்மைப் பயனே யுரை.

End:

உப்பகன்ற நீர்க்கூழு முண்டாற் பசிகெடுமோ
லப்பதுண்டு கூவல்குள மாறதனி—லிப்படியைப்
பார்த்தமையாய நெஞ்சமே பறந்தெழுந்து சென்றாலும்
பேர்த்துளத்தின் மேல்வருமோ பேசு. (௯௯)

ஆற்றங் கரைப்பசுத்தா னக்கரையோ டிக்கரையாய்த்
தோற்றும் பசும்புற் [று](ரு)டாபுறுமே—யாற்ற
வதுபோல நெஞ்சே யலைந்தலைப்பட டோடு
மிதுவே யுனக்கிதனாற் பேறு. (௯௬)

பொய்க்கனவும் பேய்த்தேரும் போலுமுடல் போமளவுஞ்
சி[ற](க)கெனவே யீசன் திருவடியை—நெககுருகிப்
பூண்டுவிடா தேகிடர்து போற்றியிடு நெஞ்சேநீ
மீண்டுபிற வாதே வி—. (௨௭௬)

ஆண்ட வியல்பை யறிந்து நினைந்துருகி
வேண்டிமிக மெய்யனபை மேன்மேலு—மீண்ட
லழியாதே பூண்டமைவா மாரமுதை நெஞ்சே
யொழியாதே நீ(யு)ண் டிரு. (௨௭௭)

Colophon:

சிவானந்தமாலை முற்றும்.

" வாக்குமனக் கெட்டாத வான்பரமே யென்மலத்தை
நீக்கி யருளகொழிக்க வேநினைந்து—பார்க்குள்
சரவணையென் றோர்நாமஞ் சாத்திவந்து வீட்டை
விரவுமரு ளால்விளக்கி [த்தா](ற்றால்). "

(கு-பு.)—

இது சிறந்த சைவசாத்திரங்களுள் ஒன்று. சைவமதச்சார்பான பல அரிய பெரிய விடயங்களை உவமை முகத்தால் எளிதில் விளக்குவது. இந்நூலின் 389 ஆம் செய்யுள்முதல் 410-ஆம் செய்யுள் வரையில் உள்ள பாகம், "நெஞ்சுக்கமைத்தல்" என்ற பெயருடன் தத்துவதேசிக நாயனார் பாடுதுறையில் 29-ஆம் பிரபந்தமாகக் காட்டப்பட்டுள்ளது. சிவானந்தமாலை முற்றுமுள்ள பழைய பிரதிகளில் அந்தப் பகுதியிருத்தலாலும், திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள் கொலைமறுத்தல் வைராக்கியதீபம் முதலிய நூலுரைகளிலும், துறைசைச்சிதம்பரமுனிவர் ஒருபாவுண்மையுபதேசத்தின் உரையிலும் மேற்கோள்காட்டுமிடங்களில் சிவானந்தமாலைச்செய்யுட்களென்றே எழுதிச்செல்வதாலும் அப்பாகத்தைத் தத்துவதேசிகநாயனாரியற்றிய பிரபந்தங்களுள் ஒன்றாகக் கருதுவது பொருத்தமானதல்லவென்று தோற்றுகிறது. இவ்வரிய நூலை இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை. இது சிறந்த பிரதி; திருத்தமானது.

No. 1316. சிவானந்தமாலை.

ŚIVĀNANDAMĀLAI.

Pages, 92. Lines, 9 on a page.

Begins on fol. 55*a* of the MS. described under No. 1310.

Complete, but one stanza in the end is wanting in this MS.

Same work as the above.

(கு-பு.)—

இது, முன் நம்பர் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது. இறுதியிலுள்ள "வாக்குமனக்கெட்டாத" என்னும் வெண்பா இந்தப் பிரதியில் இல்லை.

No. 1317. சிவானந்தமாலை.

ŚIVĀNANDAMĀLAI.

Pages, 10. Lines, 8 on a page.

Begins on fol. 389*a* of the MS. described under No. 83.

Contains only the portions entitled Nēyattaḻundal and Neñjukkamaittal.

(41) சிவபோகசாரம் ...	...	...	...	௭
(42) அமுத(பஞ்)சா(க்கர)ம்	...	...	...	௨
(43) பதிபசுபாச விளக்கம்	...	...	...	௪
(44) . . ானுபூதி விளக்கம்	...	...	...	௫
(45) சிவநெறிப் பிரகாசம்	...	...	...	௨
(46) மெ(ய்)ஞ்ஞான தீபம்	...	...	...	௬
(47) மெ(ய்)ஞ்ஞான வெண்பா	..	...	...	௧
(48) அஞ்ஞவதைப்பரணி	...	...	...	௭
(49) மோகவதைப்பரணி	..	...	...	௩
(50) (வை)ராகதீபம் ...	...	..	...	௩
(51) வயிராகசதகம் ...	...	...	...	௧
(52) ச[று](ரு)வ[க்கி](ஞ்)ஞானோத்தரம்		...	...	௧
(53) சிவஞான தீபம் ...	...	...	...	௫
(54) ஞானசாகர வெண்பா	...	...	...	௪
(55) உபதேசமாலை ...	...	...	...	௨
(56) போதரத்தினாகரம் ...	...	...	...	௯

	(நூல்.)	(செய்யுட்டொகை).
(57)	ஞானசூரியன்	க
(58)	திருமந்திரம்	ங௲௰க
(59)	அஞ்ஞான நிவி[ற்](ர்த்)தி	க
(60)	நிட்டானுபூதிசாரம்	க
(61)	சசிவன்னபோதை	க
(62)	மெய்க்குருவினு	க
(63)	ஞானமணமாலை	ம
(64)	எதிர்காலத்திரங்கல்	ங
(65)	(அத்து)விதவுண்மை	க
(66)	திருவம்மானை	சா
(67)	சித்தாந்த சிகாமணி	உ
(68)	. . . வீராகமம்	ங
(69)	(பட்)டினததுப்பிள்ளை நாயனார்	அ
(70)	சிவாகமா[ற](ர்த்)ததெரிசனம்	கூ
(71)	. . . . ஞவ நாயனா	ங
(72)	தாயுமானார்	ங
(73)	திருவாய் மொழி	அ
(74)	நாலடியார்	க
(75)	பிரபுலிங்க லீலை	அ
(76)	சிவஞானக் கலம்பகம்	க
(77)	நெஞ்சொடுமகிழ்தல்	உ
(78)	பஞ்சாக்கரப்பஃறொடை	க
(79)	பொன்வண்ணத்தந்தாதி	உ
(80)	அம்மை திருவநதாதி	க
(81)	சித்தரந்தாதி	க
(82)	தணிகையந்தாதி	உ
(83)	ஆனந்தருத்திரேசரந்தாதி	ரு
(84)	பஞ்சாக்க(ரவ)ந்தாதி	உ
(85)	கலசையந்தாதி	க
(86)	இளசையந்தாதி	...
(87)	உபதேச காண்டம்	...
(88)	காசிகாண்டம்	...
(89)	சிந்தாமணி	...
(90)	கந்தனலங்காரம்	...
(91)	கந்தனனுபூதி	...
(92)	போரூர் முறை	...
(93)	. . . . ள்ளைத் தமிழ்	க
(94)	தணிகையாற்றுப்படை	க
(95)	. . . . சிரோ[ண]தயம்	க
(96)	. . . . ஜூபவத்துதி	க
(97)	. . . .	க
(98)	. . . . க்கியம்	க
(99)	. . . . கத்துதி	[illegible]

(நூல்.)				(செய்யுட்டொகை)
(100) ஏகம்பவாணரானந்தக்களிப்பு		...	...	க
(101) ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூது		...	...	க
(102) (கு)கைநமச்சிவாயர்	...	...	...	உ
(103) . . ரமாசாரியார்	...	...	...	க
(104) சிவக்கியான சுவாமிகள்	...	...	...	உ
(105) கச்சியப்ப சுவாமிகள்	...	...	...	உ
(106) பழுதைகட்டியம்பலவாணர்	...	...	...	க
(107) வாரணசியையா	...	...	..	க
(108) சந்திர சேகரவாக்கியம்	..	...	..	க
(109) சைவசமய நெறி	...	...	..	க
ஆக மெய்நூல் ஙய—கரு கூடினவுதாரணம்			...	ககய

No. 1593. மெய்ஞ்ஞான விளக்கம்.
MEYÑÑĀNAVIḶAKKAM.

Substance, palm-leaf. Size, $11\frac{1}{8} \times 1\frac{5}{8}$ inches. Pages, 453. Lines, 10 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old Complete.

A poem bearing on Advaita Vēdānta and written after the model of the Sanskrit drama Prabōdhacandrōdaya of Krṣṇamiśra with abstract qualities such as Prābōdha, Mōha, Vivēka, Ḍambha personified as characters. It thus incidentally explains the nature of the Brahman, Māyā, Manas, etc., as also the leading principles, of the Bauddha, the jaina, the Pāñcarātra and other religious systems and criticises them and gives the settled conclusions of the Vēdānta. It is stated herein that it is a rendering, by the author Tiruvēṅkaṭanāthar, son of Perumaḷ Ayyar, of the Sanskrit work written by himself at the instance of his Guru Rāghavānandar. The author is said to have been a devotee of Lord Kriṣṇa and to have ruled over the Tinnevelly District as the representative of Muttuvīrappa Nāyakkar king of the Pandiya country and to have prompted Vaithinātha Nāvalar of Tiruvārūre to write the Ilakkanaviḷakkam also called the Kuṭṭitolkāppiyam. The work contains on the whole 2013 stanzas and is divided into 49, sarukkas including the Pāyiram the names of which are given in the Tamil remarks below.

Beginning :

மெய்ஞ்ஞான விளக்கம்.

பாயிரம்.

திருமடந் தைதன் காதலன் சிவந்ததாண் மலருங்
கருணை யந்தடங் கண்களு நாபியங் கமலத்
தொருது முந்தையு மூடுத்தபொன் னுடையுந் தொழுத்த
மருமவித்தலைப் துளவுமென் மனத்துள்வா ழியவே. (க)

பொன்னி மாநதி புடைபரந் தோங்கலிற் புதுப்பூங்
கன்னி வாழையுந் தாழையுங் காய்க்குலைக் கமுகும்
பின்னி நீள்கதிர்ச் செந்நெலுங் கன்னலும் பிறவு
மன்னி நீடிய வளவர்சோ ணாட்டொரு வள்ளல். (௨)

குழைக்கு மம்பொனிற் குயிற்றிய பன்மணிக் குன்றுந்
தழைக்கு மெண்ணிலா வரமியத் தலங்களுந் தரளத்
திழைக்கு மேழ்நிலை மாடமுங் கூடமு மெங்கு
மழைக்கு லந்தவழ் நெடுமதிண் மாதைக்கு மன்னன் (௩)

(* * * *)

சீதைகாதலனெனத் திசைக ளெட்டையு
நீதியாற் புரந்துநன் னெறிநடாத்திய
வேதபா ரகனதிரு வேங்கடேந்திரன்
மாதயா நிதிபுவி மன்னர் மன்னனே. (௧௭

(* * * *)

ஓதலும் ராகவா னந்த யோகியும்
போதமுள் ளோர்மனை வாழ்க்கை பூணிலென்
னேதமில் லுணர்விலா ரிடைந்து காணினும்
பேதுறு முறைமையினு மிருந்தென் பேறரோ (௨௨)

(* * * *)

சகத்தொரு பிரபோதசந்திரோ தயமெனு நாடகந்தான்
மிகுத்துரை செய்த கிருஷ்ண மிச்சிரன் ருனு நாண(ப்)
புகழ்த் திருவேங்கடேந்திரன் பூசுரர்குலத்துக் கெல்லாம்
வகுத்தகாப்பியமதாக வடமொழியதனிற் செய்தும் (௨௮)

கற்பதற் கெளிதாய நாவிற் கனிந்துதே னூற மேலாந்
தற்பரஞ்சோதி தானாய்த் தம்முளேயுதயமாகிச்
சொற்பசுந்தமிழினாலுந் தொகுத்ததை மாதைவேந்தன்
பற்பலவருணத்தோர்க்கும் பாங்குறப்பகரலுற்றான். (௨௯)

பாயிரச்சருக்க முற்றும்.

(* * * *)

அத்துவிதம் வாசாம கோசரமனோதீதமசல மூலந்
தத்துவமப்பிரமேயஞ்சருவசமஞ்சச் சிதானந்தஞ் சாந்தஞ்
சுத்தமவியத்தமவிகாரமனு பவந்துரியஞ் சுயம்பிரகாச
நித்திய நிர்க்குண மனந்தநிர[த]திசயம் பிரமமென நின்ற தொ
[ன்றே. (௧)

போந்துவிகா ரஞ்சிறிதும் பொருந்தாது தன்னியல்பிற்
பொருந்தி நிற்பக்
காந்தமசை யாதிருந்து மக்காந்தத் தெதிருசி
கம்பித்தாற்போல்
வாய்ந்தவதன் சந்நிதியின் மாயை விகாரம்புரிந்து
மணிச்சூன்முற்றி
யேய்ந்த பெயர் மானதனென்றெடுத்தோத வொருமகவை
யீன்றாண் டன்றே. (௪)

End:

அறிவுமறியப் படும்பொருளு மறிவான்றனுமவ்விகற்பம்
பிறிய மோக னுதியர்செய் பிழைகண் முழுது பிழையாக

மறிவிலகண்ட பூரணசின்மயத்தைத்தழுவி வயங்கினனால். (உஉ)

மடிவிலாமானதன்வ[ர]யிப்ப மாஷயயாரோபிதம் மறைய
முடிவிலாத சின்மயமா மூர்த்தி யுபாதி முட்டகன்று
விடிவிலாத விருட்பிழம்பை விழுங்கி திமிர்ந்த வியனசுடாபோ
னெடிய சோதிபரப்பியெங்கு நிறைந்தொன்றாகி நின்றனே. (உ௩)

(* * * *)

விரிகாசினியின் மெய்ஞ்ஞான
விளக்கமெனுமிவ் வியன்கதையை
யொருகா ஓ வந்துபடிப்போரு
முணர்வுள்ளுறக் கேட்போரும்
பெருகாதரவா விகத்தின்பப்
பெரும்போகங்கள் பெறுவாபின்னும்
பரிபூரணசச்சிதானந்த
பாராவரம் படிவரன்றே

(* * * *)

போதத்தமிழ்க்கும் வடகலைக்கும்
புலவோர்தமக்கும் பொருள்விரித்துச
சீதைக்கிறைவ னெனநீதிச்
செங்கோல் செலுத்தித்திசைபுரந்து
வேதப்பனுவன் மெய்ஞ்ஞான
விளக்காலுலகை விளக்குமெங்கண்
மாதைத்திருவேங்கடநாத
மறையோன்வாழி வாழியவே. (உ௪)

பிரபோதனமுடிசூடு சருக்க முற்றும்.

ஆக சருக்கம் சய்௯-க்குச செயயுள் உ௲ய௩.

(கு-பு.)—

இது அத்வைத வேதாந்த விஷயமானது. வடமொழியிலுள்ள பிரபோத சந்திரோதயம் என்னும் நாடக நூலே போல, பிரபோதம் (மெய்ஞ்ஞானம்), மோகம், விவேகம், இடம்பம், மித்தை, முதலியவற்றைப் பாத்திரங்களாக உருவகப்படுத்தி அமைத்துக் காப்பிய ரூபமாகச செய்யப்பட்டுள்ளது. சிறந்த நடையுடையது.

(1) உற்பத்திச் சருக்கம்.
(2) மோகன் அரசாட்சிச் சருககம்.
(3) அவித்தியாபுரச் சருக்கம்.
(4) விவேகன் வனம்புகு சருக்கம்.
(5) விவேகன் மந்திரச் சருக்கம்.
(6) விவேகன் ஓற்றுக்கேள்விச் சருக்கம்.
(7) விவேகன்சேனைகரநதுறை சருக்கம்.
(8) சத்துவச்சிரத்தை தூதச் சருக்கம்.

(9) மோகனெற்றுக்கேள்விச் சருக்கம்.
(10) இடம்பனுக்கு ஓலைவிடு சருக்கம்.
(11) இடம்பாங்காரச் சருக்கம்.
(12) மோகன் காசிபுகு சருக்கம்.
(13) சாருவாகச் சருக்கம்.
(14) கலிச் சருக்கம்.
(15) மித்தியாதிட்டிச் சருக்கம்.
(16) சிரத்தை போக்கிடைபூற்றுச் சருக்கம்.
(17) சாந்திச் சருக்கம்.
(18) சமணனுதியர் சருக்கம்.
(19) வயிரவிவதைச் சருக்கம்.
(20) சிரத்தை மீட்சிச் சருக்கம்.
(21) விவேகன் போதகரை வரவழைத்த சருக்கம்.
(22) உபநிடதை வேளவிச் சருக்கம்.
(23) சக்கரதீர்த்தச் சருக்கம்.
(24) காமனுதியர் காசிபுகு சருக்கம்.
(25) நியாயன்றூதுச் சருக்கம்.
(26) காமனுதியர் வீரலாபச் சருக்கம்.
(27) நிருபகாதியர் வீரலாபச் சருக்கம்.
(28) விவேகன் காசிபுகு சருக்கம்.
(29) படையெழுச்சிச் சருக்கம்.
(30) காமனுதியர் வதைச் சருக்கம்.
(31) உலகாயதன் வதைச் சருக்கம்.
(32) புத்தர் வதைச் சருக்கம்.
(33) சமணர் வதைச் சருக்கம்.
(34) மோகன் வதைச் சருக்கம்.
(35) மானதன் புலம்புறு சருக்கம்.
(36) கலைமகள் தேற்றச சருக்கம்.
(37) விவேகன் முடிசூடு சருக்கம்.
(38) மாயைச் சருக்கம்.
(39) மீமாஞ்சச் சருக்கம்.
(40) சமூசசயன் சருக்கம்.
(41) சாங்கியமதச் சருக்கம்.
(42) தார்க்கிகன் மதச் சருக்கம்.
(43) வேதாந்தி மறுத்தற் சருக்கம்.
(44) யோகமதச் சருக்கம்.
(45) பாஞ்சராத்திரச் சருக்கம்.
(46) சைவசித்தாந்திச் சருக்கம்.
(47) வேதாந்தச சருக்கம்.
(48) பிரபோதன் முடிசூடு சருக்கம்.

என 48ம், பாயிரசசருக்கம் ஒன்றும் ஆக 49 சருக்கங்களாகப் பிரிக்கப்பட்டுளது. மொத்தம் 2,013 விருத்தங்கள் கொண்டது.

பிரமம், மாயை, மனம், மோகம், அகங்காரம் முதலியவற்றினிலக்கணங்களும், காமக்குரோதாதிகளுண்டாயபோது உண்டாகும் மெய்ப்பாடுகளின்

தன்மைகளும், உலோகாயதம், பௌத்தம், ஜைனம், பாஞ்சராத்திரம் முத லிய மதங்களின் தன்மைகளும் அவற்றின் கண்டனமும், தர்க்கத்தின் சிறப் பும், வேதாந்தத்தின் நிச்சயம் இன்னதென்பதும் ஆகிய இவைபோன்ற பல விஷயங்கள் இந்நூலில் நன்குபெறப்படும். இந்தப பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

இந்நூலாசிரியர் திருவேங்கட நாதர் என்னும் ஓர் அந்தணர். இவா இராகவானந்தர் என்னும் தமது குருவின் கட்டளைப்படி இந்நூலை முதலில் வடமொழியிற் செய்து, பின்பு அனைவர்க்கும் பயன்படும் வண்ணம் தமிழி லும் இயற்றினர்.

இவர் சோழநாட்டிலே * மாதை என்னும் ஊரிலிருந்த ஸ்மார்த்தப் பிரா மண வகுப்பினராகிய பெருமாளையர் என்பவரது புத்திரர். கி. பி. 1682 ல் பாண்டிநாட்டைப் பரிபாலித்துவந்த முத்துவீரப்ப நாயகரின் பிரதிநிதியா கத் திருநெல்வேலியைப் பரிபாலித்து வந்தவர். திருவாரூர் வைத்தியநாத நாவலரைக்கொண்டு இலக்கணவிளக்கஞ் செய்வித்தவர். கண்ணபிரானி டத்துமிகுந்த பக்தியுடையவர்.

No. 1594. மெய்ஞ்ஞானவிளக்கம்.

MEYÑÑĀNAVIḶAKKAM.

Substance, palm-leaf. Size, 15¼ × 1½ inches. Pages, 392. Lines, 8 on a page. Character, Tamil. Condition, Good. Appearance, New.

Complete.

Same work as the above

Colophon :

மெய்ஞ்ஞான விளக்கம் எழுதி நிறைவேறியது. சாதாரண ஸ்ரீ சித் திரைமீ௳ உகல பசவையப்ப வாத்தியாரால் எழுதி நிறைவேறியது.

English 1851. [29-12-94].

(த-பு.)—

இது முன்பிரதி போன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உளது.

No. 1595. மோகவதைப்பரணி.

MŌHAVADAIPPARAṆI.

Pages, 79. Lines, 9 on a page.

Begins on fol. 149*a* of the MS. described under No. 1422.

Complete.

An allegorical work on Advaita Vēdānta by Jōtiprakaśar disciple of Tattvadēśikanāyanār. Herein, spiritual knowledge is represented as a valorous knight conquering Moham or nescience who is represented as a king. The work belongs to a class of Prabandam called Paraṇi.

---

* மாதை, திருவாமாத்தூருக்கொரு பெயர்; இவ்வூர் தென்னாற்காடு ஜில்லா விழுப்புரம் தாலூகாவில் உள்ளதென்பர்.

Beginning :

மதிபரிதி நீர்தீகால் வானவனியியமான(ன்) வடிவாயெல்லா
வுதிபதியுமாயனைத்துமாகியல்லாவறிவுருவை மறை முடிவையகத்தள்வைப்
[பாம்.

(* * * *)

ஐந்துபுலனுக்குமிசை வாகவிறைபொற்று
ளாறுசமய நூலின்முடி வற்றபொருள் காண
வுய்ந்துபுகு முத்தி[யுமு](யை)யுடம்புட னுளத்தே
விளங்கிட வுளங்கையின் விளங்கனியை யொத்தே. (உம)

(* * * *)

கடைதிறப்பு.

பண்ணூர்மொழி யமிர்தந்தரு பவளந்திற வாதே
கண்ணூலுயி ருண்பீர்கடை திறமின்கடை திறமின். (க)

உருவாய்வரு பெருமானை யுளங்கொண்டெவ ருடனுந்
திருவாய்மலர் திறவீர்கடை திறமின்கடை திறமின். (உ)

End :

துஞ்சலின்றி யுணர்வின்றி மயலின்றி யயலுந்
தொடர்புமின்றி யிடரின்ப முதலின்றி யெவையு
மெஞ்சலின்றி யிதுவென்னு மியல்பின்றி யுளதா
மியாவையும் பிரமமாகிய திருந்தபடியெ. (உம)

(* * * *)

உன்னவரிதென் றுபதிடதங்க ளோதும்பொருளை யொருமொழியிற்
சொன்ன விரகினைப் பாடீரே சொரூபானந்தனைப் பாடீரே. (ரு)

பவமாயம்வேரறப் பார்த்திறைவன்
பதத்திலும் பண்டை நாமொழிந்து
சிவமாயிருந்தமை பாடீரே
சிவப்பிரகாசனைப் பாடீரே,

* * * *

மூவர்தேவர் வாழியென்று முடிவணங்கு மிருகழற்
றேவதேவன் வாழியே சிவப்பிரகாசன் வாழியே. (மஉ)

அலவா மென்றங் கலையுறு தர்க்கப் [பி](ப)சாச மோசகன்வாழியே
யதுநீயென்றங் கருமறை சுச்சத்திறோதுமோர் பொருள்வாழியே
சொலவரலென்றுந் தொடர்வறுசற்சிற் சுகாதிகாரணன் வாழியே
சொரூபானந்தன் கழல்புனை தத்துவப் பிரகாசமாமுனி வாழியே.

மங தாழிசை.

Colophon :

மோகவதைப் பரணிமுற்றிற்று, முற்றும்.

கருத்திற்சஞ்சலந்திருத்திக் கண்டுகொண்டிருச் சிற்றம்பலம்.

(சு-பு.)—

இது, * தத்துவதேசிக நாயனாரது சிஷ்யராகிய சோதிப்பிரகாசர் இயற்றிய நூல்களுள் ஒன்று. அத்வைத மத விஷயமானது. மோகமென்பதை ஓர் அரசனாகவும், ஞானமென்பதை அவனைச்சயிக்கும் ஒரு சிறந்த வீரனாகவும் உருவகப்படுத்தி ஞானத்தைத் தலை மகனாகவைத்துப் பாடப்பட்டுள்ளது.

---

* இந்நூலையும் அஞ்ஞவதைப் பரணியையும் தத்துவதேசிக நாயனார் இயற்றவில்லையென்பதைச் செந்தமிழ் முதல்தொகுதி. 288—9 ஆம் பக்கங்களிற் காண்க.

இதில், அறிவின்மை யென்னு மாதினிடத்து மனமெனனும் மைந்தன் தோன்ற அவனுக்கு அபேக்ஷை, உபேக்ஷையென்னு மிருமனைவியரிடத்து முறையே மோகன், விவேகனென மைந்தரிருவர் தோன்ற மனமென்பவன் அபேக்ஷை யென்னும் மனைவியிடத்து அன்பு வைத்ததனால் அவளை மைந்தனாகிய மோகனுக்கே அரசுத் தன்மை முற்றுமளிக்க அதனால் அவன் விவேகனுக்குச் சிறிதும் இடந்தராது அரசுசெலுத்தும்போது அவனை விவேகன் உபாயத்தினாற் செயித்தனனென விஷயம் அழகாகக் கூறப்பட்டிருக்கிறது. செய்யுள் நடை சிறந்தது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது

No. 1596. ரிபுகீதை.

RIPUGĪTAI.

Pages, 82. Lines, 8 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1579
Complete.

A treatise on Advaita Vēdānta. It is a prose rendering in Tamil of the Sanskrit Ṛbhugītā, vide No. 4567 of the D.O.S. MSS. Vol. IX. The headings of the various Prakaraṇas are given in the Tamil remarks below.

Beginning :

ரிபு கீதை, ஆத்ம நிரணயப் பிரகரணம்.

சின்மாத்திர சொரூபமாயிருக்கிற பிரமமே கேவலனாய், தத்துவனாய், பரமானந்த சொரூபனாய் அகண்[டையி](டா)காசனாய்ச சருவோத்தமனாயிருக்கிற ஆத்மா. முன்னே பிரம வித்துக்களாயிருக்கிற ரிஷிகளெல்லாருமொருகாற்கூடி, சனற்குமாரரை யுக்தமாயிருக்கிற ஞானசொரூபத்தைக் கேட்டார்கள்.

வாருமையா பகவானே ! தேவரீர் சகல பாவமுமற்றவர் சகல சொரூப தத்துவமுமறிந்தவர். ஆத்மஞான சொரூபர். உம்மாலே யற்புதமாயிருக்கிற ஆத்மாவை யிதமெல்லாம் சொல்லப்படடது. எங்களாலேயும் வெகுகோடி காலம் கே[ழ்](ட்)கப்பட[டு](ட)த. அப்படியிருந்தும் எங்களுக்குத் திருப்தியில்லை. இப்போ(து) ரிபுவானவர் நிதாகரென்கிற ரிஷிக்கு யாதொரு தத்துவஞ்சொன்னாரதை எங்களுக்குச சொல்லும் என்று கேட்ட ரிஷிகளைப் பார்த்து அவர்கள் சொன்ன வார்த்தைகேட்டு மிகவும் செவிகுளிர்ந்து சந்தோஷித்து யோகியாயிருக்கிற சனர்குமாரரானவர் ஆத்மாவை நித்தமுத்தனாயும் சின்மாத்திர சொரூபமாயுஞ் சொல்லத்தொடங்கினார்.

சனற்குமாரர் சொர்லும்படி :—வாருங்கோள் ரிஷிகளே (. . . . .) சொல்லுகிறோம் கேளுங்கோள் ; ரிபுவென்கிற ரிஷியானவர் அன்புடனே மிகவும் பிரமலோகத்திலும் விசேசமாகப் பதரிகாசிரமத்தை யடைந்து நிதாகரென்கிற ரிஷியுடைய கிருகத்திலே போய் அவராலே பூசை பண்ணப்பட்டு அவராலே கொடுக்கப்பட்ட அன்னபானாதிகளையும் [பொ]

(பு)சித்து வெகுவாயுபசாரத்தை யடைந்தபிறகு நிதாகரைப்பார்த்து(ச) சொல்லும்படி :—

வாருமையா நிதாகரே! நீர் பண்ணின உபசாரம் தமக்கொன்றும் மெள்ளவாவாறும் நாம் பொசித்ததுமில்லை; நீர் சொன்னத்திலே ஒரு வார்த்தையுஞ் சத்தியமில்லை; நீர் தாம்நாம்தாம் பின்னையொருத்தன்றான் ஒரு காலத்திலும் ஒருக்காலும் இல்லையென்று சொல்லி அவர் நிதாகர் மடத்தைவிட்டுப்போன பிறகு நிதாகரானவர் செய் நன்றியறியாதவரென்றுநிச்சயித்து ஆதரியாமற் சும்மாயிருந்தார். அதின் பிறகும் வந்தவுடனே திருப்பவுமுபசாரத்தையடைந்து நன்றாய்ப் பொசித்த பிறகு முன்போலே தானே சொல்லித்திரும்பிப்போனார் (. . . . .)

End:

நித்தியமும் [பிரமம்] பிரமானந்த சொரூபமே. அநித்தியமும் பிரமானந்த சொரூபமே. நித்தியாநித்ய மற்ற[ம]தும் பிரமானந்த சொரூபமே. வேதமும் பிரமானந்த சொரூபமே. சாத்திரமும் பிரமானந்த சொரூபமும் வேதசாத்திரங்களிலே சொல்லலப்பட்ட வனுவய வியதிரேகையும் பிரமானந்த சொரூபமே. இதுக்கெட்டாததும் பிரமானந்த சொரூபமே. சொல்லப்பட்டதும் பிரமானந்த சொரூபமே. பிரமானந்த சொரூபத்தை யன்னியிலே வேறே யொருவஸ்துக் காலதிரயத்திலேயுமில்லைவேயில்லை.

பிரமமே சத்தியம்.

(கு-பு.)—

இது வேதாந்த நூல்களுள் ஒன்று. வடமொழியினின்று மொழி பெயர்த்துத் தமிழாற் செய்யப்பட்டது. ரிபு என்னும் பெரியார் நிதாகரென்னும் ரிஷிககுச் சொல்லுவதாக அமைந்துளது.

(1) ஆத்ம நிர்ணயப் பிரகரணம், (2) அநாத்ம நிர்ணயப் பிரகரணம், (3) அஹம்பிரஹ்மப் பிரகரணம், (4) த்வம்ப்ரஹ்மப் பிரகரணம், (5) சர்வமு மனுதிப் பிரகரணம், (6) சர்வமுமித்தியாப் பிரகரணம், (7) சின்மாத்திரப் பிரகரணம், (8) அகண்டாகாசப் பிரகரணம், (9) நித்யானுபவப் பிரகரணம், (10) சசிருங்கப் பிரகரணம், (11) சர்வம்பிரஹ்மப் பிரகரணம், (12) பிரமாஸ்தப் பிரகரணம், (13) பிரமதாப்டணப் பிரகரணம், (14) ஆத்மநித்ய ஹோமப் பிரகரணம், (15) சீவன்முத்திப் பிரகரணம், (16) பிரமானந்த சொரூபப் பிரகரணம் முதலிய பல பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுளது. இதைச் செய்தவர் பெயர் விளங்கவில்லை. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமுளது.

No. 1597. ரிபுகீதை.

RIPUGĪTAI.

Pages, 72. Lines, 7 on a page.

Begins on fol 15*a* of the MS. described under No. 1437.

Contains from the 1st to the 15th Prakaraṇa.

Same work as that described above.

கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. ஆயினும் இதில் முதலிலிருந்து 15-வதாகிய சிவன் முத்திப்பிரகரணம் இறுதியாகவுள்ளது. ஆகையால் இந்தப்பிரதியில் இந்நூல் முற்றுப்பெறவில்லை.

No. 1598. விவேகசாரம்.

VIVĒKASĀRAM.

Pages, 64. Lines 8 on a page.

Begins on fol. 255*a* of the MS. described under No. 1423.

Incomplete.

Same work as that described under R. No. 338 of the Triennial Catalogue of MSS. The MS. described therein is a copy made from this one.

(கு. பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 338-ஆம் நம்பர் பிரதியின் மூலப்பிரதி. அதிலுள்ள அளவே இதிலும் உளது.

No. 1599. விவேகசாரம்.

VIVĒKASĀRAM.

Pages, 50. Lines 7 on a page.

Begins on fol. 16*a* of the MS. described under No. 1551.

Incomplete.

Same work as the above.

Beginning.

இது முன் பிரதிபோனறது. முதலிலிருந்து அஞ்ஞான ஸ்வரூப நிரூபணம் வரையில் உள்ளது. ஆதலால் இது முற்றுப்பெறவில்லை.

No. 1600. விவேகசாரம்.

VIVĒKASĀRAM.

Pages, 284. Lines 8, 9 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1506.

Contains the Adhyāyas 1 to 14 and 22 to 45.

Similar to the work described above. The headings of the Adhyāyas as found in this MS is given below at the end.

The last portion of the 14th Adhyāya and the Adhyāyas 15 to 21 are not found in this MS. The work is also called Vāsudēvamanana

---

* இது முதல் 6 நம்பர்களிலுள்ள புத்தகங்களிற் கூறப்படும் விஷயங்களும் புத்தகப் பெயரும் ஒன்றாயிருப்பினும் நடையிலும், அதிகாரப் பாகுபாடு முதலியவற்றிலும் அவற்றுள் ஒன்றற்கொன்று மிக்க வேறுபாடுண்மையின் தனித்தனியே முதலும் இறுதியும் காட்டி அதிகாரப் பாகுபாடும் காட்டப்பட்டிருக்கிறது.

probably after the name of the author Vāsudēva as it is so given in the colophon at the end of some of the Adhyāyas.

Beginning :

விவேகசாரம். அத்தியாரோபாபவாதம்.

அத்தியாரோபா(ப)வாதங்களினாலே பி[று](ர)மசொரூபத்தையறியவே [ணு](ண்டு)ம் என்று சாஸ்திரத்திலே சொல்லப்பட்டிருக்[குது](கிறது). ஆகையாலே அந்த அத்தியாரோபாபவாதத்தை நிரூபிக்கிறோம். அத்தியா(ரோ)பமாவதேதென்றால் வஸ்துவினிடத்திலே அவஸ்துவினுடைய ஆரோபம் அத்தியாரோபமென்று சொல்லப்படும்.

(* * * *)

Colophon of 13th Adhyāya :—

இதி ஸ்ரீ வாசுதேவயெதீசுரராலே சொல்லப்பட்ட விவேகசாரத்தில் அஞ்ஞானப் பிரகரணம்.

End :

இதெல்லாங்கூடி சாக்கிர[த](த்து) ஸுப்ன [ஸு-ு](சுஷு-ு)ப்[பி]தியவத்தைகளாச்சுதாகையாலே யிந்த அவஸ்தாத்தி[றை](ர)யத்துக்கும் சாட்சியாய் நித்தியனாய் நிர்விகாரனாய் ஆனந்த [சு](சொ)ரூபனாய் ஆ[ற்](ன்)மாவே நானென்று எவனறி[கு]கிறானோ அவனே முத்தனென்று சாத்திர சித்தாந்தம்.

Colophon :

சயஙு—அத்தியாயம் மு[த்து](ற்றும்.)

பிரகரணங்கள்.

(1) அத்யாரோபாபவாதம்.
(2) சாதன சதுட்டயம்.
(3) பிரபஞ்சம்.
(4) துக்கவிசாரம்.
(5) கர்மவிசாரம்.
(6) ராகத்துவேஷாதி.
(7) ஆன்மானன்மவிவேகம்.
(8) ஸ்தூலசூட்சுமகாரணம்.
(9) அவஸ்தை.
(10) பஞ்சகோசம்.
(11) சச்சிதாநந்தம்.
(12) ஆத்மஸ்வருபம் அகண்டத்வம்.
(13) அஞ்ஞானம்.
(14) ஞானஞ்ஞானம்.
(22) பிரியதமத்துவம்.
(23) சர்வசாரசங்கிரகமனனம்.
(24) ஆன்மானன்மவைலக்ஷண்யம்.
(25) தாபத்திரயம்.
(26) பிரதிபந்தத்திரையமனனம்.

(27) நவவிதவிசாரம்.
(28) வயிராக்கியபோதோபாதி.
(29) வாசனுத்திரையமனனம்.
(30) வாசனாப்ரதிபந்தமனனம்
(31) சிரவணமனன நிதித்தியாசனம்.
(32) ஷட்லிங்கம் (?)
(33) தத்துவம்.
(34) பிரம்மசரியம்.
(35) அசிஹவாதி.
(36) சைதன்யபேதம்.
(37) பஞ்சப்பிரமை.
(38) பிராரத்[துவ](த)த்திரையம்.
(39) சஞ்சிதப்பிராரத்தாகாமியம்.
(40) பிரளயம்.
(41) தார்க்கிகாதிகள்.
(42) பிரம்மவித்துவாவரீயபரிஷடம்.
(43) ஸத்தாவஸ்தை.
(44) தாதாத்மியம்.
(45) அத்தியாரம்பம்.

கு-பு.)—

இவ்வத்தியாய அட்டவணை ஏட்டிலுள்ளபடியே யெழுதப்பட்டது. 14-வது அத்தியாயத்தினிறுதியிற் சிறுபாகமும் 15—21 அத்தியாயங்களும் இதில இல்லை. மற்றைப்பகுதி முற்றுப்பெற்றிருப்பதாகவே தோற்றுகிறது. இதிற் சில அத்தியாயங்களினிறுதியில் "இதி ஸ்ரீ வாசுதேவயதீசுரராலே சொல்லப்பட்ட விவேகசாரம்" என்றுள்ளமையின் இஃதவரொருவராற் செய்யப்பட்டதெனத் தெரிகின்றது. இந்நூற்கு வாசுதேவமனனம் என்ற பெயர் வந்ததும் இதனாற்போலும்.

No. 1601. விவேகசாரம்.

VIVĒKASĀRAM.

Substance, Palm-leaf. Size 11¼ × 1½ inches. Pages, 275. Lines, 8 on a page. Character, Tamil. Condition, Fair. Appearance, old.

Complete in Ādhyāyas 1 to 26.

Similar to the work described above. The headings of the Adhyāyas as found in the MS. is given below in Tamil at the end of the extract.

Beginning :

விவேகசாரம்.

முதலாவது அத்யாரோப அபவாதவர்ணகம்.

அத்யாரோப அபவாதங்களினாலே பிரமசொரூபத்தையறியவேணும்.

அத்யாரோபமாவதேதென்றால் வஸ்துவினிடத்திலே அவஸ்துவினுடைய வாரோபம் அத்யாரோபம்; அஃதெப்படியென்றால் திட்டாந்த பூருவகமாக நிரூபிக்கிறோம்.

அந்த திட்டாந்தம் வதென்ருற் சொல்லுகிருேம் :—

சுத்தியிலே ரசத(ா)த்தியாரோப மெப்படியோ ரச்சுவிலே சர்ப்ப அத்தியாரோபமெப்படியோ தாணுவிலே புருஷா [அ]த்தியாரோபமெப்படியோ கானலிலே செலா [அ]த்தியாரோபமெப்படியோ ஆகாசத்திலே நீலயீதாத்தியாரோபமெப்படியோ அப்படியே நிஷ்பிரபஞ்ச ரூபராயிருக்கிற ஆ[ற்](ன்)மாவினிடத்திலே பிரபஞ்சத்தினுடைய ஆரோபமத்தியாரோபம் ; இந்த அத்யாரோபம் எதனுமேல வந்ததென்ருல் அதிட்டான அ[க்கி](ஞ்ஞா)னத்தினுமேல வந்தது ; அஞ்ஞானத்தினுடைய சொரூபத்தை இனிமேல் விவரமாக நிரூபிக்கிருேம்.

End:

குருசொன்ன வர்த்தத்துககு விபரீதாஸ்பதந்தோணுகிறது. இதுக்கு நிவிர்த்தி, திரும்பத் திரும்ப மனனம் பண்ணுகிறது. விபரீதபாவனை துராக்கிரவக்தையாவனுன் சோத்திரிய[ன]ுமு பண்டித[ன்]னுன் விரத்தனென்று இந்தத் தேகேந்திரியாதி சங்காதத்திலே ஆத்மபுத்திவருகிறது. இதுக்கு நிவிர்த்தி நிருத்தியாசனம்பண்ணுகிறது. வாவிப்பிரதிபெந்தமாவன :—ஒரு பாவகாமம் முமுட்சுவுககு ஒரு விஷயத்திலே ரூடமாய்த் தயாரூபமான ஆசுத்தியைப் பிறப்பிக்கும் ; அந்த ஆசத்தி சிறிது சென்மங்களைக் கொடுக்குமாகையால் இதுக்கு நிவிர்த்தி இந்த ஆசத்திபிறவாமலிருக்கிறது.

Colophon:

இருபத்தாருவது ஞானப்பிரதிபெந்தாகிதமும மதுநிவிர்த்தியும் நிரூபண வர்ணக முற்றும். (ஏட்டின் எண்)

(24) வைராக்கியபோத நிரூபணவர்ணகம் 131
(25) ஜீவேசுவரசொரூப நிரூபணவர்ணகம் 133
(26) ஞானப்பிரதிபெந்தமுமதுநிவிர்த்தியும் 138

(கு-பு.)—

இது முனபிரதிகளினின்றும் நடையில் மிக்க மாறுபாடுடையது. இந்தப் பிரதியில் இந்நூல் பூர்த்தியாயிருக்கிறது.

No. 1602. விவேகசாரம்.

VIVĒKASĀRAM.

Pages, 326. Lines 8 on a page.

Begins on fol 1*a* of the MS. described under No. 1544

Complete.

Same work as the above. The colophon at the end of the MS. attributes the authorship to Vāsudēva.

Colophon:

இருபத்தாறாவது ஞானப்பிரதிபெந்தமுமதுக்கு நிவிர்த்தியும் நிரூபண வர்ணக முற்றும்.

குருவாசுதேவேந்திரசுவாமியாற் சொல்லப்பட்ட விவேகசாரமுற்றும்.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது, ஏடுகள் சிதிலமாயிருக்கின்றன. இதிலும் இறுதியில் "குருவாசுதேவேந்திர சுவாமியாற் சொல்லப்பட்ட விவேகசாரம்" எனக் குறிக்கப்பட்டுளது.

No. 1603. விவேகசாரம்.

VIVĒKASĀRAM.

Page, 590. Lines, 7 on a page.

Beings on fol. 65*a* of the MS. described under No. 1492.

Incomplete. Contains the Adhyāyas 1 to 39.

Similar to the work described above. The work appears to have been based on the Sanskrit Vivēkasāra described under No. 1399 of Notices of Sanskrit MSS., by Rajēndralāl Mitra. Vol. IV.

Beginning:

அத்தியாரோபமபவாதத்தினாலே பிரமத்தை யறியவேணுமென்று சாஸ்திரங்களிலே சொல்லுகிறபடியினாலே அந்த அத்தியாரோபத்தை முன்னே சொல்லுகிறோம்.

அந்த அத்தியாரோபமாவது ஏதென்றால், ஒரு வஸ்துவினிடத்தில் அன்னிய வஸ்துவாய்த்தோ[ணு](ன்று)கிறது அத்யாரோபம்

அதெப்படியென்றால் திருட்டாந்த பூர்வகமாய்ச சொல்லுகிறோம். கிளிஞ்சலிடத்திலே வெள்ளியும், பழுதையினிடத்திலே பாம்பும், கட்டையிடத்

திலே கள்ளனும் கானலிலே தண்ணீரும் ஆகாசத்தினிடத்திலே கறுப்பும் எப்படியாரோபிச்சுதோ அப்படிப்போல இந்த நிட்பிரபஞ்ச சொரூபனு கிய ஆன்மாவிடத்திலே பிரபஞ்சாரோபமே யத்தியாரோபம்.

அந்த அத்தியாரோபம் எதினாலே வந்ததென்றால் அ[க்கியா](ஞ்ஞா)னத் தாலே வந்தது; அந்த அஞ்ஞானத்தி[னி](னுடை)ட(ய) சொரூபத்தைப் பின் னாலே விகசிதமாய்த் தெரியச்சொல்லுகிறோம். இப்போ(து) சங்க்ஷேப மாய்ச் சொல்லுகிறோம்.

அதெப்படியென்றால் லோகஞானமே பிரகிருதியென்றும், மாயையென் றும், வித்தையென்றும், தமசென்றும் இந்தப் பிரகாரமனேக விதமாய்ச் சொல்லப்படும்; இ[து](வை)களில் பிரகிருதியாவதேதென்றால் குணத்துகளு டைய சாமானிய அவஸ்தைகளுககுப்பிரகிருதியென்றும், பிரளயாவஸ்தை யென்றும் மகாசுழுத்தியவஸ்தையென்றும் சொல்லப்படும்; இந்தக குணத் துகளுடைய சாமானியா வஸ்தைகளுக்குத் திருஷ்டாந்தஞ் சொல்லுகிறோம்.

End:

அதிஷ்டான சைதன்னியமும் பிரதி விம்பசைதன்னிய முககூடி ஈசுவர னென்று சொல்லுவோமென்றால். . . . திவிம்பமும் கேவலாதிஷ்டான சைதன்னியமும் நிருவிகார சைதன்னியம். . . . விகாரமான ஈசு(வ)ர த்துவஞ் சொல்லககூடாது; ஆகையினாலே மாயையும் மாயைபதிஷ்டான சை(தன்னிய)மாயையிலே பிரதி விம்பிச்ச சைதன்னியமும் இந்த மூ[னு] (ன்று)ங்கூடி ஈசுவரனென்று சொல்லப்படும். இந்தப் (பிரகரண)த்தில் சிவேசுவராகளையெங்கே நிரூபிக்கப்பட்டதென்றால் வித்தியாரண்ணிய சுவா மிகள் சப்தப் பிரகரணத்தில் நிரூபிச்சிருக்கிறார். இந்தப் பிரக(ண)த்தில் சிவேசுவரருடைய (. . . . .) முத்தனென்றும் உபாதிரகிதனெனறும் நிருவிகாரனென்றும் நிச்சங்கனெ ன்றும் திரவியனென்றும் சுருதி மிருதி புராணங்கள் கோஷிக்[கு](கின்றது) சமுசயமில்லை. சித்தம்.

Colophon:

சிவேசுவர நிரூபணம் சமாப்தம். முப்பத்தெட்டாம் சுலோகம் முற்றும்.

அதிகாரங்கள்.

*(கு-பு.)—

இது முன் பிரதிகளினும் வேறானது; இராஜேந்திரலால்மித்ரா காட்லாக் தொகுதி (Vol.) IV,1399-ஆம் நம்பர் பிரதியின் மொழி பெயர்ப்பாக இருக்குமென்று தோற்றுகிறது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுப்பெறவில்லை. பிரதிமிகச்சிதிலம். பிழைகள் மிகுதியாகவுள.

No. 1604. வேதாந்தசூளாமணி மூலமுமுரையும்.

VEDĀNTACŪḶĀMAṆI WITH COMMENTARY.

Page, 169 Lines, 8 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1482.

Complete with commentary.

A Tamil rendering by Śivaprakāśasvāmigaḷ of Tuṟaimaṅgalam of the Vēdāntaparicchēda forming part of the Vivēkacintāmaṇi a work in Kanarese by Nijaguṇayōgi. It explains the differentiations between the perceiver and the thing perceived, the nature of the bliss arising from understanding the Mahāvākyas and the nature of the identity of the individual soul with Paramātman as stated in the Uttaramimāṁsā.

Beginning ;

தருணமா துலைமுகத் தாம ரைக்கெழு
மருணறு மெனவுதித் தடியர் பாற்புரி
கருணைமா மதமெனக் காட்டு மாமுகன்
சரணவா ரிசமலர் தலையிற் கொள்ளுவாம்.

எ-து, அம்மையுடைய இளமையாகிய வதனும்புய முலைக் கு[ன்]றயமாகிய வாலசூரிய னென்னும்படிக்கு உதித்து அடியாரிடத்திற் செய்கின்ற கருணையாகிய . . . . மதங்களையுடைய கசமுகக் கடவுளினது பாதாரவிந்தங்களைச் சிரத்தின்மேல் வைத்துக்கொள்ளா நின்றோ மென்றவாறு.

அருமறையின் பொருடெரித்த விவேகசிந்தா மணியதனு
ளறைவேதாந்தப்
பொருளினைமுந் நீர்வரைப்பி னுலகறியச செந்தமிழாற்
புனைதல் செய்தான்
பெருகுசுவை நறவொழுகு செஞ்சொன்மல ரார்புனைபாப்
பெருந்தண் மாலை
கருமிடற்று வானவர்க்கே சாத்துசிவப்பிரகாசன்
கவிஞா வேந்தே.

(* * * *)

சீர்கொண்ட வருமறையின் முடியணியைத் தெய்வ
சிகாமணியை யடியவர்தங் கண்மணியைமாயைப்
பேர்கொண்ட விருளிரிக்குந் தினமணியை முக்கட்
பெருமணியை யகத்தினுக்கோர் விளக்காக விருத்தி
யேர்கொண்ட விவேகசிந்தா மணியெனு நூலதனு
ளெடுத்தியம்பும் வேதாந்த பரிசசேதப் பொருளை
நேர்கொண்ட தமிழ்விருத்த யாப்பதனாற் றெரிய
நிகழ்த்துவன்வேதாந்தசூளாமணியென்றன்றே.

எ-து, சிறப்பையுடைத்தாகிய வேதங்களின் முடிவிலே விளகாங்கா நின்ற வழகிய பொருளை (. . . . .) தமிழ் விருத்தப் பாட்டதனாற் பக்குவர் தெளியச் சொல்லா நின்றோம் ; வேதாந்த சூளாமணி என்னு நாமந்தரித் தென்றவாறு.

சிறப்புப்பாயிர முற்றும்.

வேதமொரு நான்குமா றங்கமுநன் னியாய
மீமாஞ்சை யொடுமிருதி புராணமுமீ ரேழா
வோதலுறும் வித்தைகளா மிவற்றுண் மீ மாஞ்சை
யுயர்ந்ததா யைந்நான்கத் தியாயமா யருத்த
பேதமுற விருகூறு மவற்றுண்முதற் கூறே
பிறங்குமருட் சைமினிசூத் திரரூப மாகிப
போதுமீ ராறத்தி யாயங்களாக கருமப்
பொருளுணர்த்திப பூருவமீ மாஞ்சையெனப் படுமால்.

எ-து, இருக்காதி நான்கு வேதமும் சந்தசு, கறபம், வியாகரணம், சிட்சை, சோதிடம், நிருத்தம் என்னுநின்ற ஆறங்கமும் நியாயமும் மீமாஞ்சையுமெ ன்னுமவை பன்னிரண்டும் மனு மிருதி, அத்திரி மிருதி, ஆரித மிருதி, விட ுணு மிருதி, ஆஞ்ஞவற்க மிருதி, யுசன மிருதி, ஆங்கீர(ச) மிருதி, இயம மிருதி, ஆபஸ்தம்ப மிருதி, சம்வ(ா)த்த மிருதி, காத்தியாயன மிருதி, பிர கஸ்பதி மிருதி, பராசர மிருதி, வியாச[ர்] மிருதி, சங்கலிகித மிருதி, தட்ச மிருதி, கௌதம மிருதி, சாதாதப மிருதி, வசிட்ட மிருதி, என்னுநின்ற பத் தொன்பது மேகமாகவும், பிரமபுராணம் (. . . . .) மச்சபுராணம், காருடபுராணம், பிரமாண்டபுராணம், ஆக இவை பதினெட்டு மேகமாகவும ஆக இங்ஙனஞ் சொல்லாநின்ற வித்தைகள் பதினாங்கவற்றுள், மீமா ஞ்சையென்பதுவே மிகுதி விசேடமாயிருபதத்தியாயமா யருத்தபேதத்திர ண்டுவிதமாகும். அதனுள முதற்பேதமே விளங்காநின்றசிருடையையுடைய சைமினி சூத்திரரூபமாகப் பன்னிரண்டத்தியாயமாய்க கருமாராதனத் தைப் பிரதி பாதிக்கையிற் பூருவமீமாஞ்சையென்று சொல்லப்படு மென்ற வாறு. (௪)

சாற்றியவச சயிமினிசூத் திரத்திற்கு மிக்க
சாபரமென ஞெருபாடி யம்புரியப் பட்ட
தேற்றமிகுமம் மீமாஞ்சைககுமதம்பாட்ட
மென வொன்றுபட்டாசாரியனால் வந்தன்று
போற்றுமவன சீடனு ஙயபிரபா கரனாற்
புகழ்பிரபா கரமெனவோர் மதாந்தரநன கமைய
வாற்றியவச சாபரபா டியமதற்கு விளஙக
வாககப்பட் டுலகமெலா மறிந்திடங்ன றதுவே.

End:

வினையிரண்டு மகாதை ஞற்றேக பாவ
விச்சிந்தி யதனாலே பாசமெலா மொழிதல்
பினையறைந்ந வதனானே பராபரமாய் முடிவாய்ப
பெயர்சாதி குறிபெறு தொனறாகி வாககு
மனமிறந்து நித்தியா னந்தமய மாகி
மறுவிலா விதேககைக வல்லியம்வந் தெய்து
மெனவறிந்து துணிந்திடுக சுருதிகுரு பரனு
வின்பவீ டடையுநெறி விரும்புறமுத் தமரே.

எ-து, முற்கூறிய விதிநிஷேத நிரஞ்சனத்தாற் புண்ணிய பாவம் நீக்கம்; அதனாலே தேகபாவ விசசிந்தி; அதனாற் சருவபாவ விமோசனம்; அதனாற் சர்வோத்கர்ஷமான சமதநானமாகிய புனரா விருத்திரகிதமான சகலசாத்

திர பரியாவசானமாய் நாமசாதி குணக்கிரியா வாசனை புகாத மனவாக்குக் கோசரமான நித்தியானந்த சொரூபமான விதேதக கைவல்லியமாகுமென்று நிச்சயிப்பர் இன்பவீட்டையும் வழியையுடைய உத்தமரென்றவாறு. (௩)

இந்தச் சுருதிமுடிவார்த்தபோதனை யாருககுப் பாலிப்பதென்றுலருளிச் செய்கிறார்:—

வேதமுத லாகியநூ லனைத்தினுஞ்சொற் பொருளை
விளங்கியிடக் கரதலா மலகமெனக் காட்டிப்
போதமய மாகியபே ரானந்தத் தழுத்தும்
பொருவிகந்த விந்நூலை முத்திபெறற் குரிய
சாதனநான் கினையு மடைந் தெவரானு மென்றுந்
தடுப்பரிய பிறவிநோய் தணிப்பதனுக் கெண்ணி
யாதரவி னருட்குரவன றனைத்தேடி யுருகு
மன்புடையோர் தமைககாணி னளித்திடுக வுவந்தே.

எ-து, வேதாகம சாத்திரங்களினற் சொல்லாநின்ற பொருளைக் கற்றறியக் கரதலத்து நெல்லிககனிபோலத் தோற்றி ஞானமயமாகிய பேரானந்தத்தில் அமிழ்த்தப்பட்ட குரு . . . . வேதாந்த சூளாமணியை மோட்சத்துக்குரித்தாகிய சாதன சதுட்டயம் வந்தவர்கள் எவர்களாயினும் எப்போதும் தடையில்லாத பிறவிப் பிணியைக கெடுக்க வேண்டி(ப்) பத்தி வயிராக்கிய ஞானத்துடனே அருளையுடைய ஆசாரியனைத் தேடித் திகைத்துருகாநின்ற அன்பரைக கண்டாற் கண்டவுடனே யவருக்குக கொடுத்திடுக எ-று. (௪)

Colophon:

ஆகத் திருவிருத்தம் ௱அ௰௫
வேதாந்த சூளாமணி முற்றும்.
"சிவப்பிரகாசனறிருவடி நினைக்கத்
தவப்பிரகாசந் தானேவரும்.

(கு-பு.)—

இது வேதாந்த சாஸ்திரங்களுள் ஒன்று. உத்தர மீமாஞ்சை யென்னும் பிரம கண்டத்திற் கூறியுள்ள, சீவ பரமாத்மைககிய ஸ்வரூபம் இன்னதென்பதையும், மஹாவாககியார்த்தங்களை விசாரித்தலினல் சீவாகனுககு ஆனந்தபோதம் வெளிப்படுமாற்றையும் இருகதிருசிய மென்னும் இரண்டையும் பகுத்துக் கூறுவது. கன்னடபாஷையில் 'நிஜகுணயோகி' என்னும் பெரியாரியற்றிய விவேகசிந்தாமணியிலுள்ள வேதாந்த பரிச்சேதத்தின் மொழிபெயர்ப்பாகத் தமிழில் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப்பட்டது. இந்தப்பிரதியில் உரையுடன் முற்றும் உள்ளது. உரை நன்றாக இருககிறது. உரையாசிரியர் பெயா முதலியன விளங்கவில்லை.

No. 1605. வேதாந்தவம்மானை.
VĒDĀNTAVĀMMĀNAI.

Pages, 19. Lines, 6 on a page.

Begins on fol. 196*a* of the MS. described under No. 802.

Contains 1 to 41 stanzas and the first half portion of the 42nd stanza.

A treatise of a philosophical nature written in the form of Prabandam designated Ammānai. The name of the author is not known.

Beginning :

வேதாந்தவம்மா[ஞர்](னை.)

தந்தைக்கு முன்பி[ர](ற)ந்தி தகப்பனுககுப் போதகத்தை
அந்[தி](த)முதல் தான் கடந்து அறிவித்தா ரம்மானை,
அந்தமுதல் தான்கடந்து அறிவித்தா ர(ா)[ய]மா[ர]கில்
த்ந்தையிடமாகவல்லோ தாமிருந்தாரம்மானை
தாமிருந் தப்பொருளே தாமு(ை)ரத்தார[ா]ம்மானை. (௧)

*   *   .   *   *

[யிர](இற)ந்து பி[ர](ற)ப்பத[ர்ச்](ற்)செத்[தி](த)னை[த்]தான்[ச]
சொன்னுலும்,
ம[ர](ற)ந்தழிந்து போனவர்க்கு மதிவருமோ வம்மானை,
[பிர](மற)ந்தழிந்து போனவர்ககு மதிவரு,மோ வென்றுரைத்தால்
பி[ர](ற)ந்தமதி யறிந்ததுவும் பி[ர](ற)ப்ப[ர]றியாரம்மானை,
பி[ர](ற)ப்பறிய (ரர்)குலம் பி[ர](ற)ந்து பேசுவர்கா ணம்மானை. (௪)

End :

சுட்டவிடங்கண்டு சுடுகாடு வென்றுரைப்பார்
கட்டிவந்த வெள்ளெலும்பின் காட்டறியாரம்மானை
சட்டிவந்த வெள்ளெலும்பின் காட்டறியாராமாகில்
சுட்ட ச[ப](வ)ம் பி[ர](ற)ந்தசுடு காடறியா ரம்மானை
காடறியாரி[ர](ற)ந்ததையுங் காண[ரி](றி)யாரம்மானை. (௪௰)

மண்ணிற் பிறர்து வாழுந் திருமாலே(க)
கண்ணி லறிந்துதொழக் கண்டறியாரம்மானை
கண்ணி லறிந்துதொழக் கண்டறியா ராமாகில்
மண்ணிற்றிரு மண்ணென்று வரைரது கொள்வா ரம்மானை
வரைந்துகொள்வர்திருநாமம்வகையறியாரம்மானை. (௪௧)

அழியா(த்)திரு[ஞ](நா)ம ம[ரி](றி)யாத மூடர்ககு
வெளியா[கு]மோ வயன்மாலும் வெளியா(கார்)[ராதே] அம்மானை

(கு-பு.)

இந்நூல் வேதாந்த விஷயமானது. அம்மானையென்னும் ஒருவகைப் பாடலாகியது. இதில் 41 பாடல்களும், 42-வது பாடலின் முதல் இரண்டு அடிகளும் உள்ளன. இயற்றியவரின்னாரென விளங்கவில்லை.

No. 1606. வேதாந்தவம்மானை.
VEDÂNTAVAMMÂNAI.

Pages, 11. Lines, 9 on a page.

Begins on fol. 105*a* of the MS. described under No. 1214

Complete.

A Prabandam of the Ammānai variety bringing out the nature of Iśvara, in the form of a conversation between two women.

Beginning :

ஆதிதனி வாதி யறிந்துரைக்க மாட்டாதார்
சோதியொளிவுதனைச் சொல்வரே அம்மானை
சோதியொளிவுதனைச் சொல்வரேயாமாகில்
வாதனைக்குள் ளாகி வருந்துவதே னம்மானை
வருந்தாரே மா[ய்கை](யை) மயக்கத்தா லம்மானை.

சித்தசன் றன்னைத் திருவாய்மெய்த் தேசிகனை
யுற்றபொருடன்னை யுண்டறிவாரம்மானை
யுற்றபொருடன்னை யுண்டறிவாராமாகில்
அத்தனவனிடமா யாடுவதேனம்மானை
யாடாரோ தந்தொழிலே யாடுவனகா ணம்மானை

End :

தாயை யறியார் தகப்பனையுந் தாமறியார்
தாயிருக்குந் தலமுந் தானறியா ரம்மானை
தாயிருக்குந் தலமுந் தாமறியா ராமாகில்
காயமுரு வானதுவுங் கண்டறியா ரம்மானை
கண்டறியார் காமனையுங் காணறியா ரம்மானை.

(கு பு.)—

இந்நூல், ஈசுவரலட்சண முதலியவற்றை மகளிர் ஒருவர்க்கொருவர் வினவிடையாகக் கூறி விளையாடுவதாக வமைந்துள்ளது. இந்தப் பிரதியில் உள்ள அம்மானைப் பாடல்கள் இருபது. இது முற்றுப் பெற்றதெனறே தோற்றுகிறது.

No. 1607. வேதாந்தவாக்கியம்.

VĒDĀNTAVĀKKIYAM.

Pages, 28. Lines, 8 on a page.

Begins on fol. 57*a* of the MS. described under No. 1388.

Incomplete.

A treatise in prose explaining the meaning of the Mahāvākyas such as Tat Tvam Asi in accordance with the Advaita Vēdānta. The origin of Sthūla sarīra, Sukṣma sarīra and Kāraṇa śarīra, the different states of consciousness, etc., are all dealt with herein.

Beginning :

விசுவாமித்திரரும் வசிட்டமாமுனியும், நம்மைப் பிரவிக்கு வாராமல் [யி](இ)ரட்சிக்கவேண்டி ஞானமென்கிற பதா[ற்](ர்த்)தத்தை வேண்ட, நீலகண்டசுவாமி யனுக்கி[ற](ர)கம் பண்ணி ரகூடித்தார்கள். அது[யே](வ) தென்னில்[த்] தத்தொமசிவாக்கியம் அனுக்[ற](ர)கம் பண்ணினார். (

. .)தத்தொமசி வாக்கியத்துக்கு வி[ப](வ)ரம்: [யி](இ)ரு[ரு](ரி)க்கு எ[சறு](ஜுசு) சாமம் அதா(வ)ணம் என்கிற நாலு வேதமும் [யி](இ)ரண்டு பி[ற](ர)காரமாயிருக்கும். அது எப்படி யென்னில்:—அற்பசுருதிவாக்கிய மென்றும், பி[ற](ர)பல சுருதிவாக்கியமென்றும் சொல்லப்படும். [யி](இ)தில் அற்பசுருதிவாக்கியம் கன்மகாண்டத்தைச் சொல்லும். பி[ற](ர)பல சுருதிவாக்கியம் அத்தியா[ற்](ன்)மியத்தைச் சொல்லும். (. . . . . .

.) தொம்பதத்துக்கு அவத்தை[ஞ](நா)லு அதிலே அனுபோகத்தினாலே சாக்கிர அவத்தைக்குள்ளே மூன்றுடல் காண்பிக்கும். அது எப்படி யென்னில்

End:

[யி](இ)னி[ப்]டஞ்சப்பிர[ளோ](ள)யம் பண்ணின[த்]துக்குப்பிறகு மிஞ்சினதுவே வ[ஷ](ஸ்)து. அதுவே வாக்கு மனத்துக்கெட்டாத பொருள். அதுவே சத்தமாத்திரமான வ[ஷ](ஸ்)து. விசுவாமித்திரரும் வசிட்டமா முனியும் நம்மைப் பிரவிக்கு வாராமல் [செ]ய்திட்டாரானவர். அதுவே நித்த சுத்தபுத்தமுத்த சத்திய பரிபூரணமான வ[ஷ](ஸ்)துவுமதுவேயிதுக்குக கிரந்தம் . . . .

(கு-பு.)—

இந்நூல் அத்வைத வேதாந்த விஷயமானது. தத்வமஸியாதி மஹா வாக்யங்களுக்குப் பொருள் கூறுவது. இதில் தூல சூக்ஷ்ம காரணமாகிய மூவகைச் சரீரங்களின் உற்பத்திக் கிரமம் முதலியனவும் ஐவகை அவத்தைகளின் இயல்பு முதலியனவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. வசன நடை சாதாரணமானது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுப்பெறவில்லை.

No. 1608. வேதாந்தவுரைப்படிக்கட்டளை.

VĒDĀNTAVURAIPPAḌIKKAṬṬAḶAI.

Pages 34. Lines, 9 on a page.

Begins on Fol. 38*a* of the Ms described under No. 1310.

Complete.

A treatise in prose bearing on Śaiva Vēdānta. Herein a Guru is represented as having taught Vēdānta to his disciple and made him realize the true reality.

Beginning:

இகபரங்களிலே யாவரொருவாக்கு முன் செய்த தவத்தினாலே ஞானத்தின்மேல் விருப்பமுற்று, சற்குருநாதன் சே[ர்]வைகிட்டி, மோட்சம் பெறும் பரிபக்குவம் வந்தவிடத்து, வேதாந்த தெரிசன விளக்கமே சூரியப்பிரகாச விளக்கமாயிருக்கும். வேறு ச[ம]யங்க[ளிட](ளுடைய) சாஸ்திர விளக்க மெல்லாம் மின்மினி விளக்கமாயிருக்கும். ஆகையினாலே வேதாந்த தெரிசனமே யுண்மையென்பது கண்டுகொள்க. இனி யித்த வேதாந்த தெரிசனமெப்படியென்னில்:—வேதங்களாவன இருக்கு வேதம் (. . . . . .

. .) இரண்டு பி[ற](ர)காரமாய் இருக்கும்.

End:

உருநாமங்களினுல் குறிக்கப்படாமல் தற்பிரகாசமாய் விளங்கியது எப்படி யிருந்தது. சொல்லிக்காணென்னுமிடத்து, இந்தச் சொரூபத்தை அடியே னுக்கு மனதிலே யெண்ணவும், வாக்கிஞற் சொல்லவும் இடமில்லாமலிருந் தது. ஆகையிஞல் இதுவே மவுனமுத்திரை யென்பது. அஃதெப்படி யென் னில் :—மனமும் மனத்திலே யெண்ணமும், வாக்கும் வாக்கிஞற் சொல்வ தும், காயமும் காயத்திஞற் செய்வதும் சுத்த அறிவான பி[று](ர)மமே யாகையால் மனம்வாக்குக காயமிம்மூன்று மிறந்து, வாககுமஞதீதமாய்த் தற்பி[ற](ர)காசமான சிவரூபமானதே மோனமுத்திரை. இதுவே மவுன முத்திரையென்று கண்ட கருத்தையும் விட்டுச சும்மா[யி](வி)ருந்தபடி யிருப்பதே மோட்சத்தீர்வு. இதுவே நிசசயா[ற](ர்)த்தம். வேதாந்தத்தி னுண்மை தெளிந்த பி[று](ர)ம்ம தெரிசனம் முற்றும்.

திருசசிற்றம்பலம். குருபாதம். சிவமயம்.

(கு-பு.)—

இது சைவவேதாந்தத்தைச சாாந்தது. சிஷயனுகது, குரு வேதாந்த தரி சனத்தைககாட்டி உண்மைப்பொருளை அநுபவத்திற் காணுமாறு செய்வித் ததாக உள்ளது. இந்தப் பிரதியில் இது முற்றுமிருககிறது. ஏடுகள் சிதி லம.

No. 1609. வேதாந்தோபந்நியாசம்.

VĒDĀNTŌPANNIYĀSAM.

Pages, 68. Lines, 6 on a page.

Begins on fol. 152*a* of the MS. described under No. 1231.

Complete.

Same work as that described under R. No. 327 of the Triennial Catalogue of MSS. Vol. III.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 327-ஆம் நம்பர் பிரதிபோன்றது முற்று மிருக்கிறது.

No. 1610. வைராக்கியசதகம்.

VAIRĀKKIYAŚATAKAM.

Pages, 18. Lines, 6 on a page.

Begins on fol. 170*a* of the MS. described under No. 1060.

Contains the 1st 50 stanzas entitled the Śāstiram.

A treatise of a philosophical character in which the intellect is represented as addressing the mind not to yield itself to the evil influence of the organs of sense. The work is divided into 2 sets of 50

stanzas each, the ist set being call d Śāstiram and the latter set Stōttiram.

By Śāntaliṅgasvāmigaḷ of Tirutturaiyūr who has also written other works namely Kolaimaruttal, Vairāgyadıpam, Avirōdavundiyār

Beginning :

முககணிறை தருகரியை முன்னடத்திப் பின்னதன்றூட்
பக்கமறைந் தேகுநாவெம் பாசவிக ளுசமுற
மிக்கவமா விளைத்திளையா வீரரெனப பூரணனூ(ப்)
புகலிணையில் பரானந்தப் பூவையையு மேவுவரால்.

வாழிநெஞ்சமே சென்றிடேனின றிதோரா
வா[ற்](ர)த்தை யெற்[க]குறைசெய்வாய
கிழியாமியற் றுயர்தவத் திவ்வுடல்
கிடைத்ததன் றேமற்றீ
றூழிகால மிங்கிருக்குமோ நீயுமோரந்
துளையெனி னுளபோழ்தே
சூழுமேழ்பவந் துடைத்தல்செய யாயிதென
றெழுதரன றுணைத்தாளே (௧,

End :

விருப்பமாயிது கேடிநன்னெஞசமே
விமலனுக் காளல்லார்
பொருப்பை நேர்தனஞ்சொரியினு மவர்கணோ
புன்னுனித் துணையன்பு
திருப்பிடேலரன் றெழும்பர்த[ன்](ந்) தொழும்பனுயத்
திரிந்தவர் பணிசெய்தீண்
டிருப்பை யேன்மிக நல்லையிச சொல்லைநம்
பில்லையேற் பொல்லாயே. (௫0)
வைராக்கியசதகம் சாத்திர முற்றும்.

(கு-பு.)

இந்நூல், திருத்துறையூரச் சாந்தலிங்க சுவாமிகளியற்றிய நூல்களுளொன்று. வேதாந்த விஷயமானது. ஆன்மஞானமுண்டாம் பொருட்டு உடம்பினையும் இந்திரியங்களையும் களைந்தபின், அந்தககரணத்தைக களையத் தொடங்கி, அவற்றுள் முதன்மையான, மனத்தை நீக்குந் தோறும் அது பழைய வாசனையால் விவேகத்தைத் தன்வயப்படுத்தி ஐம்புலன்களி விழுத்துச் செல்ல, விவேகம் அதனை அறிந்து அம்மனத்தைத் தன வயமாக்கக் கருதி மனத்தை முன்னிலைப்படுத்திக் கூறுவதாக வமைந்துள்ளது. இந்நூலின் முதலைம்பது பாடல்கட்குச் சாத்திர மென றும் பின்னைம்பது பாடல்களுக்குத் தோத்திர மென்றும் பெயரிடப்பட்டுள்ளன. இந்தப் பிரதியில் முதலைம்பது பாடல்களே உள்ளன. இந்நூலாசிரிய ரியற்றிய வேறு நூல்கள் கொலை மறுத்தல், வைராக்கியதீபம், அவிரோதவுந்தியார் முதலியன.

No. 1611. வைராக்கிய சதகம், உரையுடன். VAIRĀKKIYA ŚATAKAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 12⅜ × 1⅛ inches. Pages, 111. Lines, 8 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Contains the first 50 stanzas called Śāstiram together with commentary.

Same work as the above. It is followed by a commentary by Tiruppōrūr Cidambarasvāmigaḷ.

Beginning:

பஞ்சபூத காரியமாகிய வுடம்பினையும் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களையும் நியதிகளைந்ததன பின்னர் அந்தக்கரணங்களை நியதிகளையத்தொடங்கும்போது அவைகட்[க]குப் பிரதானமான மனத்தை யெதிரிட்டு நோககி நீ[ங்](க்)குந்தோறும் மனம் அந்த விவேகத்துக்கு மிகவும ஒற்[றி](று)மையாகலின் நீங்காது முன்னைப் பழக்கம்போல விவேகத்தைத் தன் வயப்படுத்தித் தனககுப் பற்றுககரையுள்ள வற்றிலிழுத்துச செல்ல, (. . . . .) மனத்தை முன்னிலையாககி விவேகங் கூறி[த்தெ](ற்றெ)ன்று விகேவத்தின் மேல்வைத்து இ[ன்னு](ந்நூ)ல் கூறுகினருர்.

"வாழிநெஞ்சமே சென்றிடேல் (. . . . .)
தொழுதரன்றுணைத்தாளே."

எனபது : வாழி நெஞ்சமே ; பகைவனுற் காரியங்கொள்வோன் அவனைத் தன வயமாக்குதற்பொருட்டு அவனுசகினிமை கூறுதல்போல நீ வாழக் கடவை நெஞ்சமே யென்று விவேகங்கூற வதற்கு எண்ணிலி காலமுடலுமுயிரும் போலுஞ் சேறு நீரும் போலுமும்மோடும் பிரிவின்றியிருந்த வென்னை இப்போது பிரித்து நின்று நீர் தோத்திரம் பண்ணியது என்னை யென்று மனங்கேட்ப, சென்றிடேனின்றிதோர் வார்த்தையெற் குரைசெய்வாய் :—

(* * * *)

இக்காயமிருககும்போதே சிவனது உபயபாதங்களையுந் தொழுது எம்மை வளைந்து கொள்ளா நின்ற எழுவகைப் பிறவிகளையும் நீக்கிக்கொள்ளுதல் செய்யாய் ; இஃது என்னை நின் கருத்திருந்ததென்று விவேகங் கூறிற்று. என்றவாறு. மற்றென்பது அசைநிலை.

End:

"விருப்பமாயிது கேட்டி நன்னெஞ்சமே (. .) சொல்லைநம்பில்லையேற் பொல்லாயே" என்பது. விருப்பமாயிது கேட்டி நல்நெஞ்சமே - நல்லநெஞ்சமே யிந்த வா[ற்](ர்)த்தையைச் சந்தோடமாய்க் கேட்[ப்]பாயாக.

(* * * *)

அவர்கண்டீர் யாம்வணங்குங் கடவுளாரே (ங்ம)

மனந் தானுமன்று தன் வயமுமன்று என்று அறிந்து அதனை விடுத்துத் தன்னையும் அதனையும் கூட்டவும் பிரிக்கவும் வல்ல சிவத்தை நோக்கி மேல் விவேகங்கூறுகின்றது.

இவை வைராக்கிய சதகத் தோத்திரப்பாடல் திருவிருத்தமைம்பது.

பொல்லாத வென்னெஞ்ச மோரைந்து புலன்கடம்பா
லல்லா றலைமாத் திரையுநின்னடிக்கணன்பாய்
நில்லா திதற்கென்னை செய்கேனிதை நின்றிடென்றே
சொல்லாய் திருத்தில்லையுண்மேவிய சோதி நீயே.

(கு-பு.)—

இது வைராக்கிய சதகத்தின் முன்னைம்பது பாடல்களின் விரிவுரை. பின்னைம்பதின் முதற் பாடலும் இதனிறுதியில் எழுதப்பட்டுள்ளது. உரையாசிரியர், திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகளென்பவர். இந்தப் பிரதியில் ஐம்பது பாடல்களும் உரையுடன் பூர்ணமாக இருக்கின்றன.

No. 1612. வைராக்கிய சதகம், உரையுடன்.

VAIRĀKKIYA ŚATAKAM WITH COMMENTARY.

Pages, 84. Lines, 6 on a page.

Begins on fol. 209*a* of the MS. described under No. 1437.

Breaks off in the course of the commentary on the 28th stanza.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதி போன்றது. இந்தப் பிரதியில் முதல் 27 பாடல்களின் உரை பூர்த்தியாகவும் 28-வது பாடலின் உரை அபூர்த்தியாகவும்

No. 1613. வைராக்கியதீபம், உரையுடன்.

VAIRĀKKIYADĪPAM WITH COMMENTARY.

Pages, 184. Lines, 9 on a page.

Begins on fol. 269*a* of the MS. described under No. 83.

Complete in 101 stanzas including the Pāyiram.

A treatise of a philosophical nature Herein the self-illusion of 'I' and 'mine' is compared to darkness, mind is compared to a house renunciation is compared to light and it is stated that the mind is illumined by the light of renunciation, which dispels the darkness of self-illusion.

By Śāntaliṅgasvamigaḷ of Tiruttuṟaiyūr. The commentary is by Cidambarasvamigaḷ of Tirupporūr.

Beginning:

தாயினு மிரங்கியென் றனைவந் தாண்டரு
ளேயவன் சரணையே சமக்க வென்றலை

வாய்துதி செயக்கர மலர்க டேய்த்தொழ
நேயமோ டனுதின நினைக நெஞ்சமே.

(* * * * *)

ஆய்ந்த வின்பம்
வாய்ந்தள நிறையச்
சாந்(தை)தயன் பத
மியாந்தொழுவோமே.

சாந்தலிங்க தேவாயநம[ர] சிதம்பர தேவாயநம[ர]—

திருவளர் கமலத் தயன்செயிப் புவிமுன்
திகழ்தரு மூலகெலாந் தன்பான்
மருவுசிற் சத்தி யெனுங்கிர ணத்தான்
வந்தெழு கானனீராக

விருமையா மதியாய்த் தறிஞராங் காந்தத்
திடையருட் சுடருமிழ்ந் திலங்கு
மொருசிவா தித்தன் தனை நமதிருள்போ
யொழியநா டொறுமிறைஞ் சிடுவாம்.

எ-து. அழகு வளராநின்ற தாமரை மலரின்கண்ணே யெழுந்தருளி யிருக்கின்ற பி[று](ர)மாவினுலே சிருட்டித்தல்செய்த விந்தப் பிருதிவிதத் துவமுதலாய் நாத தத்துவமீறுய் விளங்கா நின்ற பிர[வ](ப)ஞ்ச மெல்லாந் தனதிடத்துப் பொருந்திய சிற்சத்தியாகிய கிரணத்தினுலே வந்து தோன்றப் பட்ட கானற் சலமாக அறிஞரா து துவித புத்தியாகிய (. . . . .) ஒப்பற்ற சிவ சூரியனை நமது அஞ்ஞானமாகிய விருள்போய் நீங்கும்படி எக் காலமும் வணங்குவா மென்றவாறு.

(* * * *)

நூல்.

தோன்றிநின்றழியப் படுங்கொடும் பிறப்பிற்
றுன்பமே யன்றியெட் டுணையு
மூன்றிநெஞ் சகத்தோர்ந் திடிற்பிறிதிலையா
லுண்டுபோற் றிரித்துயிர்க் கெல்லாந்

தான்றிகழ்த்திடுமோர் வகற்றிருளிருளுந்
தவிர்ந்துமற்றதுமுளபடியே
யான்றவீடுறமுற் பவந்தவம்புரிந்தோ
ரகத்தினுட்டெரிதருமன்றே.

எ-து. உற்பத்தித் திதி லயங்களையுடைய கொடிய பிறப்பின் கண்ணே துன்பமே யல்லாமல் எண் மாத்திரமாயினும் மனத்தின் கண் ணறிவையூன்றி விசாரணை பண்ணுமிடத்துச் சுகமேயில்லை.

(* * * *)

தவம் பண்ணின பெரியோர்களது மனத்தின்கண்ணே தோன்றும்.

End:

தேவர்மாமுனிவ ரசுரர்வாளரக்கர்
சித்தர்வித்தியாதரர் முதலோர்
யாவரும் விரும்பிற் சித்திபுத்திகளு
மெட்டுணையச்சமாதியுண்
மேவுறுதகற்றித் தவம்புரிந்தடைந்தான்
மேலதாமூலபண்டார
மோவற வவையே குடிகளென்போனெஞ்
சுடையரா னடையவும்படுமே.

எ-து. தேவர்களும் மகத்தாகிய முனிவர்களு மசுரர்களு மிராக்கதர்களும் வித்தியாதரத மென்று சொல்லாநின்ற.

(* * * *)

வீட்டின்பமாகிய மூலபண்டாரத்தினை அந்தப் பய முதலியவை தாமே விட்டு நீங்காது குடிகொண்டிருக்கின்ற என்போலு மனத்தினையுடையவரா லடையவுங் கூடுமோவென்றவாறு.

ஒருவனுக்கிருளற் றுரியசிற்சொரூப
முள்ளவா விளங்கினன் றருமிப்
பருவரலுருவப் பற்றுமற்றதுநேர்
படுமள விறைபுரிதருமைங்
கருமமெய் விடத்துங் கண்டுதற் செயலைக்
கைவிடுத் தச்சமாதியவுண்
மருவுறுதகற்றித்தவஞ்செயல் வழக்கால்
வாழியெங்குரவனீடூழி.

எ-து ஒரு புருடனுக்கு அஞ்ஞான விருட்டு நீங்கித் தனக்குரிய ஞான ரூபம் உள்ளபடியே விளங்குமாயின் இந்தத் துன்பஞ் செய்யாநின்றதேகப் பற்று அன்றைக்கு நீங்கும் (. . . . .) பயமுதலிய து[ற](ர்க்)குணங்கள் மனத்தின் கண் பொருந்தாது மாற்றித் தவத்தினைச் செய்வதே முறைமையாம். எமது ஞானசாரியன் நீடூழிகாலமும் வாழக்கடவெ[த](ன)ன்றவாறு (ஈ)

சிதம்பரதேசிகன்றிருவடி வாழ்க.
திருச்சிற்றம்பலம்.

குமாரதேவை
நமாவெனவே[ற்றி](த்தி)
யெமாசுநீக்கிச்
சுமாயிருப்போமே.

முக்கணிறை தருகரியை முன்னடத்திப் பின்னதன்றூட்
பகைகன்மறைந் தேகுனர்வெம் பாசவிக ளுசமுற
மிக்கவமர் விளைத்தினையா வீரரெனப் பூரணவூர்
புக்கினையில் பரானந்தப் பூவையையு மேவுவரால்.

திம்ப[ணி](தி)மூற்கணிறம்பொன்மலர்த்தா
ணம்புதுமூத்திநல்லின்பம்வரற்கே.

சமரபுரிக்குகன்
விமலதிருத்தா
ளமதுளம்வைக்குது
மூமலமறற்கே.

போந்தெம்முயிர்க்குயி
ராந்துணையொத்த
சாந்தையனறபத
மேநதுகருத்தே.

குமரகுருப்பத
கமலநினைத்தே
திமிரமகற்றுதி
நிமலகருத்தே.

The scribe adds :—

சிவமயம். பரீதாபி வருஷம் மாசிமீ" ௩ உ புதவாரம் தி[தி](ரி)தி[கை](யை) திதி, உத்திரெட்டாதி ந[ஷ](ட்ச)த்திரம் [யி](இ)ந்தத்தினத்தில், மத்தூர் முருகப்ப முதலியார் குமாரன் சரவண முதலி வயிராக தீபமுரை எழுதி நிறைந்தது. முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் திருத்துறையூர்ச் சாந்தலிங்க சுவாமிகளியற்றியது. வேதாந்த மதத்தைச் சார்ந்தது. இதிலுள்ள உரை திருப்போரூர்ச சிதம்பர சுவாமிகளாலியற்றப்பட்டது. யான், எனது என்னும் மயக்கமாகிய இருளைத்துற வாகிய ஒளியினால் நீக்கி மனமாகிய வீட்டினைவிளக்கஞ் செய்தலினால் இந் நூற்கு வைராக்கிய தீபமென்று பெயரமைந்துள்ளதென்று பாயிரங்கூறு கின்றது. பாயிரமுட்பட நூற்றொரு விருத்தங்களையுடையது. இந்தப்பிரதி யில் இந்நூல் உரையுடன் முற்றுமிருக்கிறது.

No. 1614. வைராக்கியதீபம்.
VAIRĀKKIYADĪPAM.

Pages, 62. Lines, 7 on a page.

Begins on fol. 127*a* of the MS. described under No. 1185.

Complete.

Contains the same text as that described under the previous number.

(கு-பு.)—

இதில் முன்பிரதியில் வந்துள்ள வைராக்கிய தீபம் மூலம்மட்டும் முற்றும் உளது. பிரதி சிதிலமாயிருக்கிறது.

No. 1615. சொரூபானந்தர் நான்மணிமாலை.
SORŪPĀNANDAR NĀNMAṆIMĀLAI.

Pages, 29. Lines, 8 on a page.

Begins on fol 70*a* of the MS. described under No. 1061.

Complete.

A work in 40 stanzas by Tattvarāyar in praise of his Guru Sorupānandar and incidentally explaining ths principles of the Advaita Vēdānta. It is written in alternate stanzas of Veṉbā, Kaṭṭaḻai kalitturai Viruttam and Ahaval kind and hence it is called Nānmaṇimālai.

Beginning :

பூவைவண்ணனும் பொன்னொளிவண்ணனுந்
தீயவண்ணனுமெனச சிறந்த மூவரு
முண்ணிகழ்ஞானக் கண்ணாற்காணும்
வண்ணமில்லா வண்ணல் வண்ணங்
காணப்படா(அ)ன் காண்பவனுக்குங்
கேட்கபபடா(அ)ன கேட்பவனுக்குந்
சொல்லப்படா(அ)ன் சொல்பவனுக்கு
முயிர்ககப்படா(அ) னுயிர்ப்பவனுக்கு
மியக்கப்படா(அ) னியககுவனுக்கும்

(* * * *)

கைதவமின்றிக் கண்டும்பொய்தவ
மெய்யோ வுருகி வீழா
வையோ.கண்க ளருவிபாய கிலவே (க)

அருவமாய் நின்றவொளி யப்படியே நிற்க
வுருவமாய் வந்த வொருவன்—சொருபானந்தன்
வாழ்த்தி மகிழ்ந்திருகக மாடடாதே மாஞாலம்
பாழ்த்த வுடம்பைப் பரிந்து. (உ)

End :

(கலித்துறை).

தானேதனைநிக ராகுஞ் சொருபனிற் சங்கையில்லை
யோனேயெனைநிக ராவது மேது முணரகில்லேன
தேனார் மலர்ப்பதஞ் சூட்டித்தன னுச்செய்த பின்னுமுன
மூனேவடிவா மிடத்திலும் பேத முணர்ந்திலனே. (௩௧)

(விருத்தம்).

உணர்ப தறுமவ ருணர்வ திலர்தனை யுணர வுரியவர் தாமுமோ
ருணர்பு முணர்வரு பொருளு மறுதலு முணர்வதி லரினு ளதலா,
லணர்கொள் ,கறையுடை யவனு மரவணை யவனு மலர்மிசை யோனுநா
மறிய விரகிலெ னரிய சொருபன தருமை யறிகில ளாசையாற்,

கொணரு கிலனிறை யவனை யெனையெதிர் கொடுசெல் கில னொரு தாயு
மாய்க் கொடுகி யுயிர்[கொ](கு)லை [கொ](கு)லைய வலையிடு கொடிய
விலனெதிர் காணவே,

புணரும் வகையரு ளுருவு கொளுமிறை புகுது கிலனென வோதியே
புரளும் விழுமெழு மருவி யிருவிழி பொழிய விலனெ(ர)ரு பூவையே.

Colophon:

தத்துவராயர் நான்மணிமாலை முற்றும்.

கச்சியப்ப தேவனடி யுச்சியுளம் வைப்பாம் (. . . . .
. . .)

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இந்நூல் சொரூபானந்தர் விஷயமாகத் தத்துவராய ரியற்றியது. 96-வகைப் பிரபந்தங்களுளொன்று. வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், அகவல் என்னும் நான்குவகைப் பாக்களால் அந்தாதித் தொடையாகப் பாடப்படுவது. இந்தப் பிரதியில் இது முற்றுமுளது.

No. 1616. சொரூபானந்தர் நான்மணிமாலை.

SORŪPĀNANDAR NĀNMAṆIMĀLAI.

Pages, 26. Lines, 8 on a page,

Begins on fol. 395*a* of the MS. described under No. 1061.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இதில் இந்நூல் முற்றுமிருக்கிறது. ஏடுகளின் முன்புறத்தில் சிறிதுபாகம் செல்லரிப்புண்டுள்ளது.

No. 1617. சொரூபானந்தர் நான்மணிமாலை.

SORŪPĀNANDAR NĀNMAṆIMĀLAI.

Pages, 28. Lines, 6, 7 on a page.

Begins on fol. 156*a* of the MS. described under No. 325.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்நூல் இந்தப்பிரதியில் முற்றுமிருக்கிறது. இதன் இறுதியேடு பாதி முறிந்துபோயிருக்கிறது.

No. 1618. சொரூபானந்தர் நான்மணிமாலை.
SORŪPĀNANDAR NĀNMAṆIMĀLAI.

Pages, 2. Lines, 7 on a page.

Begins on fol. 170*a* of the MS. described under No. 325.

Contains only the first stanza and a portion of the second stanza.

Same work as the above.

(கு-பு.)—

இதில் இந்நூலின் முதற்பாடல் ஒன்று பூர்ணமாயும் இரண்டாம் பாடலின் முதலடியிற் பாதியுமே இருக்கிறது.

No. 1619. சொரூபானந்தர் நான்மணிமாலை.
SORŪPĀNANDAR NĀNMAṆIMĀLAI.

Pages, 35. Lines, 8 on a page.

Begins on fol. 64*a* of the MS. described under No 1422.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இதன்கண் இந்நூல் பூர்ணமாகவுளது.

No. 1620. சொரூபானந்தர் மும்மணிக்கோவை.
SORŪPĀNANDAR MUMMAṆIKKŌVAI.

Pages, 14. Lines, 8 on a page.

Begins on fol. 57*a* of the MS. described under No. 1422.

Complete in 30 stanzas.

A Prabandam written in praise of his Guru Sorūpānandar by his disciple Tattvadēśikanāyanār. It consists of stanzas alternately of Āśiriyappā, Veṇbā and Kaṭṭalaikkalitturai kind and therefore called Mummaṇikkōvai.

Beginning:

எட்டாவது, மும்மணிக்கோவை : தத்துவசாரம்.

பூங்கழு னிணைந்து புலம்பி யோங்கிய
மலரோன் மாலரன் மகேசன் சிவனெனப்
புலவோர் புகழு மலகில் கீர்த்தி

யைந்தொழிற் கடவுளுஞ் சிந்தனைக் கரிதென
விந்திரன் முதல்வரு மிமையவர் முற்று
மந்தரத் துள்ளோ ரனைவரு மலம்வர
மந்திர மறையுந் தந்திர மனைத்துங்

(* * *)

உளகக ணுளர்கசு வெளிப்பட வுரிய
வென்று முள்ள தன்றிரு மேனி
நின்ற வண்ண நிற்க வின்றென்
னூனக்கண் காண யான்பண் டறிந்த
புலமதி யிரியல் போயென் றலைகொடு
யானடிவணங்குமாறு
மானுட னாகி வந்துதோன் றினனே. (க)

தோன்றல்சொரூபானந்தன் றோன்றிலனேற் றோன்றியமெய்
போன்ற தனுகரண போகவுல—கூன்று
கனவு நிலையெனவே கண்டியா மெய்ம்மை
வினவ நினைவுறுமோ வேறு. (உ)

வேறுசெய்தானரு ளேக்கத்தி னுலென வினையடைய
[னீ](நீ)று செய் தானிரு பாதிகமேனி யென்னெஞ்சறியப்
பேறுசெய்தான் பண்டியானென்றுபேணும்பிண்டத்தையொன்று
னூறுசெயயாம லொருவிரகாலிந்த வூனுயிரே. (ஙூ)

End:

இதுவா மதுவெனி லன்றிநின்றேயெப் பொருள்களுமா
மதுவா கினுந்திரு மேனியன்பாலமு வாக்கருள்வான
மறுவார் பதநல்கு மல்லது வானவர்க்கும்பிறர்க்கும்
பொதுவா விருந்ததுவோசொரூபானந்தப் பூங்கழலே. (௩0)

முமமணிக்கோவை முற்றிற்று.

(கு-பு.)—

இது சொரூபானந்தர் விஷயமாகத் தத்துவதேசிகனுரியற்றியது. பிரபந் தவகையுளொன்று. முறையே ஆசிரியப்பாவும், வெண்பாவும், கட்டளைக கலித்துறையும் விரவிவர முப்பது பாடல்களால் அந்தாதித தொடையாகப் பாடப்படுதல் இதனிலக்கணம். இந்தபிரதியில் இந்நூல் பூர்ணமாக இருக

INDEX.

[குறிப்பு.—இங்கே கோடிடப்பட்டவை காட்லாக்கில் விவரிக்கப் பட்ட நூல்களின் பெயர்கள்.]